NSB

The Leader in Developing You and Your Country

# வேரூன்றியுள்ளது

## ஆண்டறிக்கை 2012



# வேரூன்றியுள்ளது

தேசிய சேமிப்பு வங்கி | ஆண்டறிக்கை 2012

# உள்ளடக்கம்


1. **எமது நோக்கம், பணி, மதிப்பீடுகள்** 4 - 5

2. **1832 - 2012 நீண்ட பயணம் தொடர்கிறது** 8 - 9

3. **2012 இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம் - நிதிசார் சாதனைகள்** 10 - 11

4. **அத்தியாயம்** 1
   உறுதியாக நங்கூரமிடப்பட்டது - மூலோபாயமும் நோக்கும் 13 - 23
   தலைவர் திரு. சுனில் எஸ் சிறிசேனவிடமிருந்து ஒரு செய்தி 15
   பொது முகாமையாளர்/பி.நி.அ. திரு ஹென்னாயக்க பண்டாரவின் மீளாய்வு 19

5. **அத்தியாயம்** 2
   **2012இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம் - முகாமைத்துவ கலந்துரையாடலும் பகுப்பாய்வும்** 25 - 51
   நிதிசார் மீளாய்வு 26
   பொருளியல் மீளாய்வு 33
   2012 ஆம் ஆண்டின் மூலோபாய நோக்கங்களுக்கு எதிரான சாதனைகள் 36
   செயற்பாட்டு மீளாய்வு 38
   எதிர்காலத் திட்டங்கள் 50

6. **அத்தியாயம்** 3
   எமது பாரம்பரியத்தில் வேரூன்றிய ஆளுமை 55 - 101
   ஆளுமை அறிக்கை 56
   பணிப்பாளர் சபை 88
   நிறுவன முகாமைத்துவக் குழு 94
   நிறைவேற்று முகாமைத்துவக் குழு 96
   சிரேஷ்ட முகாமையாளர்கள் 98
   சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 99
   மனிதவள அறிக்கையும் ஊதியங்கள் குழுவும் 102
   ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு அறிக்கை 104
   நியமனக் குழு அறிக்கை 105

7. **அத்தியாயம்** 4
   **எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்** - இடர் முகாமைத்துவம் 105 - 137

8. **அத்தியாயம்** 5
   புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல் - நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு 141 - 183

9. **அத்தியாயம்** 6
   சவால் மிக்க வருடத்தின் பெறுபேறுகள் - நிதிசார் அறிக்கை 185
   நிதியியல் நாட்காட்டி 186
   பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை 187
   நிதியியல் அறிக்கை மீதான பணிப்பாளர்களின் பொறுப்பு 197
   உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான பணிப்பாளர்களின் கூற்று 199
   உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கை 202
   பொறுப்புகள் தொடர்பான பொது முகாமையாளர்/பி.நி.அ. மற்றும் பிரதி பொது முகாமையாளர்( நிதியும் திட்டமிடலும்) 203
   கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 204
   முழுமையான வருமானக் கூற்று 207
   நிதியியல் நிலைமைக் கூற்று 209
   உரிமைப் பங்கு மூலதன மாற்றங்களின் கூற்று - வங்கி 210
   உரிமைப் பங்கு மூலதன மாற்றங்களின் கூற்று - தொகுதி 211
   காசுப்பாய்ச்சல் கூற்று 212
   நிதியியல் கூற்றுக்கள் மீதான குறிப்புகள் 213

10. **அத்தியாயம்** 7
    பிற்சேர்க்கை 253 - 274
    ஐ.அ டாலர்களின் முழுமையான வருமானக் கூற்று 254
    ஐ.அ டாலர்களின் நிதியியல் நிலைமைக் கூற்று 255
    ஒரே பார்வையில் 10 வருடங்கள் 256
    வைப்புக்கள் தொடர்பான பகுப்பாய்வு 258
    எமது உற்பத்திகளும் சேவைகளும் 259
    கிளை வலையமைப்பு 264
    தொடர்புடைய வங்கிகள் 265
    பரிமாற்று கம்பனிகள் 268
    அருஞ்சொல் விளக்கத் தொகுதி 270
    நிறுவனத் தகவல்கள் 274

# வேரூன்றியுள்ளது

தேசிய சேமிப்பு வங்கி | ஆண்டறிக்கை 2012

...பொது மக்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை பதிய வைப்பதில் பங்காளராகவும், அனைவராலும் விரும்பப்படுவதும், நம்பிக்கைக்குரியதும், எங்கும் அறியப்பட்டுள்ளதுமான சேமிப்பு வங்கி ஒன்று.

NSB
The Leader in Developing You and Your Country

## எமது நோக்கம்

சேமிப்புக்கள் மற்றும் முதலீட்டுத் தீர்வுகளுக்கு
மிகுந்த நம்பகத் தன்மையுடையதும்
நாடப்படுவதுமான தேர்வாக இருப்பது.



## எமது பணி

எமது பங்குடமையாளர்கள் அனைவரின் எதிர்பார்ப்புக்களையும் சந்திக்கும் அதே சமயத்தில் எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்களது சேமிப்புக்கள் மற்றும் முதலீட்டுத் தேவைகளுக்கான ஒட்டு மொத்த நிதித் தீர்வுகளையும் அதியுயர் மட்டத்தில் வழங்குவது.

## எமது மதிப்பீடுகள்

எமது நாளாந்த கடமைகளை உடனுக்குடன் நிறைவேற்றுவதும், செயற்திறனுடனும் நம்பகத் தன்மையுடனும் பரஸ்பர நல்லெண்ணத்துடனும் நேர்மையுடனும் செயற்படுத்துவதும்.

"இன்று நாங்கள் முன்னெப்போதையும் விட
வலுவுடையவர்களாக இருக்கின்றோம். பழமையான
மதிப்பீடுகளையும், பாரம்பரியங்களையும் தொடர்ந்து
தக்க வைத்துக் கொண்டு, எமது கடந்த
காலத்தின் வேர்களினால் சக்தியூட்டப்பட்டவர்களாக
இன்றைய காலத்திற்கேற்ப எம்மை முன்னேற்றிக்
கொண்டிருக்கின்றோம்:......."



# வேரூன்றியது

40 ஆண்டுகளுக்கும் அதிகமாக நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான இலங்கையர்களுக்கு நம்பிக்கையூட்டும் தீபமாகவும் நம்பகமான நண்பனாகவும் தேசிய சேமிப்பு வங்கி இருக்கின்றது. எமது நாட்டின் பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் சேமிப்பை உருவாக்குவதிலும், பரவலாக்குவதிலும் நாம் முன்னணியிலிருக்கின்றோம். எமது பாரம்பரியம் ஒப்பிட முடியாத தனித் தன்மை வாய்ந்தது. தேசிய அஞ்சல் நிலையங்களின் நாடு முழுவதற்குமான வலையமைப்பின் ஊடாக தொடர்ந்து தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் முதலாவது அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கியாக நாங்கள் இருப்பதுடன், விரிவான வங்கிச் சேவைகள் மிக குறைவாகவே கிடைக்கும் அல்லது கிடைப்பதே அரிதான மிகவும் பின் தங்கிய பிரதேசங்களுக்கும், மக்களுக்கும் சேவையாற்றுகிறோம்.

# 1832 - 2012
## நீண்ட பயணம்... தொடர்கிறது



**1972**

தேசிய சேமிப்பு வங்கியின் அங்குரார்ப்பணம்
இலங்கை சேமிப்பு வங்கி (1832), இலங்கை அஞ்சல் அலுவலக சேமிப்பு வங்கி (1885) மற்றும் அஞ்சல் மா அதிபர் திணைக்கள சேமிப்பு சான்றிதழ் பிரிவு (1942) மூன்றையும் ஒன்றிணைத்த நிறுவனம்.




**1979**

சீட்டிழுப்பொன்றுடன் அறிமுகப்படுத்தப்பட்ட சேமிப்பு சான்றிதழ்கள்



**1981**

நடமாடும் வங்கிச் சேவை அமுலாக்கம்




**1994**

தன்னியக்க காசு
இயந்திரம் (ATM) அறிமுகம்



PARLIAMENT OF THE DEMOCRATIC
SOCIALIST REPUBLIC OF
SRI LANKA

NATIONAL SAVINGS BANK
(AMENDMENT)
ACT, No. 28 OF 1995

**1995**

தேசேவ சட்டத் திருத்தத்தின் ஊடான வியாபாரப் பன்முகப்படுத்தல்.



**1998**

சிறுவர் சேமிப்புத் திட்டமான "ஹப்பன் மற்றும் புஞ்சி ஹப்பன்" இன் ஆரம்பம்.



**1999**
100வது கிளை திறப்பு - நிட்டம்புவ




**1999**
இளைஞர்களுக்கான இத்துரு மித்துரு சேமிப்புத் திட்டம் அறிமுகம்.

NSB Fund Management COMPANY LIMITED

**2000**
துணைக்கம்பனி தாபிக்கப்பட்டது.

ස්ත්‍රී

**2002**
புதிய உற்பத்திகளான "ஸ்திரீ மற்றும் பிரன்ட்ஸ்" இன் ஆரம்பம்.

FitchRatings AAA (Sri)

**2003**
பிட்ச்ரேடிங் மூலமாக கடன் தரப்படுத்தல் "AAA" தரத்தினைப் பெறல்



**2004**
IBU செயற்பாடுகளின் அங்குரார்ப்பணம்



**2008**
24x7 முழுவதும் செயன்முறைப்படுத்தப்படும் தே.சே.வ. அழைப்பு நிலைய உருவாக்கம்



**2011**
200வது கிளைத் திறப்பு – மதவாச்சி




**2012**
40வது ஆண்டு பூர்த்தி விழா

## 2012 இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம்

### நிதிசார் சாதனைகள்

நிகர இலாபம்

4.3பில்.

மூலதனப் போதுமை விகிதம்

20.4%

தேறிய சொத்துக்கள்

24.3பில்.

வருவாய்

53பில்.



சேமிப்புத் தளம்
458 பில்லியனை
எட்டியது




தொடர்ச்சியாக 10வது
ஆண்டாக பிட்ச் மூலம்
நீண்ட கால கடன்
தரப்படுத்தல்



சொத்துத்தளம்
500 பில்லியனைத்
தாண்டியது

## 2012 இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம்

### நிதிசார் சாதனைகள்

| | வங்கி | | | தொகுதி | | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2011 | % | 2012 | 2011 | % |
| | ரூ. மில். | ரூ. மில். | வளர்ச்சி | ரூ. மில். | ரூ. மில். | வளர்ச்சி |
| **ஆண்டிற்கான பெறுபேறுகள்** | | | | | | |
| மொத்த வருமானம் | 53,045 | 46,545 | 14 | 54,152 | 47,532 | 14 |
| தேறிய வட்டி வருமானம் | 13,531 | 17,800 | (24) | 13,714 | 18,104 | (24) |
| வருமான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் | 6,169 | 9,255 | (33) | 6,221 | 9,411 | (34) |
| இலாபத்தின் மீதான வருமான வரி | 1,838 | 3,193 | (42) | 1,881 | 3,307 | (43) |
| வரிக்குப் பின்னரான தேறிய இலாபம் | 4,331 | 6,062 | (29) | 4,341 | 6,104 | (29) |
| அரசாங்கத்திற்கான பங்களிப்பு | 5,900 | 7,970 | (26) | 5,952 | 8,103 | (27) |
| **வருட முடிவில்** | | | | | | |
| மொத்தச் சொத்துக்கள் | 509,694 | 465,974 | 9 | 519,270 | 479,881 | 8 |
| கடன்களும் முதலீடுகளும் | 498,151 | 455,914 | 9 | 507,680 | 469,764 | 8 |
| வாடிக்கையாளரிடமிருந்தான வைப்புக்கள் | 457,650 | 421,849 | 8 | 457,650 | 421,849 | 8 |
| பங்குதாரர்களின் நிதி (மூலதனமும் ஒதுக்குகளும்) | 24,336 | 23,052 | 6 | 25,586 | 24,293 | 5 |
| **வீதங்கள்** | | | | | | |
| சராசரி பங்குதாரரின் நிதிகளிலிருந்தான (%) பெறுகைகள் | 18.3 | 26.6 | | 17.4 | 25.4 | |
| சொத்துக்களிலிருந்தான (%) பெறுகைகள் | 1.3 | 2.1 | | 1.2 | 2.1 | |
| நிகர வட்டி எல்லை (%) | 2.8 | 4.1 | | 2.7 | 4.0 | |
| திரவ வீதம் (%) | 69.5 | 74.4 | | - | - | |
| (தேவைப்பட்ட மிகக் குறைந்த நியம வீதம் 5%) அடுக்கு I (%) | 20.4 | 20.1 | | 21.3 | 20.5 | |
| (தேவைப்பட்ட மிகக் குறைந்த நியம வீதம் 10%) அடுக்கு I & II (%) | 19.1 | 17.7 | | 21.2 | 18.2 | |
| கிரயம் : வருமானம் % | 54.6 | 45.4 | | 54.4 | 45.0 | |
| **நிதி சார்பற்ற குறிகாட்டிகள்** | | | | | | |
| கிளைகள் | 219 | 210 | | - | - | |
| முகவர்கள் (தபாலகங்கள் உப தபாலகங்கள்) (இல.) | 4,053 | 4,058 | | - | - | |
| கணக்கு வைப்பாளர்கள் (மில்லியன்) | 17.47 | 17.0 | | - | - | |
| பணியாளர்கள் எண்ணிக்கை | 3,128 | 3,275 | | - | - | |
| பாடசாலை வங்கிக் கூறுகள் (இல.) | 1,185 | 349 | | - | - | |
| ஏரிஎம் (இல.) | 231 | 221 | | - | - | |



# அத்தியாயம் 1

உறுதியாக நங்கூரமிட்டது

மூலோபாயமும் நோக்கும்



## திரு.சுனில் எஸ். சிறிசேனவிடமிருந்து ஒரு செய்தி

தலைவர்

# “வாடிக்கையாளர்களுடனான எமது உறவு தென்படக்கூடிய ஒரு சொத்தாக இருக்க வேண்டும்......”

“நாம் திட்டமிட்டுள்ள வளர்ச்சியை எய்துவதற்கு எமது சொந்த பாதைகளை புடமிட வேண்டிய தேவை நமக்குள்ளது. நாங்கள் செய்வதை குறித்த நம்பிக்கை எமக்கிருக்க வேண்டும். எமது ஊடுருவல் மற்றும் அடைதல் எனும் மூலோபாயங்களுடாக இப்பணியை நாங்கள் ஏற்கனவே ஆரம்பித்து விட்டோம். எமது போட்டியாளர்களுடன் அவர்களின் அதேவேகத்துடன் அதேமட்டத்திலும் எம்மை நிலைநிறுத்திக் கொள்வதைவிட எம்மை அரவணைத்துக் கொண்டு பாராட்டும் இடங்களில் அதிகமாகத் தென்படுவது நமக்கு நன்மையளிக்கும் என நம்புகின்றோம் ”

## திரு.சுனில் எஸ். சிறிசேனவிடமிருந்து ஒரு செய்தி

தலைவர்

நான்கு தசாப்தங்களுக்கு முன்னர், நாங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது எமது ஸ்தாபகர் டாக்டர் என் எம் பெரேராவின் மனதில் ஒரு நோக்கமிருந்தது. பொது மக்கள் மத்தியில் சேமிப்பின் சிறப்புகளை விதைக்கும் ஒரு வங்கியாகவும் பணக்காரர்களுக்கும் செல்வாக்கு மிக்கவர்களுக்கும் மட்டும் வசதிகளை அளிக்காது கிராமிய மக்களையும் சேமிக்க ஊக்குவிக்கும் ஒரு வங்கியாகவும் அது இருக்க வேண்டும் என்ற ஒரு எதிர்பார்ப்பு இருந்தது.

தேசேவ யின் தலைவராக நான் நியமிக்கப்பட்ட போது வங்கியின் இறந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் பகுப்பாய்வு செய்ததுடன், தேசிய அளவில் வங்கியின் எதிர்காலம் குறித்த எதிர்பார்ப்பையும் எனது கடமையாக ஏற்றுக்கொண்டேன்.

மாறும் காலங்களுடன் நாமும் மாறுவோம் என்னும் பழங்கால எடுகோள் ஒன்று இருக்கின்றது. அவ்வாறே நாம் ஸ்தாபிக்கப்பட்ட நாட்களிலிருந்து நிச்சயமாக காலங்கள் மாற்றமடைந்துள்ளன. எமது நாடு புதியதொரு யுகத்திலிருந்து வெளிவருகின்றது. தேசிய அபிவிருத்தி தவிர்க்க முடியாதது. அவ்வாறே தேசிய சேமிப்பு வங்கியும் அதி உச்ச செயலாற்றல்களை நிலையாக தொடர்ந்து தருகின்ற உத்வேகமுள்ள நிறுவனமாக மாற்றமடைந்துள்ளது. இந் நிறுவனத்தின் கொள்கைகளை தொடர்ந்து முன்னெடுக்கும் ஸ்தாபனமாக இது இருக்கும் என நான் தங்களுக்கு உறுதியளிக்கும் அதே நேரம் சேமிப்புப் பழக்கம் உள்ளடங்கலாக வங்கியின் ஸ்தாபகக் கொள்கைகளுக்கு வலுவான ஒரு ஊக்குவிப்பாளராகவும் நான் இருக்கின்றேன். உண்மையில் நாட்டின் சேமிப்பு முன்னோடி எனும் புதிய அடையாளக் குறியீட்டை தேசிய சேமிப்பு வங்கி நிறுவ வேண்டிய நேரம் இதுவாகும். அநேகரில் ஒருவராக இருப்பதை எதிர்த்து ஏனையவர்கள் மத்தியில் கௌரவமிக்கவர்களாகவும் தனித்தன்மையுடையவர்களாகவும் நாம் இருக்க வேண்டிய நேரம் இது இந்த நிலைப்பாட்டில் எதிர்வரும் ஆண்டுகளில் எமது வாய்ப்பை மட்டுமன்றி எமது தேசத்தின் எதிர்காலத்தையும் வடிவமைப்பதில் முக்கிய பங்காற்றும். பாடசாலை வங்கியில் கருத்தாக்கத்தை நாம் மூலதனமாக்கிக் கொள்ள வேண்டும்.

எமது முன்னேற்றப் பயணத்தில் கடந்த காலத்தின் வேர்களும் வலுவான பாரம்பரியங்களும் நன்னெறிகளும் மதிப்பீடுகளும் பின்னிப் பிணைந்துள்ள அஞ்சல் வங்கியை பலப்படுத்த வேண்டியதும் முக்கியமென நான் நம்புகின்றேன்.

### போட்டிகள் நிறைந்த விளையாட்டு மைதானம்

ஒரு விடயம் தெட்டத் தெளிவாக இருக்கின்றது. மட்டுப்படுத்தப்படாத தேர்வுகள் வெளியில் கிடைக்கும் நிலையில் வாடிக்கையாளராக இருப்பதற்கு இது மிகவும் உகந்த நேரமாகும். மறு பக்கத்தில் நாங்கள் எமது சட்டத்தினால் மட்டுப்படுத்தப்பட்டுள்ள அதே நேரம் பாரதூரமான போட்டிகளுக்கு மத்தியில் ஏனைய வர்த்தக வங்கிகளின் விரிவான உற்பத்தித் துறைகளுடன் போட்டியிட வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுள்ளது. எனவே வைப்பாளர்களின் கடினமாக உழைக்கப்பட்ட சேமிப்புக்கள் எப்போதும் பத்திரமாக இருக்கும் என்னும் உறுதியை வழங்கும் வைப்புக்களுக்கான அரசாங்க உத்தரவாதத்தையும் வட்டி பொறுப்பையும் கொண்ட இலங்கையின் ஒரே ஒரு வங்கி இது மட்டுமே என்கின்ற எமது போட்டியிடும் சக்தியை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்வது மிகவும் அத்தியாவசியமாகவுள்ளது.

நாம் திட்டமிட்டுள்ள வளர்ச்சியை எய்துவதற்கு எமது சொந்த பாதைகளை புடமிட வேண்டிய தேவை நமக்குள்ளது. நாங்கள் செய்வதை குறித்த நம்பிக்கை எமக்கிருக்க வேண்டும். எமது ஊடுருவல் மற்றும் அடைதல் எனும் மூலோபாயங்களுடாக இப்பணியை நாங்கள் ஏற்கனவே ஆரம்பித்து விட்டோம். எமது போட்டியாளர்களுடன் அவர்களின் அதேவேகத்துடன் அதேமட்டத்திலும் எம்மை நிலைநிறுத்திக் கொள்வதைவிட எம்மை அரவணைத்துக் கொண்டு பாராட்டும் இடங்களில் அதிகமாகத் தென்படுவது நமக்கு நன்மையளிக்கும் என நம்புகின்றோம்.

### குறைவான சேவை பெறுபவர்களை சென்றடைதல்

தேசிய சேமிப்பு வங்கி என்ற வகையில் இந்த ஆண்டில் எமது கவனம் பாதுகாப்பான சேமிப்பு மற்றும் முதலீட்டு ஆலோசனைகளை பொதுவாக கிராமிய மக்களுக்கு வழங்குவதாக இருக்கும். அவர்களின் விவசாயம் மற்றும் மீன்பிடி கைத்தொழில்கள் சுய தொழில்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் போன்று இது வரையிலும் நாங்கள் உட்புகாத பிரிவுகளில் விசேட கவனம் செலுத்துவோம்.

இத்தகைய உத்தேச பங்குடமையாளர்களுடன் தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொள்வதற்கும் அவர்களின் உள்ளூர் சமூகத்தில் பங்கேற்பாளர்களாக இருப்பதற்கும் தேசிய சேமிப்பு வங்கியின் குழுவினர்களுக்கு ஊக்குவிப்பு அளிக்கின்றோம்.

## திரு. சுனில் எஸ் சிறிசேனவிடமிருந்து ஒரு செய்தி

தலைவர்

**இத்தகைய உத்தேச பங்குடமையாளர்களுடன் தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொள்வதற்கும் அவர்களின் உள்ளூர் சமூகத்தில் பங்கேற்பாளர்களாக இருப்பதற்கும் தேசிய சேமிப்பு வங்கியின் குழுவினர்களுக்கு ஊக்குவிப்பு அளிக்கின்றோம்.**

நாங்கள் ஒரு சேவை வழங்கும் நிறுவனமாகையால் எமது தற்போதைய வாடிக்கையாளர்களையும் வசதிகளையும் அவாவையும் கொண்டுள்ள, ஆனால் அதற்கான வாய்ப்புகள் குறைந்த எதிர்கால வாடிக்கையாளர்களையும் சென்றடைவதற்கான உரித்து எம்மிடம் உள்ளது. எமது வாடிக்கையாளர்களை நாடிச் செல்வதன் மூலம் இக் கலாச்சாரத்தை மேம்படுத்த நாங்கள் உத்தேசித்துள்ளோம். வெளிக்கள விஜயங்களைப் பரவலாக மேற்கொள்வதற்கு கிளையின் குழுக்களைப் பயன்படுத்திக் கொண்டதுடன், குறிப்பிட்ட நாட்களில் மக்கள் ஒன்றுகூடும் கிராமிய பகுதிகளில் நடமாடும் கூறுகளை முக்கியமான இடங்களில் நிறுவியதும் நமது நடவடிக்கைகளாகவிருந்தன.

நான் முன்னரே குறிப்பிட்டவாறு பாடசாலை வங்கிகளை மேம்படுத்துவதிலும் நான் அதிக ஆர்வம் கொண்டிருக்கின்றேன். இளம் வயதிலும், வளர்ந்து வரும் வயதிலும் சேமிப்புப் பழக்கத்தை வளர்ப்பதினால் மட்டுமல்லாது நீண்ட கால வைப்புக்களுக்கான வாய்ப்புகளையும் உருவாக்குகின்றது. இந்த நிதிகளை பாரிய பேரண்ட அபிவிருத்தியை நோக்கி வழிப்படுத்த முடியுமாயுமிருக்கும். தீவு எங்கிலும் உள்ள ஏறக்குறைய 9700 பாடசாலைகளினால் கிடைக்கக் கூடிய வாய்ப்புகள் அநேகமாக இருக்கும்.

**உற்சாகமான வரவேற்பு**

பணிப்பாளர் சபை, பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் குழுவினரால் நான் பெரிதும் வரவேற்கப்பட்டேன். மிகவும் பாரிய அளவில் எனக்கு அவர்களின் ஆதரவு கிடைத்தது. இது வங்கியை புதிய உயர்வுகளுக்கு கொண்டு செல்வதை உறுதிப்படுத்த, எனக்கு மேலும் அதிகமான உத்வேகத்தை அளித்துள்ளது.

**நன்றியுரை**

இந்த ஆண்டில் தேசேவ யின் வெற்றிக்கு அனேகர் தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர். அவர்களது ஆதரவிற்கு எனது நன்றிகளை அவர்களுக்குத் தெரிவிப்பது எனது கடமையாகும். அதிமேதகு ஜனாதிபதி, பிரதி அமைச்சர் நிதி மற்றும் திட்டமிடல் திறைசேரி செயலாளர் ஆகியோரின் இடைவிடாத வழிகாட்டலுக்கு எனது நன்றிகள். இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், கணக்காய்வாளர் தலைமையதிபதி, சட்டமா அதிபரும் அதிகாரிகளும் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோருக்கும் அவர்களது உதவிக்காக நன்றி செலுத்துகிறேன். அஞ்சல் அதிபர் நாயகம், இலங்கை அஞ்சல் அதிகாரிகளுக்கும் அஞ்சல் அதிபருக்கும் ஏனைய உப அஞ்சல் அதிபருக்கும் அடித்தளத்தில் உள்ளவர்களை அனுகக் கூடிய எமது முயற்சிகளுக்கு முக்கிய உதவி அளித்த ஏனைய அதிகாரிகளுக்கும் எங்களுக்கு அவசியமான உதவிகளை வழங்கிய ஏனைய அதிகாரிகளுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

அநேக கவர்ச்சியான தேர்வுகளை வழங்கும் வாடிக்கையாளர் - மைய சந்தையில் எமது வெற்றிக்கு உந்து சக்தியாக இருந்த எமது வாடிக்கையாளரின் கடமையுணர்வுக்கும் நம்பிக்கைக்கும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

நான் இப்போதுதான் அறிமுகமாகிவரும் தேசேவ இன் பணியாளர்கள், இந்த நிறுவனத்தின் மதிப்பீடுகளில் உண்மையான நம்பிக்கை வைத்துள்ள தொழில் நிபுணத்துவம் பெற்றவர்களும் உந்துசக்தியுள்ளவர்களுமான மக்கள் குழு என்பதை அறிந்து கொண்டேன். இவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். அத்துடன், எமது தொலைநோக்கை எய்துவதற்கு அவர்களுடன் நெருங்கிப் பணிபுரியவும் ஆவலுடன் காத்திருக்கின்றேன்.

இது இலகுவான ஒன்றல்ல என்பதை நன்கு அறிந்திருந்தும் நாங்கள் மேற்கொண்டுள்ள பயணம் குறித்தும் ஆர்வமுடன் இருக்கின்றேன். ஆயினும் நாங்கள் எமது பழமைவாய்ந்த மூலாதாரங்களை சாத்தியமான உத்திகளுடன் ஒன்றிணைத்து எதிர்காலத்திற்கென அகன்ற கட்டமைப்பொன்றிற்குள் கொண்டு வந்திருக்கின்றோம் எனும்போது நாங்கள் சரியான பாதையில் செல்லுகின்றோம் என நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

**சுனில் எஸ் சிறிசேன**
தலைவர்

கொழும்பு
28 மார்ச் 2013



## திரு.ஹென்னாயக்க பண்டாரவின் ஒரு மீளாய்வு

பொது முகாமையாளர் / பி.நி.அ.

"இந்த நாட்டின் மிக உயரிய நம்பகத்தன்மையுள்ள சேமிப்பு வங்கி எனும் எமது தொலை நோக்கை இன்று நாங்கள் மீள் உறுதிப்படுத்துகின்றோம்."

உறுதியான பொருளாதாரம் உறுதியான சேமிப்புக்களிலிருந்து கட்டியெழுப்பப்படுகின்றது. கிராமப் புறமாக இருப்பினும் அல்லது நகரப்புறமாக இருப்பினும் சேமிப்பு என்னும் கருத்தாக்கம் அபிவிருத்தி எனும் செயன்முறையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். தேசிய அபிவிருத்தி எனும் பெரிய படத்தில் இதுவே எமக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்பு.

## திரு.ஹென்னாயக்க பண்டாரவின் ஒரு மீளாய்வு

பொது முகாமையாளர் / பிநிஅ

தேசத்தின் முதன்மையான சேமிப்பு வங்கியாக 180 ஆண்டுகளுக்கும் அதிகமான அசாத்தியமான பாரம்பரியத்தை தேசிய சேமிப்பு வங்கி கொண்டுள்ளது.

இது இலங்கையின் சேமிப்பு கலாச்சாரத்தை ஏறக்குறைய இரு நூற்றாண்டுகளாக நாங்கள் வழிநடத்தி வருகின்றோம் என்பதைக் குறிக்கின்றது. கடந்த காலங்களின் மாற்றமடைந்துவரும் அத்தியாயங்கள் மற்றும் எதிர்காலத்திற்குள் அதன் வளர்ச்சி என்பவை குறித்து இந்த நாட்டில் நாங்கள் எவ்வளவு உறுதியாக வேர்விட்டிருக்கின்றோம் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும்.

இலங்கையின் பாரம்பரியத்தின் மூலைக் கல்லான மரபுகளுடனும் சம்பிரதாயங் களுடனும் மற்றும் மதிப்பீடுகளுடனும் பிரிக்க முடியாதவாறு வங்கியின் செயற்பாடுகள் ஒன்றுடன் ஒன்று இணைந்திருப்பதை எமது நீண்ட கால வரலாற்றின் எதிர்காலம் நமக்கு காட்டுகின்றது. இந்த நாட்டின் அபிவிருத்திப் பாதையில் இந்த மூலாதாரங்களின் உறுதியான வேர்கள் எம்மை ஒன்றிணைக்கப்பட்டவர்களாக ஆக்கியுள்ளன.

இந்நாட்டின் மக்களுக்கு மிகவும் நம்பகத்தன்மை கொண்டதும் நாடிப் பெறக்கூடியதுமான சேமிப்பு மற்றும் முதலீட்டு தீர்வுகளுக்கான தேர்வுகளை அதிகரிக்கும் நம்பகத்தன்மையும் நாடி வருவதற்குமான எமது பணி மற்றும் நோக்கங்களை இன்று நாங்கள் மீள உறுதிப்படுத்துகின்றோம். தேசத்தின் வரலாற்றில் அசலானதும் மிகுந்த நம்பிக்கைத் தன்மையுள்ளதுமான தேசிய சேமிப்பு வங்கியாக எமது வேர்களைப் பார்ப்பதினால் நாங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களுக்குள்ளும் மதிப்பீடுகளையும் நீண்ட கால நிறுவன சமூக பொறுப்புணர்வுகளையும் கொண்டு வருவதன் மூலம் நாங்கள் இதனைச் செய்கின்றோம். இதுவே எமது நோக்கம். எமது பார்வையிலிருந்து ஒருபோதும் இதனை இழக்க மாட்டோம்.

**இந்நாட்டின் மிகப் பெரிய தனியொரு வலையமைப்பாக ஐந்தாயிரம் வாடிக்கையாளர் மையங்களைக் கொண்டிருக்கின்றோம் என்பதிலிருந்து எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் இந்நாட்டு மக்களை சென்றடையக் கூடிய திறமை பெற்றவர்களாக நாங்கள் இருப்பதை அறிய முடிகின்றது.**

இந்நாட்டின் மிகப் பெரிய தனியொரு வலையமைப்பாக ஐந்தாயிரம் வாடிக்கையாளர் மையங்களைக் கொண்டிருக்கின்றோம் என்பதிலிருந்து எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் இந்நாட்டு மக்களை சென்றடையக் கூடிய திறமை பெற்றவர்களாக நாங்கள் இருப்பதை அறிய முடிகின்றது. இப் பேராவலை நாங்கள் அடைவதற்கு இத் தீவின் மிகப் பின் தங்கிய பிரதேசங்களின் மக்களையும் அவர்கள் எங்கிருப்பினும் அவர்களை அணுகிச் செல்வோம்.

உறுதியான பொருளாதாரம், உறுதியான சேமிப்புக்களிலிருந்து கட்டியெழுப் பப்படுகின்றது. கிராமப்புறமாக இருப்பினும் அல்லது நகர்ப்புறங்களாக இருப்பினும் சேமிப்பு எனும் கருத்தாக்கம், அபிவிருத்தி எனும் செயன்முறையின் அங்கமாக இருக்க வேண்டும். தேசிய அபிவிருத்தி எனும் முழுமையான படத்தில் இதுவே எமக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்பு. விருப்பமாயின் கட்டளை எனவும் கூறலாம். இலங்கை அரசாங்கத்தினால் உத்தரவாதமளிக்கப்பட்ட தமது சேமிப்புக்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இலங்கை மக்களுக்கு வலுவான சேமிப்பு தளமொன்றை அபிவிருத்தி செய்வது தேசிய அபிவிருத்தி எனும் பெரிய படத்தில் எமக்குக் கொடுக்கப்பட்டுள்ள அல்லது கட்டளையிடப்பட்ட பொறுப்பாகவுள்ளது. எனவே எம்முடன் பாதுகாப்பாக இருப்பதுடன் தேசத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் முக்கிய பங்கேற்பாளர்களாயும் அவர்களது சேமிப்புக்கள் அவர்களை ஆக்குகின்றது.

### புதியதொரு அத்தியாயம் எழுதப்படுகின்றது

2012இன் நடுப்பகுதியில் எமது சபை மாற்றமடைந்ததுடன் எமது வேர்களை மீள்நோக்குவதில் நாங்கள் மீள ஈடுபட்டோம். கேள்விகள் கேட்கப்பட்டன. அளிக்கப்பட்ட பதில்கள் எமது முக்கிய நோக்கமான சேமிப்பு வங்கிக்கு எம்மை மீண்டும் எடுத்துச் சென்றன. வர்த்தக ரீதியாக எமது எதிர்காலம் குறித்த பேரவாவுடன் கூடிய எதிர்பார்ப்புக்களுடன் வங்கியின் தலைவர் திரு.சுனில் சிறிசேனவினால் வழிநடத்தப்படும் எமது சபை குறித்து நான் மிகுந்த ஆர்வத்துடன் இருக்கிறேன். பெருமளவிலான திறமைகளையும் அனுபவங்களையும் கொண்ட பிரபலமானவர்களினால் அமைக்கப்பட்ட சபை இந்த வங்கியை முன்னோக்கி வழி நடத்துவதற்குத் தொடர்ந்தும் எனக்குத் தலைமைத்துவத்தையும் வழிகாட்டலையும் தருவார்கள்.

நாங்கள் திட்டமிட்டுள்ள வளர்ச்சியின் அஸ்திவாரமாக எனது குழு இருக்கின்றது. இதில் அவர்கள் தனித்தன்மையுடையவர்களாக இருப்பதுடன் சாத்தியமில்லாதவற்றையும் செய்ய முடியுமென நம்புகின்றார்கள். இப் பயணத்தில் அவர்கள் வங்கியையும் தம்முடன் எடுத்துச் செல்ல முடியுமென நம்புகின்றனர். நாங்கள் செய்ய இருப்பது எதுவாகவிருப்பினும் நாங்கள் இருவரும் ஒன்றாக இணைந்து செயற்பட்டு வெற்றியடைவோம் என்பது நிச்சயம்.

## திரு.ஹென்னாயக்க பண்டாரவின் ஒரு மீளாய்வு

பொது முகாமையாளர் / பிநிஅ

**எவ்வாறாயினும் சவால்கள் அநேகமாயிருந்தன**

எவ்வாறாயினும் அனைத்தும் சுமுகமாயிருக்கவில்லை. நாங்கள் காயப்பட்டோம். உண்மையில் பல முறை காயப்பட்டோம். கடந்த ஏப்பிரல் மாதத்தில் தேசேவ இனால் மேற்கொள்ளப்பட்ட த பினான்ஸ் கம்பனி பிஎல்சி உடனான பங்கு கொடுக்கல் வாங்கல்களின் விளைவை பின் தொடர்ந்து ஏற்பட்ட எதிரிடையான பிரசாரங்கள் எம்மை நன்கு பிரதிபலிப்பதாக இருக்கவில்லை. எனவே மீளாய்வின் கீழ் வரும் ஆண்டு, எமது நாளாந்த நடவடிக்கைகளின் சுமுகமான செயற்பாட்டை பாதிக்கும் பல்வேறு சவால்களை நமக்கு அளித்தது.

எவ்வாறாயினும் இப்போது நாங்கள் நிலைமையைக் கடந்து விட்டோம். இந்த அத்தியாயத்தை பின் தள்ளிவிட்டதுடன் இந்த விடயத்தினால் நாங்கள் இழந்த நம்பிக்கையையும் மீளச் சம்பாதித்து விட்டோம். எதிர்வரும் ஆண்டுகளிலும் எமது பலமாகவும் நங்கூரமாகவும் இருக்கும் எமது ஆழமான வேர்களும் உயரிய நன்மதிப்பும் முன்னரைவிட தொடர்ந்தும் சிறப்புடன் இருக்கும் என வலியுறுத்திக் கூற முடியும். ஆளுமை, நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பேற்றல் ஆகிய நற்பிரயோகங்களை நாங்கள் மிகவும் கடுமையாகக் கைக்கொண்ட போதிலும் இத்தகைய நிகழ்வுகள் அதிகமாக உள்ள எமது பொதுப் பங்குடமையாளர்கள் மீதான எமது பொறுப்புகள் மேலும் அதிகமாகவிருப்பதை எமக்கு உணர்த்தியது. எமது நிறுவன ஆளுமை மற்றும் சிறந்த முகாமைத்துவ பிரயோகங்களை மீளவும் பகுப்பாய்வு செய்வதற்கு மீண்டும் வரைபட அட்டைக்குச் செல்ல வேண்டியிருந்தது. நாங்கள் கற்றுக் கொண்ட பாடங்களை பதிவு செய்து வைத்துக் கொண்டதுடன் இவ்வாறான நிகழ்வுகள் மீண்டும் ஏற்படுவதற்கு எதிராக பாதுகாப்பளிக்கும் மேலும் கடுமையான ஆளுமைகளும் ஒழுங்கமைப்புகளும் தாபிக்கப்பட்டன. எந்தச் சூழ்நிலையிலும் நல்லாட்சி பேணப்படுவது அவசியம் என்பதில் நாங்கள் திடமாகச் செயற்பட்டோம்.

**2012இல் எமது சாதனைகள் யாவை?**

எமது கிளை வலையமைப்பில் மேலும் 09 கிளைகளை இணைத்ததின் ஊடாக இந்த ஆண்டில் தொடர்ந்தும் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் எமது மக்களை அணுகுவது எனும் எமது நோக்கத்தை நாங்கள் தொடர்ந்தும் முன்னெடுத்தோம். வாடிக்கையாளர்களின் விருப்பங்களும் தேவைகளும் அடையாளம் காணப்பட்ட இடங்களை நாங்கள் அடையாளம் காணக்கூடிய திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த விரிவாக்கம் இருந்தது.

ஆரம்பத்திலிருந்தே மக்களுடனான எமது கூட்டு வளர்க்கப்பட வேண்டும். “தேசிய சேமிப்பு வங்கி” எனும் எமது பெயர் இளம் உள்ளங்களில் பதிக்கப்படல் வேண்டும். சிறு குழந்தைகள் இளைஞர்கள் மற்றும் சிரேஷ்ட பிரஜைகள் அனைவருக்கும் அர்ப்பணிப்புள்ள உற்பத்திகள் இருக்கின்ற போதும், பாடசாலைகளை நோக்கி எமது கவனம் தற்போது திரும்பியுள்ளது.

40 ஆண்டுகளுக்கு முன்னர் நாங்கள் ஆரம்பித்த பாடசாலை வங்கி செயற்பாடுகள் நாங்கள் மேற்கொண்ட மிகச் சிறந்த மூலோபாயங்களில் ஒன்றாகும். சேமிப்பு வலையமைப்பிற்குள் ஆயிரக் கணக்கான மாணவர்களைக் கொண்டு வருவதில் இது வெற்றியடைந்துள்ளது. இந்த வெற்றிகளுடன் இணைந்து பாடசாலைகளில் நாங்கள் நடத்திய கல்வி நிகழ்ச்சித் திட்டங்களும் மற்றும் உயர்ந்த தரத்தில் சாதனை புரிந்தவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றதும் மாணவர்கள் மத்தியில் சேமிப்புக் கலாச்சாரம் வெற்றிகரமாக பதிய வைக்கப்பட்டுள்ளது என்பதற்கான நம்பிக்கையை எங்களுக்குத் தருகின்றது. நீண்ட காலத்தில் இது அவர்கள் மனத்தில் சேமிப்புக் குறித்த பதிவுகளை ஏற்படுத்துவதுடன் பராயமடைந்த பின்னரும் அவர்களிடம் தொடர்ந்தும் இருக்கும்.

அநேகமான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் புத்தி சாதுரியமாக முதலிடுவதற்கான நெகிழ்ச்சியை இப் பாரிய சேமிப்புத் திரட்டல்கள் எமக்கு அளிக்கின்றன. அத்துடன் நாளைய வயது வந்தவர்களான இதே பங்குடமையாளர்களின் எதிர்காலத்தையும் கருத்தில் கொள்கின்றன.

இலங்கையர்கள் ஒவ்வொருவரும் தமது அடிப்படைத் தேவைகளை சந்திக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பது எமது மூலோபாயத்தின் மற்றுமொரு அத்தியாவசியமான அம்சமாக இருந்தது. சிறந்த வீடமைப்பு இத் தேவைகளில் ஒன்றாகும். அனைவருக்கும் வீடு என்னும் உத்தரவாதத்தைக் கொண்ட மகிந்த சிந்தனையின் இலக்குகளுடன் நன்கு ஒத்துப் போகின்ற வீடமைப்பு இவற்றுள் ஒன்றாக இருந்தது. தேசேவ இல் சேவையளிப்பது தொடர்ந்து முக்கியத்துவம் பெற்றதாலும் அங்கீகரிக்கும் நடைமுறையில் நெகிழ்ச்சிப் போக்கையும் துரித செயற்பாட்டையும் கூட்டிணைத்ததின் காரணமாக இந்த ஆண்டில் எமது உற்பத்திகளான மிகுந்து செவன வீடமைப்புக் கடன் மற்றும் இத்துறும் நிவஸ வீடமைப்புக் கடன் இரண்டும் மிகவும் சிறப்பாகச் செயற்பட்டன.

வங்கித் தொழிலிற்குள் வைப்புத் திரட்டல் மைதானத்தில் பாரிய போட்டிகள் நிலவியது. எமது கட்டளை விதிகள் வாய்ப்புகள் உள்ள சில துறைகளை நாடிச்

## திரு.ஹென்னாயக்க பண்டாரவின் ஒரு மீளாய்வு

பொது முகாமையாளர் / பிநிஅ

செல்வதற்கு முகவுரை தருகின்றபோதும் ஏனைய வர்த்தக வங்கிகளுடன் போட்டியிட வேண்டியிருப்பதால் வைப்புக்களை வளர்ப்பது என்பது நிச்சயமாக ஒரு சவாலாகவே உள்ளது. இந்த வைப்புக்களைச் சந்திப்பதற்கு வைப்புத் திரட்டின் எமது இலக்குகளை சந்திப்பதற்காக இன்னும் அதிகமான புத்தாக்க மூலோபாயங்களை மீளவும் சிந்திக்க வேண்டியிருந்தது.

2013 இலிருந்து எமது கிளை செயற்பாடுகளை மீள் கட்டமைப்பதும் இம்மூலோபாயத்தில் ஒன்றாக இருந்தது. இதன் ஒரு பகுதியாக குழுவை "வெளிக்கள மக்கள்" என இனங்கண்டு எமது பங்குடமையாளர்களுடன் தனிப்பட்ட ரீதியில் தனியாள் தொடர்பினை ஏற்படுத்த விரும்பினோம். தேசேவ வெறுமனே ஆரஞ்சு நிற குறியீடு மட்டுமல்ல. ஆனால், எமது வாடிக்கையாளர்கள் மீது அக்கறையும் பொறுப்புமுள்ளவர்களாகவும், எப்போதும் சென்றடையக்கூடிய சேவையளிக்கும் மக்களாக பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டுமெனவும் விரும்பினோம். எமது கிளை அலுவலகங்கள் எமது வர்த்தகத்தை வளர்க்கும் நோக்கத்தைக் கொண்ட தளமாக இருக்கும் என்பதுடன், எமது விரிவுபடுத்தப்பட்ட கிளைகளுக்கு இன்னும் அதிகமான தன்னாட்சியை தருவதாகவும் இருக்கும்.

மீள் கட்டமைப்பு என்பது, பிராந்திய முகாமைத்துவ அமைப்பு முறை ஒன்றின் அடிப்படையாக இருக்கும் என்பதுடன், கிளை வலையமைப்பின் ஒட்டுமொத்த திறமையை முன்னேற்றுமாறு திட்டமிடவும்படும். அடுத்து வரும் சில ஆண்டுகளில் விரிவாக்கம் செய்யும் நோக்கத்துடன் கிளை செயலாற்றல்களுக்கும் அவற்றை சுயாதீனமான இலாபமீட்டும் நிலையங்களாக்குவதற்கும் பிராந்திய முகாமையாளர்கள் கிளைகளை வழி நடத்துவார்கள். இவர்கள் இதற்கான முழுமையான பொறுப்பை ஏற்பார்கள். அத்துடன், இவர்கள் அடையாளமிடப்பட்ட தலைவர்களாகவும் இருப்பார்கள். சுயமாக முடிவெடுப்பதற்கான திறமையும் அதிகாரமும் அளிக்கப்பட்டவர்காளவும் இருப்பார்கள். சந்தை வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்வதற்கு நன்கு பயிற்றப்பபட்ட குழுவொன்றின் துணையுடன் செயற்படுவார்கள்.

### கடினமான வேலை

நிதியியல் கூற்றுக்களில் எமது செயலாற்றல்களில் மேலும் விளக்கமான மீளாய்வுகளை நீங்கள் காணலாம். ஆயினும் எமது நடவடிக்கைகள் குறித்த சுருக்கம் ஒன்றை தங்களுக்கு அளிக்க விரும்புகின்றேன். மிக உயர்வான போட்டிகளும் சவாலான சுற்றுச் சூழலும் காணப்பட்ட நிலமையிலும் வங்கியினால் இப் பெறுபேறுகளை அடைய முடிந்தது.

ஒரு அரச வங்கி என்ற வகையில் வரிகள் மற்றும் பரிமாற்றங்களூடாக திறைசேரிக்கு நாங்கள் செய்யும் பங்களிப்பு நாட்டின் பொருளாதாரத்திற்கு அதன் உட்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திக் கடன் திட்டங்களுக்கு செய்யப்படுவதாக இருக்கின்றதை நாங்கள் நன்கு அறிந்திருக்கின்றோம். இந்த ஆண்டில் தேசேவ இனால் செலுத்தப்பட்ட வரியிடலுக்கான தொகை ரூபா 3,077 மில்லியனாக இருந்தது. தேசிய பங்களிப்பிற்கு எமது வைப்புத் திரட்டல்களும் முக்கிய பங்காற்றுகின்றன. எமது வைப்புக்களின் ரூபா 457,650 மில்லியன் வைப்புத் தளம் 8.5% இனால் அதிகரித்திருப்பதைக் காண்பித்ததுடன் தேசிய அபிவிருத்திக்குத் தேவைப்பட்ட நிதிகளைக் காட்டுவதிலும் ஈடுபடுத்தப்பட்டது.

எமது சொத்துத் தளம் ரூபா 500,000 மில்லியன் எனும் மைற்கல்லை விஞ்சியுள்ளதுடன் ரூபா 509,694 மில்லியனாக 9% வளர்ச்சியுடன் எமது சொத்துத் தளம் உறுதியுடன் நன்கு ஸ்தாபிக்கப்பட்டுமிருக்கின்றது. எமது நிதியியல் செயலாற்றல்களில் வேறு சில குறிப்பிடத் தக்க சாதனைகளும் இருந்தன. அவற்றில் நியம திரவ சொத்து விகிதத்தின் முறையே 5%, 10% ஆன மிகக் குறைந்த ஒழுங்கமைப்புத் தேவைப்பாட்டைவிட அதிகமாக அடுக்கு I மற்றும் அடுக்கு I & II மூலதனம் பேணப்பட்டதும் ஒன்றாகும். இது இணங்குவிப்பிற்கு அப்பாலும் சென்று சுற்றுச் சூழல் ஒன்றை ஏற்படுத்துவதில் எமக்குள்ள இடையறாத அவதானிப்பை காண்பிக்கின்றது. அத்துடன் இரண்டாவதாக எமது செயற்படாத கடன் விகிதம் வங்கித் தொழில் வீதத்தை விடவும் மிகவும் குறைந்த மட்டத்தில் 2.71% மாக இருக்கின்றது.

### நாங்கள் மாற வேண்டும்

எங்கள் நோக்கங்கள் மிகுந்த எதிர்பார்ப்பைக் கொண்டவை. அவ்வாறே எமது மூலோபாயத் திட்டத்தில் நாங்கள் எழுதியுள்ள பிரேரணைகளும் உள்ளன. துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் வர்த்தக நில அமைப்பு ஒன்றினை ஏற்படுத்துவதற்கு தவிர்க்க முடியாத மாற்றங்களை அறிமுகப்படுத்தும் வகையில் எமது ஒட்டு மொத்த செயற்பாடுகளை நாங்கள் தொடர்ந்து மீளாய்வு செய்வோம்.

நாங்கள் தற்போது பணிபுரிந்து கொண்டிருக்கும் நோக்கம், பணி, மதிப்பீடுகள் என்பவற்றை நன்கு வரிசைப்படுத்தி செயற்படுகின்றோம். நியாயமான கால கட்டம் ஒன்றிற்குள் எமது நோக்கத்தை நாங்கள் நிச்சயமாக அடைவோம் என்பதை நாங்கள் அறிந்திருக்கின்றோம். இந்த போட்டி மிகுந்த சூழலிலிருந்து உருவாகும் பல்வேறு சவால்களையும் மேற்கொள்வதற்கு நிச்சயமாக எமது தற்போதைய குழு

## திரு.ஹென்னாயக்க பண்டாரவின் ஒரு மீளாய்வு

பொது முகாமையாளர் / பிநிஅ

வலுவான ஐக்கியமுள்ளதாகவும் இயக்க சக்தியுள்ளதாகவும் இருக்கின்றதென நான் உறுதியாக நம்புகின்றேன். நாங்கள் சேவை வழங்கும் அமைப்பைக் கொண்டவர்கள். திறமை, புத்தாக்கம், உற்பத்தியாற்றல் மற்றும் எமது வங்கிக்கு நன்மைகள் தருவதும் மொத்தமாக வங்கிக் கைத்தொழிலுக்கு பெறுமதி கூட்டுவதுமான வித்தியாசமான எமது ஆற்றலில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கின்றோம்.

குழுவினது அறிவாற்றலைத் தொடர்ச்சியாக தரமுயர்த்துவதற்காக எமது குழுவிற்கு நாங்கள் போட்டி விளிம்புகளை ஏற்படுத்துகின்றோம். எமது தொழிலின் முகாமைத்துவ மாற்றத்திற்கு உதவியாக பல்வேறு துறைகளிலும் விசேட நிபுணத்துவத்தைப் பெறுவதற்கும் நாங்கள் முயற்சிப்போம்.

**எதிர்காலம் அழைக்கின்றது**

தென் ஆசியாவின் பொருளாதார மையம் - இலங்கைக்கு இதுவே தேவை. இலங்கை விசேடமான ஒரு நாடு. மாறிமாறி வரும் வரலாற்றைக் கொண்டிருப்பினும் நாங்கள் மீண்டெழுபவர்களாக இருக்கின்றோம். எமது பொருளாதாரக் குறிகாட்டிகள் பெரும்பாலும் நிலையானதாகவே இருக்கின்றதுடன் கடந்த மூன்று ஆண்டுகளாக சமாதானத்தின் நன்மைகள் இதற்குச் சாதகமாக உள்ளமை தென்படத் தொடங்கியுள்ளன. எமது வளர்ச்சி உலக சராசரியைவிட அதிகமாக உள்ளதுடன் தென் ஆசியாவில் மிகத் துரிதமானதாகவும் இருக்கின்றது. இந்தப் பிராந்தியத்தின் பெரும்பாலான நாடுகளை விட இலங்கை சிறப்பாகச் செற்படுவதை உலக குறிகாட்டிகள் காண்பிக்கின்றன. இதன் கருத்து நாம் எல்லாவற்றையும்

சரியாகச் செய்கிறோம் என்பதாகும். துரித அபிவிருத்தி நிகழ்ச்சியில் ஏற்கனவே பலனளித்துக் கொண்டிருக்கும் நிலமையில் அரசாங்கத்தின் "பத்தாண்டு தொலைநோக்குத் திட்டம்" சரியான

**வலுவான பொருளாதார மூலாதாரங்களை தக்க வைத்துக்கொள்ளும் அதேநேரம் எமது நாடு தற்போது மிகுந்த எதிர்பார்ப்புகள் உள்ள அபிவிருத்தி திட்டத்தில் துரிதமாக செயற்படுத்துவதை நாம் மறந்துவிடலாகாது**

பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. வலுவான பொருளாதார மூலாதாரங்களை தக்கவைத்துக் கொள்ளும் அதே நேரம் மிகவும் உயரிய நோக்கங்களையுடைய அபிவிருத்தித் திட்டங்களை நாடு துரிதப்படுத்துவதையும் நாங்கள் மறந்துவிடக் கூடாது.

இப் பாரிய திரையில் முக்கிய உந்து சக்தியாக வங்கித் தொழில் இருப்பதை நான் அவதானிக்கின்றேன். அத்துடன் இப் பாரிய தேசிய தொலை நோக்குடன் நிதியியல் அதிகாரங்கள் உள்ள பழக்கங்களை அபிவிருத்தி செய்வதற்கும் சேமிப்பை வளர்ப்பதற்கும் கிராமிய பொருளாதாரத்திற்கு இயக்க விசையைக் கூட்டுவதற்கும் தேசேவ யும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது.

நாங்கள் புதிய வர்த்தகத் துறைகள் உருவாவதைக் காண்கின்றோம். விசேடமாக நிதியியல் புத்தகங்களிலும் அசையாச் சொத்து அபிவிருத்தியிலும் இதைக் காண முடிகின்றது. தேசத்தின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பாளராக கிராமிய பொருளாதாரம் உருவாகி வருவதையும் நாங்கள் காண்கின்றோம். அத்துடன் இந்த வர்த்தகத் துறைகளை எங்களால் செலுத்திச் செல்ல முடியும் என்பதையும் நாங்கள் அறிந்திருக்கின்றோம்.

இந் நிலையில் 2011இலிருந்து 2013இற்கான எமது மூலோபாய வர்த்தகத் திட்டம் நல்லதொரு தளமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. திட்டமிட்டவாறு மூலோபாய நிகழ்ச்சித் திட்டம் பூர்த்தியடையும் எனும் முழுமையான நம்பிக்கையை நாங்கள் கொண்டிருக்கின்றோம். இதற்கு உதவுவதற்காக (எமது 2013இன் நடவடிக்கைத் திட்டம் அதன் முழுமையான SWOT பகுப்பாய்வில்) எமது குறுங்கால மூலோபாயம் வெளிப்படுத்தியுள்ளது. இது 2014–2016இற்கான எமது புதிய மூலோபாயத் திட்டத்தை நோக்கி அமையும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்போது நாங்கள் வேரூன்றி இருக்கின்றோம். தொடர்ந்தும் வேரூன்றி இருப்போம். ஆனாலும் எமக்குப் புதியதும் சிறப்பான எதிர்காலப் பலன்களையும் இந்த வேர்கள் அளித்துப் பாதுகாக்கும். நாங்கள் செயற்படுவற்றிற்குள் எமது சேமிப்புக்களின் ஆரம்பம் எப்போதும் முக்கியமாக இருக்கும். ஆயினும் துரிதமாக மாறும் உலகத்தில் தற்போது நாங்கள் எமது பார்வையை விரிவாக்கியுள்ளோம். எங்களுக்கு வெளியில் வாய்ப்புகள் உள்ளதென்பதை நாங்கள் அறிவோம். இவை ஒவ்வொன்றிலுமிருந்து முழுமையான அனுகூலங்களை பெற்றுக் கொள்ள உத்தேசித்திருக்கின்றோம். அத்துடன் எதிர்காலத்திற்கான எமது நடவடிக்கைகளின் பட்டயமாக இந்த அவதானிப்பு இருக்கும்.



**எச்.எம். ஹென்னாயக்க பண்டார**
பொது முகாமையாளர் / பி.நி.அ.
கொழும்பு

28 மார்ச் 2013



# அத்தியாயம் 2

## 2012இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம்

முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

இலங்கையர்களில் அதிகமானோர் தமது வாழ்வில் ஏதோ ஒரு கட்டத்தில் தேசிய சேமிப்பு வங்கியின் கிளையொன்றிற்கு வருகை தருகின்றனர் எனும் போது, தேசேவ யை சாதாரணமான நிதி நிறுவனம் என கருதிவிட முடியாது. பெரும்பான்மையான இலங்கையர்களின் வாழ்க்கையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தும் சமூக நிறுவனமாக இது இருக்கின்றது. இதனால் தான் தேசிய சேமிப்பு வங்கியின் நிதிசார்ந்த நலன்களும், ஸ்திரத் தன்மையும் அந்தளவு முக்கியத்துவம் பெறுகின்றது. கடந்த 40 ஆண்டுகளாக இலங்கையர்கள் பல தலைமுறைகளாக தமது நம்பிக்கையை எம்மில் வைத்துள்ளனர். இக் காரணத்தினால் தான் இந் நாட்டு மக்களுக்குரிய பலாபலன்களை உறுதி செய்யக் கூடிய வலுவான நிதி நடவடிக்கைகளை உறுதி செய்ய வேண்டியது எமது சமூக கடப்பாடாகவுள்ளது.

எவ்வாறாயினும் ஒரு தேசிய வங்கி என்ற வகையில் முழு தேசத்தினதும் அபிவிருத்தியையும் வளர்ச்சியையும் கருத்தில் கொள்ளாதிருக்க முடியாது. எனவே, நாம் எம்மை குறுகிய இலாப நோக்கத்திற்குள் அடைத்துக் கொள்ளவியலாது. மாறாக எமது வர்த்தக செயற்பாடுகள் எப்போதுமே பரந்ததொரு அபிவிருத்தி அணுகுமுறையாக இருக்கின்றது. பாரிய அபிவிருத்திக் கருத்திட்டங்களில் அரசாங்க நிதியிடலுக்கு ஆதரவளிப்பதாக இருப்பினும் அல்லது இலங்கையின் கிராமிய விவசாயி ஒருவருக்கு சிறுகடன் ஒன்று கிடைப்பதற்கு ஆதரவளிப்பதாக இருப்பினும் இந்த அணுகுமுறையையே நாங்கள் பயன்படுத்துகின்றோம். ஆகவேதான் எமது சம்பந்தப்பட்ட விடயங்களில் நிதி தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்வதனூடாக எமது செயற்பாடுகளின் நேர்மையை எப்போதும் பேணுகின்றோம்.

**“கடந்த 40 ஆண்டுகளாக இலங்கையர்கள் பல தலைமுறைகளாக தமது நம்பிக்கையை எம்மில் வைத்துள்ளனர். இக் காரணத்தினால் தான் இந் நாட்டு மக்களுக்குரிய பலாபலன்களை உறுதி செய்யக் கூடிய வலுவான நிதி நடவடிக்கைகளை உறுதி செய்ய வேண்டியது எமது சமூக கடப்பாடாகவுள்ளது”**

2012இல் சில காரியங்களில் எற்பட்ட எதிர்பார்க்காத சவால்களுக்கு நாம் முகங்கொடுக்க நேரிட்டது. இதனால் இவ்வாண்டிற்கான எமது இலக்குகள் பாதிப்படைந்தன. உதாரணமாக வங்கியின் கொடு கடன்கள் மீது ஏற்படுத்தப்பட்ட உச்ச கடன் மட்டங்கள் மற்றும் உயர்வடைந்த வட்டி வீதங்கள் போன்ற கொள்கை மாற்றங்கள் எமது உச்ச மற்றும் அடிமட்ட கோடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தின. எவ்வாறாயினும், வளர்ச்சியை தொடர்ந்து நிலைநிறுத்திக் கொண்டதுடன் ஒட்டுமொத்தமாக எமது வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் எமது தேசிய பொருளாதாரத்திற்கும் எமது ஆதரவை வழங்கவும் முடியுமாயிருந்தது.

**நிதிசார் நியம அறிக்கையிடல் மாற்றங்கள்**

2012 ஜனவரி முதல் வங்கி புதிய கணக்கீட்டு நியமங்களை கடைப்பிடித்து (எஸ்எல்எப்ஆர்/எல்கேஏஎஸ்) வருகின்றது. 2012 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒன்றிணைக்கப்பட்ட நிதிசார் அறிக்கையிடலே SLFRS/LKAS விதிகளுக்கமைய தயாரிக்கப்பட்ட முதவாவது நிதிக் கூற்றுகளாகும். கடந்த ஆண்டிற்கான நிதி அறிக்கை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமையவே தயாரிக்கப்பட்டது. SLFRS/LKAS விதிகளுக்கமைய புதிய நியமங்கள் செயல்படுத்தல் வேண்டும். எனவே, 2011 டிசம்பர் 31இல் முடிவுற்ற காலப்பிரிவுக்கமைய வருமானக் கூற்றுக்கள் சொத்து மற்றும் பொறுப்புகள் சார்ந்த அறிக்கைகள் புதிய கணக்காய்வு நியமங்களுக்கமைய மீள் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள 2012 நிதியறிக்கைகளுடன் ஒப்பீட்டளவிலும் முன்வைக்கப்பட்டுள்ளன.

## 2012இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம்

நிதியியல் மீளாய்வு

**புதிய கணக்காய்வு நியமங்களை ஏற்றுக் கொள்வதனால் ஏற்படும் தாக்கங்கள்**

இ.க.நி இலிருந்து எல்கேஎஸ்/எஸ்எல்எப்ஆர்எஸ் முறைகளுக்கு திரும்பியதன் மூலம் 2011 டிசம்பர் 31இல் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைகள் 2011ஆம் ஆண்டின் நிதிசார் செயற்பாட்டு என்பவற்றின் மீது தாக்கங்களை எற்படுத்தியுள்ளன. பொறுப்புக்கள் ரூபா 491 மில்லியனால் அதிகரித்து மொத்த சொத்துக்களில் பெறுமதி ரூபா 661 மில்லியனாக குறைவடைந்தமையினால் 2011 டிசம்பர் 31ஆம் திகதியாகின்ற போது சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 1,152 மில்லியன்களாக குறைவடைந்தது. இதற்கமைய 2011ஆம் ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 936 மில்லியன்களாக குறைவை காட்டியது. இதற்கான முக்கிய காரணியாக காணப்பட்டது வங்கியின் ஓய்வூதிய நிதியத்தின் தற்போதைய பெறுமதி மற்றும் நிதியத்தின் சொத்துக்களின் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடாகிய ரூபா 2,025 மில்லியன்களுக்கான பொறுப்பை ஆரம்பத்தில் பிடித்து வைக்கப்பட்ட இலாபத்துடன் சரிசெய்தமையாகும்.

நியதிச் சட்ட தேவைகளை பின்பற்ற நடப்பாண்டின் காலாண்டுகளில் செயற்பாடுகள் மற்றும் நிதிசார் நிலைமையான இ.க.நி நியமங்களுக்கு ஏற்ப ஏற்பாடு செய்து எஸ்எல்எப்ஆர்/எல்கேஏஎஸ் களை சரிசெய்தல் முறைகளினால் ஏற்பட்ட தாக்கம் குறிப்புகளில் வெளியிடப்பட்டுள்ளன.

ஆரம்பக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்ட 2011 நிதி அறிக்கை மற்றும் எஸ்எல்எப்ஆர் / எல்கேஏஎஸ் நியதிகளுக்கமைய மீள் வெளியீடு செய்த 2011 நிதி அறிக்கைகளிடையேயான அசைவை வெளியிட வங்கி ஒரு கணக்கிணக்கத்தைத் தயாரித்துள்ளது. இது இலங்கை கணக்கீட்டு நியதிகளின் கீழ் இலங்கை நிதி அறிக்கையிடல் (SLFRS-1) என முதன் முறையாக உபயோகிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டதாகும்.

**வருமானம்**

**தேறிய வட்டி வருமானம்**

வட்டி வருமானத்தில் அதிகமாக உள்ளடங்கியது அரச பிணையங்களிலான முதலீடுகளிலிருந்து பெற்ற வட்டி வருமானமான ரூபா 34,289 மில்லியனும் மற்றும் சிறு

**நிகர வட்டி வருமானம்**




வர்த்தக கடன் கொடுத்தல் உட்பட ஏனைய முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வட்டி வருமானமான ரூபா 18,384 மில்லியனும் ஆக இருந்தது. வருடத்தில் வட்டி விகிதாசாரத்தில் ஏற்பட்ட அதிகரிப்பும் இறுக்கமான சந்தைப் போட்டியும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய வட்டி வீதங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. சந்தை வட்டி வீதங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றதுடன் வட்டி வீத வருமானத்தை விட அதிக அளவில் வட்டி செலவு அதிகரித்தது. 2011ஆம் ஆண்டில் காணப்பட்ட வட்டி வருமானமாகிய ரூபா 47,096, ரூபா 52,673 மில்லியன் வரை ரூபா 5,577 இனால் அதிகரித்த அதேவேளை, வட்டிச் செலவு 2012ஆம் ஆண்டிற்குள் ரூபா 9,846இனால் அதிகரித்தது.

இதன் பிரதிபலனாக தேறிய வட்டி வருமானம் ரூ. 4,269 (24%) மில்லியன்களால் வீழ்ச்சியுற்றதுடன் தேறிய வட்டி எல்லை 2.8% ஆகியது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011இல் 4.1% ஆகக் காணப்பட்டது.

**வியாபாரம் மூலம் பெற்ற தேறிய இலாபம்/நட்டம்**

மேற்படி இலாப/நட்டங்களில் உள்ளடங்குவது விற்பனைக்காக வைத்துக் கொள்ளப்பட்ட நிதியியல் உபகரணங்களிலிருந்து பெறப்பட்ட இலாப/நட்டங்களாகும். 2011இல் ரூபா 860 மில்லியன் நட்டங்களைக் காட்டியதற்கு எதிராக 2012இல் 70 மில்லியன் இலாபத்தைக் காட்டுகின்றது. வருடத்தில் வட்டி வீதம் அதிகரித்து விற்பனை கணக்கில் காணப்பட்ட திறைசேரி உண்டியல்கள், முறிகள் ஆகியன மூலம் பெறப்பட்ட மூலதன இலாபத்தைக் குறைந்தது. கொழும்பு பங்குச் சந்தை

## 2012இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம்

நிதியியல் மீளாய்வு

வருடம் முழுதும் வீழ்ச்சி நிலையைக் கண்ட போதும் 2011ஆம் ஆண்டின் தரவுகளுடன் ஒப்பிடுகையில் நிலைமை சீரடைந்துள்ளது. அதனால் வங்கியின் விற்பனை வருமானத்தின் ஒரு பகுதியான பங்கு முதலீட்டின் நியாய பெறுமதிகள் ஒரு நேர்க்கணிய மாற்றத்தினை இவ் ஆண்டில் கண்டுள்ளது.

**பெறுமதி குறைப்புகளும் கடன் நட்டத்திற்கான ஏற்பாடுகளும்**

எஸ் எல் எப் ஆர் /எல் கே ஏ எஸ் ஆகியன செயற்படுத்தப்பட்டதன் காரணமாக, வங்கியின் கடன்கள் முற்பணங்கள் ஆகியன மீது ஒதுக்கங்களை செய்யும் முறையாகிய விசேட/பொது ஒதுக்கு முறை தனி மற்றும் கூட்டு குறைப்பு முறையிலிருந்து மாறுபட்டுக் காணப்பட்டது. வங்கி பெறுமதி குறைப்பு நட்டத்திற்காக 131 மில்லியனை ஒதுக்கியுள்ளது. சிறு வர்த்தகக் கடன் வகைப்படுத்தல்கள் அனைத்தினதும் கூட்டுப் பெறுமதி குறைப்பு, கடன்களும் முற்பணங்களும் துறையின் அடிப்படையில் அமைந்துள்ளதுடன், 0.5% ஒதுக்கம் ஒன்றையும் தனியான கடன்களோடு கூட்டு கழிவாக கடன் முற்பண தொகுதி ஒரு சேதத்தை விளைவித்தது. கருத்திட்டக் கடன்களை தனிப்பட்ட பெறுமதி குறைப்புகள் தொடர்பாக பரீட்சித்த போது எவ்வித பெறுமதி குறைப்பு நட்டமும் காணப்படவில்லை. 2011 இல் காணப்பட்ட ரூபா 143 மில்லியனாக பெறுமதி குறைப்பு நட்டம் வீழ்ச்சியடைந்தமை காரணமாக, செயற்படா கடன் வீதம் 3.03% இலிருந்து 2.71% ஆக முன்னேறியதைக் காண்பித்தது.

**செலவுகள்**

வலையமைப்பு விரிவாக்கத்திற்குப் பதிலாக உற்பத்தியாற்றலை அதிகரிக்க திட்டமிட்டது. 2011இல் திறக்கப்பட்ட 24 கிளைகளுடன் ஒப்பிடும் போது இவ் வருட வலயமைப்பு விரிவாக்கம் 09 கிளைகளாக மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. தொழில் சங்கங்களுடனான கூட்டு ஒப்பந்தம் மூலம் சம்பள அதிகரிப்பு ஏற்படினும் முன்னைய ஆண்டை விட 2012 இற்கான மொத்த ஆளணிச் செலவு வீழ்ச்சியையே காட்டுகிறது.

2012 டிசம்பர் 31இல் ஓய்வூதிய நிதிய ஓய்வுக் கொடுப்பனவு தொடர்பாக கணிப்பீட்டு மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் அதில் ஓய்வூதியக் கொடுப்பனவு பொறுப்பில் குறைவும் தென்பட்டது. அதனால் மேற்கொண்ட சரிசெய்தல் காரணமாக வருடத்தில் ஓய்வூதிய நன்மை செலவும் குறைந்தது.




பண வீக்கம் காரணமாக ஏனைய செலவுகள் அதிகரித்துள்ளதுடன் உற்பத்தி திறனை அதிகரிக்க நடவடிக்கைத் திட்டமிடல்களும் திட்டமிட்டுள்ளன. எனவே, வங்கியின் தேறிய வட்டி வருமானம் 24% மாக குறைந்துள்ள போதும் 2011 காணப்பட்ட 36.4% வருவாய்க்கான செலவு வீதாசாரத்தை 45.7% என்ற நிலையில் தக்கவைக்க முடிந்தது.

**அஞ்சல் மா அதிபருக்கான சேவைக் கட்டணம்** (PMG)

2012இல் அஞ்சல் துறைசார்பாக 2011ஆம் ஆண்டை மையமாகக் கொண்ட முறைக்கமைய கணக்கிடப்பட்ட சேவைக் கட்டணம் ரூபா 111 மில்லியன். (இது 2011 103 மில்லியனாகும்).

**இலாபத் தன்மை**

எமது உள்ளக சக்திகள் பரீட்சிக்கப்பட்ட ஆபத்தான ஆண்டின் போதும், உயர்வடைந்த இலாபங்களின் கரணமாக, வங்கி தனது நீண்டகால உதிப்பாட்டினை பேணிக்கொண்டது. திரட்டல் விடயத்தில் சந்தைப் போட்டிகள் இறுக்கமாக நிலவியதுடன் அது வட்டி எல்லையிலும் அழுத்தங்களை ஏற்படுத்தியது. இருப்பினும் எமது ஊழியர்களின் ஆற்றல்களை வளர்த்ததுடன், வாடிக்கையாளருக்கு கூடிய சேவைகளையும் வழங்கியது. எனவே, 2011 இன் வரிக்குப் பிந்திய இலாபத்தைவிட 29% குறைவாக காணப்பட்ட போதும், வங்கியின்

**"திரட்டல் விடயத்தில் சந்தைப் போட்டிகள் இறுக்கமாக நிலவியதுடன் அது வட்டி எல்லையிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. இருப்பினும் எமது ஊழியர்களின் ஆற்றல்களை வளர்த்ததுடன், பணி தொடர்புபட்டதும் வாடிக்கையாளருக்கு கூடிய சேவை வழங்கப்படுகிறது"**




இலாபம் ரூ. 4,331 மில்லியனாக இருந்தது. இது, ஆண்டின் போது நாங்கள் முகங்கொடுக்க வேண்டியிருந்த பல சவால்களுக்கு மத்தியிலும் எமக்கு உற்சாகத்தை அளித்தது.

சொத்துக்கள் மீதான திரும்பல்கள் (ROA) பங்குடமை உரிமை பங்குரிமை மூலதனம் மீதான திரும்பல்கள் ROE) முறையே 1.3%, 18.3% ஆக வீழ்ச்சி கண்டது.

**அரச நிதியங்களுக்கான பங்களிப்பு**

வரிகள், மாற்றல்கள் ஆகியன மூலமாக அரசாங்கத்திற்கு வங்கியினால் பங்களிப்புச் செய்யப்பட்ட தொகை ரூபா 5,900 மில்லியன். இதன் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூ. மில். 2012 | ரூ. மில். 2011 |
|---|---|---|
| பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | 1,239 | 1,564 |
| வருமான வரி | 1,838 | 3,193 |
| செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் | 2,823 | 3,213 |
| மொத்த பங்களிப்பு | 5,900 | 7,970 |

இதுவரை மொத்தமாக திறைசேரிக்கும் நிதி வசதிகளுக்கும் வழங்கப்பட்ட அரசாங்கத்திற்கான தொகை ரூபா 16,533 மில்லியனாக அதிகரித்தது.




**முதலீட்டு நிதியக் கணக்கு (IFA)**

இலங்கை மத்திய வங்கி விதிகளுக்கமைய நிறுவப்பட்ட இந்த முதலீட்டு நிதியக் கணக்கின் மீது 2.8 பில்லியன் முதலிடப்பட்டது. (2011இல் ரூபா 1.6 பில்லியன்) மேலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக ரூபா 384 மில்லியனும், விவசாயம் கடனுக்காக ரூபா 3.3 மில்லியனும் வழங்கப்பட்டது. மீதி அரச பிணையங்களில் முதலிட்டப்பட்டது.

**வைப்புத் திரட்டல்**

வங்கி 2011இல் திரட்டிய ரூபா 55,648 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2012இல் ரூபா 31,126 மில்லியனான வைப்புகளை திரட்டியதுடன் 18.5% வளர்ச்சியைப் பதிவு

செய்தது. இது 2012 இன் வங்கித் துறையின் வைப்பு வளர்ச்சி வீதத்தைப் பார்க்கிலும் 2011 டிசம்பர் 31 அன்றுள்ளவாறான 18% வளர்ச்சியாக விருந்தது.

நிலையான வைப்புகளுக்கு சந்தையில் வழங்கப்பட்ட கவர்ச்சியான பேரம்பேசும் வீதங்களின் காரணமாக உருவான போட்டித் தன்மை ஆண்டிற்கான வைப்பு வளர்ச்சியை மோசமாக பாதித்தது. அதன் விளைவாக, வாடிக்கையாளர்கள் உயர்ந்த வட்டி வீதங்களுக்கு பேரம் செய்தனர். அத்துடன் இன்னுமதிகமான கவர்ச்சியான வட்டி வீதங்களை




வழங்கிய ஏனைய நிதி நிறுவனங்களுக்கு தமது நிதிகளை இடமாற்றினர்.

இத்தகைய அபிவிருத்திகளுக்கு பதிலளிப் பதற்காக விசேட வீதங்களுடன் கூடிய 1மாத

**"தேசேவ யில் பொது மக்களின் வைப்புகளுக்கு இன்னுமதிகமான பாதுகாப்புள்ளதென அவர்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்குவதிலும் தேசேவ ஈடுபட்டது. 100% அரசாங்க உத்தர வாதத்திற்கான எமது வாய்ப்பையும் அடிக்கோடிட்டு காண்பித்தது"**

- 2மாத நிலையான வைப்பு திட்டங்களை தேசிய சேமிப்பு வங்கி அறிமுகப்படுத்தியதுடன் சேமிக்கும் வாடிக்கையாளர்களை கவருவதற்காக பரிசுத் திட்டங்களை வழங்கும் விசேட இரு வாரங்களுக்கான சேமிப்பு நிகழ்ச்சித் திட்டங்களையும் நடத்தியது. தேசேவ யில் பொது மக்களின் வைப்புகளுக்கு இன்னுமதிகமான பாதுகாப்புள்ளதென அவர்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்குவதிலும் தேசேவ ஈடுபட்டது. 100% அரசாங்க உத்தரவாதத்திற்கான எமது வாய்ப்பையும் அடிக்கோடிட்டு காண்பித்தது.

**வெளிநாட்டு நாணய திரட்டல்**

2011உடன் ஒப்பிடும் போது 14.4%அதிகரிப்பாக எமது வதியாதோர் வெளிநாட்டு நாணயம் மற்றும் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கின் ஊடாக ரூபா 705 மில்லியனை தேசேவ திரட்டியது. வெளிநாட்டு நாணய மாற்று வீதங்களின் தளம்பல்களினால் ஆண்டின் போது வதியாதோர் மற்றும் வதிவோர் கணக்குகளின் உள்நாட்டு பாய்ச்சலில் அதிகரிப்பு ஏற்பட்டது. எவ்வாறாயினும், உள்ளக நாணய வைப்புகளுக்கு கிடைத்த உயர்ந்த நாணய மாற்று வீதம் மற்றும் உயர்ந்த வட்டி வீதங்களின் காரணமாக அதிக தொகையான ஐ.அ.டா., பிரி. பவுன்ஸ், அவு. டாலர், யூரோ முதலிய நாணயங்கள் மீளெடுக்கப்பட்டதை ஆண்டின் போது காண முடிந்தது.

2011உடன் ஒப்பிடுகையில் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற மொத்த பணமனுப்புதல் 61% அதிகரிப்பைக் காண்பித்தது. இதில் பண பரிமாற்று நிலையங்களுடாக கிடைத்தது 36.9%மாகவும் தொடர்புடைய வங்கிகளிடமிருந்து கிடைத்தது 10.3% மாகவும் இருந்தது. அதேநேரம், வெளிநாடுகளில் உள்ள தேசேவ யின் பிரதிநிதிகள் நேரடியான பணமனுப்புதலுக்கு பிரச்சாரம் செய்வதுடன் இவை தேசேவ இற்கு இலங்கை ரூபாய்களில் நிலையான வைப்பு/சேமிப்புக் கணக்குகள் ஊடாக அனுப்பப்படுகின்றது.

**அஞ்சல் வங்கி திரட்டல்**

2011இன் ரூபா 718 மில்லியனுடன் ஒப்பிடும் போது இவ் ஆண்டில் அஞ்சல் வங்கித் துறை ரூபா 352 மில்லியனை திரட்டியது. அஞ்சல்

## 2012இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம்

நிதியியல் மீளாய்வு

துறை சேமிப்புகளில் நிலவிய வீழ்ச்சியுறும் போக்கே மெதுவான பெறுபேறுகளுக்கான காரணமாகும். இந்த வீழ்ச்சியுறும் போக்கிற்கு அனேக காரணங்களைக் குறிப்பிடலாம். உயர்ந்த வருவாய்களை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் வாடிக்கையாளர்கள் தமது அஞ்சல் சேமிப்புகளை தேசேவ யின் நிலையான வைப்பிற்கும் ஏனைய நிதி நிறுவனங்களுக்கும் மாற்றுகின்றனர். வைப்பாளர்களுக்கு வசதியான நுண் கடன் திட்டங்களை வழங்கும் போட்டியாளர்களும், அஞ்சல் துறை வாடிக்கையாளர்களை தம்மிடம் இழுத்துக் கொள்ளுகின்றனர்.

தே.சே.வ, அனுராதபுரம், மாத்தளை, கம்பஹா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக 497 அஞ்சல்/உப அஞ்சல் நிலையங்களில் மெகா சேமிப்பு பிரச்சாரங்களையும் தெரிவு செய்யப்பட்ட 23 உப அஞ்சல் நிலையங்களில் பொக்கெட் பிரச்சாரங்களையும் நடத்துவதன் மூலம் அஞ்சல் துறையின் மாற்றத்திற்கு தேசேவ பதிலளித்துள்ளது.

### சொத்துக்கள்

எஸ்எல்எப்ஆர்/எல்கேஏஎஸ் உபயோகிக்கப்பட்டதன் மூலம் முதலீட்டுத் துறை, வியாபாரத் துறை என முன் பிரிக்கப்பட்ட வங்கிகள் முதலிட்டு வர்த்தகத்திற்கென வைத்துக் கொள்டுள்ள சொத்துக்கள் முதிர்வு வரை வைத்துக் கொண்டுள்ள சொத்துக்கள், கடன் மற்றும் கிடைக்கப்பட வேண்டியவை மற்றும் விற்பனைச் சொத்துக்கள் என பிரிக்கப்பட்டன.

அரச பிணையங்கள், பங்கு மூலதனம் என்பவை வியாபாரத்திற்கென பிடித்து வைத்துள்ள பிணையங்கள் என்பவை விற்பனைக்காகப் பிடித்து வைத்துள்ள நிதியியல் சொத்துக்கள் எனப் பெயரிடப்பட்டுள்ளன. பங்கு மூலதனத்தின் முன்னிலைப்படுத்தப்படாத நீண்டகால




முதலீடுகள் மற்றும் முன்னிலைப்படுத்தப்பட்ட பங்கு மூலதனத்தின் மூலோபாய முதலீடுகள் என்பவை விற்பனைக்குக் கிடைக்கக் கூடிய நியியல் முதலீடுகளில் தரப்பட்டன. முதிர்வு வரை வைத்துள்ள அரசாங்க பிணையங்களில் முதலீடுகள் முதிர்வுக்காக வைத்துள்ள நிதியியல் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ளன.

### வியாபாரத்திற்காக பிடித்து வைத்துக் கொண்ட முதலீடுகளும் முதிர்வு வரை பிடித்து வைத்துக் கொண்ட முதலீடுகளும்

2012 டிசம்பர் இறுதியாகும் போது தே.சே.வ. மொத்த முதலீட்டுத் தளம் ரூபா 339,598 மில்லியனாகும். இது 3.6% வளர்ச்சியாகும். இதில் 95%இனை அரச பிணையங்களிலும் 2%இனை உரிமை மூலதனத்திலும் மீதி பல்வேறுபட்ட முதலீடுகளும் வழங்கப்பட்டன.

வங்கியின் சொத்து 9.4% வளர்ச்சியை காட்டியது.

2012 இன் வங்கித்துறையின் 18% சொத்து வளர்ச்சிக்கு எதிராக 2011 இன் ரூ.465,974 மில்லியனிலிருந்து ரூபா 509,694 மில்லியனை அடைந்து 9.4% வளர்ச்சியை வங்கியின் சொத்துக்கள் காண்பித்தன. வங்கிச் சொத்துக்களின் (60%) (2011 - 64%) முதிர்வுக்காக வைத்துள்ள நிதி பத்திரங்களில் முதலிடப்பட்டுள்ளது. 2.1% (2011 - 2.5%) வர்த்தகத்திற்காக பிடித்து வைக்கப்பட்டுள்ள சொத்துக்களில் முதலிடப்பட்டன. மற்றும் 33% (2011 - 29%) கடன்களும் கிடைக்க வேண்டியவைகளுக்கும் வழங்கப்பட்டது.

2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு ரூபா 4,453 மில்லியன் வியாபாரத்திற்காக பிடித்து வைக்கப்பட்டது. இது பங்கு மூலதனத்துறையின் உண்மைப் பெறுமதியாகும். கொழும்பு பங்குச்சந்தையின் சரிவின் காரணமாக, தேசேவ யின் பங்கு மூலதனத்துறையில் சந்தைப் பெறுமதி மேலும் 9% ஆனால் வீழ்ச்சியடைந்தது. சந்தை விலைகளின் பெறுமதி வீழ்ச்சியை

## 2012இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம்

நிதியியல் மீளாய்வு

சம்பந்தப்படுத்துவதற்காக இந்த வீழ்ச்சி ரூபா 119 மில்லியன் பெறுமதியான சீராக்கல்களுக்கான அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது.

### கடன்களும் வருமதிகளும்

வங்கிக்கான கடன்களும் வருமதிகளும் மொத்தமும் ஏனைய வாடிக்கையாளர் களுக்கான கடன்களும் வருமதிகளும் 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு ரூபா 168,619 மில்லியனாக இருந்தது.

ஆண்டின் போது சில்லறைக் கடன் வழங்கல் ரூபா 114,226 மில்லியனாக அதிகரித்து 2012 டிசம்பர் 31 இல் வங்கியின் கடன்துறையின் 82% வளர்ச்சியை பிரதிபலித்தது. மொத்தக் கடன் வழங்கும் நிறுவனம் என்ற வகையில் தே.சே.வ. ரூபா 13,374 மில்லியனை வங்கிக்கும் ஏனைய நிதி நிறுவனங்களுக்கும் வழங்கியது. விவசாயத்திற்கு ரூபா 1,226 மில்லியனும் வீடமைப்பிற்கு ரூபா 10,386 மில்லியனும் வழங்கப்பட்டுள்ளது. இது தேசிய ஈடுபாடுகளில் அதற்குள் அக்கறையைக் காண்பித்தது.

எமது கடன் மதிப்பீட்டு நடவடிக்கைகள் காரணமாக செயற்படா கடன் வீதம் 3.3% இலிருந்து 2.7% ஆக அதிகரித்தது. தேசிய நன்மைக்காக எம்மால் கட்டியெழுப்பப்பட்ட கடன் துறையை இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட கடன் மட்டுப்படுத்தலினாலும் நிறுத்த முடியவில்லை. நாம் வீடமைப்புக்கு ரூபா 9,535 மில்லியன் வழங்கியுள்ளோம். இது 23% அதிகரிப்பாகும். அபிவிருத்தி திட்ட கடன் வழங்கல் சென்ற ஆண்டைவிட 15% இனால் அதிகரித்தது.

### ஸ்திரத்தன்மை

வங்கியின் அடுக்கு மூலதனம் I மற்றும் அடுக்கு I-II மூலதனம் ஆகக் குறைந்த மட்டமான 5% மற்றும் 10% விட அதிகமாக காணப்பட்டதுடன் 2012 டிசம்பர் 31இல் முறையே 20.4%, 19.1%ஆக அதிகரித்தது. நியதிச் சட்ட திரவச் சொத்து விகிதாசாரம் 69.5% மாகக் காணப்பட்டது. இதுவும் 20% ஒழுங்கமைப்புத் தேவையை விட மிகக் கூடிய அதிகரிப்பாகும்.

### குழுச் செயற்பாடும் உப நிறுவன செயற்பாடும்

தே.சே.வ. யின் தொகுதி தே.சே.வ மற்றும் அதன் உப நிறுவனமான என்எஸ்பி பண்ட் மெனேஜ்மண்ட் கம்பனி லிமிடெட் இரண்டும் உள்ளடங்கும். 2011இன் தொகுதியின் வரிக்கு முந்திய இலாபம் ரூபா 9,411 மில்லியனுடன் ஒப்பிட 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறான தொகுதியின் வரிக்கு முந்திய இலாபம் 6,221 மில்லியனாக காணப்பட்டது. வரிக்கு பிந்திய இலாபம் 29% ஆல் குறைவடைந்து 2011 இல் ரூ. 6,104 மில்லினிலிருந்து ரூ. 4,341 மில்லியனாகியது.

### தேசேவ / பண்ட் மெனேஜ்மண்ட்

அரசாங்க பிணையங்களில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட முதனிலை வணிகர்கள் எண்மரில் ஒருவராக இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட எமது நிதி முகாமைத்துவ உப நிறுவனம் ஆரம்ப கட்ட மூலதனமாக ரூபா 150 மில்லியனுடன் 2000ஆம் ஆண்டில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது. என்எஸ்பி பண்ட் மனேஜ்மன்ட் முதனிலை சந்தையிலும் இரண்டாந்தர சந்தையிலும் சுறுசுறுப்பாகப் பங்கேற்கின்றது. இது ஐ.அ. டாலர்களில் வகைப்படுத்தப்பட்ட இலங்கையின் அபிவிருத்தி முறிகளின் உத்தியோகபூர்வ வழங்குனராகவும் இருக்கின்றது.

என்எஸ்பி பண்ட் மனேஜ்மன்ட், தேசேவ யை வழிநடத்தும் முகாமையாளராக கூட்டாக இணைந்து செயற்பட்டு, வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கு அரசாங்க பிணையங்களை வழங்குகின்றதுடன், இத் திட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் முகவராக வாடிக்கையாளர்களின் முதலீடுகளை நிர்வகிக்கின்றது.

வரிக்குப் பிந்திய இலாபமாக ரூபா 9.3 மில்லியனை கம்பனி பதிவு செய்தது. 2011 உடன் ஒப்பிடும் போது இது 78% குறைவாகும். 2011இன் ரூபா 1,390 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2012 டிசம்பர் 31 அன்று ரூபா 1,400 மில்லியனாக நிகர சொத்து பெறுமதி நிலவியது. 2012இல் கம்பனி பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக ரூபா 9 மில்லியனை செலுத்தியதுடன், 2012 இலும் வருமான வரி பொறுப்பாக ரூபா 43 மில்லியனையும் வழங்கியது. ஆண்டிற்கான நிகர வட்டி வருமானம் ரூபா 183.6 மில்லியனாகவிருந்தது. இது 2011 உடன் ஒப்பிடுகையில் 39% வீழ்ச்சியாகும். இலாபம் அல்லது நட்டம் ஊடான உண்மைப் பெறுமதியில் குறிக்கப்பட்ட நிதியியல் பத்திரங்களிலிருந்து ரூபா 139 மில்லியன் வியாபார நட்டத்தையும் கம்பனி அடைந்தது. 2011இல் இது ரூபா 136 மில்லியனாக இருந்தது.

## 2012இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம்

பொருளாதார மீளாய்வு

### உலகம் சவால்களுடன் தொடர்ந்தும் இருக்கின்றது

நாங்கள் தொடர்ந்து இருக்கும் என எதிர்பார்த்த ஆண்டாக இது இருக்கவில்லை. 2012இன் ஆரம்பத்தில் நன்றாக செயற்பட்டுக் கொண்டிருந்த நாடுகளில், பொருளாதார திருப்பம் ஒன்று இயல்பாகவே பொழியக் கூடும் என்ற சாதகமான எதிர்வு கூறல்கள் காணப்பட்டன. ஆனால், அவ்வாறு நடக்கவில்லை. நடந்ததென்னவோ பொருளாதாரத் துயரங்களின் ஆழத்தில் உலகம் துவண்டு கிடந்தது. அதேநேரம், ஐக்கிய அமரிக்காவும், யூரோ வலயமும் அவற்றின் சொந்த பொருளாதார யுத்தங்களுடன் போரிட்டுக் கொண்டிருந்தன. கூறுவதானால் மீளெழுதல் ஏற்றுக் கொள்ள முடியாத அளவு மெதுவாக இருந்தது. ஆனால், உலகின் ஏனைய பகுதிகள் அதன் பலனை உணரவில்லை என்றும் கூற முடியாதிருந்தது.

உலகம் முழுவதிலும் அரபு ஊற்று அதன் வீழ்ச்சியை தொடர்ந்தும் பொழிந்தது. எண்ணெய் விலைகளின் நிச்சயமின்மைகளில் இதனை அதிகமாகக் காண முடிந்தது. அதேநேரம், வெள்ளங்கள், நெருப்புகள், நில நடுக்கங்கள் மற்றும் வரட்சி உள்ளடங்கலான இயற்கை அழிவுகள் கண்டங்கள் எங்கும் அவற்றின் வளர்ச்சியை தடைசெய்தன. அத்துடன், "சின்டியன் மாஸ்டர்ஸ்" ("chindian Masters") இந்தியாவும் சீனாவும் இச் சகதி நிறைந்த கொள்கையிலிருந்து விலகியிருக்கவும் முடியவில்லை. எனவே, தமது வளர்ச்சி இலக்கை மீள எதிர்வு கூறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டன. அதேநேரம், கிரீஸ் போன்ற நாடுகள் வங்குரோத்து நிலைக்கு தள்ளப்படுவதையும் ஏனைய நாடுகள் தமக்கு பிணையாளர்களை தேடுவதையும் ஐரோப்பா அவதானித்தது.

2012இன் American Taxpayer Relief Act நிறைவேற்றப்பட்டதுடன், 2012 டிசம்பர் 31 அன்று வருவாய் அதிகரிப்பொன்றையும், எதிர்வரும் நிதி ஆண்டிற்கென திட்டமிடப்பட்டுள்ள செலவு செய்தலில் உயர்வையும் காண முடிந்தது. இதில் சாதகமான வாய்ப்பாக, ஆபிரிக்க, ஆசிய, ஐரோப்பிய புவியியல் பிரதேசங்களில் குறிப்பிடத்தக்க வர்த்தக செல்வாக்கை ஐ.அ. தொடர்ந்து பேணி வருவதால் நிச்சயமாக வாய்ப்பான ஊடுறுவல்கள் ஏற்படும் என எதிர்பார்க்கலாம்.

தொடர்ந்திருக்கும் பிரச்சினைகளின் முன்னோடியாக அபிவிருத்தியடைந்த நாடுகள் தொடர்ந்தும் இருந்தன. உலகத்தின் துயரத்தின் மையமாக இவை தொடர்ந்து காணப்பட்டன. யூரோ கடன் நெருக்கடியில் புதியதொரு உயர்வு தென்பட்டதுடன் உலக பொருளாதாரத்தின் மிகக் குறைவான வளர்ச்சியிலும் இது பிரதிபலித்தது. 2011இன் 3.6%உடன் ஒப்பிட இது வெறும் 3%மட்டுமே. 2013இல் 3.25%வளர்ச்சியை பொருளியலாளர்கள் எதிர்பார்க்கின்றனர். வளர்ச்சி தலைமைத்துவத்திற்கு இந்தியா மற்றும் சீனா போன்ற எழுச்சியுறும் சந்தைகளை நோக்கி உலகம் தற்போது கவனம் செலுத்துகின்றது. எவ்வாறாயினும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு விடயமும் உண்டு. உருவாகி வரும் இந்த சந்தைகள் உலகத்திற்கு வெளியே சுதந்திரமாக தனித்து நிற்பதற்கான நிலைமை இன்னும் போதுமானதாக உருவாக வில்லை. அத்துடன், உலக பொருளாதாரத்தின் உதாரணத்திற்கு இன்னமும் பலமற்றதாகவே இருக்கின்றது.

ஏற்றுமதிகளுக்கு அபிவிருத்தியடைந்த பொருளாதாரத்தில் உருவாகி வருகின்ற பொருளாதாரங்கள் தங்கியுள்ளதுடன், தோன்றிவரும் ஆசியாவின் வளர்ச்சி குறைவிற்கு ஒரு காரணமாக Frag ஏற்றுமதியும் இருந்தது. ஐக்கிய அமரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வியாபாரத்திற்கு தங்கியிருப்பதை குறைக்கும் முன்னெடுப்பு ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு இது காரணமாயிற்று. பாரிய பிராந்திய ஒருங்கிணைப்பு ஊக்குவிக்கப்படல் மற்றும் இணைக்கப்பட்ட பிராந்திய வியாபாரம் என்பவை ஊக்குவிக்கப்பட்டன. எனவே, 2012இல் 6.3% வளர்ச்சியை தோன்றும் ஆசியா அடைந்தது. இது 2013ஐ விட சிறப்பானதாக இருக்கும் என நம்பப்படுகின்றது.

### இலங்கையின் பொருளாதாரத்தில் மாற்றங்களை வரவேற்றல்

முன்னேற்றத்திற்கான பாதை பதியமிடப் படுட்டுள்ளது. அபிவிருத்திக்கான வரைப்படம் பட்டயமிடப்பட்டுள்ளது. இலங்கை மாற்றங்களுக்குத் தயாராகி விட்டது. இலங்கை வரலாற்றின் மிக மோசமான பலஹீனங்கள் பற்றிய அத்தியாயங்கள் முடிவிற்கு வந்து மூன்றாண்டுகளின் பின்னர், சமாதானத்தின் வரப்பிரசாதங்கள் மிகத் தெளிவாகப் புலப்படுகின்றதுடன், மீள் இணக்கம், மீள் நிர்மாணம் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் செயன்முறைகளின் விளைவுகள் தென்படுகின்றன. வலுவுள்ள தெளிவான அத்திவாரம் எனும் அடிப்படையில் 2016இற்கென இலக்கிடப்பட்ட ஐ.அ.டா. 100 பில்லியன் எனும் பொருளாதாரத்தையும் தலா மூலதன வருமானமாக ஐ.அ.டா. 4000 ஐயும் இந் நாடு பெற்றிருக்கும் என்பதை உறுதி செய்யும் அடிப்படையில், மகிந்த சிந்தனை

## 2012இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம்

பொருளாதார மீளாய்வு

எனும் பத்தாண்டு கால தேசீய எதிர்பார்ப்பு அதன் இலக்குகளை சந்திக்கின்றது.

2012இல் பொருளாதாரத்தின் முக்கிய துறைகள் அனைத்தும் பாராட்டும் படி செயற்பட்டுள்ளன. பேரண்ட பொருளாதார மூலாதாரங்கள் உறுதியாக நிருவப்பட்டுள்ளன. வர்த்தக நம்பிக்கை உணரக் கூடிய மட்டத்தில் அதிகரித்துள்ளதுடன் உலக சுட்டெண்களும், தரப்படுத்தல்களும் நாட்டிற்கு சாதகமான தலையசைவை தந்துள்ளன. சர்வதேச நாணய நிதியம் அதன் ஐ.அ.டா. 2.6 பில்லியனுக்கான ஆதரவளிக்கும் ஒப்பந்தத்தை இறுதியாக இலங்கைக்கு அளித்தது, நாடு சரியான பாதையில் முன்னேறுகின்றது என்பதற்கு போதுமான உதாரணமாகும். உலகம் முழுவதும் உள்ள நாடுகள் தமது கடன் தரத்தின் இறைமையில் கீழ் நோக்கிச் சென்று கொண்டிருந்த ஒரு ஆண்டில், இலங்கை தனது தரங்களை தொடர்ந்து பேணியது. இது தேசம் அதன் மூதாதாரங்களை ஏற்ற இடத்தில் வைத்துள்ளதை சுட்டிக் காட்டுவதாக இருந்தது. பிட்ச் ரேடிங்ஸ், இலங்கையை BB- ஸ்திரத்தில் வைத்திருந்தது. ஸ்டான்டட் & புவர்ஸ் இலங்கையை B+ ஸ்திரம் இல் தரப்படுத்தியது. மூடீஸ் உம் இலங்கையை B+ பொசிடிவ் இல் பேணியது.

வளர்ச்சி எனும் பக்கத்தில் சிந்தனையுடன் நோக்கும் போது, இலங்கை, 6.5% எனும் அதன் இலக்கினை எய்தியுள்ளது. ஆனால் ஆண்டின் நடுப்பகுதியில், உயர்வடைந்த உலக மற்றும் உள்நாட்டு சவால்களின் காரணமாக மீள் எதிர்வுகூறும் உத்தியைக் கடைப்பிடித்ததன் பின்னரே, உண்மையான இலக்கை தயாரிக்க முடிந்தது. 2012இன் ஆரம்பத்தில் 8.3%இல் அதிக வாக்குறுதிகளையும், உயர்ந்த வளர்ச்சியையும் தன்னுடன் கொண்டு வரும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், இலங்கையின் தலையிடும் நிலைப்பாடு முன்னால் வந்தது.

உள்நாட்டில், காலநிலையின் இயற்கையான சபலங்களுடன் நாடு போரிட வேண்டியிருந்தது. விவசாய உற்பத்தி அளவுகளுடனும், மின்வலு உற்பத்தியின் அளவுகளிலும் பாதிப்பை ஏற்படுத்திய வரட்சி மற்றும் வெள்ள நிலைமைகள், மிதமிஞ்சிய கடனுக்கான கேள்விகளும் அதிகமாகவிருந்த இறக்குமதிகளும், உலகளாவிய ரீதியில் செலவு செய்யும் சக்தி குறைவடைந்ததன் காரணமாக ஏற்றுமதிகளுக்கான கேள்வி குறைவடைந்தமை, வட்டி வீதத்தின் வரைகோட்டு வளைவு உயரத் தொடங்கியதும், எண்ணெய் விலைகளை தடை செய்ததும் இவற்றில் உள்ளடங்கும். வெளிவாரி நிலைமைகளைப் பொறுத்தவரை, யூரோ வலயம் மற்றும் ஐ.அ. பிரச்சினைகளும், அரசியல் நிச்சயமின்மைகளும் இன்னும் அதிகமான நிலையான உத்திகளை உட்சேர்ப்பதற்கான தேவையை அதிகரித்தது. இது முக்கிய அரசிறை உத்திகளில் மேலும் அதிகமான அவதானத்திற்கு அடியெடுத்துக் கொடுத்ததுடன், இவ் ஆண்டில் முகாமைத்துவத்தையும் கரையச் செய்தது.

சவால்கள் அதிகமாக தென்பட்ட நேரத்திலும் கூட, மீண்டெழும் பிரத்தியேகமான சிறப்பியல்பை இலங்கை எப்போதும் கொண்டிருந்தது. முன்னேற்றமடைந்து வரும் கொள்கை தீர்மானங்களிலேயே இச் சவால்களுக்கான சகல விடைகளும் இருந்ததை இலங்கை நிரூபித்தது. நாணயக் கொள்கைகள், பரிமாற்று வீதங்கள், அரசிறை மற்றும் பிரயோகிக்கப்படும் விலையிடல் கொள்கைகள் என்பவை உள்ளே கொண்டுவரப்பட்டன. மொ.உ.உ இன் முதலீட்டு அதிகரிப்பை 29.9% மாக்குவதற்கு ஊக்கமளித்தது. வேலையின்மை முன்னெப்போதுமில்லாதவாறு 3.9% குறைவை அடைந்து, இது வரவு செலவு திட்டத்தின் பற்றாக்குறையின் வீழ்ச்சியாக இருந்ததுடன், முப்பது ஆண்டுகளில், மொ.உ.உ. விகிதத்திற்கு அரசாங்க கடன்பாடுகளின் மிகக் குறைந்த மட்டமாகவும் இருந்தது.

வீக்க நிலைமைகள் ஒற்றை டிஜிட்டல் மட்டங்களில் பேணப்பட்டதாயினும், அதன் நியாயமான பங்கிற்கு சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. மைய வீக்க நிலைமை 7.6% 404 யாக இருந்த அதேநேரம் 2012 டிசம்பர் இல் ஆண்டிற்கான சராசரி 5.8% மாக இருந்தது. 2012 ஜுனிலிருந்து, இலங்கை ரூபாய்கள் நடுத்தர காலத்தில் 5.3% மாக ஸ்திரப்படும் என எதிர்பார்க்கப்பட்டதாயினும், ஒட்டுமொத்தமாக நோக்கும் போது, ஐ.அ.டாலருக்கெதிராக, 10.4% மாக இலங்கை ரூபாய் வீழ்ச்சியடைந்தது, சந்தையில் வெளிநாட்டு நாணய மாற்றிற்கான தேவையின் அதிகரிப்பை பிரதிபலித்தது. எண்ணெய் இறக்குமதிகள் இதற்கு முக்கிய காரணமாக இருந்தன.

அத்துடன், அரசிறை முகாமைத்துவ முன்னெடுப்புகள் இறக்குமதிகளின் ஒட்டுமொத்த செலவுகளை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 31.5%மாகக் கட்டுப்படுத்தப்பட்டன. இது 4.5% வீழ்ச்சியாகும். எவ்வாறாயினும், பலகீனமடைந்து வரும் உலக கேள்வியின் காரணமாக ஏற்றுமதி வருவாய்களின் வீழ்ச்சி ஒன்றுடன் நாடு திருப்தியடைய நேரிட்டது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 16.5% மாகக் காட்டப்பட்டுள்ளது. 2012இன்

## 2012இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம்

பொருளாதார மீளாய்வு

இறுதி வரை மொ.உ.உ. யின் 14.4% மாக வர்த்தக பற்றாக்குறை நிலவும் என எதிர்பார்க்கப்பட்டது. இதன் விளைவாக நடப்புக் கணக்கு பற்றாக்குறையும் குறிப்பிடத்தக்க அளவு குறைவடையலாம். 2011இன் 7.8% உடன் ஒப்பிட மொ.உ.உ. 5.5மூமாக குறைவடையும். இவை யாவும், தற்போது நிலவும் பொருளாதாரத்தில் துரித வளர்ச்சியை பிரதிபலிப்பதாகவுள்ளன. முக்கியமாக சுற்றுலாத் துறை, வெளிநாட்டுத் தொழிலாளர்களின் பணம் அனுப்புதல் மற்றும் BPO, KPO சேவைகளும் முக்கியத்துவமடைந்து வருகின்றன.

2015 அளவில் தென் ஆசியாவின் பொருளாதார மையமாக்கும் இலங்கையின் தொலை நோக்கு திட்டப்படி நடந்துக் கொண்டிருக்கின்றது. வீதி, சக்தி வலு, துறைமுகங்கள், விமான நிலையங்கள் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு துறைகள் ஆகிய பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்திகள், பொருளாதார மையம் எனும் தொலை நோக்கத்துடன் இயைந்து இலக்கிடப்பட்டவாறு துரிதமாக தொடர்கின்றன.

இலங்கையின் பத்தாண்டுத் திட்டம் தற்போது தேசத்தின் தோள்களின் மீது தங்கியுள்ளது. அசாதாரன சூழ்நிலைகளின் போதும் திறமையாக செயற்பட்ட ஒரு மத்திய தர வருமான நாடாக நாங்கள் இருக்கின்றோம். எவ்வாறாயினும் எமது விருப்பத்திற்குரிய திட்டங்களை அடைவதற்கு நன்கு திட்டமிட வேண்டும். வளமான நாடொன்றின் அடித்தளத்தை உருவாக்குவதற்கு பிரயோகிக்கக் கூடிய இலக்ககளையும் குறிக்கோள்களையும் கொண்டதாக இது இருக்க வேண்டும்.

நாட்டின் வறுமை நிலையை 2% இற்கும் கீழாக குறைப்பது, தொழிலின்மையை 3% இற்கும் கீழாக்குவது, ஐந்து வயதிற்கும் குறைவான சிறு குழந்தைகள் மத்தியில் நிலவும் தீவிர ஊட்டச் சத்து குறைபாட்டை 5% இற்கும் கீழாக குறைப்பது, பொது மக்களின் முதலீட்டை மொ.உ.உ. யின் 6% மாக்குவது என்பவற்றுடன் தேசிய சேமிப்புகளுக்கும் / முதலீடுகளுக்குமான இடைவெளியை மொ.உ.உ. யின் 5% மாக இலக்கிடுவது, என்பவற்றை உறுதி செய்வதனூடாக 2016இற்கான தேசிய மைல்கள் இலக்கிடப்பட்டது. 2016 அளவில் பங்கு மூலதனச் சந்தையை ஆக்கிரமிப்புடன் வளர்ப்பதற்கு ஒற்றுமையாக செயல்படும் அவசரம் ஒன்றும் இருந்தது. ஐ.அ.டா. 70 பில்லியனை பங்குச் சந்தை மூலதனத்திலும், ஐ.அ.டா. 10 பில்லியனை நிறுவனங்களின் முறிச் சந்தையில் தேடுவதற்கும் திட்டமிடப்பட்டது. வங்கிச் சொத்துகள் ரூபா 10 டிரிலியனை எட்டும் என்றும் நம்பப்படுகின்றது.

## 2012இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம்

2012ஆம் ஆண்டில் மூலோபாய நோக்கங்களுக்கு எதிரான சாதனைகள்

### நோக்கங்களை அடைவதும் இலக்குகளை இனம் காணுதலும்

எமது வேர்களை வலுப்படுத்துவதும் அணுகு முறைகளைப் பரவலாக்குவதும் எமது மூலாதாரங்களை ஏற்றவாறு வைத்துள்ளன. இப்பணிகள் எதிர்காலப் போக்கு, திட்டமிடல் போன்றவற்றை பகுப்பாய்வு செய்வதற்கு தே.சே.வ யை வழிநடாத்தும். இதன் மூலம் எண்ணிக்கை அளவில் எமது இலக்குகளை இனம்காணவும் எமது அடிப்படையை உறுதி செய்யவும் முடியும். இருப்பினும் உலகப் பொருளாதாரத்தின் நிச்சயமற்ற தன்மை முக்கிய பண்பாக காணப்படுகின்றமையினால் சில சட்ட திட்டங்கள் நிதிசார் சேவைகளுக்கு விதிக்கப்பட்டதுடன் தேசேவ யும் மாறும் சூழலில் தனது நிரந்தரத் தன்மையை உறுதி செய்து கொள்ள எதிர்பார்த்ததுடன் மேற்குறித்த காரணங்களால் திட்டமிட்ட வேலைகள் மேற்கொள்ளப்படாது சிலதை தாமதப்படுத்தவும் அல்லது மாற்றவும் நேரிட்டது.

எமது நிலைப்பாட்டை உறுதி செய்து கொள்ள வருட ஆரம்பத்தில் எமது கிளை அமைப்பை உபாய ரீதியாக வியாபிக்க திட்டமிட்டோம். இந்த நீண்ட செயற்பாடுகளினால் எமது கிளை வலையமைப்பில் 40 கிளைகளை சேர்த்தல், புதிய இடங்களுக்கு கிளைகளை நகர்த்தல் உலகளாவிய தொடர்புகளை எற்படுத்தும் உறுதிப்பாடு என்பவை அடங்குகிறது. ஆனால் உள்ள சூழ்நிலைகள் காரணமாக இப்பணிகளை சுருக்க வேண்டி ஏற்பட்டது. பண வைப்புத் துறையில் கடும் போட்டி நிலவியது. எனவே, தே.சே.வ. பரவலாகத்திற்கு பதிலாக திரட்டலுக்கு முன்னுரிமை கொடுத்தது. 2012இல் தே.சே.வ. மாறும் சூழலுக்கு அமைய உபாயகரமான செயல்பட்டு 09 கிளைகளை திறந்ததுடன், 13 கிளைகளை புதிய இடத்திற்கு நகர்த்தியது. மேலும் தே.சே.வ. 5 புதிய திட்டங்களை வகுத்துள்ளதுடன் அது பிரான்சில் வெளிநாட்டு பண அனுப்பும் சந்தைக்கான வாயில்களை விரிவாக்கியதுடன், உலகளாவிய பண மாற்றம் செய்யும் கம்பனிகளுடன் இணைந்து பஹ்ரய்ன், கொரியா போன்ற நாடுகளிலும் தமது அணுகுதலை விஸ்தரித்தது.

ஆய்வும் விருத்தியும் எமது ஸ்திரத்தன்மைக்கு அடிப்படையாயிற்று. எனவே, இதற்காக வங்கியின் செயற்பாடுகளில் தரத்தினை அதிகரிக்க சந்தை நிலவரத்தில் ஆய்வு செய்ய தே.சே.வ. சிறந்த ஆய்வுக் குழுவொன்றை இனம் கண்டது.

இந்த ஆய்வும் விருத்தியும் தற்போதுள்ள எமது உற்பத்தியில் மீள் அறிமுகம் செய்யப்பட்டதுடன் உற்பத்திகளை மேம்படுத்தவும் 2011இல் மீள் அறிமுகம் செய்த முக்கிய உற்பத்தியை மேம்படுத்தவும் வங்கியின் 40 ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களுடன் இணைந்தவாறு விசேட மேம்பாட்டு நிகழ்வில் மேற்கொள்ளப்பட்டன. 2 வருட நிலையான வைப்புத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் 2011இல் அறிமுகப்படுத்தப்பட்ட உற்பத்திகள் மீது மீள் அறிமுகம் செய்யும் மீளாய்வுகளும் மோற்கொள்ளப்பட்டன. இதன் பிரகாரம் வாடிக்கையாளர்களுக்கு எமது உற்பத்தி விடயங்களை நினைவூட்டும் ஊக்குவிப்புப் களாகவும் இவைகள் அமைத்திருந்தன.

எமது நிகழ்ச்சி நிரலில் தொழில்நுட்ப முகாமைத்துவ பணிகளுக்கு குழுவொன்று அமைக்கப்பட்டு முன்னுரிமை கொடுக்கப் பட்டது. இதில் அனர்த்த மீட்பு அமைப்பைப் பலப்படுத்தல் தொழில்நுட்ப பாதுகாப்பு கொள்கையொன்றை வகுத்தல் SMS வங்கி முறையை மீளாய்வு செய்து அட்டை மற்றும் POS இற்கான மேம்பாடு ஆகியன அடங்குகின்றன. மேலதிக கவனத்தை வேண்டி நின்ற மற்றைய பகுதி இடர் காப்பு முகாமைத்துவ கட்டுப்பாடும், இணக்குவிப்பும் ஆகும். இதன் பிரகாரம் மிகவும் உறுதியான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்றை அமைக்க ஆவன செய்யப்பட்டுள்ளது. கிளைகள், அமைப்பு என்பன மூலம் உறுதியான உள்ளக கட்டுப்பாட்டு முறை நிறுவப்பட்டது. இதில் சிறந்த முறையில் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ அமைப்பொன்று நிறுவப்பட்டதுடன், இதற்காக தற்போதைய இடர்காப்பு அவதானிப்பு உத்திகள், விதிகள் பரிசீலனை செய்யப்பட்டு புது கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

மேலும், சட்டங்கள், ஒழுங்குகள் ஆகியவற்றுக்கு இணங்குவதை உறுதிப்படுத்தவும், தேவையான உத்திகள் உள்ளடக்கப்பட்டன. இதற்கு இணக்குவிப்பு கொள்கைகள், இணக்குவிப்பு தொடர்பான பரிசோதனை, இணக்குவிப்பு நியமங்களை அறிமுகம் செய்தது என்பவையும் அடங்குகின்றன.

2012 இன் ஆரம்பம் முதலே, அஞ்சல் வங்கி வலையமைப்பை பலப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் மூலம் அஞ்சல் வங்கியுடன் நேர்வரிசை கொடுக்கல் வாங்கல் செயற்பாட்டு தொழில்நுட்ப முறையொன்றை அறிமுகம் செய்ய திட்டமிடப்பட்டது. ஆனால் தேவையான மென்பொருள் முறையை விருத்தி செய்வதில் அஞ்சல் திணைக்களத்தின் நேரடியான தாக்கங்களின் போதும் இது கைவிடப்படவில்லை.

## 2012இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம்

2012ஆம் ஆண்டில் மூலோபாய நோக்கங்களுக்கு எதிரான சாதனைகள்

எமது குழுவை பலப்படுத்தல் விடயத்திலும் நாம் கவனம் செலுத்தினோம். நாம் தற்போது வாடிக்கையாளர் சேவை, புதிய கண்டுபிடிப்பு, ஆளுமை, நடத்தை, ஆகியன குழு ரீதியான கூட்டு பணி மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு சூழலில் உள்ளோம்.

2012 ஆரம்பத்திலேயே, எமது வியாபாரம் மற்றும் ஒழுக்கவியல் துறையை மேம்படுத்துவது தொடர்பாக கூடிய கரிசனை செலுத்தினோம். இது ஏற்பட்டுவரும் பேரின செயற்பாட்டு சூழலை மையமாக கொண்டு மேற்கொள்ளப்பட்டன. இதன் அடிப்படையில் நாம் வழங்கிய பயிற்சிகள் எமது நீண்ட கால செயற்பாட்டுக்கும் வெற்றிக்கும் மூலதனமாக அமைந்ததுடன் எமது சேவைகளின் தரம், உற்பத்திகள் தரம், ஆகியவையும் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த வகையில் பயிற்சித்திட்டங்கள் வியாபாரம், ஒழுக்கவியல் துறைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், தனிநபர் திறனை வளர்க்கவும் இறுதியான வங்கியின் இலக்கு, நோக்கு ஆகியவற்றை அடையவும் உறுதியாக அமையும்.

பொதுவாக நிலையான தன்மையானது (Sustainabilty) பொருளாதார நிலைப்பாட்டினையும் உறுதி செய்கின்றது. இந்த உறுதிப்பாடு விடயத்தில் கவனம் செலுத்தப்படுவதனால், கடன் மற்றும் முற்பணம் உட்பட பல்வேறுபட்ட முதலீட்டு முயற்சிகள் மூலம் பெறக்கூடிய பலாபலன்களை கூடிய அளவில் பெற்றுக் கொள்ளவும் வாய்ப்பை ஏற்படுத்தித்தரும். இருப்பினும் எமது உரிமைப் பங்குச் சந்தை முதலீடுகள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டது. இதற்கு காரணம் ஏற்கனவே, குறிப்பிடப்பட்ட த ∴பினான்ஸ் கம்பனியுடனான கொடுக்கல் வாங்கல் ஆகும். அதேநேரம் இ.ம.வ. கடன் கட்டுப்பாடுகள் காரணமாக கடன் மற்றும் முற்பண செயற்பாடுகளும் மட்டுப்படுத்தப்பட்டன. இவ்வாறான நிலைமையில்தான் சக்திவாய்ந்த தொடர்ச்சியான முதலீட்டு வளர்ச்சியை பெறக்கூடிய தே.சே.வ. யின் நுனுக்கமிக்க பகுப்பாய்வு திறமை காணப்பட்டது. இந்த அடிப்படையில் நிறுவனத் துறை முதலீடுகளான தொகுதிக் கடன்கள், ஆதனங்கள் உட்பட்ட நிறுவனங்களுக்கான கடன் வழங்கல் தொகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டின. நாட்டின் நுண்பாக மற்றும் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கு ஊக்குவிப்பினை ஏற்படுத்திய இத்துறும் ஆயோஜன கவ, மூலமான கிராமிய மட்டத்தில் சிறிய அளவிலான கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் வங்கியின் கடன்துறையும் பரவலாக்கப்பட்டன.

## 2012இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம்

செயற்பாட்டு மீளாய்வு

எங்களை 40 வயது இளைஞர் என நீங்கள் கூறலாம். ஆனால் அவ்வாறல்ல, ஏனெனில், சேமிப்பு வங்கியாக இருப்பதே எமது அடிப்படை சிறப்பியல்பாகவிருந்தது. அந்த சிறப்பியல்பை நாங்கள் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றோம். ஏனெனில், நாங்கள் செய்யும் வர்த்தகத்தின் மூலாதாரமாக இது இருக்கின்றது. ஆயினும், இந்த நாற்பதாண்டு பாரம்பரியத்துடன் நாங்கள் மக்களுடன் தங்கியிருக்க வேண்டிய கட்டாயமும் எங்களுக்குள்ளது. எனவே, இந்த நாட்டில் நாங்கள் வலுவாக பதியமிடப்பட்டுள்ள வேர்களுக்குள் இப் பழமையான மதிப்பீடுகளையும் நாங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஒரு சேமிப்பு வங்கியாக எமது வேர்களை பதியமிட்டிருக்கின்றோம். இலங்கையர்கள் தம்மை அபிவிருத்தி செய்து கொள்வதாக மட்டுமன்றி, தேசத்தின் அபிவிருத்திக்காகவும் சேமிக்க வேண்டுமென விரும்புகின்றோம்.

இன்று தேசேவ யின் வேர்கள் பரந்து விரிந்துள்ளன. வலுவாக வேரூன்றுதல் எமது கொள்கைகள் முழுவதிலும் பரவியுள்ளது. ஒட்டுமொத்த அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதாக இந்த நோக்கம் உள்ளது.

சாதாரண ஒரு சேமிப்பு வங்கி என்பதற்கும் அப்பால் நாங்கள் நகர்ந்துவிட்டோம். நிலைமைக்கு ஏற்றவாறு மாற்றமடைவதற்கும், புத்தாக்கங்களை ஏற்படுத்துவதற்கென போக்குகளையும், சவால்களையும் அவதானித்து வழி நடத்தும் நிறுவன வழிகாட்டி ஒன்றாக செயற்படுகின்றோம். சவால்களை எதிர்கொள்ள புவியியல் பொருளாதார மற்றும் சமூக மக்கள் தொகையைக் கொண்ட நாடொன்றின் மக்களுக்கு அதிகாரமளிக்கும் இப்பயணத்தில் எமது அடிப்படைத் தத்துவங்களில் நிலைகொண்டிருப்பது முக்கியமானது என்பதுடன், நீங்கள் படிக்கும் அடுத்து வரும் பக்கங்களில் எமது தத்துவங்களும் நாங்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கின்றோம் என்பதையும் நிச்சயமாக அது உங்களுக்கு கூறும்.

### பெற்றுக்கொள்வதும் அடைவதும் விருத்தி செய்யப்பட்டது

எமது வாடிக்கையாளர்களுக்கு இன்னும் சிறப்பான சேவை வழங்கக் கூடிய பொருத்தமான இடங்கள் உள்ள புவியியல் பிரதேசங்களில் எமது இருப்பு அமைந்திருப்பதை உறுதி செய்ய வேண்டியிருந்தது. எனவே, எமது பங்குரிமையாளர்கள் எமது உற்பத்திகளையும் சேவைகளையும் இன்னும் அதிக சிறப்பாக பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தும் வகையில் எமது வேர்களை பரவச் செய்வது மேலும் அத்தியாவசியமானது.

இதற்கென நாங்கள் இரு வழி அணுகுமுறை ஒன்றை ஏற்படுத்தியிருக்கின்றோம். முதலாவதாக, எமது வலையமைப்பிற்குள் மேலும் அதிகமான கிளைகளை உட்சேர்ப்பதன் ஊடாக எமது பங்குரிமையாளர் பிரிவினர் அனைவரையும் எய்தக்கூடியதாக எமது கிளைகளை விரிவடையச் செய்வது. இரண்டாவதாக தற்போதுள்ள எமது கிளைகளுக்குள் நவீனத்துவத்தையும் தொழில் நுட்பத்தையும் உட்புகுத்துவதை அவசியமாக்குவதன் மூலம் நாம் செய்யும் அனைத்திலும் வலுவாக வேரூன்றிக் கொள்ளக்கூடியதாக இருப்பது. எம்மிடம் காணப்பட வேண்டும் என எமது பங்குடமையாளர்கள் கூறியவை அனைத்துடனும் ஒத்ததாக, இரண்டாவதாக கூறப்பட்டவற்றை மீள் மெருகேற்றுதல், மீள் இடம் பெயர்த்தல், மீள் புனரமைப்பு செய்தல் என்பவற்றைச் செய்கின்றோம். எமது உற்பத்திகள் மற்றும் சேவைகள் துறையினுள் தொடர்ச்சியான பயிற்சிகள், முக்கியமான சேர்க்கைகள் மற்றும் அபிவிருத்திகள் என்பவையூடாக எமது வாடிக்கையாளர் சேவை மட்டங்களையும் முன்னேற்றுகின்றோம்.

ஆண்டின் போது தேசேவ மொத்தமாக 09 கிளைகளை திறந்தது. அதேநேரம், இன்னும் சிறப்பான சேவை கிடைக்கும் மையங்களாக உள்ள இடங்களுக்கு 13 கிளைகள்

**வருட இறுதியில் கிளைகளின் எண்ணிக்கை**



இடம்பெயர்க்கப்பட்டதுடன், தலைமையகத்தின் அடையாளங்களைப் பிரதிபலிக்கும் இரு கிளைகள் மீள் புதுப்பிக்கப்பட்டன. 675 ஆயோஜன கவய மற்றும் 793 பாடசாலை வங்கிக் கூறுகளையும் நாங்கள் சேர்த்துக் கொண்டோம். இறுதியாக குறிப்பிடப்பட்டதற்கு நாடெங்கிலும் மொத்தமாக 1,185 வங்கிக் கூறுகள் இருந்தன. மனதில் நினைத்தவுடன் முதலில் தோன்ற வேண்டும் என்பதற்காகவே இது முக்கியமாக செயற்படுத்தப்பட்டது. அத்துடன், வடிவமைப்புக் கருப்பொருள், மற்றும் நிறுவனத்தின் வர்த்தக குறியீடு என்பவற்றில் ஒரே சீரான உணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதும் நோக்கமாக இருந்தது. ஆண்டின் ஆரம்பத்தில், கிளை வலையமைப்பில் துரித விரிவாக்கமொன்றை ஏற்படுத்தவும் எண்ணமிடப்பட்டது. ஆயினும் நிறுவன முகாமைத்துவம் மிகவும் விவேகமாக தீர்மானித்து இச் செயன் முறையை தாமதித்து எதிர்பார்க்கப்பட்ட வலையமைப்பு விரிவாக்கல் திட்டத்தை மீள் உத்தி செய்தது. அத்துடன் இலக்குகளை சந்திக்கும் சந்தர்ப்பத்தை உறுதிப்படுத்துவதற்காக சந்தை நிலைகளின் மாற்றத்தில் மேலும் அதிக அவதானிப்பை மேற்கொண்டதுடன், எமது வேர்களையும் பலப்படுத்தியது.

2012இன் நடுப்பகுதியில் இலக்கிடப்பட்ட தொகைகளுக்கான காலம், சேமிப்புத் திரட்டல் இரண்டும் குறைவடைந்த போது திரட்டல்களை வலியுறுத்துவதற்கான அவசியம் எழுந்தது. செறிவான போட்டியும் டிஎப்சி கொடுக்கல் வாங்கல்களில் சந்தித்த விடயங்களும் இக் குறைவிற்கு காரணமாயிற்று. வட்டி வீதம், வலையமைப்புகளின் விரைவான பரவலாக்கல்கள், வங்கித் தொழில் அனைத்திலும் பாரியளவில் ஊடுருவும் மேம்பாட்டு உந்துதல்கள் என்பவற்றினால் தொழிலில் மிகப் பெரிய போட்டி நிலவியது. எனவே, வழிமுறைகளை மாற்றி துரித செயன்முறைகளில் அவதானம் செலுத்த திட்டமிடுவதற்கான நேரம் எழுந்தது. இந்த உத்திகளின் பலனை 2012இன் இறுதியில் சேமிப்பு வைப்புகள் ரூபா. 1,269 மில்லியனாகவும், கால வைப்புகள் ரூபா 29,857 மில்லியனாகவும் காணப்பட்ட போது அறிய முடிந்தது.

**“எமது உற்பத்திகள் மற்றும் சேவைகள் துறையினுள் தொடர்ச்சியான பயிற்சிகள், முக்கியமான சேர்க்கைகள் மற்றும் அபிவிருத்திகள் என்பவையூடாக எமது வாடிக்கையாளர் சேவை மட்டங்களையும் முன்னேற்றுகின்றோம்.”**

### *போட்டிகளை எதிர்கொள்ளுதல்*

போட்டிகளிலிருந்து உருவான வலுவான சவால்களை சந்திப்பதற்கும் மேற்கொள்ளுவதற்கும் நாங்கள் போட்டிகளின் போக்குகளை பகுப்பாய்வு செய்து பூர்வாங்க சேவைகளை அறிமுகப்படுத்தியதுடன், வழமை போலவே எமது குழு சவால்களுக்கு எதிராக எழுந்து நின்றது. புத்தாக்கமும் வேறுபட்டதுமான வழிமுறை ஒன்றை அவர்கள் ஆரம்பித்தனர். சேமிப்பு எனும் எமது கருப்பொருளுக்குள் வேரூன்றியுள்ள அதேநேரம், பெறுகைகளை அதிகரிக்கும் துறைகளுள் அவதானிப்பைச் செலுத்தியது. இது, உற்பத்திகளுக்குள் புதிய அம்சங்களை சேர்ப்பதை ஆரம்பிப்பதற்கும் அவசியமான வாய்ப்பான பெறுபேறுகளை உட்புகுத்துவதற்குமான வழிவகைகளை ஏற்படுத்தியது.

அதிக போட்டி மிகுந்த வட்டி வீதத்துடன் 24 மாத நிலையான வைப்புத் திரட்டல், வங்கியின் 40வது ஆண்டு நிறைவு கொண்டாட்டங்களுடன் இணைந்து செயற்படுத்தப்பட்ட சேமிப்பு மேம்பாட்டு பிரச்சாரம் கவர்ச்சியான பரிசுகளுடன் கூடிய வின் வின் தேகி வருசா போனஸ் வட்டித் திட்டம் மற்றும் கிளை சேமிப்புகளை மேம்படுத்தும் குழுக்கள் போன்றவற்றை குறிப்பிடலாம். ஸ்திரி, ஸ்மைல், ரிதிரேக்கா மற்றும் பிரார்த்தனா என்பவற்றிற்கு ஏற்கனவே செயற்படுத்தப்பட்டு வரும் சீட்டிழுப்புகளைவிட உலக சிக்கன தினம் என பிரகடணப்படுத்தப்பட்ட அக்டோபர் மாதத்தில் எமது பங்குடமையாளர்களிடையில் சேமிப்புக் கலாச்சாரத்தை பதியச் செய்யும் நோக்கத்துடன், பெருமளவிலான நிகழ்ச்சித் திட்டங்களுடாக கிளைகளும், அவற்றின் திரட்டல்களுக்கு இன்னும் அதிகமான முக்கியத்துவம் கொடுத்தன.

## 2012இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம்

செயற்பாட்டு மீளாய்வு

### மரபு முறையான முன்னெடுப்புகளுக்கு அப்பால்

வாடிக்கையாளர் சேவை தொடர்ந்தும் முன்னேற்றமடைய வேண்டியது அவசியமாகும். ஏனெனில் எமது வேர்களுக்கு மூலாதாரமான ஒன்றிணைந்த ஒரு பகுதியாக அது உள்ளது. எமது சேவை செயன்முறையில் மனித இடையீட்டுடன் தகவல் தொழில்நுட்பம் உட்சேர்க்கப்படும். செயன்முறையை பயன்படுத்தி இருப்பிடத்திற்கே வங்கி சேவை எடுத்துச் செல்லப்படுகின்றது. இது எமது செயல்முறையின் ஒரு பகுதியாக எப்போதும் இருக்கின்றது. இந்த ஆண்டில் POS கருவிகளின் எண்ணிக்கையை அதிகரித்தோம். இது கொடுக்கல் வாங்கல்களின் அளவையும், பெறுமதியையும் தானாகவே உயர்வடையச் செய்ததுடன் POS கருவிகளுடாக பெறுமதி கூட்டப்பட்ட பாவனையாளர் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன. யூனியன் அஸ்யூரன்ஸ், சிலிங்கோ காப்புறுதி, டயலொக் எசியாடா என்பவற்றுடன் வர்த்தக ஒப்பந்தக்களை செய்து கொண்டதனூடாக எமது சேவைகளுக்குள் பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளையும் ஆரம்பித்தோம்.

எமது தொடர்ச்சியான முன்னேற்ற செயன்முறைகளில் வாடிக்கையாளர்களை ஈடுபடுத்துவதும் முக்கியமானதொரு பக்கமாகவுள்ளது. இதனை மேலும் பலப்படுத்துவதற்காக அடையாளங் காணப்பட்ட வாடிக்கையாளர் ஸ்தாபனங்கள் மற்றும் பிரிவுகளுக்கு நாங்கள் விஜயம் மேற்கொண்டு வாடிக்கையாளர்களின் கருத்துகளையும், ஆலோசனைகளையும் செல்லுபடியாக்கும் செயன்முறைகளையும் உள்ளே கொண்டுவந்தோம். இதனால் மேலும் திறமையாக செயற்படுவது எமக்கு இலகுவாயிற்று. அழைப்பு நிலையத்துடன் தொடர்பினை ஏற்படுத்தும் நிசழ்ச்சித் திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஏரிஎம்கள் அனைத்திலும், கிளை அலுவலகங்களிலும் இந்த இலக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வங்கிக்குள் தகவல் தொழில்நுட்பத்திற்கு 2012 ஒரு ஒருங்கிணைப்பு ஆண்டாக இருந்த போதும் எமக்கு இது ஒரு வேலை அதிகமான ஆண்டாகவிருந்தது. புதிய அட்டையொன்றை அறிமுகப்படுத்தியதன் ஊடாக உற்பத்தியில் மேலும் ஒன்று கூட்டப்பட்டதுடன், திறனாற்றல்களை முன்னேற்றியமையால் தகவல் தொழில்நுட்பமும் விருத்தி செய்யப்பட்டது. அத்துடன் லங்கா கிளியர் இன் 10வது ஆண்டு நிறைவு கொண்டாட்டங்களில் எங்களுக்கு பாராட்டுகளும் கிடைத்தன. இலங்கையின் வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுகள் அமைப்பிடமிருந்து (SLIPS) மிகச் சிறந்த T + 0 பங்களிப்பிற்கான விருதையும் நாங்கள் வென்றோம். SLIPஇற்குள் பங்கேற்பாளர்களாக செயற்படும் 27 வர்த்தக வங்கிகளுக்கு மத்தியில் உரிமம் பெற்ற சிறப்பு வங்கியான எமது வங்கிக்கு இந்த விருது தனித்துவமிக்க சாதனை என்றே கருத வேண்டியுள்ளது.

சம்பத் வங்கியுடன் இணைந்து தேசேவ, விசா பற்று அட்டைகளை அறிமுகப்படுத்தியது. இதனூடாக மாஸ்டர் அட்டை, விசா அட்டை எனும் இரண்டு உலகளாவிய கொடுப்பனவு முறைகளின் நன்மைகளையும் வாய்ப்புகளையும் எமது வாடிக்கையாளர்களுக்கும் கொடுக்க முடிந்தது. மாஸ்டர் அட்டையுடன் இணைந்து சர்வதேச மாணவர் அட்டைகளை ஆரம்பிப்பதற்கான திட்டங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

எமது வாடிக்கையாளர்களுடன் தொடர்பு கொள்வதற்கு முக்கியமான வழிமுறையாக அழைப்பு நிலையங்கள் தொடர்ந்துமிருக்கின்றன. சிறந்த வாடிக்கையாளர் சேவையை தொடர்ந்து வலுப்படுத்த வேண்டியுள்ளது.

### அஞ்சல் கோணம்

தேசத்திற்குள் அஞ்சல் கலாச்சாரம் ஒன்றை கட்டியெழுப்பவும் வலுப்படுத்தவும் வேண்டுமெனும் தேசிய சேமிப்பு வங்கியின் ஆதார பண்பினை பேணுவதற்கு இலங்கையின் வேறு எந்த வங்கியிடமும் இல்லாத தனித்தன்மை வாய்ந்த பரிமாணமொன்றை எமது வெளி வீச்சு கொண்டுள்ளது. இதுவே அஞ்சல் வங்கியின் தோற்றம். 641 அஞ்சல் நிலையங்களையும் 3412 உப அஞ்சல் நிலையங்களையும் 23 அஞ்சல் வங்கிக் கிளைகளையும் கொண்ட விசாலமான கூட்டை கொண்டதாக அஞ்சல் துறை செயற்படுகின்றது. இது வங்கித் தளத்தின் மேல் கட்டப்பட்டுள்ளதுடன் நாட்டின் மிகவும் பின்தங்கிய புவியியற் பகுதிகளுக்கும் கூட உண்மையில் எடுத்துச் செல்லக் கூடியதாகவுள்ளது. அஞ்சல் வங்கி நிழலின் கீழ் கிராமப்புறங்களிலும், கஷ்டப் பிரதேசங்களிலும் வாழ்பவர்களை உள்ளடக்கிய 2 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் அஞ்சல் வங்கிக் கிளையின் கீழ் வருகின்றனர். இவ் வங்கி முறையூடாக இவ் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த சேமிப்புத் திரட்டு ரூபா 352 மில்லியனாகும்.

**“அஞ்சல் வங்கி நிழலின் கீழ் கிராமப்புறங்களிலும், கஷ்டப் பிரதேசங்களிலும் வாழ்பவர்களை உள்ளடக்கிய 2 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் அஞ்சல் வங்கிக் கிளையின் கீழ் வருகின்றனர். கடந்த ஆண்டின் ரூபா 352 மில்லியனுடன் ஒப்பிடும் போது இவ் வங்கி முறையூடாக இவ் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த சேமிப்புத் திரட்டலாகும்.”**

இந்தக் குறிப்பிடத்தக்க திரட்டு வளர்ச்சிக்கு வருடம் முழுவதும் மேற்கொள்ளப்பட்ட புத்திசாதுரியமான நடவடிக்கைகள் காரணமாயிற்று. இதனுடன் தயட்ட கிருல அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் அனுராதபுரம் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் விசேட சேமிப்புத் திரட்டல்களை மேற்கொள்ள உறுதுணையாக அமைந்ததுடன், குறித்த பகுதிகளுக்குள் இயங்கும் அனைத்து அஞ்சல், உப அஞ்சல் அலுவலகங்கள் உள்ளடக்கப்பட்ட வகையில் நிகழச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுக்கு மேலதிகமாக வட மாகாணத்தில் தோன்றி வருகின்ற நிதிச்சந்தை முக்கியமாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் சேமிப்புத் திரட்டலை மேற்கொள்வதற்கான வழிகளையும் திறந்துள்ளது. இவைகள் காரணமாக, குறித்த ஆண்டில் சேமிப்புத் திரட்டலில் வளர்ச்சி ஒன்றைக் காட்டியது.

எவ்வாறாயினும், குறித்த ஆண்டில் ஒருசில சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்ட போதிலும், எதிர்பார்க்கப்பட்டவாறு அஞ்சல் வங்கிச் சேவையில் எமக்குரித்தான சந்தைப்பங்கை அவ்வாறே தக்க வைத்துக்கொள்வதை உறுதி செய்து கொண்டு தேவையான தீர்வுகளை முன்வைத்து செயற்படுத்தப்பட்டன. கிராமிய நிதி நிறுவனங்கள் மூலம் இலகு முறையில் கடன் வழங்கப்படுகின்றமையினால் முகங்கொடுக்க வேண்டியிருந்த போட்டித் தன்மைக்கு மத்தியில் அவற்றை வெற்றி கொள்ள தேசேவ இத்துரும் ஆயோஜன கவய ஊடாக கடன் வசதிகளை வழங்கும் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியதுடன், அதனூடாக குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சியையும் காட்டியுள்ளது.

### அடிவானத்திற்கு அப்பாலும் செல்லுதல்

2005இல் நாங்கள் வெளிநாட்டு நாணய பணமனுப்புதல் வர்த்தகத்தை ஆரம்பித்ததுடன், வியாபாரத்தின் அனைத்துத் துறைகளிலும் நாங்கள் வலுவாக வேரூன்றி இருப்பதற்கான சான்றாக அமைந்தது. இந்த ஆண்டு முழுவதும் நாங்கள் குறிப்பிடத்தக்க சந்தைப் பங்குகளை ஆரம்பித்தோம்.

**உள்வரும் பண அனுப்புதல்**




2012ஆம் ஆண்டில் அத்தகைய நிலைமையே எதிரொலித்தது.

வெளிநாடுகளில் பணிபுரியும் பெருமளவிலான புலம்பெயர் இலங்கையர்கள் வாழும் நாடுகளுக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட யுக்தியான சந்தைத் திட்டங்களை செயற்படுத்தியதன் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் நிலையான வருடாந்த வளர்ச்சியை நாங்கள் கண்டோம். ஏனைய உள்நாட்டு வங்கிகளிடமிருந்து ஏற்பட்ட கடினமான போட்டிகளை, பணமனுப்புதல், சந்தை சந்திக்க வேண்டியிருந்த நிலைமையிலும், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டில் பணமனுப்புதல் பெறுமதியில் 61%அதிகரிப்பை நாங்கள் அவதானித்தோம். இவ் வங்கிகள் அனைத்தும் அந் நாடுகளில் தமது கடுமையான இருப்பை காட்சிப்படுத்தியதுடன் எமது பணமனுப்புதல் வளர்ச்சிக்கு சவாலாகவும் இருந்தன.

இந்த ஆண்டில் வங்கியினால் புதிய சந்தைகள் முக்கியமாக ஆசிய, ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் தேடப்பட்டு வந்ததுடன், இதன் வளர்ச்சிக்கு சக்தியூட்டுவதற்காக அதிகரிக்கப்பட்ட செயற்பாடுகளும், உக்திமிக்க சந்தைப்படுத்தல் பிரசாரங்களும் செயற்படுத்தப்பட்டன. வங்கிக்கும் வெளிநாட்டு பரிமாற்று நிலையங்களுக்கும் இடையில் வைக்கப்பட்டுள்ள பரஸ்பர நல்லுணர்வினதும் நம்பகத் தன்மையினதும் விளைவாக எமது சேவைகளை மேலும் முன்னேற்றவும் முடிந்துள்ளது. இதனால் மிகச் சிறப்பான சேவை வழங்களுடன் சேர்த்து விலை குறைவானதும், துரிதமானதும், வசதி மிக்கதும், பாதுகாப்பான நிதி மாற்றும் முறைமையும், செயன்முறையும் தேசேவ யினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இது புலம் பெயர் இலங்கையர்களுக்கு அவர்களின் பணமனுப்புதல்கள் அவற்றைப் பெற்றுக் கொள்பவர்களை சென்றடையும் எனும் அளவிடற்கரிய நம்பிக்கையையும் நிச்சயத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ் ஆண்டில் வெளிநாட்டு நாணய வைப்புத் தளம் 14.4%மாக அதிகரித்தது. இது வங்கியின் மொத்த வைப்புத் தளத்தின் 1.2%மாகும்.

**ஊக்கமாகப் பதிவு செய்தலும் இருப்பை விஸ்தரித்தலும்**

50 பரிமாற்று நிலையங்களும், தொடர்புடைய வங்கிகளும் தேசிய சேமிப்பு வங்கியுடன் வெளிநாட்டு பணமனுப்புதலில் நேரடியாக ஈடுபட்டுள்ளன. இவற்றுள் ஒரு சில பரிமாற்று நிலையங்கள் உலகப் புகழ் பெற்றவை. இவ் ஆண்டில் எமது துறைக்குள் நாங்கள் மற்றுமொரு உலகப் பரிமாற்று நிலையத்தை சேர்த்துக் கொண்டோம். பிரான்ஸ், கொரியா, பஹ்ரேன் ஆகிய நாடுகளில் 05 புதிய ஒழுங்குகளில் நாங்கள் எழுத்து மூல தொடர்புகளை ஏற்படுத்தியிருக்கின்றோம்.

> "வெளிநாடுகளில் பணிபுரியும் பெருமளவிலான புலம்பெயர் இலங்கையர்கள் வாழும் நாடுகளுக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட யுக்தியான சந்தைத் திட்டங்களை செயற்படுத்தியதன் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் நிலையான வருடாந்த வளர்ச்சியை நாங்கள் கண்டோம்."

2013இல் வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட பெறுமதி கூட்டப்பட்ட சேவையை உறுதிப்படுத்துவதற்காக வெளிநாடுகளில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள தேசேவ முகவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நாங்கள் எண்ணியிருக்கின்றோம். இது எமக்கு ஒரு வலுவான நோக்கமாக இருப்பதுடன், அதிகரிப்பை மேலும் அதிகமாக்கவும் செய்யும். ஊடுருவிச் செல்லும் தொடர்பாடல் மேம்பாட்டு பிரச்சாரங்கள், புதிய யுக்தியான நல்லுறவுகளை நிறுவுதல் என்பனவற்றின் ஊடாக வாடிக்கையாளர் சேவையை முன்னேற்றுவதற்கு மேலும் அதிகமான புதிய முறைகளை அறிமுகப்படுத்துவதற்கான ஆதரவு எமக்குக் கிடைக்கும்.

**வெளிநாடுகளில் பணிபுரியும் எமது தொழிலாளர்களுக்கு கடல் கடந்த நாடுகளை தயார்படுத்தல்**

தேசேவ எமது வாடிக்கையாளர்களாகவுள்ள பெருந்தொகையான புலம்பெயர் தொழிலாளர்களுக்கு தொழில்வாய்ப்பு தருகின்ற இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துடன் தனது உறவுகளை தொடர்ந்தும் வளர்த்து வருகின்றது. அத்துடன் வெளிநாடுகளில் தொழில் புரிவோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், அவர்கள் தொழில் புரியும் நாடுகளில் வெற்றியாளர்களாக இருப்பதற்கு அவசியமான திறமைகள், அறிவாற்றல் முதலியவற்றையும் பெற்றிருக்க வேண்டும் என நாங்கள் நம்புகின்றோம். எனவே, நாங்கள் வெளிநாடுகளில் வேலை தேடி செல்பவர்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ள, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் விழிப்புணர்வு, சூழ்நிலைக்கேற்ற செயற்பாடு மற்றும் பயிற்சித் திட்டங்கள் என்பவற்றில் அவற்றின் பங்காளிகளாகவும் இருக்கின்றோம். இவ்வாறான நிகழ்ச்சித்

## 2012இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம்

செயற்பாட்டு மீளாய்வு

திட்டங்கள் நாடெங்கிலும் நடத்தப்படுகின்றன. நாணய முகாமைத்துவத்தின் முக்கியத்துவம், முதலீட்டு வழிகள் மற்றும் நிதி ஒழுக்காற்று என்பவை குறித்தும் வங்கி கற்பிக்கின்றது.

### திறைசேரி முகாமைத்துவம்

தே.சே.வ. அடிப்படையில் அரச பிணையங்கள், உரிமைப் பங்குச் சந்தை முதலீடுகள், மற்றும் முதலீடுகள், கடன் முற்பண முதலீடுகள் ஆகியவற்றை தமது முதலீட்டு நடவடிக்கைகளாக மேற்கொள்கிறது. இதனூடாக எமது அடிப்படை கொள்கையாக நாட்டின் அபிவிருத்தியில் பங்கெடுத்தலை உறுதி செய்கின்றோம். எமது திரட்டலில் 60% னை அரச பிணையங்களில் முதலீடு செய்ய வேண்டும் என்ற விதிமுறைகளுக்கு அமைவாக இது மேற்கொள்ளப்படுகின்றது.

2012இல் அரச பிணைய முதலீட்டுத் துறை எல்லை ரீதியான வளர்ச்சியொன்றை காட்டியது. ஆனால் இ.ம.வ. இன் வட்டி வீத அதிகரிப்பு சீராக்கல், சந்தையில் காணப்பட்ட திரவத் தன்மை குறைவு மட்டம், ஆகியன காரணமாக 2012 இன் முதல் 09 மாதங்களில் வட்டி வீதம் அதிகரித்தது. வட்டி வீத குறைப்பு கொள்கை புதிய திறைசேரி முறிகளை விநியோகித்தலை நிறுத்தியதுடன், அரச பிணையங்கள் மீது கூடிய கேள்வியை ஏற்படுத்தியது. இதன் பிரகாரம் 2012ஆம் ஆண்டில் வட்டி வீதாசாரங்கள் வீழ்ச்சியடைய ஆரம்பித்துள்ளது.

எவ்வாறாயினும் 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012இல் திறைசேரி உண்டியல் (TB), திறைசேரி முறிகள் (TBF) மூலம் தே.சே.வ. பெற்றுக் கொண்ட வருமானம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டுகின்றது. அரச பிணையங்கள் துறையில் காணப்படுகின்ற அரச பிணையம் மொத்த தொகையில் 57% இனை காட்டுவதுடன், அவைகள் 2012 இறுதியில் ஒரு வருட அல்லது அதைவிட கூடிய காலத்தில் கொண்டு காணப்படுகின்றது.

உரிமைப்பங்கு மூலதனமிடல் முயற்சிகளில் 2012 முதல் இரண்டு காலாண்டிலும் சந்தையில் ஒரு நேர்கணிய நிலையையே காண்பித்தது. எவ்வாறாயிலு:ம் குறித்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட செயலாற்றுகைகள் விருத்தியைக் காட்டவில்லை. அதில் காணப்பட்ட தேக்க நிலை வங்கியின் உரிமைப் பங்குத் துறையையும் பாதித்தது. வங்கியின் பிரதான மூலதனங்கள் வங்கி, நிதி மற்றும் காப்புறுதியில் 39% மாகவும், ஏனைய பல்வேறு துறைகளின் முதலீடுகள் 18%மாகவும் மொத்த மூதனமிடல் தொகையின் 57%தை உள்ளடக்குகிறது. குறித்த ஆண்டுக்குள் மின்சாரம், வலு, உற்பத்தி, வங்கி, நிதி, காப்புறுதி துறைகளில் மிகச் சிறந்த செயலாற்றல்களைக் காணாத சூழ்நிலையில் பொதுவாக திருப்தியற்ற தன்மை காணப்பட்ட நிலையிலும், நேர்க்கணியமான சந்தை நிலவரங்களில் வங்கி செயலாற்றியமை பேரின சமூக பொருளாதார சூழலில் விதிவிலக்கை ஏற்படுத்தியது. வங்கியின் மாற்றுவழி முதலீடுகள் தொகுதிக் கடன், நிதி நிறுவனங்களின் கடன்கள், பிணையப்பத்திரங்களில் கடன்கள் ஆகியவற்றில் உள்ளடங்குகின்றன.

வங்கியின் மாற்று வழி முதலீடுகள் உயர் கடன் தரத்தினையுடைய நிதி நிறுவனங்களில் மேற்கொள்ளப்படுவதுடன் உயர் இலாபங்களை அடையும் நோக்கில் நிறுவனங்களுக்கும் நிதிகளை வழங்குகின்றன. இவ்வாண்டில், இத்துறை 27% மற்றும் 13%வீழ்ச்சியை காட்டுகிறது. இவ் வீழ்ச்சியின் அடிப்படைக்கு காரணம் சந்தையில் போட்டி நிறைந்த தொகுதிக் கடன் முதலீட்டு வாய்ப்புக் காணப்படாமையாகும்.

### வழிவகைகளை மாற்றுதல்

2012 ஆம் ஆண்டில் நாங்கள் சிறு வர்த்தக கடன் கொடுத்தல்களில் கவனம் செலுத்தினோம். திறைசேரி உண்டியல்கள் முறிகள் மீது ஏற்பட்ட வட்டி வீத வீழ்ச்சியின் பின்னர், இவ்வாறு கவனம் செலுத்தியது புத்திசாலித்தனமான முடிவு என நிரூபிக்கப்பட்டது. இவ் ஆண்டை நாங்கள்



## 2012இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம்

செயற்பாட்டு மீளாய்வு

ஆரம்பித்த போது எமது திரட்டல் இலக்கின் 29%யை அதாவது ரூபா 16.820 மில்லியனை முதலீடு செய்வது எமது திட்டமாகவிருந்தது. கிளை முகாமையாளர்களுக்கும் இது அறிவிக்கப்பட்டது. கிளையின் இலாபத்தன்மையை முன்னேற்றும் என்பதனால் சிறு வர்த்தக கடன் உற்பத்திகளில் அதிகமாக முதலிடுமாறு அவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். ஆயினும் எமது திட்டங்களை மாற்ற நேரிட்டது. 2012 ஏப்ரலில் இ.ம.வ. கடன்களுக்கான உச்ச மட்டத்தை விதித்தது. 2011 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மொத்த வெளிநிலுவையாகவிருந்த கடன்களும் முற்பணங்களினதும் தொகையான 118% யை 2012இன் மொத்த கடன்களும் முற்பணங்களினதும் வளர்ச்சி விஞ்சலாகாது என இ.ம.வ. நிர்ணயித்தது. இதனால் நிர்ணயிக்கப்பட்ட மட்டங்களுக்குள் எமது கடன் துறையை நாங்கள் ஒழுங்குபடுத்தவும் வழிவகைகளை மாற்றவும் நேரிட்டது. எமது மூலாதாரங்களில் வலுவுடன் வேரூன்றியிருந்த நாங்கள், உருவாகி வரும் போக்குகளுக்கு ஏற்ற புத்தாக்கங்கள் தேவைப்படுவதை உணர்ந்தோம். அடகு பிடித்தலின் முற்பணங்களை அதிகரிப்பதால் நாங்கள் அதிக கவனம் செலுத்தினோம். எமது பாரம்பரிய வீடமைப்பு கடன் கொடுக்கும் உற்பத்தியாளரை விட குறிப்பிடத்தக்க அளவு உயர்வாக அடகு வருவாய் கிடைத்ததை கருத்தில் கொள்ளும் போது இது புத்திசாலித்தனமான நடவடிக்கை என்பது நிரூபிக்கப்பட்டது.

### வீடமைப்பு - ஒரு முன்னுரிமை

வீடமைப்பு ஒரு தலையாய தேவை என்பதை நாங்கள் நன்கு உணர்ந்திருக்கின்றோம். எனவே, இலங்கையர்கள் தமக்கென சொந்த வீடுகளை உரிமையாளர்களாக்கிக் கொள்வதை உறுதிப்படுத்துவதை எமது பொறுப்பாக்கிக் கொண்டிருக்கின்றோம். ஒப்பீட்டளவில் குறைந்த வட்டி வீதங்களும், துரிதமானதும், திறமையானதுமான அங்கீகார நடைமுறைகளும் மற்றும் சேவைகளும் காரணமாக எமக்கு போட்டித் தன்மை மிக்க வரம்புகளும் ஏற்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் இவ் ஆண்டு எமக்கு நல்லதொரு ஆண்டாகவே இருந்தது. எமது வீடமைப்புக் கடன் துறை ரூபா 6,888.6 மில்லியனால் அதிகரித்ததுடன், 6353 கடன் எனும் இலக்கையும் எய்தியது. 2012இன் இறுதியில் மொத்த வெளிநிலுவையாக ரூபா 44,273.7 மில்லியன் இருந்தது.

சலுகை வட்டி வீதங்களில் பொதுத் துறைக்கு நாங்கள் தொடர்ந்தும் கடன்களை வழங்கினோம். இத்துறைக்கு ரூபா 4,492.91 மில்லியனை கடனாகவும் கொடுத்தோம். கடன் துறையின் 18.45%யை 14% வட்டிக்கும் 81.55%யை 12%வட்டிக்கும் வழங்கினோம். இதன் விளைவாக பொதுத் துறை ஊழியர்களின் வாழ்க்கைத் தர உயர்விற்கு எங்களால் மறைமுகமாக பங்களிப்பு செய்யவும் முடிந்தது.

பல்கலைக்கழக கல்வியாளர்களுக்கும், கல்விசாரா ஊழியர்களுக்கும் சலுகை அடிப்படையிலான வீடமைப்பு கடன்களை நாங்கள் வழங்கினோம். 2012 இன் இறுதியில் இத் துறையினருக்கு, ரூபா 43.34 மில்லியன் கடனாக வழங்கப்பட்டது. ஸ்டான்டட் சார்ட்டட் வங்கி, வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றுடன் கூட்டிணைந்து விசேட வீடமைப்பு கடன் ஒழுங்குகளிலும் நாங்கள் உட்புகுந்தோம்.

### கடன் வழிகாட்டியை விரிவுபடுத்தல்

பன்முகப்படுத்தப்பட்ட அனேக பிரிவுகளுக்கும் நன்மையாளிக்கும் நிதியிடல்களை நாங்கள் தொடர்ந்தும் வழங்கினோம். இதனூடாக சாத்தியமான வாய்ப்புகள் கிடைக்குமென்றும் ஒட்டு மொத்தமான வளர்ச்சியினால் எமது எல்லைகளை பரவலாக்க முடியும் எனவும் நாங்கள் உணர்ந்தோம். உதாரணமாக சேமிப்பு வைப்புகளை முன்னேற்றுவதற்கு சுய தேவைக் கடன் எனும் கூறு ஒன்றை கட்டியெழுப்பினோம். அதேநேரம், எமது வாடிக்கையாளர்கள் தம்மைத் தாமே கட்டியெழுப்புவதற்கும் உதவினோம்.

வாகன கடன்களின் கீழ் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் ஒன்றின்படி சிரேஷ்ட ஊடக ஆளணியினருக்கும்

**சிறு வர்த்தகக் கடன் துறை**



கலைஞர்களுக்கும் இவ் வசதிகளை நாங்கள் வழங்கினோம். இவ் ஆண்டில் மொத்தமாக ரூபா 85.5 மில்லியன் வழங்கப்பட்டது.

எமது விவசாயிகளின் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்தியதன் மூலமாக நாட்டின் விவசாயத் துறை தொடர்ந்தும் முன்னுரிமையைப் பெற்றது. அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தில் நாங்கள் உறுதியான பங்காளிகளாக இருப்பதுடன் ரூபா 1,226 மில்லின் ரூபாவை இதற்கென வழங்கியிருக்கின்றோம்.

### அடகுபிடித்தல் முன்னணிக்கு வருகின்றது

சந்தையில் வளர்ந்து வரும் அதிக எண்ணிக்கையிலான பங்கேற்பாளர்களின் காரணமாக அடகுச் சேவை வர்த்தகத்தில் மிகவும் கடுமையான போட்டிகளுக்கு நாங்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் துரிதமானதும், செயற்திறன் மிக்க சேவைக்கும் கூடுதல் ஊக்குவிப்பாக இலகுவான கடன் கொள்கைகளை இப்போது நாம் கொண்டிருப்பதன் காரணமாகவும் எமக்குள்ள நன்மதிப்பினால், வளர்ச்சி நன்றாகவுள்ளது. ஆண்டின் ஆரம்பத்தில் அடகு முற்பணங்கள் ஒப்பீட்டளவில் போட்டி வட்டி வீதங்களில் வழங்கப்பட்டன. ஆயினும், வெளியிலிருந்து வந்த சந்தை நிலவரங்களின் காரணமாக வீதங்கள் உயர்வடைய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எவ்வாறாயினும் இக் காரணிகளின் மத்தியிலும் எமது துறையை குறிப்பிடத்தக்களவு நம்பிக்கையுடன் நாங்கள் அதிகரித்ததுடன், குறிப்பிடத்தக்களவு வட்டி வருமானத்தையும் ஈட்டினோம்.

**"சலுகை வட்டி வீதங்களில் பொதுத் துறைக்கு நாங்கள் தொடர்ந்தும் கடன்களை வழங்கினோம். இத்துறைக்கு ரூபா 4,492.91 மில்லியனை கடனாகவும் கொடுத்தோம்."**

### திறமைகளை உயர்த்துதல்

எமது முக்கிய நோக்கங்களில் வேரூன்றியிருப்பதற்கான எமது கிளை குழுக்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் ஒழுக்க விதிகளை பேணுவது, நடத்தை விதிகள், செயற்பாட்டு மற்றும் நிர்வாக நடைமுறைகள், சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் என்பவை முன்னெடுக்கப்பட்டன. கிளைகளில் புதிதாக வேலைக்கமர்த்தப்பட்டவர்களுக்கு நடத்தப்பட்ட ஆரம்ப நிகழ்ச்சித் திட்டத்திற்குள் இவை தெரிவிக்கப்பட்டன.

போட்டித் தன்மையான இந்த சிக்கலில் இருந்து வெளிப்பட்ட சவால்கள் கலந்துரையாடல்களையும், பிரதியுத்தரங்களையும் தூண்டி விட்டதுடன், ஆண்டு முழுவதிலும் நடைபெற்ற கிளை முகாமையாளர்களின் கூட்டங்களில் நடைமுறைக்கேற்ற தீர்வுகளை உருவாக்குவதற்கான மிகவும் வாய்ப்பான ஒரு விடயமாகவும் செயற்பட்டன. புதிய வங்கி உத்தியின் வெளிப்பாட்டுடன், வங்கியின் முன்னேற்றத்திற்கு கிளைகளே பொறுப்பேற்க வேண்டிய பிரதான காரணி என தேசேவ நம்புகின்றது. எதிர்காலத்திற்கான உந்து விசையை கூட்ட வேண்டிய கடமையும் தற்போது கிளைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனை செய்வதற்கு எமது கிளை குழுக்கள் பொருத்தமான அறிவாற்றலையும், திறமையையும் கொண்டிருக்க வேண்டும் என நாங்கள் கருதுகின்றோம்.



"அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தில் நாங்கள் உறுதியான பங்காளிகளாக இருப்பதுடன் ரூபா 1,226 மில்லின் ரூபாவை இதற்கென வழங்கியிருக்கின்றோம்"

### தொழில்நுட்ப ஆற்றல்

"எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் வங்கிச் சேவை" எனும் கருப் பொருளை மேலும் விஸ்தரிக்கும் வகையில் வங்கியின் உள்ளக தகவல் தொழில்நுட்ப அமைப்பின் அபிவிருத்தி, வாடிக்கையாளர் சேவையை உயர்துவதற்கு அவசியமான தூண்டுதலை காண்பிப்பதில் தொடர்ந்தும் ஈடுபட்டது. முக்கியமான செயற்பாடுகளை மையப்படுத்தி எந்தவொரு கிளையிலிருந்தும் கொடுப்பனவுகளை கொடுத்துத் தீர்க்கக் கூடியதாக தற்போது, நடைமுறைப்படுத்தப்பட்டும் கடன் முறைமையும் விருத்தி செய்யப்பட்டது. இவ்வாறு மையப்படுத்தப்பட்ட வர்த்தக துறைகளில் அடகுச் சேவை முறைமையும் ஒன்றாகும். எமது கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள் அல்லது காப்புறுதி தவணைக் கட்டணங்கள் வாடிக்கையாளர்கள் கொடுப்பனவு செய்வதற்கு வசதியாக இணைய வங்கிச் சேவை, குறுஞ் செய்தி அனுப்பும் SMS வங்கிச் சேவை என்பவற்றுடன் பாவணைக் கட்டண பட்டியல் சேகரிப்புச் சேவை என்பவற்றின் பாவனையும் அதிகரித்திருப்பதை நாங்கள் அவதானித்தோம்.

### எமது கருத்துகளை தெரிவித்தல்

இலங்கை மக்களிடம் சேமிப்பு பழக்கத்தை அறிவுறுத்துவது தொடந்தும் தேசேவ யின் வேர்களுக்குள் ஆழமாக பதிந்துள்ள மூலாதாரக் கொள்கையாகவுள்ளது. எனவே, முழுமையாகவும், தெளிவாகவும் இச் செய்தியை அறிவிப்பது தவிர்க்கவியலாததாகும். சந்தைப்படுத்தலிலும் அதிகாரம் பெற்றவையாக வங்கியின் மூலாதாரக் கொள்கைகளில் நன்கு பதியப்பட்டுள்ளன. மதிப்பீடுகளினாலும், மரபுகளினாலும் உருவாக்கப்பட்ட அத்திவாரக் கல்லின் மீது நாங்கள் நவீன தொழில்நுட்ப ரீதியிலான உயர் தர வங்கிக் கலாச்சாரமொன்றை கட்டியெழுப்பி அபிவிருத்தி செய்து வருகின்றோம். இதனால் நாம் சினேக பூர்வமும், நெகிழ்ச்சியும், கிடைக்கக் கூடியதும் எனும் நல்ல மதிப்பீடுகளின் மேல் எம்மை தாபித்து நற்புகழை வென்றுள்ளோம்.

எனவே, எமது சந்தைப்படுத்தல் புத்தாக்கங்கள், நாம் மிகவும் முக்கியமானதெனக் கருதுகின்ற இத்தகைய அடிப்படை தத்துவங்களுக்குள் ஆழமாகப் பதியப்பட்டுள்ளன. நாங்கள் தொடர்ந்து உட்புகுத்தும் புத்தாக்கங்கள் இதற்கு போதுமான சான்றாகவுள்ளது. விசேடமாக, நிச்சயமானதும், மாற்றமடையாததும், நிலையானதும், தெளிவானதுமான வங்கி பெருமைப்படக் கூடிய அனைத்து அம்சங்களையும் அறிவுறுத்துவதாகவும், எமது நிறுவனத்தின் அடையாளம் இருப்பதை தெளிவாக உறுதிப்படுத்த முடிந்துள்ளது. இந்த ஒழுங்குமுறை அனைத்து விளம்பரப்படுத்தல்கள், சந்தைப்படுத்தல்கள், மேம்பாட்டு பிரச்சாரங்கள் என்பவற்றிற்கும் விஸ்தரிக்கப்பட்டது. நெறிமுறை சார்ந்த வங்கியின் கருப்பொருளை உட்புகுத்துவதற்கும் இணங்கி செயற்படுத்துவதற்கும் அவசியமான அதிகார வரம்பை நாங்கள்தொடர்ந்து நன்கறிந்திருக்கின்றோம். இந்த ஆண்டில் அனைத்து ஊடக விளம்பரங்களும் URL வலையமைப்புடன் தொடர்பு கொள்ள வேண்டும் என தேசேவ பணித்துள்ளது. அழைப்பர் நிலைய இலக்கத்துடனும் பிட்ச் ரேடிங் உடனும் சேர்ந்து நிறுவனத்தின் சின்னமும், வங்கியின் பெயரும் மிகத் தெளிவாகக் காட்சிப்படுத்தப்பட்டன. இறுதியாக கூறப்பட்டது, உறுதிப்படுத்தப்பட்ட வர்த்தக குறியீட்டு வழிகாட்டல்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்புடைய முகவர் நிலையங்கள் அனைத்திற்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### எமது கிளைகளை மேம்படுத்தல்

இந்த ஆண்டில் செறிவான விளம்பர மேம்படுத்தலுடன் புதிய கிளைகள் திறந்து வைக்கப்படும். மாணவர்கள் மற்றும் இளம் பிள்ளைகள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கு அடித்தளமொன்றை ஏற்படுத்துவதற்காக பாடசாலை வங்கிக் கூறுகளிலும் இலக்கிடப்பட்ட பிரச்சார நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றன. இத்தகைய வங்கிக் கூறுகளின் வெற்றியினால்

## 2012இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம்

செயற்பாட்டு மீளாய்வு

சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களின் துணையுடன் இவ்வாண்டில் நாடுமுழுவதும் உள்ள பாடசாலைகளில் மேலும் 793 கூறுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**புத்தாக்கங்களும் பெறுமதி கூட்டல்களும்**

எமது பரவலான உற்பத்தித்துறை தொடர்ந்தும் புத்தாக்கங்கள் மீது கட்டியெழுப்பப்பட்டதுடன், உற்பத்தியின் பெறுமதி கூட்டலை மேம்படுத்துவதற்கு, எமது இடையறாத சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களினால் தக்க ஆதரவையும் பெற்றது.

ஹப்பன் சிறுவர் சேமிப்புக் கணக்குகள் 16 வயது வரையான சிறுவர்களுக்கானது, என்பதுடன் இக் கணக்கு வைப்பாளர்களுக்கு 1%இற்கு அதிகமான வட்டி வீதத்தையும், கவர்ச்சியான பரிசுத் திட்டத்தையும், ஆண்டு ஐந்து சாதனையாளர்களுக்கு புலமைப்பரிசுகளையும் வழங்குகின்றது. ஸ்திரி, பெண்களுக்கு மட்டும் எனும் முக்கியமான எண்ணக் கருவுடனான ஒரு கணக்கு தேசேவ யின் மாஸ்டர் / விசா அட்டை வசதிகளுள்ள பொருள் கொள்வனவு அட்டை, சந்தை வீதங்களுக்கு மேலான வட்டி எனும் சலுகைகளுக்கு கணக்கு வைப்பாளர்கள் உரித்தாவர்.

இத்துறு மித்துறு எனும் முப்பதுகளின் மத்தியில் வாழும் இளைஞர்களுக்கு அதிகாரமளிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட கணக்கு. உற்பத்தியின் மூலாதாரக் கொள்கைகளுடன் இணைந்ததாக, கடன்கள், அதிர்ஷ்டச் சீட்டிழுப்புகள், கடன் அட்டைகள் போன்றவற்றின் ஊடாக இளைஞர்களையும் அவர்கள் குடும்பங்களையும் அபிவிருத்தி செய்யும் கணக்கு.

பிரார்த்தனா சிறுவர் சேமிப்புச் சான்றிதழ் சிறு பிள்ளைகளை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இது கவர்ச்சியான வட்டியைக் கொண்டு வரும் நீண்டகால வைப்புத் திட்டம். பிள்ளை 16 வயதை அடையும் போது சான்றிதழ் முதிர்ச்சியடையும் என்பதுடன் முதிர்ச்சியடையும் நேரத்தில் முகப் பெறுமதியுடையதாகவிருக்கும் எனும் உறுதியையும் தேசேவ யிடமிருந்து பெறுகின்றது. உயர் வட்டி வீதங்கள், வெகுமதிகள், போட்டிகள் மற்றும் சீட்டிழுப்புகள் என்பவற்றை உள்ளடக்கியிருக்கும். மெகா ஊடகப் பிரச்சாரங்கள் மற்றும் அவுறுது வாசனா, ஸ்மைல், வின் வின் தேகி வருசா, ஹப்பன் ஆண்டு 5 புலமைப்பரிசு போன்ற அடிக்கோட்டு விளம்பரங்கள் என்பவற்றின் ஆதரவுடனும் மேற்கொள்ளப்படுகின்றன.

**எமது நிறுவன குறியீட்டிற்கான பெறுமதி கூட்டல்**

எமது பாரம்பரியம், மரபுகள் என்பவற்றுடன் அடிப்படையாக பிணைந்துள்ள, தேசேவ யின் சமகால வழக்கங்களை அறிவிப்பதற்காக, எமது நிறுவன குறியீடு, எமது குறியீட்டு பிரதிமையை பிரச்சாரம் செய்வது மற்றும் கிளைமட்டத்தில் வாக்குறுதிகளையும், பெறுமதிகளையும் பலப்படுத்துவது என்பவற்றிலும் நாங்கள் ஈடுபடுகின்றோம். இவை, தேசேவ மக்களின் இதயங்களிலும் மனதிலும் தன்னை பதித்துக் கொள்ளும் பலவழி முறைகளில் ஒன்றாகவுமுள்ளது.

அஞ்சல் மற்றும் சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள் ஊடாக எமது தேசேவ யின் குறிகாட்டிகளுக்கும் உற்பத்திகளுக்கும் கட்டிட நிர்மாண கண்காட்சியிலும் அனுராதபுரத்தில் நடைபெற்ற தெயட்டகிருள கண்காட்சியிலும் எடுக்கப்பட்ட நிலைப்பாடுகளும் குறிப்பிடத்தக்க இரண்டு உதாரணங்களாகும். புத்தாக்கங்களுக்கான மேடை ஒன்று அமைக்கப்பட்டதை தொடர்ந்து, ஏப்ரல் மாதத்தில் புத்தாண்டு கொண்டாட்ட காலங்களை சூழ்ந்து இவ்வாண்டில் தேசேவ பருவகால அல்லது மைல்கல் பிரச்சாரங்களை அறிமுகப்படுத்தியது.

**தகவல் தொழில்நுட்பத்தை சந்தைப்படுத்தல் கருவியாக பயன்படுத்தல்**

குறுஞ் செய்தி அனுப்புதல் (SMS) e – Flyen. மின் பத்திரிகைகள் (E – Papers) அனைத்தினூடாகவும் எமது உற்பத்திகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவது என்ற வகையில் சமூக ஊடகங்களும், நடமாடும் தொலைத் தொடர்புகளும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறே இலவச பிரசுரங்கள் அல்லது சமூக ஊடக மேடைகள் என்பவற்றிலும் இலக்கிடப்பட்ட ஊடக பிரச்சாரங்க;ாக எமது தொழில்நுட்ப அடிப்படையிலான உற்பத்திகளும், பெருமளவிலான விளம்பரத்தைப் பெறுகின்றன.

**எமது பங்குடமையாளர்களுடன் கலந்துரையாடல்கள்**

இவற்றிற்கு மேலதிகமாக, மக்களுக்கு அதிகாரமளிக்கும் அதன் அடிப்படைவாதத்தை தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டிய தேவை

தேசேவ இற்கு அவசியமாகவிருந்தது. இதனை நாம் எமது இலக்கிடப்பட்ட வாடிக்கையாளர் பிரிவிற்கு கருத்தரங்குகளை ஒழுங்கு செய்ததன் மூலம் மேற்கொண்டோம். முக்கியமாக ஆண்டு 5 புலமைப்பரிசுக்கு தோற்றவிருந்தவர்களுக்கு முப்பது ஹப்பன் புலமைப்பரிசு கருத்தரங்குகளும் "தருணயட ஹெடக;" தலைப்பின் கீழ் இளைஞர்களுக்கு 52 கருத்தரங்குகளும் பிரபலமான நவயுகய சஞ்சிகையுடன் கூட்டிணைந்து பல கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன.

### ஆய்வுகளினால் கூட்டப்பட்ட பெறுமதி

இவ் வாண்டில் சந்தைப்படுத்தல் பிரிவிற்குள் ஆய்வுப் பிரிவை ஒன்றிணைத்த முக்கியமான நிகழ்வினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வுகளின் பகுப்பாய்வுகள், பொருத்தமான பங்குடமையாளர் குழுக்களுக்கென இலக்கிடப்பட்ட சந்தைப்படுத்தல் மற்றும் மேம்பாட்டு முன்னெடுப்புகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு மிகவும் உதவியாக இருந்தன. வாடிக்கையாளர் சேவைகளின் மட்டங்களை பகுப்பாய்வு செய்வதற்கும் இவ் ஆய்வுகள் பெறுமதிமிக்கவையாக இருந்தன. இதனால் SWOT பகுப்பாய்வு இடைவெளிகளை நிரப்புதல் மற்றும் அவசியமான இடங்களில் தடைசெய்தல் அல்லது சரிப்படுத்தல் நடவடிக்கைகள் என்பவற்றை வரைந்து கொள்வதற்கும் தேசேவ க்கு முடியுமாயிருந்தது. வாடிக்கையாளர் சேவை ஆராய்வு, ஆண்டு 05 மாணவர்களை உள்ளடக்கிய உற்பத்தி விழிப்புணர்வு ஆராய்வு மீளெடுத்தல் மாதிரிகள் மீதான ஆய்வு, தேசேவ யின் உற்பத்தி செயற்பாடுகளின் அளவை கணிக்கும் உற்பத்தியடிப்படையிலான பகுப்பாய்வு என்பவை இந்த ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட முக்கிய ஆய்வுகளாகும்.

> **"தேசேவ அதன் 40வது மைல்கல்லை கொண்டாடும் நேரத்தில் உலக சேமிப்பு வங்கிகள் நிறுவனத்தின் 18வது ஆசிய - பசுபிக் பிராந்திய குழு மாநாட்டை கொழும்பில் நடத்த முடிந்ததையிட்டு அளவற்ற பெருமிதமடைந்தது"**

### தேசேவ அதன் 40வது மைல்கல்லை அடையாளமிட்டுள்ளது

தேசேவ அதன் 40வது மைல்கல்லை கொண்டாடும் நேரத்தில் உலக சேமிப்பு வங்கிகள் நிறுவனத்தின் 18வது ஆசிய – பசுபிக் பிராந்திய குழு மாநாட்டை கொழும்பில் நடத்த முடிந்ததையிட்டு அளவற்ற பெருமிதமடைந்தது.

"WSBI "உறுப்பினர்களின் நடைமுறையிலுள்ள சிறு வர்த்தக கடன்களின் போட்டித் தன்மை" எனும் தலைப்பின் கீழ் நடைபெற்ற இம்மாநாட்டிற்கு "WSBI" இன் உறுப்பு நாடுகளிலிருந்து 40இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் வருகை தந்திருந்தனர். சர்வதேச நாணயக் கட்டமைப்பின் அமைச்சரான டாக்டர். சரத் அமுனுகம, பிரதம விருந்தினராகவும், இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் அஜித் நிவாட் கப்ரால் தலைமையுரை வழங்குபவராகவும் பங்கேற்றனர். WSBI ஆசிய பசுபிக் பிராந்திய குழுவின் தலைவர் அடினான் மனிங், WSBI – ESBC பயிற்சியாளரும், ஆலோசகருமான அயன் ரெட் கிளிப் ஆகியோரும் இப் பூலோக நிகழ்வினை சிறப்புறச் செய்தனர். WSBI அதன் அங்கத்துவத்திற்குள் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் 16 நாடுகளில் உறுப்பு நிறுவனங்களை கொண்டுள்ளதுடன், பிராந்தியத்திற்குள்ளும், வெளியிலும் நமது முன்னோர்களின் அனுபவங்களை பரிமாறிக் கொள்ளும் நோக்குடன், தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் நல்லுறவை கட்டியெழுப்பும் மேடையாகவும் செயற்படுகின்றது.

### கிளை அபிவிருத்திக்கான எதிர்கால உத்திகள்

2013இற்கென தற்போது பல்வேறு உத்திகள் கலந்துரையாடப்படுவதுடன், அடிப்படைக் கோட்பாடுகளும் செயற்படுத்தப்படுகின்றன. இது மேலும் செறிவான போட்டியை நிச்சயமாக பிரதிபலிக்குமாயினும் அனேக வாய்ப்புகளையும் காண்பிக்கும் விசேடமாக ஒதுக்கப்பட்ட உற்பத்திகள் மற்றும் பிரச்சாரங்கள் ஊடாக அடுத்த ஆண்டில் துரித சேமிப்பு திரட்டல்களாக செயற்படுத்ததுவதற்கான சில பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்களின் வங்கிக் கூறுகளுடாகவும், ஆயோஜன கவய ஊடான எஸ்எம்இ கடன்கள் கொடுப்பதை ஆரம்பிப்பதன்

மூலமும் மாணவா் அட்டைகளையும் திட நம்பிக்கை கொள்வதையும் அறிமுகப்படுத்த நாங்கள் எதிா்பாா்க்கின்றோம். POS கருவியூடான கொடுக்கல் வாங்கல்களை பயன்படுத்தி கஷ்டமான கிராமிய பிரதேசங்களை மேலும் ஊடுறுவுவதன் மூலமும், சேமிப்பு கூறுகள் திறக்கப்படுவதை ஆதரிப்பதன் ஊடாகவும் பிரதான கிளைகளின் சேவைகளை அதிகரிப்பதனூடாகவும், மிகவும் அத்தியாவசியமாக, கிளையின் செயற்பாடுகளுக்குள் அடிப்படைக் கொள்கை, மீள் கட்டமைப்பு செய்வதும் தேசேவயின் எதிா்காலத்திற்கு உதவியாகவிருக்கும்.

இறுதியாக குறிப்பிட்டது, கிளை வலையமைப்பின் ஒட்டுமொத்த திறமையை முன்னேற்றும் வாக்குறுதியைக் கொண்டிருந்தது. இது ஒழுங்கு படுத்தப்பட்டதாக சந்தை வாய்ப்புக்களின் பலனை பெற்றுக் கொள்ளும் விரிவாக்கத்திற்கென ஒதுக்கி வைக்கப்பட்டது. அதேநேரம், இது வா்த்தக சுற்றாடலில் உருவாகிவரும் போட்டிகளின் சவால்களுக்கு மேலும் திறமையாகவும், பயனுள்ள வகையிலும் முகங்கொடுக்கும் தகைமையை எமக்குத் தரும். வீணாக்கலைக் குறைப்பதும், மூலவளங்களின் உச்ச பயனை பெறுவதும், குழுவாக பணியாற்றுவதை மனதில் பதிய வைப்பதும், விவேகமாகவும், நுட்பமாகவும் ஏற்ற நேரத்தில் வா்த்தக தீா்மானங்களை எடுப்பதும் பிரதேச முகாமையாளா்கள் தமது செயற்பாடுகளை திறமையாக மேற்கொள்வதற்கு ஏற்றவாறு அவா்களது சுயாதீனத்தை விஸ்தரிப்பதும் இப் புதிய கட்டமைப்பின் நோக்கமாகவிருக்கும். இந்த அதிகார பரவலாக்கல் வங்கி முழுவதிலும் பரவியுள்ள சிறப்பியல்பிற்கான அறிகுறியாகவுள்ளது. இது அடையாளம் காணப்பட்ட தலைவா்களுக்கும் குழுவாக செயற்படுபவா்களுக்கும் அதிகாரமளிக்கப்பட்ட அறிவாற்றலையும், வங்கியின் நீண்டகால ஸ்திரத்தன்மைக்கு அதிகாரமளிக்கப்பட்ட அறிவாற்றலும், புத்தூக்கமுமுள்ள குழுக்களும் உருவாக்கப்பட்டு விருத்தி செய்யப்படுவது உறுதிப்படுத்தப்பட்டது.

### 2013இற்கு அப்பால் எமது பயணம்

2013இற்கான இ.ம.வ. யின் திட்டத்திற்கு அமைய அதை ஒரு முன்மாதிரியாக வைத்து இ.ம.வ. யின் 21 அம்ச "மேற்கொள்ளப்பட வேண்டியவை பட்டியலின்" அடிப்படையில் தேசேவ அடுத்த வருடத்திற்கான திட்டங்களை வகுத்துள்ளது. அத்துடன், தே.சே.வ. யின் 2011-2013 மூலோபாயத் திட்டமும் எமது வேரூன்றிய முக்கிய எதிர்கால நோக்குகளும் அதில் உள்ளடங்கியுள்ளன.

எமது வேர்கள், எமது பெறுமதிகளுக்கு, முக்கிய மூலாதாரங்களுக்கும் தொடர்ந்தும் உண்மையாக இது உறுதி செய்து கொள்ளும் அதேநேரம் இமவ யின் மேற்கொள்ளப்பட வேண்டியவை பட்டியலில் தேசேவ கவனம் செலுத்தி எமது வியாபாரத்தில் பின்வருவனவற்றை உறுதியாக ஒருங்கிணைத்துள்ளது.

- இ.ம.வ. யின் ஒழுங்கமைப்பு பணிப்புரைகளுடன் இணங்கு வித்தல்
- தற்போதைய மற்றும் எதிர்கால வங்கி மூலதனப் போதுமை விடயத்தில் அவதானமாக இருத்தல்
- எமது குழுவினரின் அறிவு, ஆற்றல் ஆகியவற்றை வளர்க்க பயிற்சி மற்றும் அபிவிருத்திகளுக்கு முன்னுரிமை வழங்குதல்.
- வியாபாரத்தின் முக்கிய அங்கமாக தொழல்நுட்பத்தை உள்ளடக்கி வியாபார நடவடிக்கைகளை புதிய பெறுமதி வழங்கல்.
- உள்நாட்டு வெளிநாட்டு நிலைமைகளை கருத்தில் கொண்டு இடர் முகாமைத்துவ முறையை விருத்தி செய்தல்
- கூட்டு கருத்திட்டமிடல் (Corporate Planing) முறையை விருத்தி செய்தல்
- தே.சே.வ. சர்வதேச தொடர்புகள் விடயமாக அவதானமாக இருத்தல்.
- புதிய வாய்ப்புக்கள் தொடர்பாக ஆலோசித்தலும் புதிய சேவை களை அறிமுகம் செய்தலும்
- உற்பத்தித்திறன் மேம்பாட்டு விடயங்கள் தொடர்பாக கரிசனை செலுத்தல்
- வட்டியில் தங்கியிருப்பதை மட்டுப் படுத்தி இலாபத்தை அதிகரித்துக் கொள்வதற்காக வழிமுறைகளை கையாளுதல்
- சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகள் தொடர்பாக எமது கவனத்தை தொடர்ந்து வைத்துக் கொண்டு அவைகளுக்கு திறன்மிக்க வழிமுறைகளை அறிமுகம் செயதல்
- வெளிநாடுகளில் இருந்து பணம் அனுப்புதல்துறையை வளர்த்தல்
- நாட்டின் ஏனைய பகுதிகளுடன் சமனாகக் கூடிய வகையில் அபிவிருத்தியில் பின்தங்கியுள்ள முக்கியமாக வடக்கு, கிழக்கு, ஊவா போன்ற மாகாணங்களுக்கு ஒத்துழைப்பை வழங்குவது.

### எதிர்காலத்தை திட்டமிடல்

சர்வதேச மற்றும் உள்நாட்டு பொருளாதார மாற்றங்களுக்கு இசைவாகவே எமது 2011-2012 மூலோபாய வர்த்தகத் திட்டம் காணப்படுகின்றது. இத் திட்டம் எமது வெற்றி தோழ்வி, வரிவிலக்கல் ஆகியவற்றை தெளிவாக பகுப்பாய்வு செய்து காட்டுவதுடன் அது எமது 2014-2016 காலத்திற்கான மூலோபாய வர்த்தகத் திட்டத்தை வகுக்கவும் உதவுகின்றது. எமது இந்த புதிய திட்டத்தில் எமது பங்குடமையாளர்களுக்கு தர உயர்வை வழங்குதல் தொடர்பாக விரிந்த ஆழமான இடத்தை வழங்குவதுடன், அது எமது வடிக்கையாளர் சேவையை உயர்த்துதல் தொடர்பாகவும் கருத்தில் கொள்வதை உள்ளடக்கும்.

### முன்னெடுப்புகளை மேற்கொள்ளல்

இந்த மீளாய்வு மற்றும் பொ.மு./பி.நி.அ. யின் செயற்பாட்டு மீளாய்வில் விளக்கப்பட்டுள்ளவொரு 2013இல் அமைப்பு முறை முகாமைத்துவம் தொடர்பாக மூலோபாய மாற்றங்களை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் கூடிய சுயாதீனத் தன்மை கொண்ட பிராந்திய முகாமைத்துவ முறையொன்று தற்போதைய வலய முகாமைத்துவத்திற்கு பதிலாக அமுலுக்கு வரும். இதன் காரணமாக சேமிப்பு திரட்டல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் மேலதிக அழுத்தம் காரணமாக தே.சே.வ. சந்தைப் பங்கை தக்கவைத்துக் கொள்ள உத்தரவாதத்தை வழங்கும். இதேவேளை, சமூகத்தின் வசதி குறைந்த மக்களுக்கு நிதிச் சேவைகளை வழங்கி கிரமப்புறங்களில் சேமிப்பு திரட்டலை மேற்கொள்வது தொடர்பாகவும் அவதானத்தை செலுத்துவதிலும் தே.சே.வ. உறுதுணையாக அமையும்.

இந்த மாற்றத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற மற்றுமொரு நோக்கணிய விடயமாவது எமது இளைய தலைமுறையுடன் ஒரு அன்யோன்ய உறவை வளர்த்துக் கொள்வதாகும். இதன் மூலம் எமது வேரூன்றலை அடிமட்டத்தில், பாடசாலை வங்கி கூறுகள், இத்துறும்

## 2012இல் நாம் எவ்வாறு செயற்பட்டோம்

எதிர்காலத் திட்டம்

ஆயோஜன கவ மூலம் மேலும் வலுப்படுத்திக் கொள்ளக் கூடிய தாகவுள்ளது. அதேவேளை, இந்த இ.ஆ.க. மூலம் எமது கடன் வழங்கல் துறையை பரவலாக்கல் தொடர்பாகவும் எமது கவனத்தை செலுத்தக் கூடியதாகவுள்ளது. எமது தளத்தை விரிவு படுத்ததுவதில் விற்பனை, மைய சேவை (POS) பரவலாக்கல், முக்கிய இடத்தை வகிப்பதுடன் இதன் காரணத்தால் எமது கிளைப் பரவலாக்கல் திட்டம் மேலும் பெறுமதி கூட்டப்பட்டதாக அமையக் கூடிய அதேவேளை துறையில் கூடிய வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுவிடும். இவைகள் எமது பங்குடமையாளர்களை இலகுவில் சென்றடைய உதவும்.

### தகவல் தொழில்நுட்பத்தை வலுப்படுத்தல்

எமது உறுதியான செயற்பாடுகள், ஊடுருவல், புத்தாக்கம் சிறந்த சேவை வழங்கல் போன்ற விடயங்களில் தகவல் தொழில்நுட்பம் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. எனவே, 2012இல் நாம் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த செயற்பாடுகள் விடயத்தில் எமது கவனத்தை செலுத்தி, அதற்கான பூர்வாங்க வேலைத் திட்டங்களையும் ஆரம்பித்தோம். இதில் தொழில்நுட்ப முகாமைத்துவ பணிக் குழுவொன்றை அமைத்தல் ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப திறமைகளை முன்னேற்றுதல் என்பன அடங்குவதுடன் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை முன்னேற்றுதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப திறனின் உறுதிப்பாட்டை உறுதி செய்தலும் அடங்குகின்றன. இத்திட்டங்கள் 2013இல் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படும்.

### பணி எல்லை விஸ்தரிப்பு

வதியாதோர் வெளிநாடடு நாணயம் (NRFC), வதிவோர் வெளிநாட்டு நாணயம் (RFC) மற்றும் வெளிநாட்டுப் பணம் அனுப்புதல் ஆகியன உள்ளடங்கலாக தே.சே.வ. யின் சந்தைப் பங்கை அதிகரிக்க நாம் உத்தேசித்துள்ளோம். இதற்கான திட்டத்தில் புதிய பணமனுப்புதல் சந்தைகளை அடைதல், புதிய பணம் அனுப்பும் நிலையங்கள், வங்கிகள் ஆகியவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது போன்றவை அடங்குகின்றன.

### குழுவினைப் பலப்படுத்தல்

எமது கூட்டு வெற்றிக்கு பயிற்சி வழங்குவதை நாம் ஓர் முதலீடாகவே கருதுகின்றோம். ஏனெனில் அப்பயிற்சி தரமிக்க வாடிக்கையாளர் சேவை வழங்குதல், விடயத்தில் நேரடித் தாக்கமொன்றை ஏற்படுத்துவதேயாகும். எனவே, பயிற்சி வழங்கள், எமது பயிற்சி வழங்கல் நாட்காட்டியில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. அதேவேளை குழுவின் அபிலாசைகள் மாறிவரும் வெளி உலக தேவைகள் போன்ற காரணிகளில் கூடிய கரிசனை செலுத்தப்படுகின்றது. இவ்வருடத்திற்கான பயிற்சித் திட்டம் எமது குழுவின் ஆற்றல்களை வளர்க்கும் நோக்கில் வடிவமைக்கப்ட்டடுள்ளதுடன், அதில் குறுகிய நீண்ட கால பயிற்சிகள், ஆற்றல் விருத்தி, உட்பட்ட தேவையான வெளிநாட்டு பயிற்சி என்பன அடங்குகின்றன.

### நோக்கினை விரிவாக்கல்

அடுத்த வருடம் உபாய ரீதியான நிறுவனங்களில் மேற்கொள்ளவிருக்கும் முலீட்டு முயற்சிகள் தே.சே.வ. தளத்தினை நிச்சயமாக மேலும் விரிவாக்கும். இந்த எதிர்பார்ப்பை கூடிய பலன் தரக் கூடிய பல்வேறுபட்ட துறைகளுக்கு வழங்கவிருக்கும் கடன் வசதிகள் ஊடாக மேலும் உறுதி செய்யும். மேலும் எமது வியாபார நடவடிக்கைகளை மேலும் பரவலாக்க உதவும் வெளிநாட்டு நிதித் திரட்டல் பணியிலும் ஈடுபட உத்தேசித்துள்ளோம்.



# அத்தியாயம் 3

எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

ஆளுமை

## எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

ஆளுமை அறிக்கை

நிறுவனமொன்றின் பங்குடமையாளர்கள் அனைவருடனும் நல்லுறவிற்குப் பொறுப்பேற்றல் உண்மைத் தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மை என்பவற்றை பணிப்பாளர் சபை உறுதி செய்வதற்கான சட்டங்கள் மற்றும் பிரயோகங்களின் கட்டமைப்பாக நிறுவன ஆளுமை வரையறுக்கப்படுகின்றது. முக்கியமாக பணிப்பாளர் சபை உள்ளடங்கலாக தலைவர், பிநிஅ அல்லது நிர்வாகப் பணிப்பாளர் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் சபை நியமித்துள்ள குழுக்களினதும் பொறுப்புக்களுக்கான வழிகாட்டல்களை நவீன நிறுவன ஆளுமை பிரயோகங்கள் வழங்குகின்றன.

அநேக வியாபார ஜாம்பவான்கள் நேர்மையற்ற வர்த்தக பிரயோகங்களுக்குள் சிக்குண்டிருப்பதையும். சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் அதிகாரிகளின் நடத்தைகளையும் கருத்திற் கொள்ளும்போது கடந்த இரு தசாப்பதங்களாக நிறுவன ஆளுமைக்கு குரல் கொடுப்பவர்கள் வெளிப்படைத் தன்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதைக் காண முடிகின்றது. எனவே தேசேவ நிறுவன ஆளுமையில் வெளிப்படைத் தன்மையை அவசியமான மூலகமாக எடுத்துக் கொள்கின்றதுடன் வலுவானதும் சமநிலையானதுமான பொருளாதார அபிவிருத்தியின் பிரயோகத்தையும் உறுதி செய்கின்றது. வங்கி பங்குடமையாளர்களின் ஈடுபாடுகளை உறுதி செய்யும் அதே நேரம் பங்குடமையாளர்கள் தமது அதிகாரங்களை முழுமையாகச் செயற்படுத்துவதையும், பங்குடமையாளர்களின் உரிமைகளை நிறுவனம் முழுமையாக அறிந்திருப்பதையும் உறுதி செய்கின்றது.

சுருக்கமாக நிறுவன ஆளுமையில் விதிகள் ஒழுங்கு விதிகள் பிரயோகங்கள், நடைமுறைகள் என்பவை மட்டுமல்லாது சமூக மற்றும் நிறுவன அம்சங்களும் உள்ளடக்கப்படுகின்றன. அவ்வாறே நிறுவனத்திற்கு பல வழிகளிலும் நன்மை தரும் நம்பிக்கை, நெறிமுறைகள் மற்றும் நேர்மையான சுற்றாடல் என்பவையும் ஊக்கப்படுத்தப்படுகின்றது. அவற்றில் சில:

- நிறுவனத்தின் வெற்றியும் பொருளாதார வளர்ச்சியும்
- மூலதனத்தைத் திறமையாகவும் பயனுறுதியுடனும் அதிகரிக்கும் திறமையின் விளைவாக நிறுவனமொன்றின் மீது உருவாகும் முதலீட்டாளர் நம்பிக்கை
- குறைவான மூலதன செலவு
- பங்கு விலைகளின் மீது வாய்ப்பான தாக்கம்
- பங்கு உரிமையாளர்களினதும் நிறுவனத்தினதும் மேலான நன்மைகளை அடையும் நோக்கத்துடன் சபை சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் முகாமையாளர்களுக்கும் ஏற்ற தூண்டுதல்களை வழங்குவது.
- வீணாக்குதல், ஊழல், இடர்கள் மற்றும் முகாமைத்துவத் தவறுதல்களை குறைப்பது
- வர்த்தகக் குறியீட்டு உருவாக்கம் மற்றும் அபிவிருத்திக்கு உதவுவது
- பங்குரிமையாளர்கள் அனைவரினதும் சிறந்த விருப்பங்களை மனத்திற் கொண்டு நிறுவனம் தனது முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதுடன்
- நற்பெயருக்கான இடரையும் குறைப்பது.

### தேசிய சேமிப்பு வங்கியில் ஆளுமை

அடிப்படையானதும் எளிமையாளதுமாயினும் அத்தியாவசியமான ஆதாரத் தன்மைகளை கொண்டதாக தேசேவ நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் நேர்மை, உண்மை, ஒழுக்கமும் நெறி முறைகளும் சட்டம் ஒழுங்கமைப்பு விதிகளுடன் இணங்குவிப்பு வெளிப்படைத் தன்மை உச்ச மட்ட தொழில் திறன் போன்றவற்றையும் கொண்டமைந்துள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியில் அதன் நடவடிக்கைகள் செயற்படுத்தப்படும்போது பணிப்பாளர் சபை, சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றம் செயற்பாட்டு மட்டங்களிலுள்ள அனைத்து அதிகாரிகளிடமும் இருந்து ஆரம்பித்து நிறுவன ஆளுமையின் மதிப்பு மிக உயர்வாக முன்னிலைப்படுத்தப்படுகின்றது. தேசேவ இல் பணிபாளர்கள் சபையும் அனைத்து பணியாட் தொகுதியினரும் மிக உயா்வான, வர்த்தக நோ்மை நியாயமான மதிப்பீடுகளில் கடப்பாடுள்ளவர்களாக இருக்கின்றதுடன் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம், மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட விசேட உரிமம் பெற்ற வங்கிகளுக்கான நிறுவன ஆளுமை மீதான 2007 இன் 12ஆம் இலக்க பணிப்புரைக்கு அமைவாகவும் மற்றும் சிறந்த வர்த்தக பிரயோகங்களுடனும், சிறந்த நிறுவன ஆளுமை பிரயோகங்களுடன் அர்ப்பணிப்புடனும் முழுமையான இணங்குவிப்பாகவும் செயற்படுகின்றனர்.

## எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

ஆளுமை அறிக்கை

தேசிய சேமிப்பு வங்கி அதன் திறமையான ஆளுமைக்கென இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் வழிகாட்டல்களையும் திருத்தங்களையும் / புதுப்பித்தல்களையும் காலத்திற்கு நன்கு பின்பற்றுகின்றது.

உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள். தேவைப்பாட்டுடன் (KYC) சேர்த்து நிதி கொடுக்கல் வாங்கல் சட்டம் மற்றும் பணம் தூய்த்தலுக்கெதிரான சட்டம் என்பவற்றின் கீழ் வெளியிடப்பட்டுள்ள சட்டங்கள் உள்ளடங்கலாக இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளின் கீழ் பிரயோகிக்கப்படக் கூடிய அனைத்துடனும் வங்கி இணங்குவிப்புடன் செயற்படுகின்றது.

அரச உரித்துடைய வங்கி என்பதற்கும் மேலாக, நிதி அமைச்சினதும், அரசாங்கத்தினதும் ஏற்பாடுகள், நிர்வாகம், ஒழுங்கு விதிகளினாலும் வங்கி ஆட்சி செய்யப்படுகின்றது. வங்கி அதன் நிதிக் கூற்றுக்களை பாராளுமன்றத்திற்கு வருடாந்தம் சமர்பிக்கின்றது. வங்கியின் அலுவல்களில் பொதுமக்களின் ஈடுபாடு பாதுகாப்பாக இருப்பதை இது உறுதிப்படுத்துகின்றது. நிதிக் கூற்றுகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுவதுடன் அவரது ஆய்வுகளுக்கு மேலதிகமாக, தெரிவு செய்யப்படும் சில ஒழுங்கமைப்புத் தேவைகளுக்கு அமைவாக,நிதிக் கூற்றுக்களையும் ஏனைய வெளிப்படுத்தல்களையும் வெளியிடுகின்றது. மேலும் தெரிவு செய்யப்பட்ட கிளைகளில் காலாண்டு கணக்காய்வு இணங்குவிப்பு மீளாய்வுகளை மேற்கொள்வதற்கு. இது வங்கியின் கொள்கைகளும், செயன்முறைகளும் வெளியிடப்படுவதில் அதற்குள்ள பெறுப்பேற்றலின் வெளிப்படைத் தன்மையையும் நம்பகத்தன்மையையும் அதிகரிக்கின்றது.

இது வங்கியின் நிறுவன ஆளுமை கட்டமைப்பை முன்னேற்றுவதுடன், வங்கியின் நல்லாட்சிக்கான பிரயோகங்களை வங்கியின் சார்பாகவும், அனைத்து பங்குரிமையாளர்கள் சார்பாகவும் வலுப்படுத்துகின்றது என்றும் நாங்கள் நம்புகின்றோம். நிதியும் திட்டமிடலும் அமைச்சினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபையிடம் வங்கியின் வர்த்தகத்தின் பொதுவான மேற்பார்வையும், கட்டுப்பாடும் அலுவல்களின் நிர்வாகமும் உரித்தாக்கப்பட்டுள்ளது. தேசேவ சபையில் ஏழு பணிப்பாளர்கள் உள்ளனர். இவர்களில் தலைவர் உள்ளடங்களாக அறுவர் நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்கள், தலைவரினதும் பி.நி.அ இனதும் பதவிகள் வேறாக வைக்கப்பட்டுள்ளன. தேசேவ இன் பணிப்பாளர்கள் தனியார் மற்றும் பொதுத் துறைகள் இரண்டிலும் இருந்து வரும் தொழிற்துறை சார்ந்தவர்களாகவும் முக்கியஸ்தர்களாகவும் உள்ளனர். நிறுவன ஆளுமை நடைமுறைக்கு இவர்கள் மதிப்பு சேர்ப்பவர்களாக உள்ளனர். நிறுவன ஆளுமை நடைமுறை எப்போதும் முக்கியம் பெறுவதை உறுதி செய்யும் வகையில் பொருத்தமான சரிபார்த்தல்களையும் மீதியிடல்களையும் சபை வடிவமைத்துள்ளது. நிதிச் சட்டத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளுக்கு முன்னராகவே வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகளும், ஆண்டறிக்கையும் வெளியிடப்பட்டது.

பின்வரும் கோட்பாடுகள் முக்கியமானது எனும் அடிப்படையின் கீழ் தேசேவ யின் ஆளுமை கட்டமைப்பு நிறுவப்பட்டுள்ளது:

- அனைத்து மட்டங்களிலும் தேசிய சேமிப்பு வங்கியின் அலுவல்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக பொறுப்பேற்றுக் கொள்வதும் கணிப்பீடு செய்வதும்
- சபை நியமித்துள்ள உப குழுக்கள் ஊடாக அவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ள விசேட பொறுப்புகளின் மேற்பார்வையை உறுதி செய்வது
- வங்கி அதன் வர்த்தக நோக்கங் களையும், வர்த்தகத்திற்கும், தேசிய சேமிப்பிற்கும் இடையிலான சமநிலையை ஏற்படுத்துவதற்கும், பொருத்தமான முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை தேர்ந்தெடுப்பதற்கு இயன்ற வரையில், வங்கிக்கு மிகச் சிறந்த முகாமைத்துவக் கட்டமைப்பு ஒன்றை தீர்மானிப்பது.
- வர்த்தக நடவடிக்கைகளையும், விவேகமான இடர் முகாமைத்துவக் கொள்கைகளையும் மதிப்பீடு செய்வதன் ஊடாக, தேசேவயின் பாதுகாப்பையும், வலிமையையும் உறுதிப்படுத்துவது.
- புதிய கருத்துகளை உட் சேர்ப்பது, இடமளிப்பது, சபை மட்டத்திலும் நிர்வாக முகாமைத்துவத்துடனும் இணக்கமான உறவை பேணுவது.
- தொடர்புடைய ஒழுங்கமைப்பு சபைகளுடன் அங்கங்களுடன் ஊக்கமான கலந்துரையாடல்களில்

## எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

ஆளுமை அறிக்கை

பங்கேற்பதும் ஆளுமை ஒழுங்கமைப்பு விதிகளை செயற்படுத்துவதும் இணங்கி நடப்பதும்.

- வர்த்தக வரம்பிற்கு அப்பால் சுதந்திரமாக உள்ளக கணக்காய்வு, இணங்குவிப்பு, இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் உள்ளடங்கலாக உள்ளக கட்டுப்பாடு அமைப்பு முறையை மேற்பார்வை செய்வது.
- தேசேவ சட்டத்தின் அனைத்து தேவைப்பாடுகளையும் கைக்கொள்ளும் ஒழுங்கமைப்பாளர்களின் சட்ட விதிகள் மற்றும் பணிப்புரைகளின்படி அனைத்து நடவடிக்கைகளையும் ஏற்று நடத்துவதும்.
- அதன் பிரதான நடவடிக்கைகளைச் செயற்படுத்தும்போது சமூகப் பொறுப்புணர்வை மனத்தில் வைத்திருப்பது.

நிறுவன ஆளுமையின் பணிப்புரைகளுக்கு அமைவாக சபையின் உப குழுக்களுக்கு அதன் நடவடிக்கைகள் சிலவற்றை சபை பகிர்ந்தளித்துள்ளது. இந்த உப குழுக்களுக்கு அதன் அதிகார வரம்பின் கீழ் வரும் விடயங்கள் குறித்து சபைக்குத் தீர்மானங்களையும் அல்லது பரிந்துரைகளையும் செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வங்கியின் போதுமையும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் நேர்மையும் நிதி தகவல்களின் மீளாய்வுகளும் அவற்றின் நேர்மையும் தொழிலின் முக்கியமான இடர் மூலகங்களும் இடர் காரணிகளும் மற்றும் வங்கியின் நிறுவன ஆளுமையும் என்பவற்றை மீளாய்வு செய்வதற்கு தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் சபையின் கணக்காய்வு குழுவும் BAC ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவ குழுவும் சபைக்கு உதவி செய்யும். நிறுவன ஆளுமை பிரயோகங்களுக்கு அமைவாக செயற்பாடுகளின் தீவிரமான பகுதிகளை செயற்பாட்டு மட்டத்திற்கு பகிர்நதளிக்காமல் தனது அதிகாரத்திற்குள் சபை தக்க வைத்துக் கொள்ளும்.

### நிறுவன ஆளுமையின் ஒழுங்கமைப்பு பட்டியல்

உயர்ந்த தரத்திலான மூலோபாய நெறிப்படுத்தல் இடர் முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்தல் மூலம் வங்கியின் ஒட்டு மொத்த பொறுப்பேற்றலையும் நம்பகத் தன்மையை மேற்பார்வை செய்யும் தேசேவ இன் பணிப்பாளர்கள் சபை, நிறுவன முகாமைத்துவத்தினூடாக பி.நி.அ தனது நிர்வாக அதிகாரத்தை செயற்படுத்தி மூலோபாயங்களை நிறைவேற்றுவதற்கு அங்கீகாரம் அளித்துள்ளது. பி.நி.அ. நிறுவன முகாமைத்துவத்தின் தலைவராகவும், தலைமைத்துவத்தையும் வழிகாட்டலையும் வழங்குபவராகவும் இருக்கின்றார் நிறுவன முகாமைத்துவத்தின் தலைமையின் கீழ் செயற்பாட்டு மட்ட குழுக்கள் உள்ளன.



**எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்**

ஆளுமை அறிக்கை

இணங்குவிப்பு பட்டயத்தினால் வங்கியின் இணங்குவிப்பு கட்டமைப்பு வழிநடத்தப்படுகின்றது. 2012 டிசெம்பரில் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவினால் இணங்குவிப்பு பட்டயம் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. (2013 ஜனவரியில் சபை அங்கீகரித்தது. நிறைவேற்று இணங்குவிப்பு குழு ஒன்றின் அறிமுகம் (ECC) இணங்குவிப்பு தலைமையின் பங்கேற்றலும் பொறுப்புகளும் இணங்குவிப்பு அதிகாரியின் பங்களிப்பை வலுப்படுத்துவது சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு கூடுதல் பொறுப்புகள் போன்றவை மீளாய்வில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்களாகும்.

### முகாமைத்துவக் குழுக்கள்

வங்கியின் முகாமைத்துவக் கட்டமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.




| | | |
|---|---|---|
| ஒ.இ.மு.கு. | - | ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு |
| ச.க.கு.. | - | சபை கணக்காய்வுக் குழு |
| ம.வ.ஊ.கு. | - | மனித வளமும் ஊதியங்களும் குழு |
| நிய.கு. | - | நியமன குழு |
| நிர்.கு. | - | நிர்வாகக் குழு |
| சொ.பொ.நி.கு. | - | சொத்துக்களும் பொறுப்புக்களும் முகாமைத்துவக் குழு |
| மு.கு. | - | முதலீட்டுக் குழு |
| க.கு. | - | கடன் குழு |
| செ.செ.மீ.கு. | - | செயற்பாட்டு செயலாற்றல் மீளாய்வு குழு |
| ச.கு. | - | சந்தைப்படுத்தல் குழு |
| நி.இட.மு.கு. | - | நிறைவேற்று தர இடர் முகாமைத்துவக் குழு |
| நி.இண.கு. | - | நிறைவேற்று தர இணங்குவிப்புக் குழு |
| கே.ம.கோ.பு.மு.கு. | - | கேள்விகோரல் மற்றும் புதிய முதலீடுகள் குழு |
| ப.மூ.கு. | - | பங்கு மூலதனக் குழு |
| உ.அ.கு. | - | உற்பத்திகள் அபிவிருத்தி குழு |
| செ.இ.மு.கு. | - | செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழு |
| த.தொ.வ.கு. | - | தகவல் தொழில்நுட்ப வழிநடத்தல் குழு |

# எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

## ஆளுமை அறிக்கை

நிறுவன ஆளுமையுடன் இணங்கி செயற்படும் அதே நேரம் மேலே காண்பிக்கப்படும் குழுக்கள் பயனாற்றல் உள்ள முகாமைத்துவ பிரயோகங்களையும் வழங்குகின்றது. சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தலைவர்கள் சபை உப குழுக்களுக்கு தலைமைதாங்கும் அதே நேரம் தொடர்புடைய பிரிவுகளின் தலைவர்களான, சபையினால் அங்கீகரிக்கப்பட்ட செயலாளர்கள் குழுக்களின் செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர்.

செயற்பாட்டுக் குழுக்கள் அனைத்திற்கும் பொது முகாமையாளர் பிநிஅ தலைமையேற்கின்றனர். பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டயத்திற்கு அமைவாக குழுக்கள் அனைத்தும் செயற்படுத்தப்படுகின்றன. சபையின் உப குழுக்கள் காலாண்டிற்கு ஒரு முறை கூடும் அதே நேரம் சம்பந்தப்பட்ட பட்டயத்திற்கு அமைவாக செயற்பாட்டு குழுக்கள் கூடும்.

ஆண்டின்போது குழுக்கள் அனைத்தும் தமது அதிகாரிகளின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்பட்டன. “நிதி பங்கு கொடுக்கல் வாங்கல்கள்” மட்டும் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒழுங்கமைப்புக்கள் நடைமுறைகள் என்பவற்றிற்குக் கட்டுப்படாது செயற்பட்டன. இந் நிகழ்வின் தாக்கத்தினால் நேரடியான நிதியியல் நட்டம் ஏற்படவில்லையாயினும் நன்மதிப்பிற்கான நட்டம் ஏற்பட்டது,

**2012ஆம் ஆண்டின் சபையின் கூட்டங்களுக்கு வருகை தந்த சபை அங்கத்தினர்கள்**

| **பணிப்பாளர் பெயர்**<br>**தற்போதைய பணிப்பாளர்கள்** | **நியமனம் செய்யப்பட்ட திகதி** | **வருகைக்கான தகுதி** | **வருகையளித்தது.** |
|---|---|---|---|
| திரு. சுனில் எஸ்.சிறிசேன - தலைவர் | 06.08.2012 | 08 | 08 |
| திரு.எஸ்.டி.அபேகுணவர்த்தன-பணியாற்றுப் பணிப்பாளர் | 06.08.2012 இருந்து<br>மீள் நியமனம் | 08 | 08 |
| திரு.பி.ஏ. அபேசேகர - | 22.08.2012 இருந்து<br>மீள் நியமனம் | 06 | 06 |
| திரு.டீ.எல்.பீ.ஆர் அபேரட்ண | 09.02.2012<br>பதில்தலைவர்<br>23.05.2012 இலிருந்து<br>05.08.2012 வரை | 08 | 07 |
| திரு.லயனல் பி. பெர்னான்டோ | 06.08.2012 | 08 | 08 |
| திரு.சுமித் விஜயசிங்க | 06.08.2012 | 08 | 06 |
| திரு.பிரியந்த ஐயவர்த்தன | 06.08.2012 | 08 | 07 |
| **முன்னைய சபையில் இடம் பெற்ற பணிப்பாளர்கள்**<br>**பணிப்பாளர் பெயர்** | **இராஜினாமா செய்த திகதி** | **வருகைக்கான தகுதி** | **வருகையளித்தது.** |
| திரு.பி.ஜி.எஸ். காரியவசம் | 21.05.2012 | 09 | 09 |
| திரு.எஸ்.டி.அபேகுணவர்த்தன-பணியாற்றுப்<br>பணிப்பாளர் | 18.05.2012<br>மீள் நியமனம் 06.08.2012 லிருந்து | 09 | 08 |
| திரு.பி.ஏ. அபேசேகர | மீள் நியமனம் 22.08.2012 லிருந்து | 09 | 09 |
| திரு.எம்.கே.பி. திசாநாயக்க | 08.02.2012 | 02 | 01 |
| திரு.எச்.மதிவல | 18.05.2012 | 09 | 09 |
| திரு.ஆர்.ஏ.பி.ரணவக்க | 10.08.2012 | 09 | 08 |
| திரு.எஸ். ஷான் சண்முகநாதன் | 10.08.2012 | 09 | 08 |

## சபை உப குழுக்கள்

2007இன் 12ஆம் இல. வங்கிச்சட்ட பணிப்புரைக்கு அமைவாக சபையினால் நியமிக்கப்பட்ட உப குழுக்களின் 2012இற்கான குழுக் கூட்டங்களின் நோக்கெல்லை நடவடிக்கைகள் மற்றும் தரவுகள்.

### 1. சபை கணக்காய்வுக் குழு

### சபை கணக்காய்வுக் குழுவின் நோக்கெல்லை (BAC)

சபை கணக்காய்வுக் குழுவின் பிரதான நோக்கெல்லை பணிப்பாளர் சபையின் மேற்பார்வை பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கு உதவுவதாகும். வங்கியின் நிதிக் கூற்றுக்களின் நேர்மைத்தன்மையைப் பேணுவது, மற்றும் வங்கியின் நிதிக் கூற்றுக்களை அதன் ஆண்டறிக்கை, கணக்குகள், வெளிப்படுத்தலுக்காகத் தயாரிக்கப்படும் காலாண்டு அறிக்கைகள் மற்றும் வங்கியின் முக்கியமான நிதி தீர்வுகளை மீளாய்வு செய்வது என்பவை ஊடாக வங்கியின் நிதித் தகவல்களை மீளாய்வு செய்வது என்பவற்றைக் கொண்டிருக்கும்.

சபைக்கு அளிக்கும் முன்னர் வங்கியின் ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் காலாண்டு அறிக்கைகளை மீளாய்வு செய்வதுமுக்கியமான தீர்வுகளுக்குரிய துறைகளில் விசேட கவனம் செலுத்துவது கணக்கீட்டுக் கொள்கைகள் பிரயோகங்களில் ஏதாவது மாற்றங்களை ஏற்படுத்துவது கணக்காய்வுகளில் இருந்து உருவாகும் முக்கியமான சீராக்கல்கள் தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்பதை ஏற்றுக் கொள்வது தொடர்புடைய கணக்கீட்டு தரப்படுத்தல்களுடனும் ஏனைய சட்டத் தேவைகளுடனும் இணங்கி செயற்படுவது என்பவற்றில் குழு தனது கவனத்தைச் செலுத்தும். வங்கியின் இடர் முகாமைத்துவ அமைப்பு முறையை மதிப்பீடு செய்வதற்கும் சபைக்கு குழு உதவி செய்யும்.இடர் முகாமைத்துவம் குறித்து வங்கியிடம் முழுமையான கொள்கை இருப்பதை உறுதி செய்வதாகவும் வங்கியின் இடர் முகாமைத்துவ அமைப்பு முறை பயனளிப்பதாக இருப்பதை கருத்திற் கொள்வதாகவும் இருக்கும்.

வங்கியின் இடர் முகாமைத்துவ அமைப்பை சபை மதிப்பீடு செய்வதற்கும் குழுக்கள் உதவுகின்றன. இதனூடாக வங்கியிடம் இடர் முகாமைத்துவம் குறித்த முழுமையான கொள்கையொன்று இருப்பதையும் வங்கியின் இடர் முகாமைத்துவ அமைப்பின் திறமையை கண்காணிப்பதையும் வங்கி உறுதி செய்யும்.

சட்டம் மற்றும் ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளுடன் வங்கி இணங்கி ஒழுகுதலையும் மதிப்பீடு செய்யும். சட்டங்களும் ஒழுங்கமைப்புகளும் இணங்கி ஒழுகப்படுவதற்கான அமைப்பு முறையின் பயனாற்றலை மீளாய்வு செய்வதுடன் முகாமைத்துவ புலனாய்வுகளின் பெறுபேறுகளையும் மற்றும் இணங்கி செயற்படாத எந்தவொரு சந்தர்ப்பத்தையும் தொடர்ந்து அவதானிக்கவும் செய்யும்.

சபையின் கணக்காய்வுக் குழு அறிக்கை 96ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

### 2. மனிதவளமும் ஊதியங்களும் குழுவின் நோக்கெல்லை (HRRC)

2007 இன் 12ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பணிப்புரைகளின் கீழ் உருவாக்கப்பட்ட மனித வளமும் ஊதியங்களும் குழு கூட்டு ஒப்பந்தத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்ட ஊதியங்கள் தவிர்ந்த சம்பளங்கள் அலவன்சுகள் மற்றும் பணிப்பாளர்கள் தொடர்பான ஏனைய நிதிக் கொடுப்பனவுகள், பிரதம நிறைவேற்று அதிகாரி வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோரை உள்ளடக்கிய ஊதியங்கள் கொள்கையை தீர்மானிப்பதற்கான பொறுப்பைக் கொண்டிருக்கும்.

பணிப்பாளர்கள் பி.நி.அ. மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான இலக்குகளையும் குறிக்கோள்களையும் குழு நிர்ணயிப்பதுடன் சொல்லப்பட்ட இலக்குகள் குறிக்கோள்களின் செயலாற்றல்களை காலத்திற்குகாலம் கிரமமாக மதிப்பீடு செய்யும். அத்துடன் செயலாற்றல்கள் அடிப்படையிலான ஊக்குவிப்புகளான ஊதியங்கள் அனுகூலங்கள் ஏனைய கொடுப்பனவுகள் என்பவற்றை மீள் திருத்துவதற்கான அடிப்படையையும் தீர்மானிக்கும். வங்கியின் சார்பாக மனிதவள அபிவிருத்தி மூலோபாயமான அபிவிருத்தியையும் மீளாய்வு செய்யும். அத்துடன் சபையின் ஏனைய குழுக்களுக்கும் அனைத்து மனித வள விடயங்கள் தொடர்பான செயற்பாட்டு குழுக்களுக்கும் ஆலோசனை வழங்குவதிலும் பங்கேற்கின்றது. அனைத்து மனித வள விடயங்கள் தொடர்பான செயற்பாட்டு குழுக்களுக்கும் ஆலோசனைகளை வழங்குவதிலும் பங்கேற்கின்றது மனித வளமும் ஊதியங்களும் குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ள பிரதான பொறுப்புகளில் அனைத்து பணியாட்கள் தொடர்பான விடயங்களும் உள்ளடங்கும்.

மனிதவளங்களும் ஊதியங்களும் குழுவின் அறிக்கை 98ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

### 3. நியமனங்கள் குழுவின் நோக்கெல்லை (NC)

நியமனங்கள் குழு தனது நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பாக சபைக்கு அறிவிக்க வேண்டும் என்பதுடன் மிகக் குறைந்தது மூன்று சுயாதீன பணிப்பாளர்களையாவது அங்கத்தினர்களாக குழு உள்ளடக்கியிருக்க வேண்டும்.

பிரதம நிறைவேற்று அதிகாரியினதும் முக்கிய முகாமைத்துவ பதவிகளினதும் நியமனங்கள் அல்லது பதவி உயர்வுகளை கருத்திற் கொள்வதற்குத் தேவையான தகைமைகளான பதவி தகுதிகள், அனுபவங்கள் மற்றும் முக்கிய பண்புகள் போன்றவற்றிற்கான பிரமாணங்களை குழு நிர்ணயிக்கும்.

பணியாட்தொகுதியினரின் நியமனங்கள் தொடர்பான விடயங்களின் கொள்கைகள் மூலோபாயங்கள் தொடர்பான தீர்மானங்களுக்கு மேலதிகமாக நியமனங்கள் மற்றும் நியமிக்கும் உரிமைகளை மேற்கொள்வதற்கு ஒழுங்கமைப்பாளர்களுக்குத் தேவைப்படும் கண்காணித்தல் மதிப்பிடுதல் மற்றும் சபையின் சார்பாக தீர்மானங்களை எடுத்தலுக்கு வங்கியின் இணங்குவிப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவைப்படும் கொள்கைகள் அல்லது நடைமுறைகள் குறித்த பொதுவான மேற்பார்வையை வழங்குவதற்கும் நியமனக் குழு பொறுப்பாகவிருக்கும்.

101ஆம் பக்கத்தில் நியமனங்கள் குழுவின் அறிக்கை தரப்பட்டுள்ளது.

### 4. ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் நோக்கெல்லை (IRMC)

வங்கிக்கான ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு திட்டமிட்டவாறு நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கும் வர்த்தகத் தொடர்ச்சி திட்டங்களை நாளதற்கு கொண்டு வருவது உள்ளடங்கலாக இடர் முகாமைத்துவத்தின் அனைத்து விடயங்களையும் மதிப்பீடு செய்வதும் குழுவின் வங்கியின் கடன், சந்தை, திரவம், செயற்பாட்டு மற்றும் மூலோபாய இடர்கள் போன்ற இடர்கள் அனைத்தையும் பொருத்தமான இடர் குறிகாட்டிகள் ஊடாகவும் முகாமைத்துவத் தகவல்கள் ஊடாகவும் மதிப்பீடு செய்வது.

வங்கிக்கான ஒன்றிணைந்த இடர் முகாமைத்து வரைச் சட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதற்கும் வர்த்தகத் தொடர்ச்சித் திட்டங்களை நாளதற்குக் கொண்டு வருவது உள்ளடங்கலாக இடர் முகாமைத்துவத்தின் அனைத்து விடயங்களையும் மதிப்பீடு செய்வதும் குழுவின் பொறுப்பாக இருக்கும்.

ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு அனைத்து முகாமைத்துவ தர குழுக்களினதும் போதுமை செயற்திறன் ஆகியவற்றை மீளாய்வு செய்வதுடன், இதில் கடன், சொத்து, பொறுப்பு குழுக்கள் போன்றன அடங்குவதுடன் அவற்றில் குறித்த இடர்கள் தொடர்பாக மதிப்பீடு செய்வதுடன், குழுவினால் நிர்ணயித்த எல்லைக்குள் எண்ணிக்கை, தரம் ஆகிய ரீதியில் இவற்றை கட்டுப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கவும். அதேபோல், குறித்த இடர்களினால் ஏற்படக் கூடிய தாக்கங்களை கட்டுப்படுத்தவும் கொள்கைகள், விதி முறைகள் ஆகியவற்றுக்கு ஏற்ப துரித நடவடிக்கை எடுக்கும். அதேபோல் குறித்த இடர்களை இனம்காணத் தவறும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக குழு நடவடிக்கை எடுப்பதுடன், குழு அல்லது இலங்கை மத்திய வங்கி கண்காணிப்பு பணிப்பாளர் சிபாரிசுப் படி உடனடி திருத்த நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

மேலும் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழு சபைக்கு தனது இடர் மதிப்பீட்டு அறிக்கையை முன்வைத்து அதன் யோசனைகள் குறித்து வழிகாட்டல்கள் தொடர் அடிப்படையில் பெற்றுக் கொள்ளும்.

மேலும், வங்கி தனது அனைத்து துறைகளிலும் சட்டங்கள், விதிகள், வழிகாட்டல்கள் உள்ளகக் கட்டுப்பாடு, அங்கீகரித்த கொள்கைகள் என்பனவற்றுக்கு இணங்கி நடப்பதை மதிப்பீடு செய்ய இணக்குவிப்பு செயற்திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளதுடன், இந்த பணியை மேற்கொள்ளவும் குழுவிடம் முறையே அறிக்கை சமர்ப்பிக்கவும் தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை பிரதான முகாமைத்துவ குழுவிலிருந்து இணக்குவிப்பு அதிகாரியாக தேர்ந்தெடுக்கும்.

இதன் அறிக்கை 102ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

**சபையினால் நியமிக்கப்படட்ட குழுக்களின் வருகை**

2012ஆம் ஆண்டிற்கான சபையினால் நியமிக்கப்படட்ட குழுக்களின் கூட்டங்களின் எண்ணிக்கையும் ஒவ்வொரு பணிப்பாளரும் தனித்தனியாக சமூகமளிப்பதற்கு தகைமையுடைய கூட்டங்களின் எண்ணிக்கையும் கீழே தரப்பட்டுள்ளன:

| பெயர்கள் | பணிப்பாளர் அந்தஸ்து | சபை கணக்காய்வு குழு | நியமன குழு | ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழு | மனிதவள ஊதியங்கள் குழு |
|---|---|---|---|---|---|
| வருடத்தில் சட்டமுறையான தேவை களுக்காக இடம் பெற்ற கூட்டங்களின் மொத்த எண்ணிக்கை | | 04 | 02 | 04 | 04 |
| வருடத்தில் இடம்பெற்ற கூட்டங்களின் மொத்த எண்ணிக்கை | | 05 | இடம்பெற வில்லை | 04 | 02 |
| திரு.சுனில்.எஸ்.சிறிசேன - தலைவர் (06.08.2012 முதல்) | தலைவர் சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற தலைவர் HRRC | ஏற்புடைத் தன்று | ஏற்புடைத் தன்று | ஏற்புடைத் தன்று | 01 |
| திரு எஸ்.டி. அபேகுணவர்த்தன (மீள் நியமனம் 06.08.2012) | பணியாற்றுப் பணிப்பாளர்-சுயாதீனமற்ற | ஏற்புடைத் தன்று | - | ஏற்புடைத் தன்று | 01 |
| திரு பி.ஏ. அபயசேகர (மீள் நியமனம் 22.08.2012) | சுயாதீன நிறைவேற்றதிகாரமற்ற பணிப் பாளர் தலைவர் NC | 03 | - | ஏற்புடைத் தன்று | 01 |
| திரு.டீ.எல்.பி.ஆர்.அபேரட்ண (23.02.2012 முதல்) | சுயாதீனமற்ற நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் | ஏற்புடைத் தன்று | ஏற்புடைத் தன்று | 04 | ஏற்புடைத்தன்று |
| திரு.லயனல்.பி.பெர்னான்டோ (17.08.2012 முதல் ) | சுயாதீன நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் | 03 | ஏற்புடைத் தன்று | 03 | ஏற்புடைத்தன்று |
| திரு.சுமித் விஜயசிங்க (17.08.2012 முதல்) | சுயாதீன நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் | 03 | - | ஏற்புடைத்தன்று | ஏற்புடைத்தன்று |
| திரு.பிரியந்த ஜயவர்த்தன (17.08.2012 முதல்) | சுயாதீன நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் | ஏற்புடைத் தன்று | ஏற்புடைத் தன்று | 01 | 01 |
| திரு.பிரதீப் காரியவசம் | தலைவர் சுயாதீனமற்ற நிறைவேற்றதிகாரமற்ற | ஏற்புடைத் தன்று | ஏற்புடைத் தன்று | ஏற்புடைத்தன்று | - |
| திரு.ஹேமா மதிவல(முன்னாள் சபை) (18.05.2012 வரை) | சுயாதீன நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் | 02 | - | ஏற்புடைத் தன்று | ஏற்புடைத்தன்று |
| திரு.எஸ்.ஷான். சண்முகநாதன் (முன்னாள் சபை – முன்னாள் தலைவர் (BAC) (10.08.2012 வரை) | சுயாதீன நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் | 02 | ஏற்புடைத் தன்று | 01 | ஏற்புடைத்தன்று |
| திரு. ஆர்.ஏ.பி.ரணவக்க (முன்னாள் சபை) (10.08.2012 வரை) | சுயாதீனமற்ற நிறைவேற்றதிகாரமற்ற | 02 | ஏற்புடைத் தன்று | 01 | ஏற்புடைத்தன்று |

**எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்**

ஆளுமை அறிக்கை

26.04.2012 முதல் 16.08.2012 வரை வங்கியில் பதில் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த திரு டி.எல்.பீ.ஆர். அபேரட்ண (பணிப்பாளர்) அவர்களை தவிர வேறு பணிப்பாளர்கள் இருக்கவில்லை. எனவே, மேற்குறித்த கால எல்லைக்குள் சபை கூட்டங்கள் இடர் பெறவில்லை.

### தேசேவ இல் இணங்குவிப்பு

விசேட உரிமம் பெற்ற வங்கிகளின் நிறுவன ஆளுமை குறித்த 2007 இன் 12ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புரை உள்ளடங்கலாக வங்கி கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்டதும் பிரியோகிக்கக் கூடிய சட்டம் மற்றும் ஒழுங்கமைப்புகளின் இணங்குவிப்பை உறிதிபடுத்தக் கூடியதுமான பயனளிக்கும் நடைமுறை ஒன்றை தேசிய சேமிப்பு வங்கி தன்னிடம் கொண்டுள்ளது. அத்துடன் சுயாதீனமான இணங்குவிப்பு நடவடிக்கைகளின் தேவையை பணிப்பாளர்கள் சபை அடையாளம் கண்டுமுள்ளது. இணங்குவிப்பு நடவடிக்கைகள் குறித்த பாசல் இன் அடிப்படைக் கொள்கைகளுடன் ஒத்துப் போகின்ற வங்கியின் இணங்குவிப்பு கொள்கைக்கு சபை அங்கீகாரமளித்தும் உள்ளது.

2012 இல் இணங்குவிப்புக் கொள்கையை வங்கி மீளாய்வு செய்ததுடன், புதிய துறைகளை அறிமுகப்படுத்தவும் தற்போதுள்ளவற்றை இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களுக்கும் பணிப்புரைகளுக்கும் எற்ப நாளதற்கு கொண்டுவரவும் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்துடன் பணிப்பாளர் சபைக்கு அதன் அங்கீகாரத்திற்காக (2013 ஜனவரி 10 இல் அங்கீகரிக்கப்பட்டது) சமர்ப்பிக்கவும் செய்தது. ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழு மற்றும் பணிப்பாளர் சபைக்கு இடர் மற்றும் இணங்குவிப்பு அறிக்கைகளை அதன் தலைவர் அறிவிப்பார். வங்கியில் இணங்குவிப்பு தேவைகளுடன் இணங்கி செயற்படுவதை உறுதி செய்து கணக்காய்வுக் குழுவிற்கும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். நிதி அறிக்கைகள் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் குறித்த வெளியக கணக்காய்வாளரின் அறிக்கை மற்றும் 2012 இற்கான இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நிறுவன ஆளுமை பணிப்புரைகளுடன் வங்கியின் இணங்குவிப்பு குறித்த அறிக்கை என்பவற்றை வங்கி பெற்றுள்ளது. இது, வங்கியின் நிறுவன ஆளுமை அணுகுமுறையை மேலும் வலுவடையச் செய்தது.

**2007இன் 12ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புரை மற்றும் 2012ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை திருத்தங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட வருடாந்த நிறுவன ஆளுமை அறிக்கை**

| **3 (1)** | **சபையின் பொறுப்புகள்** | |
|---|---|---|
| 3 (1) (i) | பின்வருவனவற்றை உறுதிப்படுத்தியதன் மூலம் வங்கியின் பாதுகாப்பையும் வலிமையையும் சபை வலுப்படுத்தியது. | |
| 3 (1) (i) (a) | வங்கியின் மூலோபாய நோக்கங்களையும் நிறுவன மதிப்பீடுகளையும் அங்கீகரித்ததுடன் மேற்பார்வையும்செய்தது. அத்துடன், வங்கி முழுவதும் இவைகள் தெரிவிக்கப்படுவதையும் உறுதி செய்தது. | இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (1) (i) (b) | வங்கியின் ஒட்டுமொத்த வர்த்தக மூலோபாயத்தை அங்கீகரித்ததுடன் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்காவது ஒட்டு மொத்த இடர் கொள்கைகள், இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் அளவிடக் கூடிய இலக்குகளின் பொறிமுறை ஆகியவற்றை அவதானித்தது. | மூன்றாண்டுகளுக்கான மூலோபாய திட்டத்தை (2011 - 2013) நிறைவேற்றுவதற்கு சபை அங்கீகாரமளித்துள்ளது. வர்த்தக மூலோபாயம் வழிகாட்டல் அளவிடக் கூடிய இலக்குகள் என்பவற்றை இது உள்ளடக்குகின்றது.<br><br>இடர்களை அடையாளம் காணுவது அளவிடுவது மற்றும் குறைப்பதற்கான நடைமுறைத் தேவைகளுக்காக, சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவ கொள்கை, மூலோபாயங்கள் கடன் சந்தை மற்றும் செயற்பாட்டு இடர் அளவீடுகள் போன்றவை வரையறையிடப்பட்டுள்ளன.<br><br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (1) (i) (c) | பிரதான இடர்களை அடையாளம் கண்டு இடர்களை விவேகமாக முகாமைத்துவம் செய்யத்தக்கதாக பொருத்தமான அமைப்பு | ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் கொள்கைக்கு மேலதிகமாக செயற்பாட்டுக் கொள்கைகள் (திறைசேரி) முதலீடுகள், வெளியிலிருந்து வாடகைக்குப் பெறுவது மனித வளங்கள், இணங்குவிப்பு, கணக்காய்வு பட்டயம் அடையாளம் காணும் அளவீடுகளும் (அழுத்தப் பரிசோதனைகள் (KPI & KRI) பிரதான இடர்களையும் செயற்பாட்டு மட்டத்தில் உள்ள இடர்களையும் அடையாளம் காண அறிமுகப்படுத்தப்பட்டன.<br><br>இணங்குவிப்பாக செயற்பட்டன. |
| 3 (1) (i) (d) | வைப்பாளர்கள் கடன் பெறுநர்கள் கடனாளிகள் பங்குடமையாளர்கள் உள்ளடங்களாக அனைத்து பங்கு உரிமையாளர்கள் தொடர்பு கொள்ளும் தொடர்பாடல் கொள்கை ஒன்று செயற்படுத்தப்படுவதை அங்கீகரித்தது. | வாடிக்கையாளர் பட்டயம் உள்ளது. |

## எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

ஆளுமை அறிக்கை

| 3 (1) | **சபையின் பொறுப்புகள்** | |
|---|---|---|
| 3 (1) (i) (e) | வங்கியின் உள்ளக கட்டுப்பாடு அமைப்பு முறைகள் மற்றும் முகாமைத்துவ தகவல் அமைப்பு முறைகளின் போதுமைத் தன்மையையும் நேர்மையையும் மீளாய்வு செய்தது. | ஆண்டின் போது வங்கி POS மற்றும் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பான கட்டுப்பாடுகளை பரிசீலித்துள்ளது. இதற்கும் மேலதிகமாக தகவல் தொழில்நுட்ப கட்டுப்பாடுகளை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளையும் வங்கி எடுத்துள்ளது. செயற்பாட்டு மட்ட கட்டுப்பாடுகளை மீளாய்வு செய்வதிலும், கண்காணிப்பதிலும் உள்ளக கணக்காய்வு பிரிவு ஈடுபடுகின்றது.<br><br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (1) (i) (f) | சர்வதேச கணக்கீட்டு நியமங்களில் வரையறுக் கப்பட்டுள்ளவாறு முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை அடையாளம் கண்டு பதவியளித்தது | இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (1) (i) (g) | அதிகாரத் துறைகளை வரையறை செய்வதும் பணிப்பாளர்களினதும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரதும் முக்கிய பொறுப்புகளை வரையறை செய்வதும் | பணிப்பாளர்களின் அதிகாரம் மற்றும் பொறுப்புகள் சட்டங்கள் ஊடாக, குறிப்பிடப்பட்டுள்ளது. தேசேவ சட்டம் (1) 7ஆம் பிரிவின் ஊடாக, வங்கியின் அலுவல்களும் வர்த்தகமும் என்பவற்றின் பொதுவான மேற்பார்வை, கட்டுப்படுத்தல் நிர்வகித்தல், ஆகியவற்றிற்கு தலைவருக்கும் பணிப்பாளர் சபைக்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. 7(2)ஆம் பிரிவிற்கு அமைவாக வங்கியின் அதிகாரங்கள் முழுமையாக அல்லது எவற்றையாகிலும் சபை பயன்படுத்த முடியும். (26) (ஏ) (1) ஆம் பிரிவிற்கு அமைவாக பொது முகாமையாளர் அல்லது வங்கியின் வேறு ஒரு அதிகாரிக்கு அதன் நடவடிக்கைகள் செயற்பா டுகளை சபை ஒப்படைக்கலாம். சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் விபரங்கள், முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் அதிகாரங்களையும் பொறுப்புகளையும் வரையறுக்கும்.<br><br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (1) (i) (h) | முக்கிய முகாமைத்துவ ஆளணியினரால் வங்கியின் கொள்கைகளுடன் ஒத்ததாக வங்கியின் அலுவல்களில் ஏற்றவாறான மேற்பார்வை இருப்பதை உறுதி செய்தது | கொள்கைகள் அறிமுகப்படுத்தப்படல், செயற்பாட்டுக் குழு பட்டயங்கள் மற்றும் கிரமமான மீளாய்வுகளும் சபைக்கான அறிவித்தலும் ஊடாக முக்கிய முகாமைத்துவ ஆளணியின் அலுவல்கள் மேற்பார்வை செய்யப்படுகின்றன.<br><br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |

| 3 (1) | சபையின் பொறுப்புகள் | |
|---|---|---|
| 3 (1) (i) (i) | பணிப்பாளர்கள் சபையின் சொந்த ஆளுமை பிரயோகங்களின் திறனாற்றல்கள் காலத்திற்குகாலம் மதிப்பீடு செய்யப்படும். தெரிவு முறைகள், பணிப்பாளர்களினதும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரதும், நியமனங்களும் தேர்ந்தெடுத்தல் களும், ஈடுபாடுகளின் முரண்பாடுகளை முகாமைத் துவம் செய்தல், பலவீனங்களைத் தீர்மானித்தலும் அவசியமான இடங்களில் மாற்றங்களை நிறைவேற்றுவதுமாகியவை இவற்றில் உள்ளடங்கும் | வங்கி, இலங்கை அரசாங்கத்திற்கு முற்றிலும் உரித்துடை யதாகும். நிதியும் திட்டமிடலுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள். முரண்பாடுகள் எவையும் இருப்பின் அவற்றைக் கவனிப்பதற்கென பணிப்பாளர்களிடமிருந்து தொடர்புடையவர்கள் மற்றும் அவர்களின் ஈடுபாடுகள் குறித்த வருடாந்த பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்படும். முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கும் இந்த நடைமுறை வலுவாக்கப்பட்டு பிரயோகப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.<br><br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (1) (i) (j) | முக்கிய முகாமைத்துவ ஆளிணியினருக்கு பொருத்தமான தொடர் அமர்வாளர் திட்டம் இருப்பதை வங்கி உறுதிப்படுத்தியது | இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (1) (i) (k) | கொள்கைகள், தொடர்பாடல் வரிசைகளை நிறுவுதல், நிறுவன நோக்கங்கள் குறித்த முன்னேற்றங்களை கண்காணிப்பது போன்ற விடயங்களை மீளாய்வு செய்வதற்காக முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடன் தேவை அடிப்படையில் கிரமமாக சந்திப்பது. | சபைக் கூட்டங்களில் தனித் தனி விடயங்கள் என்ற அடிப்படையில், கொள்கைகளின் மீளாய்வு, முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் மற்றும் முக்கிய விடயங்கள் என்பவை மீது முக்கிய முகாமைத்துவ ஆளணியை சபை சந்திக்கும்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (1) (i) (l) | ஒழுங்கமைப்பு சுற்றாடலை விளங்கிக் கொள்வதும், ஒழுங்கமைப்பாளர்களுடன் பயனாற்றலுடைய தொடர் பாடல்களை வங்கி பேணுவதை உறுதிப்படுத்துவதும். | இலங்கை மத்திய வங்கியினால் கிரமமாக குறிப்பிடப்பட்டுள்ளதற்கு இணங்க வங்கி தனது வருடாந்த மீளாய்வில் இணங்குவிப்பு அறிக்கைகளையும் முன்னேற்ற அறிக்கைகளையும் வெளியிடும்.<br><br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (1) (i) (m) | வெளியக கணக்காய்வாளர்களை வாடகைக்கெடுப் பதிலும் மேற்பார்வை செய்வதிலும் தகுந்த கவனம் எடுக்கும். | சட்டத்திற்கமைவாக கணக்காய்வாளர் தலைமையதிபதி வங்கி யின் வெளியிலிருந்துவரும் கணக்காய்வாளராக இருப்பார். அழைப்பின் பேரில் அனைத்து சபை கணக்காய்வாளர்கள் குழு கூட்டங்களிலும் வெளியிலிருந்து வரும் கணக்காய்வாளர்கள் கலந்து கொள்வார்கள்.<br><br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |

| 3 (1) | சபையின் பொறுப்புகள் | |
|---|---|---|
| 3 (1) (ii) | தலைவரையும் பிரதமநிறைவேற்று அதிகாரியையும் சபை நியமிப்பதுடன் பணிப்புரை 3(5) இல் தரப்பட்டுள்ள பணிப்புரைகளுக்கு ஒத்ததாக தலைவரினதும் பிரதம நிறைவேற்று அதிகாரியினதும் நடவடிக்கைகளையும் பொறுப்புக்களையும் நிர்ணயிப்பதுடன் அங்கீகாரமும் அளிக்கும். | நிதி அமைச்சினால் தலைவரும், சபையினால் பிரதம நிறைவேற்று அதிகாரியும் நியமிக்கப்படுவார்கள். ஒ.இ.மு.கு வில் பி.நி.அ. யின் கடமைகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டதுடன், சபையின் அங்கீகாரத்திற்காக சுற்றுக்கு விடப்பட்டது. |
| 3 (1) (iii) | சபைக் கூட்டங்கள் கிரமமாக நடைபெறுவதுடன் மாதாந்த இடைவெளிகளில் குறைந்தது ஆண்டிற்கு பன்னிரண்டு முறைகளாவது சபைக்கூட்டங்கள் கூட்டப்படும். அத்தகைய கிரமமாக நடைபெறும் சபைக் கூட்டங்களில் வருகை தருவதற்கு உரித்துடைய பெரும்பாண்மையான பணியாட்கள் அவற்றிற்கு நேரடியாக சமூகமளித்து ஊக்கத்துடன் ஈடுபடுவார்கள். எழுத்து மூலமாக தீர்மானங்கள். பத்திரங்களின் சுற்றுக்கு விடப்படும் ஆயினும் அதன் ஊடாக பணிப்பாளர்களின் அனுமதியைப் பெறுவது இயன்ற வரையிலும் தவிர்க்கப்படும். | பின்வரும் அடிப்படையில் ஆண்டின் போது சபை 17 கூட்டங்களை நடத்தியது.<br>2012.08.06 இலிருந்து நியமிக்கப்பட்ட புதிய சபையுடன் 8 கூட்டங்கள்.<br>2012 ஜனவரி 01 இலிருந்து 2012 ஏப்ரல் 24 வரையிலும் 9 கூட்டங்கள்.<br>(ஒரு பணிப்பாளர் தவிர்ந்த ஏனைய பணிப்பாளர்கள் அனைவரும் பதவி விலகியதனால் 2012.04.26 - 2012.08.16 காலப் பகுதி வரையிலும் சபை கூட்டங்கள் நடைபெறவில்லை.) |
| 3 (1) (iv) | வங்கியின் வர்த்தகத்தை ஊக்குவிப்பதும் இடர்களை முகாமைத்துவம் செய்வதும் பற்றியதான விடயங்களும் பிரேரணைகளும் இருப்பின் கிரமமாக நடைபெறும் சபைக் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரலில் அத்தகைய விடயங்களும் பிரேரணைகளும் உட்சேர்க்கப்படுவதற்கு அனைத்து பணிப்பாளர்களுக்கும் உதவும் வகையில் ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதை சபை உறுதிபடுத்தும். | வர்த்தக மேம்பாட்டுடனும் முகாமைத்துவ இடருடனும் தொடர்புடைய விடயங்களையும் உள்ளடக்குவதற்கான நடைமுறைகளுக்கு ஒ.இ.மு.கு. வினால் (IRMC) அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன், சபைக்கு சுற்றுக்கு விடப்பட்டு கூடிய பணிப்பாளர் சபை கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. |
| 3 (1) (v) | பணிப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவதற்காக கிரமமாக நடைபெறும் சபைக் கூட்டங்களுக்கு குறைந்தது 7 நாட்களுக்கு முன்னர் அவை முன்னறிவிக்கப்படுவதை சபையின் நடைமுறை உறுதி செய்யும். ஏனைய சபை கூட்டங்கள் அனைத்திற்கும் நியாயமான முன்னறிவித்தல் தரப்படும் | இணங்குவிப்பாக செயற்பட்டது. |

| 3 (1) | சபையின் பொறுப்புகள் | |
|---|---|---|
| 3 (1) (vi) | 12 மாத காலப் பகுதியில் உடனடியாக அடுத்து வரும் கூட்டங்களில் குறைந்தது மூன்றில் இரண்டிற்கும் குறைவாக வருகை தந்த பணிப்பாளர், அல்லது தொடர்ந்து நடந்த மூன்று கூட்டங்களுக்கு வருகை தராதவர்கள் பணிப்பாளராக இருப்பதிலிருந்து நீக்கப்படுவதை சபையின் நடைமுறைகள் உறுதிப்படுத்தும். | பணிப்பாளரை நியமிப்பதற்கும் அகற்றுவதற்குமான நடைமுறைகள் தே.சே.வ. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆண்டின் போது எவ்வாறாயினும் பணிப்புரையில் குறிப்பிடப்பட்டவாறு அத்தகைய வருகை தராமைகளிருக்க வில்லை. இணங்குவிப்பை உறுதிப்படுத்துவதற்காக சபையின் செயலாளர் வரவு பதிவேடு ஒன்றைப் பேணுகின்றார். இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (1) (vii) | 1988இன் 30ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் 43ஆம் பிரிவின் ஏற்பாடுகளை திருப்திப்படுத்தும் ஒருவர் கம்பனி செயலாளராக சபையினால் நியமிக்கப்படுவார். | வங்கியின் நிரந்தர பதவியிலிருந்த சட்டத்தரணியான பணியாளர் ஒருவர் தற்போது அப்பதவியை ஏற்றிருக்கின்றார். (சொல்லப்பட்ட சிரேஷ்ட சட்ட அதிகாரி, உதவி பொது முகாமையாளர் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு சபையின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். |
| 3 (1) (viii) | சபையின் நடைமுறைகளையும் பிரயோகிக்கப்பட வேண்டிய அனைத்து விதிகளும் நிபந்தனைகளும் பின்பற்றப்படுகின்றன. உறுதிப்படுத்தும் நோக்கத் திற்காக கம்பனி செயலாளரின் ஆலோசனைகளையும் சேவைகளையும் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் அனைத்துப் பணிப்பாளர்களுக்கும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. | ஆலோசனைகளையும் சேவைகளையும் பணிப்பாளர்கள் பெற்றுக் கொள்வதற்காக சபை செயலாளரை அணுகுவதற்கான நடைமுறையை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு அங்கீகரித்துள்ளதுடன், சபையின் அங்கீகாரத்திற்காகவும் சுற்றுக்கு விட்டுள்ளது. |
| 3 (1) (ix) | சபை கூட்டங்களின் கூட்ட அறிக்கைகளை சபையின் செயலாளர் பேணுவார். எந்தவொரு ஏற்றநேரத்திலும் ஏற்ற அறிவித்தலுடனும் அத்தகைய கூட்ட அறிக்கைகள் பரிசீலிக்கப்படுவதற்காக எந்தவொரு பணிப்பாளருக்கும் திறந்திருக்கும். | கூட்ட அறிக்கைகளை சபைச் செயலாளர் பேணுவார். ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவினால், இந் நடைமுறைக்கான அங்கீகாரம் பெறப்பட்டதுடன், சபையின் அங்கீகாரத்திற்காக சுற்றுக்கு விடப்பட்டது. (2013.01.10 இல் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.) |

| 3 (1) | **சபையின் பொறுப்புகள்** | |
|---|---|---|
| 3 (1) (x) | சபை அதன் கடமைகளைச் செயற்படுத்தும்போது அக்கறையுடனும் விவேகமாகவும் நடந்து கொண்டுள்ளதா என்பதை கூட்ட அறிக்கையிலிருந்து சேகரித்துக் கொள்ளும் வாய்ப்பிற்காக சபைக் கூட்டங்களின் கூட்ட அறிக்கைகள் போதுமான விபரங்களுடன் பதிவு செய்யப்படுகின்றன.<br>சபை கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் ஆழத்தை மதிப்பீடு செய்வதற்கு ஒழுங்கமைப் பாளர்களுக்கும் கண்காணிப்பு அதிகாரிகளுக்கும் தேவையான குறிப்புகளை அளிப்பதாகவும் கூட்ட அறிக்கைகளிருக்கும். | இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (1) (xi) | வங்கியின் செலவில் பொருத்தமான சூழ்நிலைகளில் சுயாதீனமான தொழில்சார் ஆலோசனைகளை நாடுவதற்கு நியாயமான கோரிக்கைகள் முன் வைக்கப்படும்போது பணிப்பாளர்களுக்கு அவை கிடைப்பதற்கு சபை ஒத்துக் கொள்ளும் நடைமுறை ஒன்று இருக்கும்.<br>வங்கிக்கான தனது.˙.தங்களது கடமைகளைச் செயற்படுத்துவதற்கு தொடர்புடைய பணிப்பாளர்கள் அல்லது பணிப்பாளர்களுக்கு உதவுவதற்காக, பணிப்பாளர்களுக்கு வேறு வேறான சுயாதீனமான தொழிசார் ஆலோசனைகளை வழங்குவதற்கான தீர்மானத்தை சபை மேற்கொண்டுள்ளது. | ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவினால், இந்த நடைமுறைக்கான அங்கீகாரம் பெறப்பட்டதுடன், சபையின் அங்கீகாரத்திற்காக சுற்றுக்கு விடப்பட்டது.<br><br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (1) (xii) | ஏனைய நிறுவனங்கள் அல்லது தொடர்புடையவர்களு டனான கடப்பாடுகளில் முரண்பாடுகள் தென்படுவதை போன்று தோன்றும் போது தமது நடவடிக்கைகளின் ஈடுபாடுகளில் முரண்பாடுகள் தென்படுவதை பணிப்பா ளர்கள் தவிர்ப்பார்கள். | இணங்குவிப்பாக செயற்பட்டது. |

| **3 (1)** | **சபையின் பொறுப்புகள்** | |
|---|---|---|
| 3 (1) (xiii) | வங்கியின் நெறிப்படுத்தலும் கட்டுப்பாடும் தனது அதிகாரத்தின் கீழ் இருப்பதை திடமாக உறுதிப்படுத்தும் வகையில் அதன் தீர்மானத்திற்கென விசேடமாக ஒதுக்கப்பட்டுள்ள விடயங்களின் முறைமையான பட்டியல் சபையிடம் உள்ளது. | இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (1) (xiv) | வங்கியினால் அதன் கடப்பாடுகளை சந்திக்க முடியாத அல்லது அவ்வாறு தோன்றும் நிலமையில் அல்லது திவாலாகப்போகின்றது அல்லது வைப்பாளர்களுக்கும் ஏனைய கடன் கொடுத்தவர்களுக்கும் தரப்படவேண்டிய கொடுப்பனவுகளை இடைநிறுத்தப் போகின்ற நிலையில் உள்ளதென சபை கருதுமாயின் எந்தவொரு தீர்மானமும் அல்லது நடவடிக்கையும் எடுக்க முன்னர் வங்கியின் நிலமையை, வங்கி மேற்பார்வையின் பணிப்பாளர்களுக்கு உடனே அறிவிக்கும். | ஆண்டின்போது அத்தகைய நிலைமை உருவாகவில்லை. |
| 3 (1) (xv) | நாணய சபையின் மூலதன போதுமை வீதத்தின் தேவைப்பாடுகளின் மட்டங்களுக்கு அமைவாகவும் ஏனைய விவேகமான முறைகளிலும் வங்கியின் மூலதனம் அதிகரிக்கப்பட்டுள்ளதை சபை உறுதி செய்தது. | இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (1) (xvi) | இப் பணிப்புரைகளின் பணிப்புரை 3 உடனான இணங்குவிப்பை குறிப்பிடும் வருடாந்த நிறுவன ஆளுமை அறிக்கையை வங்கியின் ஆண்டறிக்கையில் சபை பிரசுரிக்கும். | இணங்குவிப்பாக செயற்பட்டது.<br>நிறுவன ஆளுமை அறிக்கை 54 இன் ஆண்டறிக்கையில் தரப்பட்டுள்ளது. |
| 3 (1) (xvii) | இப் பணிப்புரைகளின் கீழ் வருடாந்தம் பணிப்பாளர்கள் ஒவ்வொருவரும் சுய மதிப்பீடொன்றை மேற்கொள்ளும் அமைப்பு முறையொன்றை சபை கைக்கொள்வதுடன் அத்தகைய மதிப்பீடுகளின் பதிவை பேணவும்வேண்டும். | இணங்குவிப்பாக செயற்பட்டது. |

| **3 (2)** | **சபையின் தொகுப்பு** | |
|---|---|---|
| 3 (2) (i) | சபையிலுள்ள பணிப்பாளர்களின் எண்ணிக்கை 7இற்கு குறைவாகவும் 13இற்கு அதிகமாகவும் இருத்தலாகாது. | இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (2) (ii) (அ) | பிரதம நிறைவேற்று அதிகார பதவி வகிக்கும் பணிப்பாளர் ஒருவா் தவிர்ந்த ஏனைய பணிப்பாளர் ஒருவரின் மொத்த சேவைக்காலம் ஒன்பது வருடத்தை விஞ்சலாகாது. | இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (2) (ii) (ஆ) | 2008 ஜனவரி 1 அன்றுள்ளவாறு ஒன்பது ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ள அல்லது 2008 டிசெம்பர் 31இற்கு முன்னர் எந்தவொரு நேரத்திலும் பூர்த்தி செய்துள்ள பணிப்பாளர் ஒருவர் 2009 ஜனவரி 1 இலிருந்து ஆரம்பிக்கும் வகையில் மேலும் அதிக பட்சமாக மூன்று ஆண்டு காலத்திற்கு பணிப்பாளராகத் தொடர முடியும். | ஏற்புடையதல்ல |
| 3 (2) (iii) | சபையின் பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் நிறைவேற்று பணிப்பாளர்களுக்கு அதிகமாக இல்லாத பட்சத்தில் வங்கியின் பணியாளர் ஒருவரை வங்கியின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்க தேர்ந்தெடுக்க அல்லது முன்மொழிய முடியும். (இதன் பின்னர் நிறைவேற்று பணிப்பாளர் என குறிப்பிடப்படும்) அவ்வாறான நிலமையில் நிறைவேற்றுப் பணிப்பாளர்களில் ஒருவர் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக இருப்பார். | தே.சே.வ. சட்டத்திற்கமைவாக ஏழு பணிப்பாளர்களில் ஐவரை அமைச்சர் தெரிவு செய்வார். ஏனைய இரண்டு பணிப்பாளர்கள் தே.சே.வ. சட்டத்திற்கமைவாக திறைசேரி செயலாளராக அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராகவும் அஞ்சல் அதிபர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராகவும் இருப்பார்கள். எனவே அத்தகைய நிலமைகள் உருவாகவில்லை.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (2) (iv) | எது உயர்வானதோ அதற்கமைய சபை குறைந்தது மூன்று சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களை அல்லது மொத்த பணிப்பாளர் எண்ணிக்கையில் மூன்றில் ஒருவரைக் கொண்டிருக்கும். | தேசேவ சட்டத்திற்கமைவாக பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்படுவர். ஏழு பணிப்பாளர்களில் ஐவர் சுயாதீனம் உடையவர்க ளாகவும் அறுவர் நிறைவேற்ற அதிகாரமற்றவர் களாகவும் இருக்கின்றார்கள். ஆண்டறிக்கையின் 190 ஆம் பக்கத்தில் பணிப்பாளர்கள் சபை அறிக்கையில் பணிப்பாளர்களின் விபரங்களைத் தயவு செய்து பார்க்கவும்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (2) (v) | சுயாதீனமான பணிப்பாளர் ஒருவரை பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு மற்றுமொரு பணிப்பாளர் நியமிக்கப்படும் நிகழ்வின்போது அவ்வாறு நியமிக்கப்படுபவருக்கும் சுயாதீன பணிப்பாளருக்கெனவுள்ள தகைமையே ஏற்புடையதாக இருக்கும். | மாற்று பணிப்பாளர்களை நியமிப்பதற்கான ஏற்பாடுகளை தேசேவ சட்டம் குறிப்பிட வில்லை.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |

| 3 (2) | சபையின் தொகுப்பு | |
|---|---|---|
| 3 (2) (vi) | மூலோபாயங்கள், செயலாற்றல்கள் மற்றும் மூலவளங்கள் குறித்த விடயங்களில் சுதந்திரமான தீர்ப்புகளைக் கொண்டு வருவதற்கு நம்பகத் தன்மையுள்ள பதிவுகளையும் அல்லது அவசியமான திறமைகளும் அனுபவமும் உள்ளவர்கள் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாக இருப்பார்கள். | அமைச்சரினால் நியமிக்கப்படும் பணிப்பாளர்கள் அனைவரும் கணக்கியல் சட்டம், சந்தைப்படுத்தல், மற்றும் வர்த்தக, நிர்வாகம் போன்ற துறைகளில் பல்வேறு தொழில் வல்லுனர்களாகவும் அவசியமான அனுபவங்களைக் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர். இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (2) (vii) | சபையின் கூட்டங்கள் ஏற்றவாறு நிர்மாணிக்கப்பட்டவை அல்ல ஆயினும் அத்தகைய கூட்டங்களுக்கு வருகை தருபவர்களில் அரைப்பங்கிற்கு அதிகமானோர் நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களாக இருந்தாலன்றி அத்தகைய கூட்டங்களை நடத்துவதற்கான கோரம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு தேவைப்படும் பணிப்பாளர்களின் எண்ணிக்கை இருப்பின் கூட்டங்கள் நடத்தப்படலாம். | தேசேவ சட்டத்திற்கு அமைவாக சபையின் கோரம் 4 ஆகும். இது அரைப்பங்கினருக்கும் அதிகமான பணிப்பாளர்களாகும். இவர்களில் 6 பணிப்பாளர்கள் நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களாக உள்ளனர். இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (2) (viii) | வங்கியின் பணிப்பாளர்களின் பெயர்களை வெளிப்படுத்துகின்ற அனைத்து நிறுவனங்களின் தொடர்பாடல்களையும் போன்றதாகவே சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களும் தெளிவாக அடையாளம் காணப்படுவர். | தயவு செய்து 61 ஆம் பக்கத்தைப் பார்க்கவும். |
| 3 (2) (ix) | சபைக்கு புதிய பணிப்பாளர்களை நியமனம் செய்யும்போது முறைமையானதும் வெளிப்படையானது மான நடைமுறைகள் பின்பற்றப்படும். சபையின் தொடரமர்வு நியமனங்களில் ஒழுங்குமுறையான நடைமுறைகள் ஏற்றவாறு வைக்கப்பட்டுள்ளன. | தேசேவ சட்டத்திற்கு அமைவாக நிதியமைச்சரினால் பணிப்பாளர்களின் நியமனங்கள் செய்யப்படும். சபைக்கு அமைய வெற்றிடங்களை நியமிப்பதற்கும் நிரப்புவதற்கும் தேசேவ சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லை. |
| 3 (2) (x) | அமைய வெற்றிடம் ஒன்றை நிரப்புவதற்கு நியமிக்கப்படும் பணிப்பாளர்கள் அனைவரும் அவர்களின் நியமனத்திற்கு அடுத்து வரும் முதலாவது பொதுக் கூட்டத்தில் பங்கேற்பாளர்களினால் தேர்ந்தெடுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள். | தேசேவ சட்டத்திற்கு அமைவாக நிதியமைச்சரினால் பணிப்பாளர்களின் நியமனங்கள் செய்யப்படும். |
| 3 (2) (xi) | பணிப்பாளர் ஒருவர் பணியிடத்திலிருந்து பதவி விலகினால் அல்லது அகற்றப்பட்டால் பணிப்பாளரின் பதவி விலகலையும் அல்லது அகற்றப்பட்டமையையும் அவ்வாறு பதவி விலக்கப்பட்டதற்கான அல்லது அகற்றப்பட்டதற்கான காரணத்தையும் சபை அறிவிக்கும். அத்துடன் பங்கேற்பாளர்களின் கவனத்திற்குக் கொண்டு வரும் தேவையுள்ள ஏதாகிலும் விடயங்கள் உள்ளன என்பதையும் அறிக்கை ஒன்றை வெளியிடுவதன் மூலம் உறுதி செய்யும். | தேசேவ சட்டத்திற்கு அமைவாக நிதி அமைச்சரினால் பணிப்பாளர்களின் நியமனங்களும் பதவி அகற்றல்களும் செய்யப்படும். |

| | | |
|---|---|---|
| 3 (2) (xii) | வங்கி ஒன்றின் பணிப்பாளர் ஒருவர் அல்லது பணியாளர் ஒருவர் வேறொரு வங்கியில் அத்தகைய வங்கி முதலில் குறிப்பிடப்பட்ட வங்கியின் உப கம்பனியாக, அல்லது கூட்டுக் கம்பனியாக இருந்தால் மட்டுமன்றி பணிப்பாளராக நியமனம் பெற தேர்ந்தெடுக்கப்பட அல்லது முன்மொழியப்பட இயலாது. | சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் வங்கியின் ஒரு பணியாளர் கிராமிய அபிவிருத்தி வங்கியில் (RDB) தேசிய சேமிப்பு வங்கியின் பங்குதாராக பிரதிநிதித்துவம் செய்யும் பணிப்பாளராக இருக்கின்றார். |
| **3 (3)** | **பணிப்பாளர்களின் தகுதி மற்றும் நேர்மையை மதிப்பீடு செய்யும் அலகுகள்** | |
| 3 (3) (i) A,&B | பணிப்பாளராக சேவையாற்றும் ஒருவரின் வயது 70 வயதை விஞ்சலாகாது. | பணிப்பாளர்கள் அனைவரும் 70 வயதிற்கும் குறைந்தவர்கள்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (3) (ii) | வங்கியின் உப நிறுவனங்கள், கூட்டு கம்பனிகள் உள்ளடங்கலாக 20 இற்கும் அதிகமான கம்பனிகள், ஸ்தாபனங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிப்பாளராக தனி ஒருவருக்கு பதவி வகிப்பதற்கு முடியாது. | அத்தகைய பணிப்பாளர்களாக பணிப்பாளர்கள் எவரும் பதவி வகிக்கவில்லை.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| **3 (4)** | **சபையில் ஒப்படைக்கப்படும் முகாமைத்துவ நடவடிக்கைகள்** | |
| 3 (4) (i) | பகிரப்படும் ஒழுங்குகள் ஏற்றவாறு உள்ளதா என்பதை பணிப்பாளர்கள் கவனமாக ஆராய்ந்து தெளிவாக விளங்கிக் கொள்வார்கள். | தயவு செய்து 3(1) (i) (ஜி) யைப் பார்க்கவும்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (4) (ii) | சபைக் குழு, பிரதம நிறைவேற்று அதிகாரி நிறைவேற்று பணிப்பாளர்கள் அல்லது முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு எந்த ஒரு விடயங்களையும் சபை ஒப்படைக்காது விடலாம்.<br>சபையின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவ்வாறான ஒப்படைப்புகள் குறிப்பிடத் தக்க இடையூறை ஏற்படுத் தலாம் அல்லது தகைமையைக் குறைத்து விடலாம் எனும் நோக்கத்துடன் சபை இவ்வாறு செய்யலாம். | சபை அதன் கடமைகளை நடத்துவதற்கு அதற்கு இடையூறு விளைவிக்கும் அல்லது திறமையை குறைக்கும் அத்தகைய அதிகாரங்களை சபை பகிரவில்லை.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (4) (iii) | வங்கியின் தேவைகளுடன் சம்பந்தப்பட்டதாக அதிகார ஒப்படைப்பு இருப்பதை உறுதி செய்வதற்கு கிரமமான அடிப்படையில் அதிகார ஒப்படைப்பு ஏற்றவாறு இருப்பதை சபை மீளாய்வு செய்யும். | அதிகார ஒப்படைப்புகள் தற்போது ஏற்றவாறு உள்ளதுடன், தேவை அடிப்படையில் சபையினால் மேற்கொள்ளப்படும். மீளாய்வுகள்/முகாமைத்துவத்தினால் செய்யப்படும் கோரிக்கைகளும் ஏற்றவாறு உள்ளன. |
| **3 (5)** | **தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியும்** | |
| 3 (5) (i) | தலைவரினதும் பிரதம நிறைவேற்று அதிகாரியினதும் செயற்பாடுகள் வேறுபட்டுக் காணப்படும். எனவே, ஒருவரினால் அவை மேற்கொள்ளப்பட முடியாது. | தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியும் இருவேறுபட்டவர்களாக காணப்படுகின்றனர்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |

| 3 (5) | **தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியும்** | |
|---|---|---|
| 3 (5) (ii) | தலைவர் நிறைவேற்று அதிகாரம் பெற்ற பணிப்பாள ராகவும் சுயாதீனமான பணிப்பாளராகவம் இருப்பார். | தலைவர் நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் தே.சே.வ. இற்கு பூரண உரித்துடைய உப நிறுவன மான தே.சே.வ.இன் நிதி முகாமைத்துவ கம்பனி லிமிடெட்டின் சபையில் தலைவர் இருப்பதினால் அவர் சுயாதீனமற்றவராகவும் இருக்கின்றார்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (5) (iii) | சபை தலைவரையும் பிரதம நிறைவேற்று அதிகாரியையும் சபை தனது நிறுவன ஆளுமையில் அடையாளம் காட்டுவதுடன் அவர்களுக்கிடையிலான எந்த உறவு களையும் சவை அறிக்கையில் வெளிப்படுத்தும். | சபை மற்றும் பி.நி.அ. யின் விபரத் திரட்டு 86 - 91 ஆம் பக்கத்தில் உள்ளது.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (5) (iv) | தலைவர் சபைக்கு தலைமைத்துவத்தை வழங்குவார். சபை திறமையாகவும் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதாகவும் இருப்பதை உறுதிப்படுத்துவார். அதனுடன் ஏற்ற நேரத்தில் சபையினால் அனைத்து முக்கிய விடயங்களும் ஏற்றவாறு ஆராயப்படுவதையும் உறுதி செய்வார். | பணிப்பாளர் சுய மதிப்பீட்டு நடைமுறையில் தலைவரின் மதிப்பீடும் உட்சேர்க்கப்பட்டுள்ளது.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (5) (v) | தலைவர் ஒவ்வொரு சபைக் கூட்டத்தினதும் நிகழ்ச்சி நிரலை தயாரிப்பதிலும் அங்கீகரிப்பதிலும் முக்கிய பொறுப்பைக் கொண்டிருப்பார். | சபைக்கான செயலாளர், தலைவரின் வழிகாட்டலின் கீழ் நிகழ்ச்சி நிரலை வரைவதுடன், பொது முகாமையாளர் ஊடாக முகாமைத்துவத்தினால் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (5) (vi) | சபைக் கூட்டங்களில் எழுப்பப்படும் விடயங்கள் சரியானவாறு அனைத்து பணிப்பாளர்களுக்கும் விளக்கப்பட்டுள்ளதையும் ஏற்ற நேரத்தில் போதுமான தகவல்கள் பணிப்பாளர்களுக்குக் கிடைப்பதையும் தலைவர் உறுதி செய்வார். | இணங்குவிப்பாக செயற்பட்டது. |

| | | |
|---|---|---|
| 3 (5) (vii) | சபையின் அலுவல்களில் அனைத்து பணிப்பாளர்களும் முழுமையாகவும் உற்சாகத்துடனும் பங்களிப்புச் செய்வதற்கு ஊக்கப்படுத்துவதுடன் வங்கியின் சிறந்த நலன்கள் குறித்து சபை இயங்குவதையும் தலைவர் உறுதி செய்வார். | பணிப்பாளர்களின் சுயமதிப்பீட்டு நடைமுறையில் தவைவரின் பங்களிப்பு மதிப்பீடும் சபையின் செயலாளரின் ஒட்டுமொத்த மதிப்பீடும் உள்ளடக்கப்பட்டுள்ளது.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| **3 (5)** | **தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியும்** | |
| 3 (5) (viii) | முக்கியமாக நிறைவேற்றதிகாரம் அற்ற பணிப்பாளர்களின் பயனாற்றலுடைய பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்கும் நிறைவேற்றதிகாரமுள்ள மற்றும் நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களுக் கிடையிலான உறவைப் பலப்படுத்துவதையும் தலைவர் உறுதி செய்வார். | தலைவரின் பங்களிப்பு மதிப்பீடு பணிப்பாளரின் சுய மதிப்பீட்டு நடைமுறையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (5) (ix) | முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் அல்லது ஏனைய நிறைவேற்று அதிகார கடமைகளில் உள்ளவர்களுடன் நேரடியான மேற்பார்வை இடும் நடவடிக்கைகளில் தலைவர் ஈடுபடமாட்டார். | தலைவர் நிறைவேற்றதிகாரமற்றவர். பிரதம நிறைவேற்று அதிகாரியையும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரையும் நேரடியாக மேற்பார்வை செய்யமாட்டார் என்பதுடன் எவ்வித நிறைவேற்று நடவடிக்கைகளிலும் ஈடுபடமாட்டார்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (5) (x) | பங்குதாரர்களுடன் பயனுள்ள தொடர்பாடலை பேணுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதையும் பங்குதாரரின் கருத்துக்கள் சபைக்குத் தெரிவிக்கப்படுவதையும் தலைவர் உறுதி செய்வார். | கொள்கை விடயங்கள் குறித்த கலந்துரையாடல்கள், வருடாந்த மீளாய்வுகள் மற்றும் ஏனைய முக்கிய செயற்பாட்டு விடயங்கள் ஊடாக, தலைவா் பங்குடமையாளா்களுடன் (திறைசேரி) தொடா்பு கொள்வதுடன், பணிப்பாளா் சபைக்கும் அறிவிப்பாா்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (5) (xi) | வங்கியின் செயற்பாடுகள் வர்த்தகம் ஆகியவற்றின் நாளாந்த முகாமைத்துவ கடமைகளின் அதியுயர்மட்ட நிர்வாகியாக பிரதம நிறைவேற்று அதிகாரி செயற்படுவார். | இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| **3 (6)** | **சபையினால் நியமிக்கப்பட்டுள்ள குழுக்கள்** | |
| 3 (6) (i) | இப்பணிப்புரையின் பணிப்புரை 3(6)(ii), 3(6(iii), 3(6(ஐ), 3(6)(எ) களில் தரப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு வங்கிக்கும் குறைந்தது நான்கு சபை குழுக்கள் இருக்க வேண்டும் ஒவ்வொரு குழுவும் சபைக்கு நேரடியாக அறிவிக்கும். அனைத்துக் குழுக்களும் செயலாளர் ஒருவரை நியமிக்கும். | குழுக்கள் நான்கும் ஏற்றவாறு அமைக்கப்பட்டு உள்ளன. செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனா். சபை கணக்காய்வுக் குழுவும் ஒன்றிணைந்த இடர்முகாமைத்துவக் குழுவும் நேரடியாக தமது அறிக்கைகளை சபைக்கு வழங்கும்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |

| 3 (6) | சபையினால் நியமிக்கப்பட்டுள்ள குழுக்கள் | |
|---|---|---|
| 3 (6) (ii) | கணக்காய்வுக் குழு தொடர்பாக பின்வரும் விதிகள் ஏற்புடையதாகவிருக்கும்: | |
| (அ) | கணக்காய்வுக் குழு தொடர்பாக பின்வரும் சட்டங்கள் ஏற்புடையதாக விருக்கும். கணக்கீடும் அல்லது கணக்காய்வுத் துறையில் தகைமைகளும் அனுபவமுள்ள சுயாதீனமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் குழுவின் தலைவராக செயற்படுவார். | சபையின் கணக்காய்வுக் குழுவின் தலைவர் நிறைவேற்றதிகாரமற்றவரும் வங்கியின் பூரண உரித்துடைய உப நிறுவனமான என்எஸ்பி. பண்ட் மனேஜ்மன்ட் கம்பனி பிரைவட் லிமிட்டட் இன் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ளதால் சுயாதீனமற்றவராகவும் இருக்கின்றார். |
| (ஆ) | குழுவின் அனைத்து அங்கத்தவர்களும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் | அனைத்து அங்கத்தவர்களும் நிறைவேற்று அதிகாரமற்றவா்கள். |
| (இ) | பின்வரும் தொடா்புடைய விடயங்கள் குறித்து குழு பரிந்துரை செய்யும்: | (i), (ii), (iii) ,ன்படி வெளியிலிருந்து வரும் கணக்காய்வாளனராக கணக்காய்வாளர் தலைமையதிபதி இருப்பார். |
| | (i).தொடர்புடைய நியம தேவைப்பாடுகளுடன் இணங்குவிப்பை வழங்குவதற்கென கணக்காய்வு சேவைகளுக்காக வெளியிலிருந்து கணக்காய்வாளர்களை நியமிப்பது. | |
| | (ii) காலத்திற்குக் காலம் மத்திய வங்கியினால் வெளியிடப்படும் கணக்காய்வாளர்களுக்கான வழிகாட்டல்களை நிறைவேற்றுவது | |
| | (iii) தொடா்புடைய கணக்கீட்டு நியமங்களை பிரயோகிப்பதும். | |
| | (iv) கணக்காய்வுக் கூட்டுனா்களின் பதவிக் காலம் ஐந்து வருடங்களை விஞ்சுமாயின் கணக்காய்வாளரின் சேவைக்காலம், கணக்காய்வுக் கட்டணம், இராஜினாமா அல்லது பதவியிலிருந்து விலக்குதல் என்பவற்றுடன் குறிக்கப்பட்ட கணக்காய்வுக் கூட்டுனரை முந்திய பதவிக் காலத்தைப் பூர்த்தி செய்த திகதியிலிருந்து மூன்று வருடங்களின் பின்னரே மீள் அமர்த்த முடியும். | (iv) ஏற்புடையதல்ல. |
| (ஈ) | பொருத்தமான நியமங்களுடனும் நற்பிரயோகங் களுடனும் ஏற்புடையாதாக வெளியக கணக்காய் வாளரும் சுதந்திரமும் நோக்கங்களும் கணக்காய்வு நடைமுறைகளின் செயற்திறனும் இருப்பதை குழு மீளாய்வு செய்வதுடன் கண்காணிக்கும். | கணக்காய்வாளர் தலைமையதிபதி வெளியிலிருந்து வரும் கணக்காய்வாளராக இருப்பதால் சுதந்திரமும் நோக்கங்களும் பேணப்படுகின்றன. சபையின் கணக்காய்வுக் குழு கூட்டங்களில் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்களுடன் கணக்காய்வு நடைமுறைகளின் திறனாற்றல் ஆராயப்படுகின்றது. |

| 3 (6) | சபையினால் நியமிக்கப்பட்டுள்ள குழுக்கள் | |
|---|---|---|
| (உ) | கணக்காய்வு அல்லாத சேவை வெளியிலிருந்து அமர்த்தப்படும் வெளியக கணக்காய்வாளரகளுக் கான கொள்கையை அபிவிருத்தி செய்வ திலும் செயற்படுத்துவதிலும் சபை ஈடுபடும். | கணக்காய்வாளர் தலைமையதிபதி யாப்பிற்கு அமைய நியமிக்கப்பட்டிருப்பதால், ஏற்புடையதல்ல. ஆண்டின்போது அத்தகைய சேவை பெறப்படவில்லை. |
| (ஊ) | கணக்காய்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் வெளியக கணக்காய்வாளர்களின் கணக்காய்வின் தன்மையும் நோக்கெல்லையும் குழுவுடன் கலந்துரையாடப்பட்டு முடிவு செய்யப்படும். | கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வங்கியில் நிரந்தரமான அலுவலகம் ஒன்றுண்டு என்பதுடன் அரசாங்க கணக்காய்வாளர் சபையின் கணக்காய்வு குழு கூட்டங்களில் கிரமமாகக் கலந்து கொள்வதுடன் கணக்காய்வுக் குழுவின் நோக்கெல்லையை தீர்மானிப்பதிலும் பங்கேற்பார்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| (எ) | வங்கியின் நிதிக் கூற்றுக்கள், அதன் ஆண்டறிக்கை கணக்கீடுகள் வெளிப்படுத்தல்கள் தயாரிக்கப்பட்ட காலாண்டு அறிக்கைகள் மற்றும் முக்கிய நிதி அறிக்கைகள் அவற்றில் தரப்பட்டுள்ள அறிக்கையிடல் தீர்வுகளின் நேர்மைத் தன்மை ஆகியவற்றை கண்காணிப்பதற்காக வங்கியின் நிதித் தகவல்களை குழு மீளாய்வு செய்யும். | இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| (ஏ) | இடைக்கால இறுதி கணக்காய்வுகளிலிருந்து எழக்கூடிய விடயங்கள், பிரச்சனைகள், நிறுத்தி வைக்கப்பட்டவைகள் ஆகியவற்றை குழு ஆராயும் என்பதுடன் கணக்காய்வாளர் கலந்துரையாட விரும்பும் அத்தகைய விடயங்கள் உள்ளடங்கலாகவும் குழு ஆராயும். | கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் வங்கியில் நிரந்தரமான அலுவலகம் ஒன்றுண்டு என்பதுடன் அரசாங்க கணக்காய்வாளர் சபையின் குழு கூட்டங்களில் கலந்து கொள்வார்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| (ஐ) | வெளியக கணக்காய்வாளரின் முகாமைத்துவ கடிதத்தையும் அதற்கான முகாமைத்துவத்தின் பதிலையும் குழு மீளாய்வு செய்யும். | பிரிவு 13(7)ஏ யின் கீழ் வழங்கப்பட்ட 2011 இற்கான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையை மீளாய்வு செய்ததுடன் அதற்கான முகாமைத்துவத்தின் பதிலும் மீளாய்வு செய்யப்பட்டது.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| (ஒ) | வங்கியின் உள்ளக கணக்காய்வுக் கடமைகள் தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகளை வங்கி மேற்கொள்ளும்: | |
| | i உள்ளக புலனாய்வுப் பிரிவின் நோக்கெல்லை கடமைகள் மூலவளங்களின் போதுமையை மீளாய்வு செய்வதுடன் பிரிவிற்கு அதன் கடமையைச் செய்வதற்கு அவசியமான அதிகாரம் இருக்கிறதையும் திருப்தி செய்து கொள்ளும். | நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் உள்ள நோக் கெல்லையையும் நடவடிக்கையயையும் குழு மீளாய்வு செய்தது. கணக்காய்வுப் பிரிவின், பணியாட்தொகுதியினரின் பலத்தை அதிகரிக்கவும் ஏனைய மூலவள தேவைகட்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தயவு செய்து குழு அறிக்கை 97ஆம் பக்கத்தைப் பார்க்கவும். |

| 3 (6) | சபையினால் நியமிக்கப்பட்டுள்ள குழுக்கள் | |
|---|---|---|
| | ii உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தினதும், உள்ளக கணக்காய்வு செயன்முறைகளின் விளைவுகளையும் மீளாய்வு செய்ததுடன் அவசியமான இடங்களில் உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் பரிந்துரைகள் மீது பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதையும் உறுதி செய்தன. | கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் பெறுபேறுகள் பரிந்துரைகள் மீதான நடவடிக்கைகளை குழு மீளாய்வு செய்தது. 95ஆம் பக்கத்தில் உள்ள குழு அறிக்கையைப் பார்வையிடவும். |
| | iii உள்ளக கணக்காய்வு, திணைக்களத்தின் தலைவர் மற்றும் சிரேட்ட பணியாட் தொகுதியினரின் செயற்பாடுகள் குறித்த கணிப்பீடுகளை அல்லது மதிப்பீடுகளை மீளாய்வு செய்யும். | 2011 மற்றும் 2012ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு தலைவரின் (பி.பொ.மு.கணக்காய்வு) செயலாற்றல்கள் 2013ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படும் கணக்காய்வு பிரிவின் சிரேஷ்ட அதிகாரிகளின் செயற்பாடுகள் உள்ளக கணக்காய்வு தலைமையினால் மதிப்பீடு செய்யப்பட்டு சபையின் கணக்காய்வு குழுவிற்கு மீளாய்விற்கு அறிவிக்கப்படும். |
| | iv உள்ளக கணக்காய்விற்கு தலைவர், சிரேஷ்ட பணியாட்தொகுதியினர் மற்றும் சேவை வழங்குவதற்கென வெளியி லிருந்து பெறப்பட்டவர்களின் கணக்காய் வின் எந்தவொரு நியமனங்கள் அல்லது பதவி நீக்கங்கள் பரிந்துரைக்கப்படும். | ஆண்டின்போது அத்தகைய நிலமைகள் உருவாகவில்லை. சேவை வழங்குவதற்கு வெளியிலிருந்து வாடகைக்குப் பெறப்படவில்லை. |
| | v உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் சிரேட்ட பணியாட் தொகுதியினரின் பதவி விலகல்கள் குறித்த கணிப்பீட்டை மேற்கொண்டதை உறுதிப்படுத்தும். | உள்ளக கணக்காய்வின் தலைவர், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் துணை அங்கத்தினராவார். அத்துடன் அதிகாரிகள் வங்கிச் செயற்பாடுகளில் சிறந்த அனுபவமும் ஆற்றலும் உள்ளவர்கள். உள்ளக கணக்காய்வின் தலைவர் நேரடியாக சபையின் கண்கணக்காய்வுக் குழுவிற்கு அறிக்கையிடுவார். |
| | vi உள்ளக கணக்காய்வு அதன் கணக்காய்வு நடவடிக்கைகளில் சுதந்திரமாக செயற்படு மென்றும் பட்சபாதமின்றியும் திறமையுடனும் ஏற்ற தொழில்சார் கவனத்துடனும் செயற்படுமென்றும் உறுதிப்படுத்தும். | ஆண்டின் போது, உள்ளக கணக்காய்வு அதன் கணக்காய்வு நடவடிக்கைகளில் சுதந்திரமாக செயற்படுமென்றும் பட்சபாதமின்றியும் திறமையுடனும் ஏற்ற தொழில்சார் கவனத்துடனும், நிதிப் பங்கு கொடுக்கல் வாங்கல் விடயம் தவிர்ந்த தொடர்புடைய நடவடிக்கையுடனும் செயற்படும் என்று உறுதிப்படுத்தும். |
| (k) | உள்ளக புலனாய்வின் கணக்காய்வுகளின் முக்கிய கண்டுபிடிப்புகளையும் அதற்கான முகாமைத்துவ பதில்களையும் குழு கருத்திற்கொள்ளும். | முக்கிய கண்டுபிடிப்புக்களையும் அதற்கான முகாமைத்துவத்தின் பதிலையும் குழு மீளாய்வு செய்தது. குழு அறிக்கையின் 97 ஆம் பக்கத்தில் தயவு செய்து பார்க்கவும். |
| (l) | பிரதான நிதி அதிகாரி, பிரதான உள்ளக கணக்காய்வாளர்கள் மற்றும் வெளியக கணக்காய்வாளரின் ஒரு பிரதிநிதி ஆகியோர் வழமையாக கூட்டங்களுக்கு வருகை தருவார்கள். | இணங்குவிப்பாக செயற்பட்டது. |

| 3 (6) | சபையினால் நியமிக்கப்பட்டுள்ள குழுக்கள் | |
|---|---|---|
| (m) | பின்வரும் அதிகாரங்கள் குழுவிற்கு உள்ளது:<br>i அதன் பார்வைக்குப்பட்ட எந்த விடயங் களையும் புலனாய்வு செய்வதற்கு திட்டவட்டமான அதிகாரம் உள்ளது.<br>ii அவ்வாறு செய்வதற்கான மூல வளங்கள்.<br>iii தகவல்களை முழுமையாகப் பெறக்கூடியதாக இருப்பதும்<br>iv வெளியிலிருந்து தொழில்சார் ஆலோசனை களைப் பெற்றுக் கொள்வதற்கான அதிகாரமும் அத்துடன் அவசியமாயின் தொடர்புடைய அனுபவமுடையவர்களை வெளியிலிருந்து வருகை தருமாறு அழைப்பதும். | சபையின் கணக்காய்வுக் குழு பட்டயத்திற்கு அமைவாக எந்தவொரு விடயம் குறித்து புலனாய்வு செய்வதற்கும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் தொழில்சார் ஆலோசனைகளைப் பெறுவதற்கும் நடவடிக்கைகளை கொண்டு செல்வதற்கான மூலவளங்களைப் பெறுவதற்கும் குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்டுளளது. 97 ஆம் பக்கத்திலுள்ள குழு அறிக்கையைப் பார்க்கவும்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| (n) | ஆராயப்பட்ட விடயங்களின் அழைப்புடன் குழு கிரமமாகக் கூடும் என்பதுடன் அதன் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்று வதற்கான அதன் முடிவுகளையும் பதிவு செய்யும். | ஆண்டின்போது குழு ஐந்து முறை கூடியதுடன் தீர்மானங்களைப் பதிவு செய்தது.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| (o) | தகவல் அளிக்கும் வகையில் சபை பின்வருமாறு வெளிப்படுத்தும்<br>i கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகள் பற்றிய விபரம<br>ii ஆண்டில் இடம்பெற்ற கணக்காய்வுக் குழு கூட்டங்களின் எண்ணிக்கையும்<br>iii அத்தகைய கூட்டங்களுக்கு சமூகமளித்த ஒவ்வொரு பணிப்பாளர்களின் விபரமும | 97 பக்கத்தில் சபையின் கணக்காய்வு குழுவின் நோக்கெல்லை தரப்பட்டுள்ளது.<br>ஆண்டினபோது நடந்த கூட்டங்களின் திகதிகள் 97 பக்கங்களில் தரப்பட்டுள்ளது.<br>பணிப்பாளர்களின் வருகை விபரங்கள் 97 பக்கத்தில் தரப்பட்டுள்ளன.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| (p) | குழுவின் செயலாளர் குழுக் கூட்டங்களைப் பதிவு செய்வதுடன் கூட்ட அறிக்கையின் விபரங்களை வைத்திருப்பர். | பி.பொ.மு. கணக்காய்வு செயலாளராக இருப்பதுடன் விபரமாக கூட்ட அறிக்கைகளை பேணுவார்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| (q) | நிதி அறிக்கைகள், உள்ளக கட்டுப்பாடுகள் அல்லது ஏனைய விடயங்களில் தவறுகள் காணப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதெனும் அக்கறையை வங்கியின் பணியாளர்கள் எவரும் இரகசியமாக எழுப்புவார்களாயின், குழு ஒழுங்குகளை மீளாய்வு செய்யும், அதற்கமைய அத்தகைய விடயங்களுக்கு நேர்மையும் சுதந்திரமானதுமான புலனாய்வுகளுக்கு சரியான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதையும் ஏற்புடைய பின் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதையும் வெளியகக் கணக்காய்வாளருடன் வங்கிக்கு உள்ள உறவையும் அத்துடன் மேற்பார்வை செய்யும். முக்கிய பிரதிநிதித்துவ அங்கமாக செயற்படுவதையும் வங்கி உறுதி செய்யும். | பி.பொ.மு. கணக்காய்வினால் தற்போதுள்ள முன்னெச்சரிக்கை கொள்கை மீளாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் சபையின் கணக்காய்வு குழுவிற்கு அதனைச் சமர்ப்பிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. உள்ளகக் கணக்காய்வினால் நிதி அறிக்கையிடலில் நிகழ்ந்த ஒழுங்கின்மைகள் மோசடிகள் மீதான புலனாய்வுகள் மற்றும் ஒழுக்காற்று நடிவடிக்கைகளுக்காக மனிதவள பிரிவிற்கு இறுதியாக சபையின் கணக்காய்வு குழுவிற்கு அறிவிப்பது என்னும செயன்முறையாக இது இருக்கும். |

| 3 (6) | சபையினால் நியமிக்கப்பட்டுள்ள குழுக்கள் | |
|---|---|---|
| 3 (6) (iii) | மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு தொடர்பாக பின்வரும் சட்டங்கள் ஏற்புடையதாக இருக்கும். | |
| (அ) | வங்கியின் பணிப்பாளர்கள் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் ஊதியங்கள் கொள்கையை (ஊதியங்கள், அலவன்சுகள்), ஏனைய நிதிக் கொடுப்பனவுகள் குழு தீர்மானிக்கும். | பணிப்பாளர்களின் ஊதியங்கள் அமைச்சினால் தீர்மாணிக்கப்படும். பி.நி.அ மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் ஊதியம் கூட்டு ஒப்பந்தத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் இந்த செயன்முறையில் குழு ஈடுபடும். |
| (ஆ) | பணிப்பாளர்கள் பொ.K∴பி.நி.அ. மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான குறிக்கோள்களையும் இலக்குகளையும் குழு தீர்மானிக்கும். | அமைச்சரினால் நியமிக்கப்படுவதனால் பணிப்பாளர்களின் இலக்குகள் ஆவணப்படுத்தப்படுவதில்லை.<br>முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான இலக்குகளும் குறிக்கோள்களும் அவர்களின் தொடர்புடைய பிரிவுகளுக்கு அடைய வேண்டிய இலக்குகள் குறித்த நடவடிக்கைத் திட்டத்தின் ஊடாக ஆவணப்படுத்தப்படும். |
| (இ) | நிறுவப்பட்டுள்ள குறிக்கோள்கள் இலக்குகளுக்கு எதிராக பொ.மு/பி.நி.அ மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் செயலாற்றல்களை குழு காலத்திற்குக் காலம் மதிப்பீடு செய்வதுடன் ஊதியங்கள் நன்மைகள் மற்றும் செயலாற்றல்கள் அடிப்படையில் வழங்கப்படும் ஊக்குவிப்புகளுக்கான வேறு கொடுப்பனவுகள் எடுகோள்களையும் தீர்மானிக்கும். | பி.நி.அ இன் செயலாற்றல் மதிப்பீடுகள் தலைவரினால் மேற்கொள்ளப்படும் அதே நேரம் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் செயலாற்றல் பொமு பிநிஅ இனால் மேற்கொள்ளப்படும். |
| (ஈ) | பிநிஅ குறித்த விடயங்களுடன் தொடர்புடைய கலந்துரையாடல் நடத்தப்படுவது தவிர்ந்த ஏனைய குழுவின் கூட்டங்கள் அனைத்திலும் பிநிஅ பங்கேற்பர். | சபையினால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்புகளுக்கு அமைவாக, பிநிஅ தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படும்போது பிநிஅ வருகை தரமாட்டார்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (6) (iv) | நியமனங்கள் குழு தொடர்பாக பின்வரும் சட்டங்கள் பிரயோகிக்கப்படும். | |
| (அ) | புதிய பணிப்பாளர்கள் பிநிஅ மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினால் தெரிவு செய்வதற்கும் நியமிப்பதற்கும் நடைமுறையொன்றை குழு நிறைவேற்றும். | தேசேவ சட்டத்திற்கு அமைவாக குறித்த விடயத்துடன் தொடர்புடைய அமைச்சர் பணிப்பாளர்களை நியமிப்பார்.<br>11ஆம் பிரிவு பணிப்பாளர்கள் சபையில் ஒருவரை அதன் தலைவராக அமைச்சர் நியமிப்பார்.<br>26ஆம் பிரிவு வங்கியின் பொது முகாமையாளராக திறமையும் சரியானவருமான ஒருவரை சபை நியமிக்கும். இவர் வங்கியின் பிநிஅ ஆகவும் இருப்பார்.<br>பணிப்பாளர் சபையினால் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் நியமனம் செய்யப்படும். |

| 3 (6) | **சபையினால் நியமிக்கப்பட்டுள்ள குழுக்கள்** | |
|---|---|---|
| (ஆ) | தற்போதுள்ள பணிப்பாளர்களை மீண்டும் தெரிவு செய்வதற்குப் பரிந்துரை செய்ய (அல்லது செய்யாதிருக்க) குழு கருத்திற் கொள்ளும். | மேலேயுள்ள 3(6)(ளை)(அ) இற்கு அமைவாக |
| (இ) | பிநிஅ அல்லது முக்கிய முகாமைத்துவ பதவிகளின் நியமனம் அல்லது பதவி உயர்வுகளுக்கான திறமைகளுக்கு தகுதிகளை ஏற்படுத்துவதை குழு கருத்திற்கொள்ளும். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு அமைவாக பொ.மு/ பிநிஅ உம் முகாமைத்துவ ஆளணியினரினதும் தகுதி தகைமைகள் கருத்திலெடுக்கப்படும். எதிர்காலத்தில் செயன்முறைகளில் நியமனங்களை குழு ஏற்படுத்தும். |
| (ஈ) | பணியாளர்களும் பிநிஅ உம் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரும் பணிப்புரை 3(3) இலும் நியமச் சட்டங்களிலும் தரப்பட்டுள்ளவாறு பதவிகளை வகிப்பதற்குத் தேவையான தகைமைகளையும் சரியானவர்களும் என்பதை குழு உறுதிப்படுத்தும். | பணிப்பாளர்களினதும் பொமு/பிநிஅ இனதும் மு.மு.ஆ. இனரதும் பிரகடனங்கள் பணிப்பாளர் வங்கி மெற்பார்வைக்கு சமர்ப்பிக்கப்படும் எதிர் காலத்தில் குழு ஊடாக பிரகடனங்கள் பெற்றுக் கொள்ளப்படும். |
| (உ) | மேலதிகமானதும் / புதிய நிபுணத்துவமுள்ள துமுள்ளதுமான தேவைப்பாடுகளையும் ஓய்வு பெறும் பணிப்பாளாகள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு தொடர் அமர்வாளர்கள் ஒழுங்குகளைச் செய்வதற்கும் காலத்திற்குக் காலம் சபை கவனமெடுப்பதுடன் பரிந்துரைகளையும் செய்யும். | பணிப்பாளாகள் நிதி அமைச்சரினால் நியமிக்கப்படுவதனால் அவா்களின் இலக்குகள் ஆவணப்படுத்தப்படுவதில்லை.<br>முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் தொடா்புடைய பிரிவுகளின் இலக்குகளை அடையும் நோக்கத்துடன், நடவடிக்கை திட்டத்தின் ஊடாக அவா்களின் இலக்குகள் ஆவணப்படுத்தப்படுகின்றன. |
| (ஊ) | சுயாதீனமான பணிப்பாளர் ஒருவரினால் குழு தலைமையேற்கப்படும். அழைப்பின் பேரில் பிநிஅ கூட்டங்களுக்குச் சமூகமளிப்பார். | சுயாதீனமான பணிப்பாளர் ஒருவா் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (6) (v) | ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழு தொடர்பாக பின்வரும் சட்டங்கள் ஏற்புடையதாக இருக்கும். | |
| (அ) | சபையின் இடர் வகைப்படுத்தல்களை மேற்பார்வை செய்வதற்கு குறைந்தது மூன்று நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களையும் பிரதம நிறைவேற்று அதிகாரியையும் முக்கிய முகாமைத்ததுவ ஆளணியினரையும் உள்ளடக்கிய தாக குழு இருக்கும் | இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| (ஆ) | வங்கிக்கு ஏற்படக் கூடிய அனைத்து இடர்களையும் (உ+ம்) கடன், சந்தை, திரவத்தன்மை செயற்பாட்டு மற்றும் மூலோபாய இடர்களையும் மாதாந்த அடிப்படையில் குழு மதிப்பீடு செய்யும். | கடன், சந்தை, செயற்பாட்டு இடா் என்பவற்றை இடா் முகாமைத்துவப் பிரிவு (சுஆனு) மதிப்பீடு செய்து, காலாண்டு அடிப்படையில் அறிக்கைகள் சமா்ப்பிக்கும். உற்பத்தியும் துறைகளும், அழுத்தப் பரிசோதனைகள், திரவ வீதங்கள் கேபிஜ, கேஆர்ஜ, செயற்பாட்டு நட்ட தரவு போன்றவையூடாக, இடா் முகாமைத்துவப் பிரிவு இடா்களை மீளாய்வு செய்வதுடன் ஐஆா்எம்சி / சபை என்பவற்றிற்கு அறிக்கைகளை காலத்திற்கு காலம் அனுப்பி வைக்கும். |

| 3 (6) | சபையினால் நியமிக்கப்பட்டுள்ள குழுக்கள் | |
|---|---|---|
| (c) | அனைத்து முகாமைத்துவ மட்ட குழுக்களினதும் போதுமைத் தன்மையையும் திறனாற்றல்களையும் குழு மீளாய்வு செய்யும். | நிறைவேற்று இடர் முகாமைத்துவக் குழு மீளாய்வு செய்யப்பட்ட அதேநேரம், மாதாந்த இணங்குவிப்பு குழு கூட்டமும் மீளாய்வு செய்யப்பட்டு நிறைவேற்று இணங்குவிப்பு குழு ஒன்று தாபிக்கப்பட்டு ஐஆர்எம்சி யினால் அங்கீகரிக்கப்பட்டது. 2010 – 2011ஆம் ஆண்டின் போது செயற்பாட்டு மட்டக் குழுக்கள் அங்கீகரிக்கப்பட்டதுடன், 2013ஆம் ஆண்டின் போது மீளாய்வு செய்யப்படுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (d) | முக்கியமான இடர்களின் விளைவுகளை குறைப்பதற்கு சரிப்படுத்தல் நடவடிக்கைகளை குழு உடனடியாக மேற்கொள்ளும். | இடர் குறிகாட்டிகள் திகைப்பூட்டும் மட்டத்தை காண்பிக்கவில்லை. |
| (e) | நாளதற்குக் கொண்டு வரப்பட்ட வர்த்தகத் தொடர்ச்சி திட்டங்கள் பீசீபீ உள்ளடங்கலாக இடர் முகாமைத்துவம் அனைத்து விடயங்களையும் மதிப்பீடு செய்வதற்கு காலாண்டிற்கு ஒரு முறை கூடும். | ஆண்டின்போது நான்கு முறை குழு கூடியது.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| (f) | விசேட இடர்களை அடையாளம் காணத் தவறும் பொறுப்பு மிக்க அதிகாரிகளுக்கு எதிராகவும் பொருத்தமான நடவடிக்கைகளை குழு மேற் கொள்ளும் என்பதுடன் குழுவினால் பரிந்துரைக் கப்படும் சரிப்படுத்தல் நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ளத் தவறும் அல்லது வங்கியின் மேற்பார்வை பணிப்பாளரினால் நெறிப் படுத்தப்பட்டவாறு உடனடி சரிப்படுத்தல் நடவடிக்கை களை மேற்கொள்ளும். | மனித வளங்களும் அபிவிருத்தியும் பிரிவினால் தற்போது அனைத்து ஒழுக்காற்று நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆண்டின் போது அதற்கான அவசியம் எழவில்லை. |
| (g) | பணிப்பாளர் சபையின் நோக்கங்களையும் ஏற்றுக் கொள்ளாதவைகளையும்.்.அல்லது முக்கிய வழிகாட்டல்களையும் சபையிடமிருந்து பெற்றுக்கொள் வதற்கு ஒவ்வொரு கூட்டமும் நடைபெற்ற ஒரு வாரத்திற்குள் இடர் மதிப்பீட்டு அறிக்கையைக் குழு அனுப்பும். | அடுத்துவரும் சபை கூட்டத்திற்கு நேரடியாக ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவ குழுவின் இடர் மீளாய்வு அறிக்கைகளை இடர் முகாமைத்துவ பிரிவு சமர்ப்பிக்கும்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| (h) | வர்த்தக செயற்பாடுகளின் அனைத்து துறைகளுமான சட்டங்கள், ஒழுங்கமைப்பு விதிகள் ஒழுங்கமைப்பு வழிகாட்டல்கள் உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் வங்கியின் இணங்குவிப்பிற்கு ஏற்றவாறு உள்ளதை மதிப்பீடு செய்வதற்கு இணங்குவிப்பு நடவடிக்கைகள் ஒன்றை குழு செயற்படுத்தும். முக்கிய முகாமைத்துவ ஆளணியினரிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அர்ப்பணிப்புள்ள இணங்குவிப்பு அதிகாரி இணங்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் காலத்திற்குக் காலம் குழுவிற்கு அறிவிப்பார். | இணங்குவிப்பு நடவடிக்கைகள் நிறுவப்பட்டுள்ளது. தலைமை இடர் அதிகாரி (இடர் மற்றும் இணங்குவிப்பு தலைவர்-பதவி ) இணங்குவிப்பு அறிக்கைகள் மாதாந்த இணங்குவிப்பு கூட்டங்களி:லும் காலாண்டு அடிப்படையில் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவிற்கும் அளிப்பார். |

| 3 (7) | **தொடர்புடையவர்களின் கொடுக்கல் வாங்கல்கள்** | |
|---|---|---|
| (7) (i) & (ii) | எந்த ஒருவரிடமிருந்தும் வங்கியின் கொடுக்கல் வாங்கல்களில் உருவாகக்கூடிய எந்தவொரு ஈடுபாடுகளின் முரண்பாடுகளையும் தவிர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை சபை மேற்கொள்ளும். | இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (7) (iii) | ஒரே வர்த்தகத்தில் வங்கியுடன் ஈடுபட்டுள்ளவர்களைவிட அதிகமான நன்மையளிக்கும் வசதிகள் தொடர்புடைய வர்களுக்குக் கிடைக்குமாயின் மேலேயுள்ள பணிப்புரை (3) (7)(i) இல் வரையறை செய்யப்பட்டுள்ளவாறு தொடர்புடையவா்களுடன் கொடுக்கல் வாங்கலில் வங்கி ஈடுபடாதிருப்பதை சபை உறுதி செய்யும். | பக்கத்திலுள்ள தொடர்புடைய-வா்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் எவையுமிருப்பின் வழமையான வர்த்தக நடவடிக்கையாக இருந்ததுடன் தொடர்புடையவர்களுடனான வெளிப்படுத்தல் நிதிக்கூற்றுகளின் 245 ஆம் பக்கத்தில் உள்ள குறிப்பு 39 வெளிப்படுத்தப்பட்டுள்ளது.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (7) (iv) | சம்பந்தப்பட்ட பணிப்பாளர் தவிர்த்து பணிப்பாளர்கள் சபையின் மூன்றில் இரண்டிற்கும் அதிகமான பணிப்பாளர்கள் கூட்டமொன்றில் எத்தகைய உதவிக்கும் ஆதரவாக வாக்களித்தால் அன்றி வங்கி அதன் பணிப்பாளர்களுக்கு அல்லது அத்தகைய பணிப்பாளரின் நெருங்கிய உறவினருக்கு எவ்வித உதவிகளையும் வழங்காது. | தேசேவ சட்டத்தினதும் வங்கிச் சட்டத்தின் 20ஆம் பிரிவினாலும் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும் உதவிகள் ஆட்சி செய்யப்படுகின்றன.<br>சபைக் கூட்டங்களினால் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்களுக்கு அமைவாக, பணிப்பாளா்களுக்கான எந்தவொரு வசதிகளையும் வங்கி வழங்கவில்லை.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (7) (v) | (அ) யாராகிலும் ஒருவருக்கு அல்லது ஒருவரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது எந்தவொரு தொழில் நிறுவனத்திலும் குறிப்பிடத்தக்க ஈடுபாட்டைக் கொண்டுள்ள ஒருவர் வங்கியினால் எவ்வித உதவிகளும் வழங்கப்பட்டிருக்கும்போது அத்தகையவர் அதனைத் தொடர்ந்து வங்கியின் பணிப்பாளராக நியமனம் பெற்ற ஒரு வருடத்திற்குள் நாணயச் சபையிடமிருந்து அந்த நோக்கத்திற்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள அவசியமான பிணயத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை வங்கி மேற்கொள்ள வேண்டும். | இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (7) (vi) | வங்கி அதன் பணியாட் தொகுதியினருக்கு பொருத்தமான அமைப்பு முறை அடிப்படையில் அன்றி வேறெந்த உதவிகளையும் அல்லது கூடுதலான சலுகைகளையும் வழங்காது. | பணியாட் தொகுதியினர் அனைவருக்கும் பொருந்தும் பொதுவான அமைப்பு முறை தவிர்ந்த சலுகை அடிப்படையிலான எவையும் இல்லை.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (7) (vii) | மேலேயுள்ள 3(7)(V) மற்றும் 3(7)(vi) இன் பணிப்புரைகளின் கீழ் ஒரு வங்கியினால் எந்தவித உதவிகளும் வழங்கப்பட மாட்டாது. அல்லது அத்தகைய உதவிகளின் எந்த ஒரு பகுதியும் அதன் மீதான எந்தவொரு வட்டியும் நாணயச் சபையின் முன் அனுமதியின்றி பணமாக ஏற்றுக் கொள்ளப்படவும் கூடாது என்பதுடன் அத்தகைய அங்கீகாரமின்றிச் செய்யப்படும் தள்ளுபடி செல்லபடியற்றதாகவும் பயனற்றதாகவும் இருக்கும். | இணங்குவிப்பாக செயற்பட்டது. |

| | | |
|---|---|---|
| **3 (8)** | **வெளிப்படுத்தல்கள்** | |
| 3 (8) (i) | சபை பின்வருபவற்றை உறுதிப்படுத்தும் | |
| | (அ) மேற்பார்வை மற்றும் ஒழுங்கமைப்பு அதிகாரிகளினால் பிரயோகப்படுத்தப்படும் கணக்கீட்டு நியமங்களின் மாதிரிகளுக்கு அமைவாக, கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் காலாண்டு நிதிக் கூற்றுக்கள் என்பவை தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும். அத்துடன், | இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| | (ஆ) அத்தகைய கூற்றுக்கள், சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் சுருக்கமாகத் தயாரிக்கப்பட்டு பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். | இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| 3 (8) (ii) | பின்வரும் மிகக் குறைந்த வெளிப்படுத்தல்கள் ஆண்டறிக்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதை சபை உறுதிப்படுத்தும். | |
| | (அ) விசேட வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிக் கூற்றுக்கள் ஏற்புடைத்தான கணக்கீட்டு நியமங்கள், மற்றும் ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளதற்கான ஒரு | பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கையில் 188 ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| | (ஆ) நிதி அறிக்கைகளின் நம்பகத்தன்மை தொடா்பாக நியாயமான நம்பிக்கையை வழங்குவதாக அறிக்கையிடல்களின் அமைப்பு முறை வடிவமைக்கப் பட்டுள்ளதை உறுதிப்படுத்தும். வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறை குறித்த பணிப்பாளர்களின் அறிக்கையொன்றும் வெளியகத் தேவைகளுக்கான நிதிக் கூற்றுக்களின் தயாரிப்புடன் தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளுக்கு ஏற்பவும் தயாரிக்கப்படும். | பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கையில் 188 ஆம் பக்கத்தைப் பார்க்கவும்<br>199 ஆம் பக்கத்தில் உள்ள உள்ளக கட்டுப்பாடுகள் மீதான பணிப்பாளர்களின் கூற்றைப் பார்க்கவும்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| | (இ) மேலேயுள்ள 3(8)(ii) (பி) ..இல் தரப்பட்டுள்ள பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையின் பயனாற்றல் மீதான வெளியக கணக்காய்வாளரின் சான்றிதழ் 2008 டிசெம்பா் 31 ஆம் திகதிக்குப் பின்னா் தயாரிக்கப்பட்ட அல்லது பிரசுரிக்கப்பட்ட ஏதாகிலும் கூற்றுக்கள் தொடா்பானவையாக இருக்கும். | 200 ஆம் பக்கத்திலுள்ள சுயாதீனமான உறுதியளித்தல் அறிக்கையைப் பார்க்கவும்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| | (ஆ) பணிப்பாளர்களின் விபரங்கள்<br>(i) பெயர்கள், தகுதி, சொத்து உள்ளடங்கலாக<br>(ii) வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்கள்<br>(iii) வங்கியினால் கொடுக்கப்பட்ட மொத்த கட்டணங்களும் ஊதியங்களும | 86 ஆம் பக்கத்திலுள்ள பணிப்பாளர்களின் விபரத்தைப் பார்க்கவும் 244 பக்கத்திலுள்ள நிதிக்கூற்றுக்கள் மீதான குறிப்பு 39 (b) ஐ பார்க்கவும்.<br>245 பக்கத்திலுள்ள நிதிக்கூற்றுக்கள் மீதான குறிப்பு 39 (d) ஐ பார்க்கவும்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |

| | | |
|---|---|---|
| **3 (8)** | **வெளிப்படுத்தல்கள்** | |
| | (e) 3(7) (iii) இல் வரையறுக்கப்பட்டவாறு மொத்த தொடர்புடையவர்களின் ஒவ்வொரு வகைப்படுத் தலுக்கும் வழங்கப்பட்ட மொத்த நிகர உதவிகள் தொடர்புடையவர்களின் ஒவ்வொரு வகைப்படுத்த லுக்கும் வழங்கப்பட்ட நிகர உதவிகள் வங்கியின் ஒழுங்கமைப்பு மூலதனத்தின் சதவீதமாகவும் வெளியிடப்பட வேண்டும். | 245 பக்கத்திலுள்ள நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 39 (d) யில் வழங்கப்பட்ட நிகர உதவிகள் வங்கியின் ஒழுங்கமைப்பு மூலதன சத வீதமாகத் தரப்பட்டுள்ளது..<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| | (f) வங்கி அதன் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு கொடுத்த ஊதியங்களின் மொத்த பெறுமதியும் வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடன் அதன் கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதியும் ஊதியங்கள் போன்ற விரிவான வகைப்படுத்தல்களினுள் அடக்கப்பட்டுள்ளது. | 245 பக்கத்தில் உள்ள நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 39 (c) இல் விபரங்கள் தரப்பட்டுள்ளது.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| | (g) பிரசுரிக்கப்பட்ட வருடாந்த நிறுவன ஆளுமை அறிக்கைகளிலுள்ள இத்தகைய பணிப்புரைகளுடனான இணங்குவிப்பு மீதான வெளியக கணக்காய்வாளரின் சான்றிதழ் | சுயாதீனமான உறுதிப்படுத்தல் அறிக்கையில் வெளியகக் கணக்காய்வாளரின் சான்றிதழ் பெறப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளது.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| | (h) இணங்குவிப்பின் விபரங்கள் தரப்பட்டுள்ள ஒரு அறிக்கை<br>(i) விவேகமான தேவைப்பாடுகள் ஒழுங்கமைப்புகள் சட்டங்கள் மற்றும்<br>(iii) உள்ளாக கட்டுப்பாடுகள<br>எவ்வித இணங்குவிப்புமற்ற விடயங்களை சரி செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளும். | நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு கூற்றின் 195 ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.<br>இணங்குவிப்பாக செயற்பட்டது. |
| | (i) ஒழுங்கமைப்பு மற்றும் மேற்பார்வையுடன் சம்பந்தப்பட்ட கூற்று ஒன்றில் வங்கியின் இடர் முகாமைத்துவத்தில் அல்லது இப் பணிப்புரைகளுடன் இணங்கி செயற்படாமை குறித்த குறைபாடுகள் வங்கி மேற்பார்வை பணிப்பாளரினால் சுட்டிக் காட்டப்பட்டிருப்பின், இத்தகைய விடயங்களை கவனிப்பதற்கு வங்கி மேற்கொண்ட நடவடிக்கைகளுடன் சேர்த்து, இதனை பொதுமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என நாணயச் சபை பணிப்புரை விடுக்கும். | பொது மக்களுக்கு எவ்வித வெளிப்படுத்தலும் செய்ய வேண்டுமென நாணயச் சபை பணிப்புரை செய்யவில்லை. |
| **3 (9)** | மாற்றப்படுவதற்கானதும் மற்றும் ஏனைய பொது ஏற்பாடுகளும் | மாற்றப்படுவதற்கான ஏற்பாடுகளுடன் வங்கி<br>இணங்குவிப்பாக செயற்பட்டுள்ளது. |

**எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்**

ஆளுமை அறிக்கை

**2007 இன் 12 ஆம் இலக்க நிறுவன ஆளுமை பணிப்புரைகளின் இணங்குவிப்பு தேவைப்பாடுகள்**

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள நிறுவன ஆளுமை மீதான 2007 இன் 12 ஆம் இலக்க பணிப்புரைகளின் இணங்குவிப்பு தேவைப்பாடுகளை சந்திப்பதற்காக பிரயோகிக்கக் கூடியதென ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுடன் தொடர்புடைய 4400 சேவைகள் மீது இலங்கை தரப்படுத்தல் நியமங்களில் தரப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கு அமைவாக, கணக்காய்வாளர் தலைமையதிபதி நடைமுறைகளைச் செயற்படுத்தியுள்ளார். அவரது 03 ஏப்ரல் 2013ஆம் திகதியிடப்பட்ட அறிக்கையில் தரப்பட்டுள்ள அவரின் கண்டுபிடிப்புகள் மேலே வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்களுடன் வேறுபட்டதாக இல்லை என்பதுடன் சபையினால் மேலே அறிக்கையிடப்பட்டுள்ளவற்றுடன் குறிப்பிடத்தக்க முரண்பாடுகளை கொண்டிருப்பதாக அடையாளம் காணப்படவும் இல்லை.

**வை.எஃப். டின்**
சபைச் செயலாளர்

**சுனில் எஸ் சிறிசேன**
தலைவர்

கொழும்பு
28 மார்ச் 2013

# எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

பணிப்பாளர்கள் சபை







1. **திரு. சுனில் எஸ் சிறிசேன** – தலைவர்
2. **திரு. எஸ்.ரீ.அபயகுணவர்தன** – பணியாற்றுப் பணிப்பாளர்
3. **திரு. டீ.எல்.பீ.ஆர்.அபேரத்ன** – பணிப்பாளர்

## எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

பணிப்பாளர்கள் சபை


4


5


6


7

4. **திரு. லயனல் பீ பெர்னாந்து** – பணிப்பாளர்
5. **திரு. சுமித் விஜேசிங்க** – பணிப்பாளர்
6. **திரு. பிரியந்த ஜயவர்தன** – பணிப்பாளர்
7. **திரு. ஆர்.எம்.பீ.ரத்நாயக்க** – பணிப்பாளர்

## எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

பணிப்பாளர்கள் சபை

**திரு. சுனில் எஸ் சிறிசேன**
**தலைவர்**

2012 ஆகஸ்ட் 06ஆம் திகதி தேசேவ இன் தலைவராக திரு.சிறிசேன நியமிக்கப்பட்டார். தேசேவ நிதி முகாமைத்துவக் கம்பனியின் தலைவராகவும் அவர் செயற்படுகின்றார்.

திரு. சிறிசேன பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சு கல்வி அமைச்சு மற்றும் கூட்டுறவும் உள்நாட்டு வர்த்தகமும் அமைச்சு ஆகியவற்றின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் இருந்திருக்கின்றார்.

பேராதனை பல்கலைக் கழகத்தின் பொருளியல் பட்டதாரியான திரு சிறிசேன கொழும்பு பல்கலைக் கழகத்திலிருந்து புள்ளி விபர டிப்ளோமா ஒன்றையும் SLIDA இலிருந்து முகாமைத்துவத் துறையில் உயர் டிப்ளோமா ஒன்றையும் பெற்றிருக்கின்றார். இலங்கை நிர்வாக சேவையின் அங்கத்தினராகவும் இவர் இருக்கின்றார்.

**எஸ்.ரி.அபேகுணவர்த்தன**
**பணியாற்றுப் பணிப்பாளர்**

2007 ஆகஸ்டிலிருந்து மே 2010 வரையிலும் ஒரு தடவையும் 2010 ஜூனிலிருந்து 2012 மே வரையிலும் ஒரு தடவையுமாக இருமுறை சேவையபாற்றியுள்ளார். 2012 ஆகஸ்ட் 06இலிருந்து திரு அபயகுணவர்த்தன சபைக்கு மீள் நியமனம் செய்யப்பட்டார். நான்கு தசாப்த காலம் வர்த்தகராக அனுபவம் பெற்றுள்ள இவர் தேசேவ நிதி முகாமைத்துவக் கம்பனியின் பணிப்பாளராகப் பதவி வகிக்கின்றார். "ஜனசெத்த ஜோதிஸ்ஸ சேவய" வின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் காலி கூட்டுறவு வைத்தியசாலையின் பணிப்பாளராகவும் செயற்படுகின்றார். சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் சமய மற்றும் கலாச்சார அலுவல்களுக்கான ஆலோசகராகவும் இருக்கின்றார்.

**பீ.ஏ. அபேசேகர**
**வெளியிலிருந்து வரும் பணிப்பாளர்**

2012 ஆகஸ்ட் 22இல் சபைக்கு மீள் நியமனம் பெற்ற திரு அபேசேகர இலங்கை நிர்வாக சேவையில் 1980இல் இணைந்த சிரேஷ்ட அங்கத்தினராவர்.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் திறைசேரிக்கான பிரதி செயலாளராக தற்போது சேவையாற்றுகின்றார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணையகத்தின் கவுன்சில் அங்கத்தினராயும் கொழும்பு பல்கலைக்கழக சுதேச மருத்துவ நிறுவனத்தின் கவுன்சில் பணிப்பாளர் அங்கததினராகவும் கொள்கை ஆய்வுகள் நிறுவனத்தின் சபை அங்கத்தினராகவும் (ஐபீஎஸ்) இலங்கை அபிவிருத்தி நிர்வாகம் நிறுவனத்தின் ஆட்சி செய்யும் கவுன்சிலின் அங்கத்தினராகவும் இலங்கை போக்குவரத்து சபையின் ஆலோசனைக் குழு அங்கத்தினராகவும் இருக்கின்றார். ஆறு வருடங்களாக கூட்டுறவு திணைக்களத்தின் (கிராமிய வங்கிகள்) உதவி ஆணையாளராக சேவையாற்றியிருப்பதும் கம்பஹா மாவட்டத்தின் மாவட்ட செயலாளராகவும் இலஞ்ச ஒழிப்பு புலனாய்வு மற்றும் ஊழலுக்கெதிரான புலனாய்வு மற்றும் இலஞ்சத்திற்கும் ஊழலுக்குமான குற்றச்சாட்டுக்கள் என்பவற்றின் ஆணையாளரின் செயலாளராகவும் பணியாற்றியது இவரது சேவைகளில் உள்ளடக்கப்படுகின்றது. 2013 பெப்ருவரி 28இல் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

**திரு.டி.எல்.பி.ஆர். அபேரட்ண**
**பணிப்பாளர் - வெளியிலிருந்து வருகை தருபவர்**

திரு. அபேரட்ண 2012 பெப்ருவரி 09 இல் சபைக்கு நியமனம் பெற்றதுடன் 2012 மே 23இலிருந்து 2012 ஆகஸ்ட் 05 வரையிலும் பதில தலைவராக இருந்தார். தேசேவ நிதி முகாமைத்துவக் கம்பனியின் பணிப்பாளராகவும் இவர் இருக்கின்றார்.

திரு அபேரட்ண இலங்கையின் அஞ்சல் அதிபர் நாயகமாவார். இலங்கை நிர்வாக சேவை தரம் 01இல் இவரது 16 வருட முன் அனுபவத்தில் 2005இலிருந்து 2008 வரையிலான பிரிவு செயலாளர் மினுவாங்கொட 2008 - 2009 வரையான இரத்தினக் கல் ஆபரணங்கள் அதிகார சபை மற்றும் 2010இல் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் பதவிகளும் உள்ளடங்கும்.

# எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

பணிப்பாளர்கள் சபை

திரு அபேரட்ண களனி பல்கலைக்கழகத்தில் 1991இல் முறையே வர்த்தகவியல் பட்டமும் (கௌரவ) 2010இல் சமூகவியலில் பட்டப்பின் படிப்பு கலைமாமணியையும் பெற்றிருக்கின்றார்.

**திரு லயனல் பி பெர்னான்டோ**
**பணிப்பாளர்**

திரு பெர்னான்டோ அனுபவம் வாய்ந்த ஒரு பட்டயக் கணக்காளர். 2012 ஆகஸ்ட் 06இல் சபைக்கு நியமிகப்பட்டார். தேசேவ நிதி முகாமைத்துவக் கம்பனியின் பணிப்பாளராகவும் இருக்கின்றார்.

வர்த்தகத் துறையில் பட்டம் (விசேடம்) பெற்றுள்ளதுடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்தவராகவும் (எப்சிஏ) சார்ட்டட் மனேஜ்மன்ட் அக்கவுண்டன்ஸ் (எப்எஸ்சிஎம்ஏ) இன் அங்கத்தினராகவும் சிரேஷ்ட கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளராகவும் (எஸ்ஏரி) இருக்கின்றார்.

திரு. பெர்னான்டோ அவர்கள் பல நிறுவனங்களில் சபை பணிப்பாளராக காணப்படுகின்றார். அவைகளாவன, பென்ஜரோங் கம்பனி, எல்.எம் - மனேஜ்மென்ட் சேர்விஸ், களனி யுனி இன்ஸூரன்ஸ் புரோகஸ், அமரேசியன் என்ஜினியரிங் கன்ஸல்டன்ட், பீராபர்ட் கிலீனிங் டெக்னோலஜி பிரன்ஸிஹியோ நிறுவனம் ஆகியவை அடங்குகின்றன.

**திரு.சுமித் விஜேசிங்க**
**பணிப்பாளர்**

திரு விஜேசிங்க 2012 ஆகஸ்ட் 06இல் சபைக்கு நியமனம் செய்யப்பட்டார். செயற்படும் வழக்கறிஞரான இவர் சட்டத்தரணியாக எல் எல் பி பட்டம் பெற்றுள்ளார். பாராளுமன்ற தலைவரின் செயலாளராக தற்போது சேவையாற்றும் திரு விஜேசிங்க ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பணிப்பாளராகவும் இருக்கின்றார்.

இலங்கை தொலை தொடர்புகள் பிஎல்சி மொபிரெல் பிரைவேட் லிமிரெட் தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் கம்பனி (அனைத்திலும் 2007- 2010 வரை ) மற்றும் லங்காபுர அபிவிருத்தி வங்கி (2011 - 2012) உள்ளடங்கலாக அநேக நிறுவனங்களின் சபைகளில் பணியாற்றியிருக்கின்றார். இவரின் முன்னைய அனுபவத்தில் என்டிரிஎவ் உலக வங்கி என்பவற்றினால் ஆதரிக்கப்பட்ட (1993 - 1997) ஒருங்கிணைந்த வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் உள்ளடங்கலாக மற்றும் மீனவ சமுதாய நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை திட்டமிட்டு செயற்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்ட நடவடிக்கைகளில் இணைப்பாளராக செயற்பட்டது என்பவையும் உள்ளடங்கும்.

**திரு.பிரியந்த ஜயவர்த்தன**
**பணிப்பாளர்**

2012 ஆகஸ்ட் 06 அன்று ஜனாதிபதி சட்டத்தரணி திரு பிரியந்த ஜயவர்த்தன சபைக்கு நியமனம் பெற்றார்.

உயர் நீதிமன்றின் சட்டத்தரணியான திரு.ஜயவர்த்தன 1993இல் ஐ.இராச்சிய ஸ்காட்லார்ந்தின் அபர்டீன் பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தகவியல் சட்டத்திற்கான பட்டப்பின்படிப்பு பட்டத்தைப் பெற்றுள்ளார்.

1993இல் லண்டன் கொலிஜ் ஒவ லோ இல் தகைமைபெற்ற சட்டத்தரணிகளின் transfer set ஐ பூர்த்தி செய்ததுடன் 1996இல் இங்கிலாந்து மற ்றும் வேல்ஸ் இல் சொலிசிடராக இணைத்துக் கொண்டார். 1999இல் தேசிய சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தின் வர்த்தகவியல் சட்டக் கல்வியை பூர்த்தி செய்தார். 2012 அக்டோபரில் திரு ஜயவர்த்தன ஜயவர்த்தன ஜனாதிபதி ஆலோசகராக நியமனம் பெற்றார்.

இலங்கை காப்புறுதி (2003 -2008) தேசிய பொறியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையம் (2001- 2004) தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம் 2006-2010 இலங்கை கட்டிடக் கலை நிறுவனம் (2003 - 2007) இலங்கை தகவல் தொழில் நுட்ப நிறுவனம் (2000-2003) மற்றும் இலங்கை செரமிக்ஸ் கம்பனி லிமிரெட் (2003 நாளதுவரை) போன்ற அனேக நிறுவனங்களில் சட்ட ஆலோசகராக இருந்துள்ளார்.

திரு ஜயவர்த்தன தனிப்பட்ட ரீதியிலும் வழக்கறிஞராக பணியாற்றியதுடன் அற்றோனி ஜெனரல் திணைக்களத்தில் அரச ஆலோசகராக சேவையாற்றுகின்றார். உணவு அமைச்சு உள்நாட்டு மற்றும் சர்வதேச வணிகமும் வர்த்தகமும் என்பவற்றிற்கு ஆலோசகராகவும் சட்டவாக்கங்களின்

# எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

பணிப்பாளர்கள் சபை

வரையில் பங்குபற்றுபவராகவும் இருக்கின்றார். இலங்கையின் ஆதன சட்டத்தின் ஆணையத்தின் அங்கத்தினராகவும் இலங்கையின் பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணையகத்தின் 2009- 2012 அங்கத்தினராகவும் இருக்கின்றார். மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் திணைக்களகத்தின் வருகை தரும் விரிவுரையாளராகவும் பரீட்சையாளராகவும் (2000 - 2004) இருந்திருக்கின்றார். (2000 - 2004இல்) இலங்கை சுற்றுலா மற்றும் ஹொட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் வருகை தரும் விரிவுரையாளராகவும் (2011 நாளதுவரை) இருக்கின்றார்.

**திரு. ஆர். எம். பி. ரத்நாயக்க**
**பணிப்பாளர்**

2013 மார்ச் 04 இல் பணிப்பாளராக நியமனம் பெற்றார். நிதி அமைச்சின் வெளியக மூலவள திணைக்களத்தின் பணிப்பாளராக இருக்கின்றார்.

நிதித் திட்டமிடல் அமைச்சின் வெளி வளத் திணைக்களப் பணிப்பாளராக திரு. ரத்நாயக்க 19 வருடங்களுக்கு மேலாக அரச சேவையில் ஈடுபட்டுள்ளார். 2013.03.04 இல் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளராக நியமனம் பெற்றார். அவர் பேராதெனிய பல்கலைக்கழக பொருளியல் / விவசாயம் ஆகிய துறைகளில் BSC கௌரவப் பட்டங்கள் பெற்றுள்ளார். பின்னர் நோர்வே விவசாய பல்கலைக்கழகத்தில் விவசாயம், இயற்கை வளம் தொடர்பாக டிப்ளோமா உட்பட்ட முதுமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

மேலும் அவர் தேசிய திட்டமிடல் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளராகவும், மனிதவள அபிவிருத்தி கிலாஸ்டர் பணிப்பாளராகவும், பிரதி பணிப்பாளர் பொறுப்பதிகாரியாகவும், வெளிக்கல வள திணைக்களத்தின் ஆசிய அபிவிருத்தி வங்கி பிரிவின் பணிப்பாளராகவும் இருந்துள்ளார். மேலும், அவர் அரச மருந்தக கூட்டுத்தாபனம், மகாவலி அதிகார சபை என்பவற்றில் சபை பணிப்பாளராகவும், தேசிய விஞ்ஞான நிறுவகத்தில் விஞ்ஞான, தொழில்நுட்ப கொள்கை ஆய்வுப் பிரிவில் ஆலோசனை சபை உறுப்பினராகவும், இருந்துள்ளதுடன், ஸ்லீடா நிறுவனத்தில் அழைப்பு ஆலோசகர் மற்றும் விரிவுரையாளராகவும், விவசாய ஆய்வு கொள்கை இலங்கை குழு உறுப்பினராகவும், கொழும்பு பல்கலைக்கழக வைத்தியப் பட்டபின்படிப்பு நிறுவன பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் இலங்கை தேசிய அகுவா

கல்ச்சர் அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளராகவும் இருந்துள்ளார்.

**செல்வி வை. எப். டீன்**
**சபையின் செயலாளர்**

யஸ்மின் பாத்திமா டீன் சட்டத்தரணியாகவும் நொத்தாரிஸ் பப்ளிக் ஆகவும் இருக்கின்றார். இவர் வங்கியின் சட்ட அதிகாரியாகவும் தேசேவ நிதி முகாமைத்துவ கம்பனி 1999இல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து காலத்திற்குக் காலம் கம்பனி செயலாளராகவும் 28 வருட அனுபவம் பெற்றிருக்கின்றார். 2013 பெப்ருவரி 01 இலிருந்து நடைமுறைக்கு வருமாறு வங்கியின் பணிப்பாளர் சபை செயலாளராக நியமனம் பெற்றார். 15 மே 2012 இலிருந்து 31 ஜெனவரி 2013 வரையும் சபைச் செயலாளராக இருந்தார். அவர் 01 பெப்ரவரி 2012இலிருந்து பணிப்பாளர் சபைச் செயலாளராக நிமிக்கப்பட்டார்.

## எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

பொது முகாமையாளர் / பி.ரதம நிறைவேற்று அதிகாரி

**எச்.எம். ஹென்னாயக்க பண்டார (பொது முகாமையாளர்/பி.நி.அ.)**

எச்.எம். ஹென்னாயக்க பண்டார வங்கியின் பொது முகாமையாளரும்/பி.நி.அ. ஆவார். இவர் வங்கியியல் மற்றும் நிதித் துறைகளில் பரவலான அனுபவமுள்ள சிரேஷ்ட பட்டயக் கணக்காளர் ஆவார். தற்போது இவர் இலங்கை தொழில்சார் வங்கியாளர்கள் சங்கத்தின் (APB) முன்னாள் தலைவராகவும் இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் (IBSL) பணிப்பாளராகவும் இருக்கின்றார். இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் சபை அங்கத்தினராகவும் இருக்கின்றார். இலங்கை நிதியியல் ஒம்பியுட்ஸ்மனின் பணிப்பாளராகவும் என்.எஸ்.பி நிதி முகாமைத்துவக் கம்பனியின் பணிப்பாளராகவும் பதவிகளை வகிக்கின்றார். உலக சேமிப்பு வங்கிகள் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபையின் அங்கத்தினராகவும் திரு.ஹென்னாயக்க பதவி வகிக்கின்றார்.

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் கவுன்சில் அங்கத்தினராகவும், இலங்கைக் கணக்கு மற்றும் கணக்காய்வு நியமங்களைக் கண்காணிக்கும் சபையின் சபை அங்கத்தினராகவும், இலங்கை உயர்தர தொழில் நுட்ப கல்வி நிறுவனத்தின் (SLIATE) சபை அங்கத்தவராயும் பதவிகளை வகிக்கின்றனர். அத்துடன் தென்னாசிய கணக்காளர் சம்மேளனத்தின் (SAFA) வர்த்தகத்தின் தொழில்சார் கணக்காளர்களின் தொழில்நுட்ப ஆலோசகராகவும் குழு அங்கத்தினராகவும் இருக்கின்றார். இலங்கையின் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் சங்கத்தின் (AATL) அடுத்து வந்த முன்னால் தலைவராகவும் இருந்துள்ளார்.

வங்கியியல், நிதி மற்றும் குத்தகை குறித்த தூண்டுதல் பொதியின் செயற்பாடுகளுடன் தொடர்பான, பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் விசேட அனுமதிப் பத்திரம் பெற்ற லீஸிங் கம்பனிகள் போன்றவற்றின் வங்கி நிதி மற்றும் லீஸிங் துறைகளுக்கு தூண்டுதலும், ஊக்குவிப்பும் வழங்கும் வங்கியியல், நிதியும் குத்தகையும் தொழிலின் திட்டத்தை அமுல்ப்படுத்த மத்திய வாங்கியினால் நியமிக்கப்பட்ட நிபுனர் குழுவில் உறுப்பினராகவும் இருக்கின்றார். மேலும், அவர் இலங்கை CMA நிறுவனத்தினால் வழங்கிய Excellence in Business Management விருதையும் பெற்றுள்ளார்.

திரு. ஹென்னாயக்க பண்டார ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பி.கொம் விசேட பட்டதாரியாகக் காணப்படுவதுடன், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் அங்கத்தவராகவும், இலங்கை Institute of Certified Management Accountants of Sri Lanka, மற்றும் Association of Accounting Technicians of Sri Lanka ஆகியவற்றில் கௌரவ உறுப்பினராகவும் உள்ளதுடன், இலங்கை தொழில்நுட்ப கல்லூரிகளின் கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா பெற்றுள்ளார்.

## எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

### நிறுவன முகாமைத்துவக் குழு



1



2





5



6



7

1. **எச்.எம்.ஹென்னாயக்க பண்டார** – பொது முகாமையாளர் / பிநிஅ
2. **ரி.எம்.கே.பண்டார** – மேலதிக பொது முகாமையாளர் (மனிதவள மற்றும் நிர்வாகம்)
3. **எஸ்.டீ.என்.பெரேரா** – சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (செயலாற்பாடு, கடன் மற்றும் தகவல் தொழில்நுட்பம்)
4. **கே.ரவீந்திரன்** – பிரதிப் பொது முகாமையாளர் (கணக்காய்வு)
5. **ஜே.கே.கமநாயக்க** – பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல் மற்றும் வைப்புத் திரட்டல்கள்)

## எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

நிறுவன முகாமைத்துவக் குழு



3



4





8



9

6. **திருமதி ரீ.எம்.சமரசிங்க** – பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)
7. **கே.பீ.விஜேரத்ன** – பிரதிப் பொது முகாமையாளர் (நிதி மற்றும் திட்டமிடல்)
8. **திருமதி ஏ. ஜயசிங்க** – பிரதிப் பொது முகாமையாளர் (கிளை நிர்வாகம்)
9. **ஆர்.எம்.குணதிலக** – இடர் மற்றும் இணங்குவிப்பு

## எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

நிறைவேற்று முகாமைத்துவக் குழு



1



2





5



6



1. **ஆர்.சீ.குணரத்ன** – உதவி பொது முகாமையாளர் (பாதுகாப்பு)
2. **செல்வி சீ.எஸ்.ஜேசுடீன்** – உதவி பொது முகாமையாளர் (கருத்திட்ட நிதி மற்றும் கடன் முகாமைத்துவம்)
3. **திருமதி பீ.பீ.ஜே.குணசேகர** – உதவி பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவம்)
4. **ஈ.எம்.எம்.ஜீ.ஏக்கநாயக்க** – உதவி பொது முகாமையாளர் (செயற்பாடுகள்)
5. **ஏ.சீ.கமகே** – உதவி பொது முகாமையாளர் (கடன்)

## எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

நிறைவேற்று முகாமைத்துவக் குழு



3



4



7



8



9

6. **எம்.பீ.ஏ.டபிள்யூ.பீரிஸ்** –உதவி பொது முகாமையாளர் (சர்வதேச வங்கி)
7. **திருமதி ஜீ.வீ.ஏ.டீ.டீ.சில்வா** – உதவி பொது முகாமையாளர் (நிதி)
8. **பீ.ஏ.அபேசூரிய** – உதவி பொது முகாமையாளர் (ததொ)
9. **செல்வி வை.எப்.டீன்** – சபையின் செயலாளர்

## எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

### சிரேஷ்ட முகாமையாளர்கள்

**பிராந்திய முகாமையாளர்கள்**

யூ.எஸ்.றபீக் - கிழக்கு
ரீ.எல்.கு.விஜேரத்ன சப்ரகமுவ
ஜே.எம்.செனவிரத்ன பண்டார - வட மேல்
பீ.வத்துஹேவா மேற்கு 1
வீ.அருளானந்தம் - வடக்கு
திருமதி எச்.ஆர்.சில்வா - மேற்கு 3
கே.கே.வீ.எல்.டபிள்யூ.கருநாதிலக - மத்திய
எஸ்.என்.பீ.எம்.குணவர்தன - தெற்கு
திருமதி ஈ.டீ.சீதா - மேற்கு 2
திருமதி எம்.கௌரவவன்ச - வட மத்திய
எம்.ரீ.ஏ.ஜே.எப்.கோமஸ் - ஊவா

**செயற்படுத்தல்**

எஸ்.எச்.எம்.முபாறக் - முகாமையாளர் - நகரம்
ரீ.எம்.டீ.ஜீ.டீ. டி அல்விஸ் முகாமையாளர் - களுத்துறை
திருமதி கே.பீ.டி.எம்.டி சில்வா - முகாமையாளர் *Postal Administration*
பீ.எச்.அந்திராஹெனெ்னதி - முகாமையாளர் - மாத்தறை
வீ.வீ.கிரேசன் - முகாமையாளர் - மட்டக்களப்பு
திருமதி எம்.எஸ்.எஸ்.பொ்னாந்து - முகாமையாளர் - தலைமை அலுவலகம்
ஜே.ஏ.யூ.கமகே - முகாமையாளர் - குருநாகல்
திருமதி டபிள்யூ.ஏ.எஸ்.குணசேகர - முகாமையாளர் - நுகேகொட
ஏ.எல்.ஏ.ஹலீம் - முகாமையாளர் - கிருலப்பனை
திருமதி பீ.கே.ஜீ.பீ.எம்.கருணாரத்ன - முகாமையாளர் - கண்டி 2
திருமதி ஜீ.பீ.நாணயக்கார - முகாமையாளர் - ஹோமாகம
எம்.ஏ.எம்.நவாஸ் - முகாமையாளர் - காலி
பீ.ரீ.ஏ.பெரேரா - முகாமையாளர் - வெள்ளவத்தை
திருமதி பீ.புஞ்சிபண்டார - முகாமையாளர் - கண்டி
ஆர்.பீ.ஜே.ராஜபக்ஷ - முகாமையாளர் - அனுராதபுரம்
திருமதி ஆர்.ஏ.என்.என்.விஜேசிங்க - கிளை நிர்வாகப் பிரிவு

**IT மற்றும் இணைந்த சேவைகள்**

கே.எம்.டபிள்யூ.எம்.கருணாரத்ன - வளவுகள்
பீ.எஸ்.வசந்ததிலக - தகவல் தொழில்நுட்பம்
ஜே.ஏ.ஏ.எஸ்.எல்.சோமரத்ன - தகவல் தொழில்நுட்பம்
ஜீ.எம்.எஸ்.பீ.பொ்னாந்து - தகவல் தொழில்நுட்பம்
திருமதி டபிள்யூ.பீ.யூ.ஏ. டி சில்வா - அட்டை நிலையம்

**சர்வதேச மற்றும் கடன்**

திருமதி எஸ்.டபிள்யூ.குணசேகர - கடன்
திருமதி டீ.ஜீ.பீ.செனவிரத்ன - அறவீடுகள்
எச்.எம்.ஜீ.பீ.ஜே.ஹேரத் - சர்வதேச வங்கியியல்
திருமதி எஸ்.ஆர்.லியனகே - கடன்

**கணக்காய்வு**

டபிள்யூ.பியரத்ன - கணக்காய்வு
டீ.என்.ஜே.கே.கமகே - கணக்காய்வு

**மனித வள அபிவிருத்தி**

திருமதி எம்.வை.குணசேகர - மனித வளம்
கே.எஸ்.வீரசேன - பயிற்சி
திருமதி ஏ.பீ.சமரநாயக்க - மனித வளம்
திருமதி பொ்னாந்து எம்.என்.ஏ - மனித வளம்

**நிதி திட்டமிடல்**

திருமதி எஸ்.ஏ.பீ.எம்.பண்டாரநாயக்க - ஓய்வூதியங்கள்
திருமதி எம்.ஏ.கோமஸ் - திட்டமிடல்

## எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

### சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகளுக்கான நிறுவன ஆட்சி மீதான 2007இன் 12ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புரைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நல்லாட்சிக்கான அரசாங்க பொறுக்கு முயற்சிகள் வழிகாட்டலின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வங்கியின் சபை கணக்காய்வுக் குழு (BAC) நியமிக்கப்பட்டுள்ளதுடன் சபை கணக்காய்வுக் குழு உள்ளடங்கலாக சபையினால் நியமிக்கப்பட்ட நான்கு குழுக்களை ஒவ்வொரு வங்கியும் ஏற்படுத்த வேண்டும் எனவும் பணித்துள்ளது. அத்துடன் சொல்லப்பட்ட பணிப்புரையின் பிரிவு 3 (6) (ii) இன் கீழ் சபை கணக்காய்வுக் குழுவிற்கு பிரயோகிக்கப்படும் விதிகளையும் குறிப்பிட்டுள்ளது.

சுயாதீனமுள்ளவர்களான வங்கியின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் மூவரைக் கொண்டதாக குழு உள்ளது. 2012இன் போது குழுவில் பின்வரும் பணிப்பாளர்கள் சேவையாற்றினர்.

1) திரு. லயனல் பீ பெர்னாந்து
   - குழுத் தலைவர் (7.08.2012 தொடக்கம்)

2) திரு.பீ.ஏ.அபேசேகர
   - உறுப்பினர் (22.08.2012 தொடக்கம், 28.02.2013 இல் ஓய்வு)

3) திரு.ஆர்.எம்.பீ.ரத்நாயக்க
   - உறுப்பினர் (04.03.2013 தொடக்கம்)

4) திரு. சுமித் விஜேசிங்க
   - உறுப்பினர் (17.08.2012 தொடக்கம்)

5) திரு. ஷான் சன்முகநாதன்
   - குழுத் தலைவர் (10.08.2012 வரை)

6) திரு. ஹேமா மாதிவெல
   - உறுப்பினர் (18.05.2012 வரை)

7) திரு. ஆர்.ஏ.பீ.ரணவக்க
   - உறுப்பினர் (10.08.2012 வரை)

**கூட்டங்கள்**

2012 டிசெம்பர் 31இல் முடிவடைந்த நிதி ஆண்டின்போது 5 குழு கூட்டங்கள் நடைபெற்றன. அதற்கான விளக்கங்கள் பின்வருமாறு:

| | வருகை தந்த குழு அங்கத்தினர்கள் | | |
|---|---|---|---|
| திகதி | திரு.ஷான் சண்முகநாதன் | திரு.ஹேமா மாதிவெல | திரு.ஆர்.ஏ.பீ ரணவக்க |
| 2012 ஜனவரி 27 | ✓ | ✓ | ✓ |
| 2012 பெப்ரவரி 24 | ✓ | ✓ | ✓ |
| | திரு.லயனல் பீ பெர்னாந்து | திரு.பீ.ஏ அபேசேகர | திரு.சுமித் விஜேசிங்க |
| 2012 செப்டம்பர் 25 | ✓ | ✓ | ✓ |
| 2012 ஒக்டோபர் 09 | ✓ | ✓ | ✓ |
| 2012 நவம்பர் 22 | ✓ | ✓ | ✓ |

✓ வருகை

குழுவின் செயலாளராக பிரதி பொது முகாமையாளர் (கணக்காய்வு) செயற்படுவார். குழுக் கூட்டங்களுக்கு சிரேஷ்ட முகாமைத்துவத்தின் அங்கத்தினர்களும்

## எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

### சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

அழைக்கப்பட்டு வருகை தருவார்கள். அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர் அவதானிப்பாளராக கூட்டங்களில் கிரமமாக கலந்து கொள்வார்.

**சபை கணக்காய்வுக் குழுவின் பட்டயம்**

சபைக் கணக்காய்வுக் குழுவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு அமைவாக குழு செயற்பட்டது. பட்டயத்திற்கு அமைவாக பணிப்பாளர் சபையின் மேற்பார்வைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கு உதவுவதாக குழுவின் மேற்கெல்லை இருந்தது.

அ. வங்கியின் நிதிக்கூற்றுக்கள் நேர்மையானவையாக இருப்பது

ஆ. வங்கியின் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் நற்பயனுடையவையாக இருப்பது

இ. வங்கியின் வெளியக கணக்காய்வு நடவடிக்கைகளின் செயற்பாடுகள்

ஈ. வங்கியின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளின் செயற்பாடுகள்.

குழுவின் செயற்பாடுகள் பொறுப்புகள் அதிகாரங்கள் குறித்தும் பட்டயம் குறிப்பிடுகின்றது. குழுவின் செயற்பாடுகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுதலின் போது பட்டயத்துடன் குழு இணக்கமாகச் செயற்படுவதை மதிப்பீடு செய்வதற்கு உதவும் முகமாக பட்டய சரிபார்த்தல் பட்டியல் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**உள்ளக கணக்காய்வுப் பட்டயம்**

உள்ளக கணக்காய்வு தனது கடமைகளை திறமையாகவும் சுயாதீனமாகவும் நிறைவேற்ற உதவும் வகையில் உள்ளக கணக்காய்வுப் பட்டயம் பயன்படுத்தப்பட்டது. உள்ளகக் கணக்காய்வின் நோக்கெல்லை நடவடிக்கைகள் பொறுப்புகள் அதிகாரங்கள் அறிவிக்கும் நடைமுறைகள் மற்றும் சுயாதீனமும் நோக்கமும் என்பவற்றையும் பட்டயம் உள்ளடக்கியுள்ளது.

**ஆண்டின் போதான நடவடிக்கைகள்**

2012ஆம் ஆண்டின்போது பின்வரும் நடவடிக்கைகளில் குழு ஈடுபட்டது.

1. ஜனவரி 2012இலும் நவம்பர் 2012இலும் முறையே நடாத்தப்பட்ட குழு கூட்டத்தில் 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளுக்கான நடவடிக்கைத் திட்டம் அங்கீகரிக்கப் பட்டது.

2. 2011ஆம் ஆண்டில் குழுவின் நடவடிக்கைகளும் அதன் பொழிப்புரைகளும் நிறைவேற்றப்படும் போது பட்டயத்துடன் இணங்குவிப்பாக செயற்படுகின்றதை சரிபார்த்தல் பட்டயத்தை மீளாய்வு செய்தது.

3. 2011இற்கான சுயமதிப்பீட்டு வழிகாட்டலை கலந்துரையாடி பூர்த்தி செய்தது.

4. 2011 டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டின் மற்றும் 2012 செப்ரெம்பர் 30 காலாண்டில் முடிவடைந்த நிதியியல் கூற்றுக்களையும் மீளாய்வு செய்ததுடன் பணிப்பாளர் சபைக்கு இக் கூற்றுக்களை சமர்ப்பிக்குமாறும் பரிந்துரை செய்தது.

5. கணக்காய்வும் கண்காணிப்பும் பிரிவின் செயலாற்றல்களை மீளாய்வு செய்தது.

6. வங்கியின் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தது.

## எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

### சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

7. 2012ஆம் ஆண்டின் அரசாங்க கணக்காய்வின் தன்மையையும் நோக்கெல்லையையும் மீளாய்வு செய்ததுடன் கலந்துரையாடியது.

8. கணக்காய்வு மற்றும் கண்காணிப்புப் பிரிவின் சிரேஷ்ட கணக்காய்வு பணியாட் தொகுதியினரின் செயலாற்றல் மதிப்பீடுகளை மீளாய்வு செய்தது.

9. உள்ளக கணக்காய்வு கண்டுபிடிப்புகளை மீளாய்வு செய்தது. உள்ளகக் கணக்காய்சு அறிக்கைகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவதானிக்கப்பட்ட இக் குறைபாடுகளைச் சரிப்படுத்த பிரிவுத் தலைவர்கள் மற்றும் கிளைகளினால் மேற்கொள்ளப்பட்ட சரிபடுத்தல் நடவடிக்கைகள் என்பவற்றையும் குழு கருத்தில் கொண்டது.

10. மோசடி மற்றும் ஒழுங்கற்ற நடவடிக்கைகள் குறித்த உள்ளக புலன் விசாரணைகளின் சுருக்கத்தையும் அதன் மீது முகாமைத்துவம் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் மீளாய்வு செய்தது.

11. வெளியிலிருந்து கூலிக்கு அமர்த்தப்படும் கணக்காய்வு தகவல் அமைப்பு முறைமையையும் (system) தொடர்ச்சியாக கவனித்தது.

12. கணக்காய்வும் கண்காணிப்பும் பிரிவின் மனித வலுவின் தேவைகளையும் பணியாட் தொகுதியினரின் விடயங்களையும் மீளாய்வு செய்தது.

### வெளியகக் கணக்காய்வு

அரசாங்க நியமங்களுக்கு அமைவாக, வங்கியின் வெளியகக் கணக்காய்வாளராக கணக்காய்வாளர் தலைமை அதிபதி இருக்கின்றார். அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர் அழைப்பின் பேரில் குழுக் கூட்டங்களில் அவதானிப்பாளராக கலந்து கொள்வார். 2012 இல் வெளியக கணக்காய்வின் தன்மையையும் நோக்கங்களையும் குழு மீளாய்வு செய்து கலந்துரையாடியது. குழுக்கூட்டங்களின் போது வெளியக கணக்காய்வாளாரினால் கண்டுபிடிக்கப்பட்டவற்றைக் கலந்துரையாடுவதற்கு வெளியக கணக்காய்வாளர் அழைக்கப்படுவார். கணக்காய்வு நோக்கத்திற்காக வெளியக கணக்காய்வாளருக்கு தேவைப்படும் தகவல்கள் மற்றும் ஆவணங்கள் அனைத்திற்குமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதை குழு உறுதி செய்யும்.

### அறிக்கையிடல்

கூட்ட அறிக்கைகளுடன் சேர்த்து அதன் நடவடிக்கைகளை குழு பணிப்பாளர் சபைக்கு நேரடியாக அறிவிக்கும்.

கூட்ட அறிக்கைகளுடன் சேர்த்து அதன் நடவடிக்கைகளைக் குழு பணிப்பாளர் சபைக்கு நேரடியாக அறிவிக்கும்.

குழுவின் குறிப்புகளுக்கு அமைவாக அனைத்து முக்கிய விடயங்களும் உட்சேர்க்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளதாக குழு கருதுகின்றது.



**லயனல் பி. பர்னான்டோ**
(தலைவர் - சபை கணக்காய்வு குழு)

கொழும்பு

28 மார்ச் 2013

**எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்**

மனிதவளங்களும் ஊதியங்களும் குழு அறிக்கை

பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டதும் அவர்களுக்குப் பொறுப்புடையதுமான மனித வளங்களும் ஊதியங்களும் குழு மூன்று நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் களையும் (தலைவர் உள்ளடங்கலாக)இரண்டு சுயாதீன பணிப்பாளர்களையும் கொண்டிருக்கும்.

1. திரு. சுனில் எஸ் சிறிசேன தலைவர் சுஅ/நிஅஅ பணிப்பாளர் 17.08.2012 இலிருந்து
2. திரு பி.ஏ. அபேசேகர அங்கத்தினர் சு.ப /நிஅஅ பணிப்பாளர்

   22.8.2012இல் மீள நியமிக்கப்பட்டு 2013.02.28இல் பதவியிலிருந்து ஓய்வு
3. திரு ஆர்.எம்.பி. ரட்ணாயக்க - அங்கத்தினர் சு.ப /நிஅஅ பணிப்பாளர் (04.03.2013 முதல்)
4. திரு பிரியந்த ஜயவர்த்தன - அங்கத்தினர் சு.ப / நிஅஅ பணிப்பாளர் (17.08.2012 முதல்)
5. திரு. பி.ஜி.எஸ். காரியவசம் சுஅ.ப /நிஅப பணிப்பாளர் (21.05.2012 வரை)
6. திரு.எஸ்.டீ.அபயகுணவர்த்தன அங்கத்தினர் சு.ப / பணியாற்றுப் பணிப்பாளர் (18.05.2012 வரையிலும்

நி.அ.அ. ப : நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

சு.ப : சுயாதீனமற்ற பணிப்பாளர்

சு.அ.ப : சுயாதீனமற்ற பணிப்பாளர்

கூட்டு ஒப்பந்தத்தினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியங்கள் தவிர்ந்த வங்கியின் பணிப்பாளர்கள் முக்கிய முகாமைத்துவப் பதவிகளில் உள்ள ஆளணியினர் தொடர்பான ஊதியத் தொகையைத் தீர்மானிப்பதற்கு குழு பொறுப்பாகவுள்ளது.

முக்கியமான மனிதவளக் கொள்கைகள் முயற்சிகள் ஊதியக் கட்டமைப்புகள் பணியாளர் மற்றும் சிரேஷ்ட நிறைவேற்று மட்டத்திலான விதிகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தையும் குழு மீளாய்வு செய்யும். இந் நடைமுறையின்போது பொ.மு. / மற்றும் பிரதி பொது முகாமையாளர் மனித வள அபிவிருத்தி ஆகியோரின் அவசியமான தகவல்களும் பரிந்துரைகளும் பெற்றுக் கொள்ளப்படும்.

குழு கூட்டங்கள்

2012 டிசெம்பர் 31இல் முடிவடைந்த நிதி ஆண்டின்போது மனித வளங்களும் ஊதியங்களும் குழுவின் கூட்டம் நடத்தப்பட்டன. மீளாய்வின் கீழ்வரும் ஆண்டில் ம.வ.அ. குழு பின்வரும் விடயங்களில் ஈடுபட்டது.

(i) 2012 - 2014 இற்கான கூட்டு ஒப்பந்தங்களுக்கு ஐந்து தொழிற்சங்கங்களிடமிருந்தும் முன் வைக்கப்பட்ட பிரேரணைகள் மீளாய்வு செய்யப்பட்டது.

(ii) வங்கியின் கிளை துறை முழுவதிலும் உள்ள முகாமையாளர்கள் மற்றும் தரம் இரண்டு அதிகாரிகளும் தொடர்பான பகுப்பாய்வுகள் முக்கியமாக அவர்களின் வயது மற்றும் ஓய்வூதியத் திகதி என்பன மீளாய்வு செய்யப்பட்டன.

(iii) வங்கியின் கிளை துறைக்கு பின் அமர்வாளர்கள் திட்டம் ஒனறைத் தயாரிப்பதற்கு உப குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

(iv) விற்பனை அலுவலர்களை நிரந்தரப் பதவியில் உள்வாங்குவதற்கான விடயங்கள் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டது.

(v) அந்தரங்கச் செயலாளர வகுப்பு ஒன்றிற்கான பதவிகளுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. (சிங்களம் / ஆங்கிலம்)

(vi) 2012ஆம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்ட பதவிகள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் கலந்துரையாடவும் பட்டன.



**சுனில் எஸ் சிறிசேன**
தலைவர் - சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு

கொழும்பு
மார்ச் 28 .2013.

## எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு அறிக்கை

**ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை**

தேசிய சேமிப்பு வங்கியின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழு 3 நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களையும், நிறுவன முகாமைத்துவ அங்கத்தினர் களையும் உறுப்பினர்கள் மற்றும் இணங்குவிப்பு அதிகாரி ஆகியோரையும் கொண்டிருக்கும்.

இடர் மற்றும் இணங்குவிப்பு தலைவர் குழுவின் செயலாளராக செயற்படுவார்.

ஆண்டறிக்கையின் 57ஆம் பக்கத்தில் அங்கத்தினர்களின் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள் சபையினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆலோசனை களிற்கு அமைவாக பின்வருபவை உள்ளடக்கப்பட்டுள்ளன:

இடர் முகாமைத்துவம் தொடர்பான அதன் பொறுப்புகளை நிறைவேற்றுவது குறித்து பணிப் பாளர்கள் சபைக்கு ஆலோசனை வழங்குவது.

• சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கொள்கையை செயற்படுத் துவதுடன், வங்கியின் அகன்ற இடர் முகாமைத்துவக் கட்டமைப்பை காலத்திற்குக் காலம் நாளதற்குக் கொண்டுவருதல்.

• வங்கியினால் முகங் கொடுக்கப்பட வேண்டியுள்ள அனைத்து கடன், சந்தை செயற்பாட்டு மற்றும் மூலோபாய இடர்கள் அனைத்தும் அடையாளம் காணப்பட்டு கண்காணிக்கப்பட்டு போதுமான அளவில் முகாமைத்துவம் செய்யப்படுவதை உறுதி செய்வது.

முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடன் மிக நெருக்கமாகப் பணியாற்றுவதுடன் குழுவிற்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் பொறுப்பு கட்டமைப்பிற்குள் சபைக்கு பரிந்துரைகள் செய்வது.

இடர் முகாமைத்துவப் பிரிவின் பட்டயமும் பொறுப்புக்களும்

பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக இடர் முகாமைத்துவப் பிரிவு அதன் ஆணையின் கீழ்வரும் விடயங்கள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு, ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவிற்கு தேவைப்படும் ஆலோசனைகளுக்கும் பரிந்துரைகளுக்கும் அவசியமான தகவல்களைத் தயாரிப்பதிலும் ஒப்பீடு செய்வதிலும் ஈடுபடும். இந்த ஆவணங்கள் முன்னராகவே அங்கத்தினர்களுக்கு வழங்கப்படும். இந்த ஆண்டறிக்கையின் இடர் முகாமைத்துவப் பகுதியில் இடர்கள் முகாமைத்துவம் செய்யப்படும் நடைமுறை குறித்து விரிவாகத் தரப்பட்டுள்ளது.

ஆண்டிற்கான ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு கூட்டங்கள்

காலாண்டு அடிப்படையில் ஒருங்கிணைப்பு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் கூடும். 5 முறை ஆண்டின் போது தே.சே.வ சுட்டங்களை கூட்டியது. இந்த ஆண்டறிக்கையின் 61ஆம் பக்கத்தில் கூட்டங்களில் பங்கேற்ற குழுவின் அங்கத்தினர்களின் பட்டியல் தரப்பட்டுள்ளது. கூட்டங்களின் கூட்ட அறிக்கைகளும் இடர் அறிக்கைகளும் கிரமமாக சபைக்கு அளிக்கப்படும்.

இடர் முகாமைத்துவப் பட்டயமும் அழுத்த பரிசோதனைக் கொள்கையும் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பும் எதிர்கால நடவடிக்கைகளும் உள்ளக கட்டுப்பாடுகள் போன்றவற்றைப் பரீட்சித்தல் மற்றும் அழுத்தப் பரிசோதனையூடாக இடர் மீளாய்வுகள் முக்கிய இடர் குறிகாட்டிகள் மற்றும் முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் என்பவற்றை குழு மீளாய்வு செய்தது. மேலும் இணங்குவிப்பு கொள்கை மீளாய்வு நிறுவன ஆளுமையும் ஒழுங்கமைப்பு வரைச்சட்டமும் உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்களின் இணங்குவிப்பு அளவும் அரச பரீட்சித்தலின் முன்னேற்றம் என்பவையும் இக் கூட்டங்கள் அனைத்திலும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன் வங்கியின் இடர் முகாமைத்தவம் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து திருப்தியுமடைந்தது.



**டி.எல்.பி.ஆர். அபேரட்ன**
தலைவர் - ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு

கொழும்பு
28 மார்ச் 2013

## எமது பாரம்பரியத்தில் வேரூன்றினோம்

நியமகக்குழு அறிக்கை

வங்கியின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட சுயாதீனமான பணிப்பாளர்களை நியமனங்கள் குழு உள்ளடக்கும். பின்வரும் பணிப்பாளர்கள் நியமனக் குழுவில் சேவையாற்றுகின்றனர்:

திரு.பி.ஏ. அபேசேகர - தலைவர் - (சுயாதீனம்)/ (நிறைவேற்றதிகாரமற்ற) பணிப்பாளர் (2013.02.28 வரை)

திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க - தலைவர் (சுயாதீனம்)/(நிறைவேற்றதிகாரமற்ற) (2013.03.04 வரை)

திரு.எச்.மெதிவல (சுயாதீனம்)/ (நிறைவேற்றதிகாரமற்ற) -(2012.05.18 வரை)

திரு.எஸ்.டீ. அபயகுணவர்த்தன (சுயாதீனம் )/(நிறைவேற்றதிகாரமற்ற)

திரு சுமித் விஜயசிங்க (சுயாதீனம்)/ (நிறைவேற்றதிகாரமற்ற) -(2012.08.17 வரை)

பிரதி பொது முகாமையாளர்) (ம.வ.அ.) குழுவின் செயலாளராகச் செயற்படுவார்.

பி.நி.அ மற்றும் முக்கிய முகாமைத்துவ பதவி நியமனத்திற்கு அல்லது பதவியுயர்விற்கு தேவைப்படும் தகைமைகளை (தகைமை அனுபவம் போன்றவை) குழு நிர்ணயிக்கும் என்பதுடன் பி.நி.அ வும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரும் இப் பதவிகளை ஏற்பதற்கு தகுதியும் சரியானவர்களுமாக இருப்பதையும் உறுதிசெய்யும். மேலும் மேலதிகமாயும் அல்லது புதிய திறமையாளர்கள் தேவையையும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் ஓய்வு பெறும்போது தொடர் அமர்வாளரை ஏற்படுத்துவதற்கான ஒழுங்கு களையும் குழு ஆராய்வதுடன் காலத்திற்குக் காலம் பணிப்பாளர் சபைக்கும் பரிந்துரைக்கும்.

குழுவின் நோக்கெல்லையின் கீழ் முக்கியமான விடயங்கள் எவையும் வரவில்லை யாதலால் மீளாய்வின் கீழ்வரும் ஆண்டின்போது நியமனங்கள் குழு கூடவில்லை.

**எஸ்.டி. அபேகுணவர்த்தன**
தலைவருக்காக - நியமனங்கள் குழு

கொழும்பு
மார்ச் 28 2013


RISK

# அத்தியாயம் 4

எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்

இடர் முகாமைத்துவம்

## எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்

### இடர் முகாமைத்துவம்

இடர் முகாமைத்துவதிற்கு ஒன்றுடன் ஒன்று தொடர்புபடட அனேக காரணிகளின் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறை ஒன்று தேவைப்படுகின்றது. நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்கு மூலோபாயம், கட்டமைப்பு, கொள்கைகளும் நடைமுறைகளும், நடவடிக்கைகள் போன்ற செயற்பாடுகள் யாவும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டவையாகவும், ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டவையாகவும் இருக்கின்றன. வங்கியில் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ (IRM) வரைச் சட்டம் ஒன்றை நிறுவுவதற்குத் தேவைப்படும் தூண்களாக, முகாமைத்துவ அணுகுமுறை. கலாசாரம் மற்றும் நிறுவன ரீதியான மாற்றங்களுக்கு பொருத்தமான சூழ்நிலையை அபிவிருத்தி செய்வது, கொள்கை மற்றும் கட்டமைப்ப அடிப்படையிலான அமைப்பு முறைமைகளும் நடைமுறைகளும், இடர் அடையாளம் காணுவது மற்றும் அறிக்கையிடுவது போன்றவை இத் தூண்களாக இருக்கின்றன. மேலும், ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவத்தின் ஆதரமாக முன்னுரிமை தீர்வுகளை எடுப்பதற்கும், சீரமைக்கப்பட்ட தீர்மானங்களை எடுப்பதற்கும் உதவியாக நிதி நிறுவனமொன்றின் அனைத்து மட்டங்களிலும் ஏற்படக் கூடிய உத்தேச இடர்கள் மதிப்பிடப்படுவதுடன், பின்னர் அவற்றின் விளைவுகள் நிறுவன மட்டத்தில் கூட்டாக கணக்கிடப்படுகின்றன.

புத்தாக்கங்களை உருவாக்கும் துணை நடவடிக்கைகள், அனுகூலமான செயற்பாட்டு பெறுவேறுகள், மற்றும் கொந்தளிப்பான நேரங்களின் போது உறுதியான நிலைப்பாட்டில் இருப்பது என்பவற்றின் ஊடாக ஏற்றுக் கொள்ளக் கூடிய இடர் மட்டத்தில் நிறுவனத்தின் இலக்ககளின் அனுகூலத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் நிறுவனம் ஒன்று பொறுப்பு வாய்ந்த ஸ்தாபனம் ஒன்றாக தேசிய ஈடுபாடுகளில் நீண்டகால ஒழுங்கு முறையான உறுதிப்பாட்டிலும், இணங்குவிப்பிலும் அவதானிப்புடன் இருப்பதை ஒழுங்கமைப்பாளர்களுக்கு அடையாளம் காண்பிக்க உதவ வேண்டும்.

### இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு

வங்கியின் செயற்பாடுகளை உறுதி செய்வதற்கு போதுமான மேற்பார்வைக்கும், அதன் தன்மைக்கும், சிக்கலுக்கும் இயற்கையான இடர்களுக்குமேற்ப முரண்பாடற்ற இடர்முகாமைத்துவக் கட்டமைப்பு ஒன்றை நிறுவுவதற்கான முயற்சிகளை வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது. கீழே தரப்பட்டுள்ள பிரதான பொறுப்புக்கள் அனைத்தும் வங்கி முழுவதிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**ஒ.இ.மு.கு.** - ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு
**ச.க.கு.** - சபைக் கணக்காய்வுக் குழு
**நி.இ.மு.கு.** - நிறைவேற்று இடர் முகாமைத்துவக் குழு
**சொ.மு.பி.** - சொத்து முகாமைத்துவக் பிரிவு
**இ.மு.பி.** - இடர் முகாமைத்துவப் பிரிவு
**செ.மு.பிர.நிதி.** - செயற்பாட்டு முகாமைத்துவ பிரதிநிதி
**ம.அ.** - மத்திய அலுவலகர்
**க.இ.மு.அ.** - கடன் இடர் முகாமைத்துவ அலகு



# எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்

இடர் முகாமைத்துவம்

### இடர்களை அடையாளம் காணுவது, அளவிடுவது, குறைப்பது, கண்காணிப்பது மற்றும் அறிக்கையிடுவது

வங்கி, சபையின் அங்கீகாரத்துடன் அடிப்படை இடர் அடையாளம் மற்றும் அளவீட்டு நுட்பங்களை ஆண்டின் போது நிறுவியுள்ளது. முக்கிய செயற்பாட்டுக் குறிகாட்டிகள் (KPI), முக்கிய இடர் குறிகாட்டிகள் (KRI), அழுத்த பரிசோதனைகள், எம்ஐஎஸ், இடர் மீளாய்வு, போட்டியாளர் பகுப்பாய்வு, கட்டுப்பாட்டு பரீட்சைகள், கட்டமைப்புக்களை சீர்படுத்தல் போன்றவை இந் நுட்பங்களில் உள்ளடங்குவதுடன், இடர் அளவீட்டிற்கும், குறைப்பதற்குமான அளவு கோலாகவும் இருக்கின்றன.

முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் (KPI) முக்கிய இடர் குறிகாட்டிகள் (KRI) அழுத்த பரிசோதனைகள், எம்ஐஎஸ் இடர் மீளாய்வு போட்டியாளர் பகுப்பாய்வு, கட்டமைப்பு முன்னேற்றம் போன்ற அடிப்படை இடர் அடையாளங்களையும், அளவீட்டு செயன்முறைகளையும் சபையின் அங்கீகாரத்துடன் வங்கி நிறுவியது. மீளாய்வின் கீழ் வரும் காலத்தின் போது இடர் அளவீடுகளுக்கான வழிகாட்டியாகவும் குறைப்பிற்கான அளவீடுகளாகவும் பயன்படுத்தப்பட்டன.

இலாபத்தின் தன்மைக்கேற்ப (வட்டி வருமானமும் செலவும்) கடன் பிரதிகூலமான வகைப்படுத்தலின் கீழ் செயற்படாத கடன்கள் மாற்றப்பட்டது. செயற்படும் கடன்களை செயற்படாத கடன்களுக்கு மாற்றியது. ஏற்பாடுகளின் அதிகரிப்பினால் ஏற்பட்ட தாக்கம் போன்றவை வட்டியும், திரவத் தன்மையும் (அரசாங்க பிணையங்கள், வைப்புக்கள், கடன் வழங்கும் வீதங்களின் வட்டி வீதங்களின் மாற்றங்களும், பொறுப்புக்களின் முதிர்வு விபரத் திரட்டல் மாற்றம் போன்றவையும்) மேந்தலைகளின் மாற்றங்களினால் உருவான பிரதிகூலமான தாக்கங்களும் போன்ற 10 இற்கும் மேற்பட்ட அழுத்த நிலைமைகளுக்கு உட்பட்ட அழுத்த பரிசோதனைக் கொள்கைகளுக்கு ஆண்டின் போது சபை அங்கீகாரமளித்தது. முக்கிய செயற்பாட்டு குறிகாட்டிகள்இலாபத்தன்மை, செயற்பாட்டுத் திறனாற்றல், சொத்துக்களின் தரம் என்பவற்றையும் முக்கிய இடர் குறிகாட்டிகள் உத்தேச இடர்த் துறைகள் உள்ளடங்களாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கட்டமைப்பையும் சந்தை நிலைமைகளையும் மேந்தலைகள் போன்றவற்றையும் உள்ளடக்குகின்றன.

எம்ஐஎஸ் (MIS) அபிவிருத்தி செய்யப்படுவதுடன், ஒரு இடர் அடையாளப்படுத்தலாகவும், கண்காணிப்புக் கொள்கையாகவும், நடைமுறைத் தீர்மானமாகவும் தொடர்புடைய முகாமைத்துவக் குழுக்களுடன் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

சந்தை நிலவரங்களை நிச்சயப்படுத்துவதற்காக வங்கித் தொழிலுடன் தனது செயலாற்றல்களை ஒப்பிட்டுப் பார்ப்பதிலும் வங்கி ஈடுபடுகின்றது.

### மூலோபாய இடர்

பலவீனமான மூலோபாயத்திட்டமிடல் நடைமுறைகள் காரணமாக உருவான வங்கித் தொழிலின் மாற்றங்களுக்கான பிரதிபலிப்புக்களில் நிலவிய குறைபாடு, நடைமுறையும் அல்லது எதிர்பார்க்கப்பட்டதுமான வருவாய்கள் அல்லது மூலதனங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் மூலோபாய வழிகாட்டல்களிலும், முக்கிய காரணங்களிலும் நிலவிய அவதானிப்புக்களின் குறைபாடு என்பவை பிரதிகூலமான வர்த்தக தீர்மானங்களிலிருந்து உருவாகும் நட்டங்களினால் ஏற்படக் கூடியவை என மூலோபாய இடரில் வரையறை செய்யப்பட்டுள்ளது.

மூலோபாய இலக்குகளையும் நோக்கங்களையும் எய்த முடியும்போது சபையும் நிறுவன முகாமைத்துவமும் மேற்கொள்ளும் சுற்றாடல் ஆய்வுகளினூடாக வங்கி மூலோபாய இடரை அடையாளம் காணுகின்றது. சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் பட்டயங்கள் இடர் மீளாய்வு அறிக்கைகள் இடர் தாங்கும் மட்டங்கள் போன்றவற்றின் வழிகாட்டல்கள் மூலோபாய இடரை அடையாளம் காணுவதற்கு பயன்படுத்தப்படுகின்றன. காட்சி பகுப்பாய்வு அழுத்தப் பரிசோதனைகள் என்பவை இது தொடர்பாக பயன்படுத்தப்படும் கருவிகளாக உள்ளன.

சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவ கொள்கை, திறைசேரி மற்றும் சொத்துக்களும் பொறுப்புக்களும் முகாமைத்துவக் கொள்கை முதலீட்டுக் கொள்கை, மனிதவளக் கொள்கை, வணிகர்களுக்கான நடத்தை விதிகள், பயிற்சிக் கொள்கை, வெளியிலிருந்து வாடகைக்குப் பெறும் கொள்கை (Out sources) மற்றும் செயற்பாட்டு மட்ட குழுக்களுக்கான பட்டயங்கள் அனைத்தும் மூலோபாய இடரை குறைப்பதற்கு ஏற்றவாறு உள்ளன.

குறிப்பு: இடர் முகாமைத்துவ அறிக்கையியல் தரப்பட்டுள்ள, அனைத்து இலக்கங்களும், தரவு அட்டவணைகளும் வரைபடங்களும் விசேடமாக குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் அமைந்துள்ளன.

சொத்துக்களின் தொகுப்பில், நிதியியல் முதலீடுகள் பிரதானமாக உள்ளடங்குகின்றது. மொத்த சொத்துக்களின் 62% முதிர்விற்காக பிடித்து வைக்கப்பட்டுள்ளது.

### மூலதனப் பகிர்வு

திவாலடைவதற்கு முன்னர், வங்கியினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான நட்டத் தொகையை உள்வாங்கிக் கொள்வதற்கு வங்கிக்கு உள்ள தகுதிகளாகவுள்ள திறமையை மூலதனத்திற்கான இடர் நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் விகிதம் என அறியப்படும் மூலதன போதுமை வீதம் அளவீடு செய்யும் கடன் சந்தை மற்றும் செயற்பாட்டு இடர்களிலிருந்து உருவாகும் ஒழுங்கமைப்பு வழிகாட்டல்களில் தங்கியுள்ள இடர்மட்டங்களுக்கு அமைவாக சொத்துக்கள் நிறையிடப்படும்.

மூலதன போதுமை வீதங்கள் வைப்பாளர்களை பாதுகாப்பதுடன், நிதி ஒழுங்கமைப்பின் ஸ்திரத்தன்மையையும் திறனாற்றலையும் உயர்த்துவதாகவும் இருக்கும்.

சொத்துக்களும், பொறுப்புக்களும் முகாமைத்துவ (ALCO) குழுவிற்குத் தலைமை தாங்கும் பொது முகாமையாளர்/பி.நி.அ மற்றும் நிறுவன முகாமைத்துவக் குழு என்பவை சொத்துப் பகிர்வு, விலையிடல், திரவத் தன்மை மூலோபாய முதலீடு போன்றவற்றை மீளாய்வு செய்வதுடன் தீர்மானங்களும் எடுக்கும்.

1955இன் 33ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1988இன் 30ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் 76 (ஜே) (1) பிரிவின் தேவைகளுக்கேற்ப தேசேவ அதன் மூலதனப்போதுமையை ஒழுங்காக அளவிடுவதுடன் பேணவும் செய்கின்றது. ஒழுங்கமைப்புத் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப வங்கி மிகக் குறைந்த அடிப்படை மூலதன வீதமாக 5%ஐயும் மொத்த இடர் நிறையேற்றப்பட்ட மூலதன வீதமாக 10%ஐயும் அனைத்து நேரங்களிலும் பேண வேண்டும்.

மீளாய்வின் கீழ்வரும் காலத்தில், வங்கியினால் எடுக்கப்படும் இடர் மட்டத்தைக் கண்காணிக்கும் நோக்கத்துடன் இடர் தாங்கும் மட்டங்களை அறிமுகப்படுத்தியது. 2011ஆம் ஆண்டின் உண்மையான செயற்பாடுகள் மீதான முக்கிய செயற்பாட்டு அளவைகளுடன் பின்வரும் இடர் தாங்கும் மட்டங்கள் ஒப்பிடப்பட்டன.

# எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்

இடர் முகாமைத்துவம்

**சொத்துக்களின் உள்ளடக்கம்**




சொத்துக்களின் தொகுப்பில், நிதியியல் முதலீடுகள் பிரதானமாக உள்ளடங்குகின்றது. மொத்த சொத்துக்களின் 62% முதிர்விற்காக பிடித்து வைக்கப்பட்டுள்ளது.

### மூலதனப் பகிர்வு

திவாலடைவதற்கு முன்னர், வங்கியினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான நட்டத் தொகையை உள்வாங்கிக் கொள்வதற்கு வங்கிக்கு உள்ள தகுதிகளாகவுள்ள திறமையை மூலதனத்திற்கான இடர் நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் விகிதம் என அறியப்படும் மூலதன போதுமை வீதம் அளவீடு செய்யும். கடன் சந்தை மற்றும் செயற்பாட்டு இடர்களிலிருந்து உருவாகும் ஒழுங்கமைப்பு வழிகாட்டல்களில் தங்கியுள்ள இடர்மட்டங்களுக்கு அமைவாக சொத்துக்கள் நிறையிடப்படும்.

மூலதன போதுமை வீதங்கள் வைப்பாளர்களை பாதுகாப்பதுடன், நிதி ஒழுங்கமைப்பின் ஸ்திரத்தன்மையையும் திறனாற்றலையும் உயர்த்துவதாகவும் இருக்கும்.

சொத்துக்களும், பொறுப்புக்களும் முகாமைத்துவ (ALCO) குழுவிற்குத் தலைமை தாங்கும் பொது முகாமையாளர்/பி.நி.அ மற்றும் நிறுவன முகாமைத்துவக் குழு என்பவை சொத்துப் பகிர்வு, விலையிடல், திரவத் தன்மை மூலோபாய முதலீடு போன்றவற்றை மீளாய்வு செய்வதுடன் தீர்மானங்களும் எடுக்கும்.

1955இன் 33ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1988இன் 30ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் 76 (ஜே) (1) பிரிவின் தேவைகளுக்கேற்ப தேசேவ அதன் மூலதனப்போதுமையை ஒழுங்காக அளவிடுவதுடன் பேணவும் செய்கின்றது.

ஒழுங்கமைப்புத் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப வங்கி மிகக் குறைந்த அடிப்படை மூலதன வீதமாக 5%ஐயும் மொத்த இடர் நிறையேற்றப்பட்ட மூலதன வீதமாக 10%ஐயும் அனைத்து நேரங்களிலும் பேண வேண்டும்.

மீளாய்வின் கீழ்வரும் காலத்தில், வங்கியினால் எடுக்கப்படும் இடர் மட்டத்தைக் கண்காணிக்கும் நோக்கத்துடன் இடர் தாங்கும் மட்டங்களை அறிமுகப்படுத்தியது. 2011ஆம் ஆண்டின் உண்மையான செயற்பாடுகள் மீதான முக்கிய செயற்பாட்டு அளவைகளுடன் பின்வரும் இடர் தாங்கும் மட்டங்கள் ஒப்பிடப்பட்டன.

# எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்

## இடர் முகாமைத்துவம்

| வகை | ரூபா மில். | ரூபா மில். |
|---|---|---|
| வழங்கப்பட்ட பங்கு மூலதனம்/பொது வைப்பு | 3,200.0 | |
| சட்டபூர்வ ஒதுக்கு நிதி | 1,626.5 | |
| பொது மற்றும் ஏனைய ஒதுக்குகள் | 17,766.2 | |
| குறைத்தல்: கழிதல் (அடுக்கு I) | (2,466.6) | |
| மைய மூலதனம் (அடுக்கு I) | | 20,126.1 |
| மிகை மூலதனம் (அடுக்கு I) | | 1,286.1 |
| குறைத்தல்: கழிதல் (அடுக்கு I) | | (1,180.5) |
| அடுக்கு II மூலதனம் | | 0.0 |
| மூலதனத் தளம் | | 18,945.7 |
| | | |
| கடன் இடருக்கான குறைந்த மூலதனக் கொடுப்பனவு | 5,394.3 | |
| சந்தை இடருக்கான குறைந்த மூலதனக் கொடுப்பனவு | 1,392.8 | |
| செயற்பாட்டு இடருக்கான குறைந்த மூலதனக் கொடுப்பனவு | 2,403.8 | |
| | | |
| கடன் இருக்கான இடர் நிறையேற்றப்பட்ட தொகை | 53,942.7 | |
| சந்தை இருக்கான இடர் நிறையேற்றப்பட்ட தொகை | 13,927.9 | |
| செயற்பாட்டு இருக்கான இடர் நிறையேற்றப்பட்ட தொகை | 24,038.3 | |
| மொத்த இடர் நிறையேற்றப்பட்ட தொகை | | 91,909.0 |
| | | |
| மைய மூலதனம் (அடுக்கு I) விகிதம் (ஆகக்குறைந்த தேவை 5%) | | 21.90 |
| மொத்த மூலதனம் (அடுக்கு II) விகிதம் (ஆகக்குறைந்த தேவை 10%) | | 20.61 |

### வங்கியின் மூலதனப் போதுமை விகிதத்தின் போக்கு



## எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்

இடர் முகாமைத்துவம்

### மூலதனப் போதுமையின் வலு

அழுத்த நிலைமைகள் கீழே தரப்பட்டுள்ளன. மேலும் இடர் அதிர்வுகளை உள்வாங்கிக் கொள்ளப்படுவதை உறுதி செய்யும் வகையில் மூலதன போதுமை வீதத்தின் அழுத்த நிலைமையின் உணர்வுகள் காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றன. சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அழுத்தப் பரிசோதனைகளின் கீழ் கணக்கிடப்பட்ட முக்கியமான விபரங்களின் படியும் அடுக்கு ஐ மற்றும் அடுக்கு ஐஐ மூலதன போதுமை விகிதங்கள் இரண்டும் மிகக் குறைந்த ஒழுங்கமைப்பு தேவைப்பாட்டிற்கும் மிக அதிகமாகவே இருக்கின்றது.

| இடர் வகை | அழுத்தக் காட்சி பகுப்பாய்வு |
|---|---|
| கடன் இடர் | செயற்படாக் கடன்களின் அதிகரிப்பு (NPLs) மற்றும் தொடர்புடைய ஏற்பாடுகள் |
| சந்தை இடர் | |
| - வட்டி வீத இடர் | அரச பிணையங்களின் சராசரி இலாபத்திற்கும் 12மாதங்களை விட குறைந்த நி.வை.கள் மற்றும் சேமிப்புக்களுக்குமிடையிலான வித்தியாசத்தில் ஏற்பட்ட மாற்றம். |
| - திரவதன்மையான இடர் | 03 மாதங்கள் கொடு கடன்களைச் செலுத்துவதற்கான திரவ வட்டி வருமான சொத்துக்களின் விளைவு |
| செயற்பாட்டு இடர் | தரப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் கீழ் இடர் நிறையேற்றப்பட்ட சொத்து |

கீழே கொடுக்கப்பட்டுள்ள இந்த அட்டவணையானது அழுத்த பரிசோதனையுடன் ஒப்பிடும்போது வங்கியின் மூலதனப் போதுமை விகிதத்தின் நிலைமையை சாராம்சமாக காட்டுகின்றது.

**அழுத்தப் பரிசோதனை பெறுபேறுகளும் மூலதன படுக்கையும்**

| இடர் வகை | சாதாரணநடை முறையிலுள்ள வழிமுறையின் கீழ் - | அழுத்த பகுப்பாய்வு கணக்கீட்டின் மீதான சாத்தியமான மூலதன தேய்வு | மூலதனத் தேயீவின் பின்னர் இடர் நிறையேற்-றப்பட்ட சொத்துக்கள் |
|---|---:|---:|---:|
| கடன் இடர் (ரூ. மில்லியன் ) | 53,943 | 7,132 | 61,074 |
| சந்தை இடர் (ரூ. மில்லியன் ) | 13,928 | 3,182 | 17,110 |
| செயற்பாட்டு இடர் (ரூ. மில்லியன் ) | 24,038 | 5,442 | 29,480 |
| திரவ இடர் (ரூ. மில்லியன் ) | | 1,423 | 1,423 |
| மொத்தம் (ரூ. மில்லியன் ) | 91,909 | 17,179 | 109,088 |
| மூலதன நிதி .. (ரூ. மில்லியன் ) | 18,946 | - | 18,946 |
| மூலதன போதுமை விகிதம் (%) - அடுக்கு II | 20.61 | - | 17.37 |
| மூலதன போதுமை விகிதத்தின் விளைவு (%) | – | 3.25 | – |

# எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்

இடர் முகாமைத்துவம்

## கடன் இடர்

முதல் நட்ட இடர் அல்லது கடன் ஒன்றை மீள அளிக்கத் தவறும் கடன் பெறுநரிடமிருந்து உருவாகும் நிதி பெறுகை அல்லது வேறு ஏதாகிலும் ஒப்பந்தக் கடப்பாடு என்பவை கடன் இடராகும். எப்போதாகிலும் கடன் பெறுநர் ஒருவர் நடப்பு கடன் ஒன்றைக் கொடுப்பனவு செய்வதற்கு எதிர்கால காசுப் பாய்ச்சலை பயன்படுத்தும்போது கடன் இடர் உருவாகின்றது. கடன் பெறுநர் அல்லது கடன் கடப்பாடு ஒன்றை வழங்கியுள்ளவர் ஒருவரிடமிருந்து வட்டீ கொடுப்பனவுகள் மூலம் முதலீட்டாளர்களின் கடன் இடர் நட்டம் ஈடு செய்யப்படும். இது ஐயத் தொகையிலும் வெளியிலும் இருக்க முடியும்.

வங்கியொன்றின் ஸ்திரத்தன்மைக்கும் தொடர்ச்சியான இலாபத் தன்மைக்கும் உறுதியான கடன் இடர் முகாமைத்துவம் ஒரு முதல் தேவையாக இருக்கும். அதே சமயம் பஹீனமடைந்துவரும் நிதி செயலாற்றல் மற்றும் நிலமைக்கு சீர்கெட்டுவரும் கடனின் தரம் மிக முக்கியமான அடிக்கடி நிகழும் காரணமாயுள்ளது. கடன் இடரை விவேகமாக முகாமைத்துவம் செய்து செயற்பாட்டு இடரைக் குறைப்பதுடன் நியாயமான பெறுகைகளை பத்திரப்படுத்திக் கொள்ளவும் முடியுமாயிருக்கும்.

வங்கியினால் ஏற்படுத்தப்பட்டுள்ள கொள்கைகள் நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றுடன் கடன் வழங்கும் அதிகாரிகள் இணங்கி செயற்படுவதை உறுதிப்படுத்துவது இடரை முகாமைத்துவம் செய்யும் முதல்படியாகும். கடன் இடரின் ஏனைய துறைகளை மட்டுப்படுத்தும் அல்லது முகாமைத்துவம் செய்யும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் இருப்பதை உறுதி செய்வது இரண்டாவது படியாகவும் இருக்கும்.

தேசிய சேமிப்பு வங்கியில் சபையும், முகாமைத்துவமும், அவர்களின் வருடாந்த நடைமுறையின் ஒரு பகுதியாக, கடன் துறை கலவைக்கு இலக்குகளை அல்லது குறிக்கோள்களை ஏற்படுத்தும். சபையின் எதிர்பார்ப்புக்களை வங்கியின் செயலாற்றல்கள் சந்திக்கின்றதை தீர்மானிப்பதற்கும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வரையறைக்குள் இடர் மட்டங்கள் தொடர்ந்தும் இருப்பதற்கும், கடன்துறை இயங்கிக் கொண்டிருக்கும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றது. தரப்படுத்தப்பட்ட கொடுகடன் நடைமுறைகளை கடைப்பிடித்ததினால் transactional தவறுகளினால் ஏற்படும் இடரைக் குறைக்க முடிந்ததுடன் ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளுடனான இணங்குவிப்பையும் உறுதிப்படுத்த முடிந்தது. கடன் துறையின் தரத்தை கண்காணிப்பதற்காக முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் (KPIS) முக்கிய இடர் குறிகாட்டிகள் (KRIS) அழுத்தப் பரிசோதனைகள் துறைசார்ந்த மீளாய்வுகள் உள்ளகக் கட்டுப்பாட்டு மதிப்பீடுகள் போன்றவற்றிற்கு காலாண்டு பகுப்பாய்வுகள் பிரயோகிக்கப்படுகின்றன.

## கடன் இடர் அவா

வங்கி அது ஏற்றுக்கொள்ளவிரும்பும் இடர் அளவிற்கான மட்டத்தை நிர்ணயித்துள்ளதன் மூலம் கடன் இடரை முகாமைத்துவமும் கட்டுப்படுத்தலும் செய்கின்றதுடன், அத்தகைய மட்டங்கள் தொடர்பான பகிரங்கப்படுத்தலை கண்காணிக்கவும் செய்கின்றது. வங்கியின் இடர் அவா பணிப்பாளர் சபை நிர்ணயிப்பதுடன் கடன் துறை கண்காணிப்பு அளவீடுகளையும் மேற்கொள்கின்றது. இது தாங்கிக் கொள்ளக் கூடிய இடர் மட்டங்களை உள்ளடக்குகின்றது.

## கடன் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு

கடன் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கான கடன் இடர் முகாமைத்துவ செயன்முறைகளின் கட்டமைப்பு ஒன்றை வங்கி ஆரம்பித்துள்ளதுடன் தொடர்ச்சியாக அடையாளம் காணுவது, மதிப்பிடுவது, அளவிடுவது, விலையிடுவது கண்காணிப்பதும் கடன் இடரை முகாமைத்துவம் செய்வதும் என்பவற்றில் தொடர்ச்சியாக ஈடுபடுகின்றது.

கடன் இடரை கடன் இடர் முகாமைத்துவம் மற்றும் கடன் இடர் மீளாய்வு எனும் இரண்டு முக்கிய நடவடிக்கைகளை இடர் மற்றும் இணங்குவிப்பு பிரிவு மேற்கொள்கின்றது. கடன் இடர் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளாவன: ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவ கொள்கைக்கு அமைவாக பாரிய மற்றும் உயர்வான இடர் உள்ள கடன்களை அங்கீகரிப்பதற்கு முன்னர் மதிப்பீடு செய்வதில் ஈடுபடுவது இடரிலிருந்து புதிய கடன் வழங்கும் உற்பத்திகள் மீதான மதிப்பீடுகளும் கருத்துகளும் செயற்படாத கடன்கள் உள்ளடங்கலாக முக்கிய கடன் இடர் குறிகாட்டிகளை கண்காணிப்பது பணிப்பாளர் சபைக்கும் மற்றும் கடன் குழு (cc) சொத்துக்களும் பொறுப்புக்களும் முகாமைத்துவக் குழு (ALCO) போன்ற செயற் பாட்டு மட்டக் குழுக்களை கண்காணிப்பதும் அறிவிப்பதும் பல்வேறு கடன் வகைப்படுத்

## எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்

இடர் முகாமைத்துவம்

தற் துறைகளை மதிப்பீடு செய்வது, கடன் செயன் முறையை மதிப்பீடு செய்வது மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமைத் தன்மையும் சம்பந்தப்பட்ட சபைக்கும் செயற்பாட்டு மட்டக் குழுக்களுக்கும் கண்டுபிடிக்கப்பட்டவற்றையும் அவற்றிற் கான பரிந்துரைகளையும் அறிவிப்பதும் கடன் இடர் மீளாய்வு நடைமுறை யினால் மேற் கொள்ளப்படுகின்றன.

கடன் குழு அல்கோ நிறைவேற்று இடர் முகாமைத்துவக் குழு (ERMC) ஒருங்கி ணைந்த இடர் முகாமைத்துவக் குழு (IRMC) என்பவை கடன் இடர் மதிப்பீடுகளை மீளாய்வு செய்யும்.

செயற்பாட்டு மட்டத்தில் கடன் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வங்கி இடரும் இணங்குவிப்பும் பிரிவின் மேற்பார்வையின் கீழ் கடன் பிரிவிற்குள் கடன் இடர் முகாமைத்துவ கூற்றை CRMN வலுப்படுத்துவதுடன் வழிப்படுத்தவும் செய்யும்.

### வங்கியின் கடன் இடர் வெளிப்படுத்தல்

வங்கியின் மொத்த சொத்துக்களின் 33.1%மாக மொத்தக் கடன் வெளிப்படுத்தல் உள்ளது. இது வங்கியின் இரண்டாவது பாரிய வர்த்தகமாகும். (SLFRS) மீது மொத்த சொத்து அடிப்படையின் 62.0% இடரற்ற பிணையங்களின் மீது முதலிடப்பட்டது.) எனவே கடன் இடரை முக்கியமான ஒரு இடர் வகையாக வங்கி கருதிய போதும் ஒப்பீட்டளவில் கடன் இடரின் விசாலம் வங்கிக்கு குறைவாகவே உள்ளது.

இரண்டு பிரதான வகைப்படுத்தல்களிலிருந்து வங்கியின் கடன் வெளிப்படுத்தல் உருவாக்கப்பட்டுள்ளது. உதாரணமாக நிறுவனம் மற்றும் சிறு வர்த்தகக் கடன் பெறுநர்கள் அரசாங்கம் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் போன்றவற்றிற்கு வழங்கப்பட்ட "வங்கிகளுக்கான கொடுகடன்கள்" மற்றும் ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கொடுகடன்கள் என்பவையாகும்.

தேசேவ இன் கடன் இடர், ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கொடுகடனிலிருந்து பிரதானமாக உருவாகியது. இது மொத்த கடன் வெளிப்படுத்தலின் 92% மாகும். மரபு ரீதியான ஐந்தொகைக்குள் காலக் கடன்கள் தொகுதிக் கடன்கள் நம்பிக்கைச் சான்றிதழ்கள் மற்றும் பிணைய பத்திரங்கள் என்பவையும் ஐந்தொகைக்கு வெளியில் உத்தரவாதங்கள் மற்றும் முறிகள் மொத்த விற்பனை கொடுகடன்கள் வங்கிகளுக்கான கொடுகடன்கள் ஊடாக உருவாக்கப்பட்ட கடன் இடர்கள் என்பவையும் உதாரணமாக குறுங்காலக் கடன்கள், பிணையச் சாதனங்கள் நம்பிக்கைச் சீட்டுக்கள் முதலியவை மூலமாக வங்கிகளின் குறுங்கால மற்றும் நடுத்தரக் கால நிதி தேவைகள் எட்டப்பட்டன. மொத்த கடன் வெளிப்படுத்தலின் 8% இவை வெளிப்படுத்தின.

பிணைய மட்டத்தின் அடிப்படையிலான கடன்வெளிப்பாடுகளில் 90%மானவை பிணையக் கடன்களாகவும் 10% மானவை பிணையங்களற்ற கடன்களாகவும் காண்பிக்கப்பட்டன. கடன்களும் முற்பணங்களும் என்ற பிணைய வகையில் ஆதனங்களினால் கடன்கள் மிகப் பெரிய பங்கை (35%) பிரதிநிதித்துவப்படுத்தின. அத்துடன் தங்கத்தினால் அடகு பிடித்தல் இரண்டாவது பாரிய பகுதியை (34%) கொண்டிருந்தது. பிணைய கடன் துறையின் 13% னால் கடன் பிரதிநிதித்துவப்படுத்தியது.

**கடன் வெளிப்படுத்துகை-கடன் வகை சார்ந்தது (SLFRS அடிப்படையாக)**



**கடன்துறையை முகாமைத்துவம் செய்வது**
**துறை பகுப்பாய்வு**

வெவ்வேறு கடன் வகைப்படுத்தல்களிலும், கடன்துறை முழுவதிலும் உள்ள கடன் இடரை கண்காணிப்பதற்கு, கடன்துறை பகுப்பாய்வு வங்கிக்கு உதவுகின்றது. விளக்கமான இடர் மதிப்பீடுகளும் அவற்றைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளும் குறித்த முழுமையான அறிக்கைகள் இடர் முகாமைத்துவக் குழுவிற்கு அளிக்கப்படு கின்றது. கடன் துறை பகுப்பாய்வு ஒவ்வொரு சிறு வர்த்தக கடன் வகைப்படுத்தலினதும் நிறையேற்றப்பட்ட சராசரி வீதத்தின் கணிப்பீடு செயற்படாத கடன்களின் பகுப்பாய்வு சந்தை பெறுமதி அடிப்படையிலான பகுப்பாய்வு காப்புறுதி காப்பு மற்றும் தொழில் பகுப்பாய்வு என்பவற்றின் கீழ் சிறு வர்த்தகக் கடன் வெளிப்பாட்டின் இடர் மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. இவை ரீதி அளவு ரீதி என்பவற்றை முக்கிய அடிப்படைத் தளமாக கொண்டுள்ளன.

**கடன் வெளிப்படுத்துகை-பிணைய அடிப்படையில் (SLFRS அடிப்படையாக)**




**பிணைய கடன்களும் முற்பணங்களும்**



# எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்

இடர் முகாமைத்துவம்

**கடன் வெளிப்படுத்தலின் கால அடிப்படையிலான முறிவுகள்**




## கடன் துறையின் அவதானிப்பு

கடன் துறையின் வெளிப்பாட்டு அவதானிப்பு, கடன் இடரின் முக்கிய அம்சமாகும். அவதானிப்பு இடர் இரண்டு வகையான குறைபாடுள்ள திசை திரும்பல்களால் உருவாகலாம். முதலாவது வகையில் அவதானிப்பு இடர் எனும் பெயர் அதன் கடன் பெறுநர்களின் வெளிப்படுத்தலின் சமனற்ற பங்கீட்டின் விளைவாக எழலாம். இரண்டாவது வகை : துறை அவதானிப்பு இடராகும். இது குறிப்பிட்ட துறைகள், பிரதேசங்கள் தொழில்கள் அல்லது உற்பத்திகள் என்பவற்றின் வெளிப்படுத்தலின் சமனற்ற பங்கீட்டின் விளைவாக எழலாம். பெயர் அவதானிப்பு துறையின் நிறைவை விட குறைவானது என்பதைக் குறிக்கின்றது.

**மாகாண அடிப்படையில் கடன் செறிவு**



**கடன்களும் முற்பணங்களும் தொழில் ரீதியாக - வெளிப்படுத்துகை 2012**




அதே நேரம் துறைசார்ந்த அவதானிப்பு என்பது ஒன்றிற்கும் மேற்பட்ட அமைப்பு முறையான காரணிகளினால் தூண்டப்படுகின்றது.

கூட்டு ஒப்பந்தங்களை பயன்படுத்துவதன் ஊடாக இடரைக் குறைப்பதற்கான முறைகள் பிரயோகிக்கப்படுவதற்கு முன்னர் எதிர்தரப்பினர் மற்றும் தொழில் மூலமாக உச்ச கடன் இடரை வங்கி பகுப்பாய்வு செய்கின்றது. கடனின் ஒவ்வொரு வகைப்படுத்தலிலும் நிதிகளைத் திரட்டுவதால் மேல் மாகாணம் மிக உயர்வான சதவீதத்தைக் கொண்டுள்ளது என்பதனை கடன்களும் முற்பணங்களும் இன் புவியியல் பகுப்பாய்வு காட்டுகின்றது.

திரட்டப்பட்ட நிதியை, தொடர்புடைய மாகாணங்களூடாக கடன்களாக வங்கி பயன்படுத்துகின்றது. இந்த வீதங்கள் வங்கியின் கடன்களும் வைப்புக்களும் உடன் ஒத்ததாக இருக்கின்றன.

### கடன்களும் முற்பணங்களும் இன் தொழிற் பகுப்பாய்வு

வங்கியினால் நிதியிடப்பட்ட துறைகள் மத்தியில் 2012ஆம் ஆண்டில் அவதானிப்பு பாரிய துறையாக பிரதிநிதித்துவம் செய்ததை கடன் வெளிப்படுத்தலின் தொழில் ரீதியான வகைப்படுத்தல் சுட்டிக் காட்டியது. (SLAS வகைப்படுத்தலுக்கு அமைவாக 30.8% மாகவும் SLFRS வகைப்படுத்தலுக்கு அமைவாக 25.5% மாகவும் இருந்தது.)

### ஹேர்பின்டால் மற்றும் ஹரிமன் சுட்டெண் (HHI)

துறைசார்ந்த கடன் இடர் ஒன்றிற்கு முக்கிய ஓட்டுனராக அவதானிப்பு இருப்பதுடன், அவதானிப்பு இடரை அளவிடுவதற்கு நம்பகமான தரப்படுத்தலாகவும் HHI இருக்கின்றது. தொழிலுடன் தொடர்பு பட்ட நிறுவனத்தின் அளவை அல்லது மொத்த துறைகளுடன் தொடர்புபட்ட ஒரு துறையை HHI அறவிடுகின்றது. மொத்த கடன்களும் முற்பணங்களும் துறைக்கு துறைசார்ந்த வெளிப்பாட்டு HHI அளவீட்டை பிரயோகித்து HHI இன் பெறுபேறு 0 இலிருந்து 1.0 வீச்சாகவும் சில துறைகளிலிருந்து பெரும் எண்ணிக்கையான துறைகளுக்கு அசைவடைந்து பொதுவாக மிகக் குறைந்த பெறுமதியில் HHI குறிகாட்டி குறைந்த அவதானிப்பை சுட்டிக் காட்டலாம் என்பதுடன் சந்தையில் குறைந்த மட்டத்தில் போட்டிகளை ஒன்றுக்கொன்று ஏற்படுத்தலாம்.

2011இலிருந்து 2012 வரையிலும் அவதானித்தால் இடர் குறைந்துள்ளதை குறிகாட்டி காண்பிக்கின்றது. இது கடன் அவதானிப்பு இடரின் குறைந்த எல்லையில் வங்கியின் கடன் துறை இருப்பதை சுட்டிக் காட்டுகின்றது. பெருமளவிலான வாடிக்கையாளர் களுக்கு வீடமைப்புக் கடன்கள் மற்றும் அடகு பிடித்தல் போன்ற வளர்ச்சியடைந்து வரும் உற்பத்திகளை அளிப்பதனாலும் சந்தைப் பிணையங்களினால் அவை ஒட்டுமொத்த துறையிலும் அவதானிப்பு இடரின் தாக்கம் குறைவாகவேயுள்ளது.

### கடன் தரப்படுத்தல்

வங்கி கடன் தகைமை மீளாய்வு செயன்முறை ஒன்றை நிறுவியுள்ளதன் மூலம் கிரமமான கூட்டு மீள் திருத்தங்கள் உள்ளடங்கலாக எதிர்தரப்பினரின் கடன் தகைமைகளில் ஏற்படக் கூடிய மாற்றங்களை ஆரம்பத்திலேயே அடையாளம் காண்பதற்கு வழங்கியுள்ளது. கடன் பெறுநர்கள் இடர் விபரத் திரட்டினை மதிப்பீடு செய்வதற்கு வங்கித் தொழில் ஏற்றுக் கொள்ளக் கூடிய அலகுகளை நிறுவுவதற்கும் மொத்த கடன் துறையின்




ஒட்டு மொத்த தரத்தை கண்காணிப்பதற்கும் இவ்வசதி உதவியதுடன் ஏதாகிலும் கடன் இடரைக் குறைக்கவும் செய்தது.

ஐயத்திற்கிடமானது மற்றும் "நட்டம்" கணக்குகளுக்கு ஆண்டின்போது எடுக்கப்பட்ட அறவீட்டு நடவடிக்கைகளின் திறமைக்கும் பயனுக்கும் துறைசார்ந்த தொடுப்பின் அசைவு சான்றாகவுள்ளதை செயற்படாத கடன் வகைகளின் நடத்தையின் பகுப்பாய்வு காண்பிக்கின்றது.

### அழுத்தப் பரிசோதனை

கடன்பெறுநர்கள் செயற்படும் நிலைமைகளும் சுற்றாடலும் குறிப்பிடும்படியாக மாற்றமடையும்போது தனிப்பட்ட கடன்கள் மற்றும் ஒட்டுமொத்த கடன் துறையில் தவறாகக் கூடியது என்னவென்பதை பகுப்பாய்வு செய்வது கடன் தரத்தைப் பேணுவதற்கு ஒரு முக்கியமான மூலகமாகவுள்ளது. அதற்கமைய இடரும் இணங்குவிப்பும் பிரிவு கற்பனைக் காட்சிகளின் கீழ் இடர் தாங்கும் அளவிலிருந்து மாறுபாடுகளை அடையாளம் காணுவதற்கு செயற்படாத கடன்களை அழுத்தப் பரிசோதனை செய்துள்ளது. அத்தகைய அழுத்தப் பரிசோதனைகள் நெருக்கடியான நேரங்களில் உருவாகக் கூடிய கடன் இடர் வெளிப்படுத்தல்களுக்கு வாய்ப்பாகவுள்ள முன்னர் கண்டுபிடிக்கப்படாத பகுதிகளையும் புலப்படுத்தலாம்.

இப் பகுப்பாய்வுகளின் விளைவுகள் ஏற்பாடுகளின் போதுமை மதிப்பீடுகளினுள்ளும் வங்கியின் மூலதனத்திற்குள்ளும் கொண்டு வரப்பட வேண்டும். அழுத்தப் பரிசோதனைகளின் பெறுபேறுகளை சிரேஷ்ட முகாமைத்துவம் கிரமமாக மீளாய்வு செய்யும். அவ்வாறே வரையறைகளை நிர்ணயிப்பதற்கான பரிந்துரைகளைச் செய்வதற்கும் வங்கிக்கான ஏற்பாடுகளின் மட்டங்களுக்காகவும் கடன் இடர் முகாமைத்துவ கட்டமைப்பின் மீளாய்விற்குள் முக்கிய உள்ளீடாக இப் பெறுபேறுகள் எடுத்துக் கொள்ளப்படும்.

| கடன் வகைப்படுத்தல் | HHI 2011 | HHI 2012 |
|---|---|---|
| வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன் | 0.15899 | 0.10165 |
| வைப்புக்கள் மீதான கடன் | 0.02459 | 0.02446 |
| அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன் | 0.00000 | 0.00210 |
| அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் | 0.00000 | 0.00052 |
| அபிவிருத்தி நிதி கடன் | 0.00454 | 0.00268 |
| அடகுக் கடன் | 0.12083 | 0.13069 |
| தனிநபர் கடன் | 0.00030 | 0.00060 |
| முதலீட்டு நிதிக் கணக்கிலிருந்து கொடுக்கப்பட்ட கடன்கள் | 0.00000 | 0.00007 |
| ஏனையவை | 0.00015 | 0.00009 |
| | 0.30939 | 0.26288 |

## எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்

இடர் முகாமைத்துவம்






**எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்**

இடர் முகாமைத்துவம்

**செயற்படாக் கடன் வகை 2012**




**செயற்படாக் கடன் வகை 2012**



## எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்



**I). கடன் துறைக்கு வங்கி தற்போது செயற்படுத்தும் அழுத்தப் பரீட்சை காட்சிகள**
**செயற்பாடாக் கடன் வகைகளில் அசைவு 50%(ஏ), 80%(பி), 100%(சீ) ஆகும்.**

| | உண்மை 2012 | காட்சி 1 50% | காட்சி 2 80% | காட்சி 3 100% |
|---|---|---|---|---|
| PBT (ரூ. மில்லியன்) | 6,719 | 4,559 | 4,266 | 4,131 |
| தனிநபர் கடன் விளைவு (%) | 100 | 68 | 64 | 62 |
| வட்டி செலவு/வட்டி வருமானம் (%) | 79 | 83 | 84 | 84 |
| எல்லை(%) | 3.09 | 2.62 | 2.55 | 2.52 |
| ஜியரிங் (%) | 5.09 | 5.05 | 5.03 | 5.02 |

II).**(a) 10%, (b)15%, (C) 20% மற்றும் ஏற்பாடுகள் 50% செயற்படாக் கடன்களில் அதிகரித்துக் காணப்படுகிறது**

| | உண்மை 2012 | காட்சி 1 50% | காட்சி 2 80% | காட்சி 3 100% |
|---|---|---|---|---|
| PBT (ரூ. மில்லியன்) | 6,719 | 1,532 | (329) | (4,050) |
| தனிநபர் கடன் விளைவு (%) | 100 | 23 | (7) | (88) |
| வட்டி செலவு/வட்டி வருமானம் (%) | 79 | 81 | 81 | 83 |
| எல்லை (%) | 3.09 | 2.91 | 2.82 | 2.65 |
| ஜியரிங் (%) | 5.09 | 4.95 | 4.68 | 3.95 |

செயற்படாக் கடன்களை 10%இனால் செயற்படா கடன் தொகுதிக்கு மாற்றி, செயற்படா கடன் தொகுதியை நகர்த்தல் செயற்படா கடன் தொகுதி வேறுபட்ட வீதங்களால் அதிகரித்தல் இலாபத்தில் 50% ஒதுக்கை விட இலாபத்தில் குறைந்த தாக்கத்தை ஏற்படுத்தி இருப்பினும் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவது மிக அரிது காரணம் பாதுகாப்பான கடன் விதிமுறைகள், ஒழுங்குகள் ஆகியவற்றை பேணுவதாலாகும்.

III). **15%,மற்றும் 10%, வீதத்தால் அடகுத் துறையின் சந்தைப் பெறுமதி விழுமாயின் வங்கியின் மூலதனப் போதுமைக்கு தாக்கம் ஏற்படாது**

| விகிதம் | உண்மை 2012 | சந்தைப் பெறுமதி வீழ்ச்சி வரை 85% | 90% |
|---|---|---|---|
| மூபோவி % (அடுக்கு I) | 21.90 | 19.16 | 21.01 |
| மூபோவி % (அடுக்கு II) | 20.61 | 17.87 | 19.72 |

### கூட்டுப் பிணையங்களும் ஏனைய கடன் அதிகரிப்புகளும்

தேவைப்படும் கூட்டுப் பிணையத்தின் தொகையையும் வகையையும் மறுதரப்பினரின் கடன் இடர் மதிப்பீடு தீர்மானிக்கின்றது. வங்கிகளுக்கும் நிதி நிறுவனங்களுக்குமான கடன்கள் அவற்றின் கடன் தரப்படுத்தலின் அடிப்படையிலும் வர்தத்கக் கடன் கொடுப்பனவுகளுக்கு ஆதன பிணையங்கள் திறைசேரி உத்தரவாதங்கள் ஏதாகிலும் கூட்டுப் பிணையமாக பெறப்படுகின்றன. சிறு வர்தத்கக் கடன்களுக்கு குடியிருப்பு ஆரதனங்கள் தனிநபர் உத்தரவாதங்கள் தங்கம் மற்றும் காசு என்பவை ஈடாகப் பெறப்படுகின்றன. பெறுமதி குறைப்பு நட்டங்களின் அலவன்சுகளின் போதுமைத் தன்மையை மதிப்பிடுவதற்கு கூட்டுப் பிணையங்களின் சந்தைப் பெறுமதியையும் நடைமுறை விற்பனைப் பெறுமதியையும் முகாமைத்துவம் கண்காணிக்கின்றது. ஒரு ஒழுங்கு முறையில் மீள் உரித்துடைய ஆதனங்களை அகற்றும் தீர்மானத்தை எடுப்பதும் வெளிநிலுவையாகவுள்ள கோரல்களை அறவிடுவதற்கு அவற்றின் வருவாய் களைப் பயன்படுத்துவதும் வங்கியின் கொள்கையாகவிருக்கும். பொதுவான தொரு விதியாக வங்கி மீள் உரித்துடைய ஆதனங்களை வர்த்தகத் தேவைக்காக பயன்படுத்துவதில்லை.

### கடன் மீளாய்வுப் பொறிமுறை - LRM

கடன் புத்தகத்தின் தரத்தை அடிக்கடி உத்தேச மதிப்பீடு செய்வதற்கும் கடன் செயன்முறையில் தரமிக்க செம்மையாக்கல்களை கொண்டு வருவதற்கும் கடன் மீளாய்வுப் பொறிமுறை ஒரு பயனள்ள கருவியாக இருக்கின்றது. எனவே இடர் மற்றும் இணங்குவிப்புப் பிரிவு கடன் மீளாய்வுப் பொறிமுறை ஒன்றை அனைத்துக் கடன்களுக்கும் வரைவு செய்துள்ளது. அதற்கமைய கடன் செயன்முறையின் திறமையை உத்தேச மதிப்பீடு செய்வது கடன் தரப்படுத்தல் செயன்முறையின் நேர்மைத் தன்மையைப் பேணுவது கடன் நட்ட ஏற்பாட்டை மதிப்பீடு செய்வது துறைகளை மீளாய்வு செய்வது போன்ற பல்வேறு துறைகளுக்கும் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் அடுத்த ஆண்டில் கடன் மீளாய்வு பொறிமுறையை செயற்படுத்தவும் உத்தேசித்துள்ளது.

### கடன் இடர் குறிகாட்டிகள்

கடன் இடரும் அதனுடன் சேர்த்து வங்கியின் இடர் விபரத் திரட்டும் முக்கிய இடர் குறிகாட்டிகள் (KRLS) மற்றும் முக்கிய செயற்பாட்டு குறிகாட்டிகள் (KPIs) ஊடாக மதிப்பீடு செய்யப்படுகின்றன. செயற்படாத கடன்களும் செயற்படாத கடன்களுக்கான ஏற்பாடுகள், ஜய வட்டியை கண்காணித்தல், சந்தைப் பங்கை அடிப்படையாகக் கொண்ட பகுப்பாய்வு துறைகளின் வளர்ச்சி சொத்துப் பகிர்வு என்பவை முக்கிய செயற்பாட்டுக் குறிகாட்டிகளில் உள்ளடங்கும். பின்னர் இவை சபைக்கும் செயற்பாட்டு மட்டக் குழுக்களுக்கும் அறிவிக்கப்படும். இடர் மற்றும் இணங்குவிப்பு பிரிவு கடன் இடரைக் கண்காணிப்பதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும் ஆஜளு ஒன்றை அபிவிருத்தி செய்துள்ளதுடன் தொடர்புடைய சபைக் குழுக்களுக்கும் செயற்பாட்டு மட்ட குழுக்களுக்கும் கடன் தரவுகளை அறிவிப்பதற்காக சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு தரவுகள் தகவல்களை அளித்துள்ளது.

**வங்கிக்கும் மற்றய நிதி நிறுவனங்களுக்கும் கடன் வெளிப்படுத்தல் (வீத அடிப்படையில்)**



# எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்

இடர் முகாமைத்துவம்

## கடன் இடரைக் கண்காணித்தலும் குறைப்பதும் கட்டுப்படுத்துவதும்

கடன் இடர் கண்காணிப்பு எனும்போது வங்கியின் கட்டப்பாடுடையவர்களினதும் ஒட்டு மொத்த கடன் துறையினதும் ஐந்தொகைக்கு வெளியிலான வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக தனிப்பட்டவர்களின் கடன்களை தொடர்ச்சியாகக் கண்காணிப்பதாகும்.

சரியானதொரு கடன் கண்காணிப்பு முறை நாளுக்கு நாள் என்ற அடிப்படையில் கடன் துறையின் தரத்தைக் கண்காணிப்பதற்கு உதவும் என்பதுடன் கடன் பெறுநர் ஒருவரின் நிதியியல் ஆரோக்கியம் குறைவடைவதை எச்சரிக்கை சமிக்ஞைகள் சுட்டிக் காட்டும்போது உடனடியாக சரிப்படுத்தல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன எனும் அடித்தளத்தை வழங்குபவையாகவுமிருக்கும்.

வங்கியில் கடன் ஒழுக்கம், கடன் இடர், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு செயன்முறை என்பவை செயற்படுத்தப்படுகின்றன. தொடர்ச்சியான மீளாய்வு நடைமுறைகள் மற்றும் கண்காணிப்பு செயலாற்றல்கள் ஊடாக கடன் குழு மூலமாக கடன் செயன்முறையின் வழிப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

கடன் அளவை நிர்ணயித்தல், கடன் எதிர்பார்ப்புக்கள், பிணைய மதிப்பீடுகள், வெளிப்படுத்தல்கள் போன்ற கடன் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள் வதற்காக இடர் மற்றும் இணங்குவிப்பு பிரிவின் மேற்பார்வையின் கீழ் கடன் இடர் முகாமைத்துவக் கூறு (CRMU) வலுப்படுத்தப்பட்டு வழிபடுத்தற்படுவதற்கான நடவடிக்கையை வங்கி எடுத்துள்ளது. ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கொள்கைக்கு அமைவாக பாரிய மற்றும் உயர்வான இடர்கள் காணப்படும் கடன்களை அங்கீகரிப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் மட்டும் இடர் மற்றும் இணங்குவிப்பு பிரிவு ஆரம்பத்தில் ஈடுபட்டது.

## சந்தை இடர்

குறிப்பாக வட்டி வீதங்கள், வெளிநாட்டு நாணய வீதங்கள் மற்றும் பங்கு மூலதன விலைகள் என்பவற்றின் மாற்றங்களினால் சந்தை விலைகளில் ஏற்படும் அசைவுகளிலிருந்து வங்கியின் சந்தை இடர் உருவாகின்றது. சந்தை இடர் அதிகமாக, கடன் மற்றும் சந்தை திரவ இடர்கள் போன்ற வேறு வகையான நிதியியல் இடர்களினால் பரவலாக்கப்படுகின்றது. ஐந்தொகைக்குள்ளும் ஐந்தொகைக்கு வெளியிலும் நிகழும் நடவடிக்கைகளினால் நட்டங்களை ஏற்படுத்தும் இடர் உருவாகும்.

வங்கி ஒன்று அதன் சந்தை இடரை முகாமைத்துவம் செய்வதற்கு, வலுவானதும் நன்கு தகவல் அறிந்ததுமான மூலோபாயமொன்றை அபிவிருத்தி செய்யும் தேவை உள்ளது. நிறுவனம் பொறுப்பேற்கத் தயாராக இருக்கும் சந்தை இடர் மட்டத்தை மூலோபாயம் முதலில் தீர்மானிக்க வேண்டும். நிறுவனம் ஒதுக்கக் கூடிய சந்தை இடர் மூலதனத் தொகையுடன் ஏனைய காரணிகளையயும் கருத்திற் கொண்டு இந்த மட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

சந்தை இடர் தாங்கும் மட்டம் தீர்மானிக்கப்பட்ட பின்னர் வங்கி அதன் வர்த்தக இலக்குகளை சந்தை இடர் அவாவுடன் சமப்படுத்தும் மூலோபாயமொன்றை அபிவிருத்தி செய்ய வேண்டும். அத்தகைய மூலோபாய மொன்றை அபிவிருத்தி செய்யும் போது வங்கி பின்வரும் காரணிகளைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

- பொருளாதாரம் மற்றும் சந்தை நிலவரங்களும் சந்தை இடரில் அவற்றின் தாக்கமும்
- வங்கிக்கு குறிப்பிட்ட சந்தைகளில் இலாபமீட்டக் கூடியதாக உள்ளதா, மற்றும் அத்தகைய சந்தைகளின் சந்தை இடரை அடையாளம் காணும் கண்காணிக்கும் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்குமா என்பதும்
- வங்கியின் துறைசார்ந்த கலவையும் மேலதிக சந்தை இடர்கள் ஏற்படலாம் என உத்தேசிக்கப்படும்போது இவற்றிற்கு ஏற்படக் கூடிய பாதிப்புகளும

2012ஆம் ஆண்டின்போது, வெகுமதிகளின் அனுனுகூலங்களை அதிகரிக்கும் நோக்கத்துடன் சந்தை இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு ஒன்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை வங்கி எடுத்தது. சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் வழிகாட்டல்கள், இடர் அலகுகளும் மட்டங்களும் என்பவை ஊடாக இவ் வசதிகள் செய்யப்பட்டன. வங்கியின் ஒட்டு மொத்த இடர் முகாமைத்துவத்திற்கும் வங்கியின் இடர் முகாமைத்துவப் பிரிவு பொறுப்பேற்கின்றதுடன், உத்தேச மதிப்பீடு செய்யப்பட்ட இடர்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் முகாமைத்துவ (ALCO) நிறைவேற்று இடர் முகாமைத்துவக் குழு (ERMC) மற்றும் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக்குழு (IRMC) என்பவற்றிற்கு காலத்திற்குக் காலம் அறிக்கையிடப்படுகின்றது. சந்தை இடர் முகாமைத்துவத்தின் திறமையை முன்னேற்றுவதற்காக சுதந்திரமான திறைசேரி மத்திய நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வங்கியின் சந்தை இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு பின்வருமாறு




**வட்டி வீத இடர்**

பெறுகை வளைகோட்டின் வடிவில் அல்லது வேறு ஏதாகிலும் வட்டி வீத உறவில் இரண்டு வீதங்களுக்கும் இடையிலான பரவலாக்கத்தில் வட்டி வீதங்களின் மாற்ற முடியாத முழுமையான மட்டங்களில் முதலீட்டுப் பெறுமதியில் மாற்றத்தை ஏற்படுத்தும் இடர் வட்டிவீத இடர் எனப்படும். மொத்த ஐந்தொகை பொறுப்புக் களின் 94% ஐ பிரதிநிதித்துவப்படுத்தும் வைப்புக்கள் வங்கியின் முக்கிய நிதி ஆதாரமாகவுள்ளது. இதில் 24% சேமிப்பு வைப்புக்களாகவும் 76% நிலையான வைப்புக்களாகவும் இருக்கின்றன. மறு பக்கத்தில் மொத்த ஐந்தொகை சொத்துக் களின் 62% ஐயும் பிரதிநிதித்துவப்படுத்தும் வங்கியின் பெரும்பாண்மை யான முதலீடுகள் குறுகிய அல்லது நீண்டகால பிணையங்களில் முதலிடப்படுகின்றன. எனவே வங்கி பாரிய அளவில் வட்டி வீத இடருக்கு உள்ளாகின்றது. ஐந்தொகை பொறுப்புக்களினதும் வங்கியின் வைப்புக்களினதும் மொத்த தொகுப்பு (பக்கம் 127-135) மொத்த பொறுப்புகள் இடையே நிலையான வைப்புகளின் தொகுப்பு அதிகரித்துச் செல்லும் நோக்கினைக் காண்பித்ததாயினும் 2011இலிருந்து 2012 காலப்பகுதியில் அதன் வளர்ச்சி வீதம் குறைவாகவே காணப்பட்டது. இதன் விளைவாக வங்கி உயர்ந்த வட்டிச் செலவு ஒன்று

**பொறுப்புக்களின் உள்ளடக்கம்**




**மொத்த வைப்புகளின் உள்ளடக்கம்**



## எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்



ஏற்பட்ட காரணத்தால் தேறிய வட்டி எல்லை குறைவடைந்தது. சேமிப்பு வைப்புகளும் அதிகரித்துச் செல்லும் போக்கினைக் கொண்டிருந்ததாயினும் மெதுவான வீதத்தில் இருந்தது. எவ்வாறாயினும் ஏனைய பொறுப்புக்களின் நிலமையும் ரெப்போ கடன் பெறுகைகளும் ஏறக்குறைய அம்மாதிரியே தொடர்ந்துமிருந்தது.

### வட்டி வீத இடர் அளவீடும் வட்டிவீத இடர் குறிகாட்டிகளும்

வங்கியின் கணக்குப் புத்தகங்கள் மொத்த ஐந்தொகை சொத்துக்கள் 61% ஐ கொண்டுள்ளன. மறுபக்கத்தில் மொத்த ஐந்தொகை பொறுப்புக்களினதும் மற்றும் பங்குரிமைகளின் 86% ஐ வைப்புக்கள் கொண்டுள்ளன. எனவே பாரிய அளவில் இடர்களை மீள் விலையிட வேண்டிய தேவைக்கு வங்கி உள்ளாக்கப்பட்டுள்ளது. ஆகையால் வட்டி வீத இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கு ஏற்ற அக்கறையை வங்கி தருகின்றது. சந்தை இடர் காரணிகளை அல்கோ தொடர்ச்சியாக கண்காணிக்கின்றதுடன் உயர்ந்து செல்லும் வட்டி வீத இடவை முகாமைத்துவமும் செய்கின்றது. வீத உணர்வுள்ள சொத்துக்கள் மற்றும் வீத உணர்வுள்ள பொறுப்புகளின் அடிப்படையில் தயாரிக்கப்படும் வீத உணர்வு இடைவெளி வங்கியின் வட்டி வீத இடரை எதிர்வு கூறும் மற்றும் முகாமைத்துவம் செய்யும் முக்கிய கருவியாகப் பயன்படுத்தப்படும். இடைவெளி மற்றும் அடிப்படையில் அனுகூலமான மட்டத்தில் வட்டி வீத இடர்களை நிர்வகிப்பதற்கான தீர்மானங்களை அல்கோ எடுக்கும்.

வங்கியின் வட்டிவீத இடரை நிர்வகிக்கும் கருவிகளாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்வுகள் முக்கிய இடர் மற்றும் முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் என்பவையும் பாவிக்கப்படுகின்றன. வங்கியின் வட்டிவீத இடரை அளப்பதற்கும் வைப்பு வீதங்களின் நடத்தையை கண்காணிப்பதற்கும் வட்டி எல்லை மற்றும் நிறையேற்றப்பட்ட சராசரி வைப்பு வீதம் (AWDR) என்பவை முக்கிய இடர் குறிகாட்டிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. வங்கியின் வட்டி எல்லை குறைந்து செல்வும்போக்கைக் கொண்டிருந்தாலும் அதன் தேறிய வட்டி வருமானம் நிர்வகிக்கக் கூடியதாக இருப்பதை வீதங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

**விகித உணர்வு இடைவெளி** (ரூபா மில்லியன்)

| வகை | 1 மாதம் வரை | 1-3 மாதங்கள் | 3-6 மாதங்கள் | 6-12 மாதங்கள் | 1-3 வருடங்கள் | 3-5 வருடங்கள் | 5 வருடத் திற்கு மேல் |
|---|---|---|---|---|---|---|---|
| வீத உணர்வு சொத்து | 24,814 | 36,169 | 56,050 | 120,410 | 154,447 | 57,176 | 39,416 |
| வீத உணர்வு பொறுப்பு | 86,225 | 156,124 | 61,217 | 131,126 | 27,965 | 360 | 1,619 |
| கெப் | (61,411) | (119,955) | (5,167) | (10,716) | 126,482 | 56,816 | 37,797 |
| மொத்த பொறுப்பு களின் கெப் % | (71) | (77) | (8) | (8) | 452 | 15,782 | 2,335 |

**பொறுப்புக்களின் போக்கு**



# எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்



சொத்துக்களின் திசை திருப்பல்கள் எல்லைகளினதும் பெறப்பட்ட பெறுகைகளினதும் அடிப்படையில் அமைந்துள்ளன. உயர்ந்த எல்லைகளை உருவாக்கும் துறைகளுக்கு சொத்துக்களின் அந்தளவு பெரிய பங்கு ஒதுக்கப்படுகின்றது.

குறைவடைந்து செல்லும் போக்கைக் கொண்டிருந்தாலும் கடன்களும் முற்பணங் களிலான முதலீடுகள் மிக உயர்ந்த எல்லையைத் தருகின்றன. கடன்களும் முற்பணங்களினதும் எல்லைகள் மிகக் குறைவானவையாகவே உள்ளன. வங்கி களுக்கும் ஏனைய நிதி நிறுவனங்களுக்குமான கடன்களின் வட்டி எல்லை 2011இலிருந்து 2012வரை அதிகரித்துள்ளது. அதே நேரம் அரசாங்க முதலீடுகளிலி ருந்தான எல்லை குறைவடைந்துள்ளது. எவ்வாறாயினும் 2012 மூன்றாவது காலாண்டுடன் ஒப்பிடும்போது நான்காவது காலாண்டின் அனைத்து வகையானவற் றிலிருந்து எல்லை மிகச் சிறிய அளவில் குறைந்துள்ளது தென்படுகின்றது. வங்கி முகங்கொடுக்க வேண்டிய எதிர்கால வட்டி இடரை மதிப்பிடுவதற்கும் எதிர்வு கூறுவதற்கும் பயன்படுத்தப்படும் மற்றும் ஒரு கருவியாக அழுத்தப் பரிசோதனைகள் உள்ளன.

05% மற்றும் 1% இனால் அனைத்து நிலையான வைப்புக்களினதும் நிலையான வைப்பு வீதங்கள் அதிகரித்த போதிலும் வங்கிக்கு அதன் இலாபத் தன்மையைப் பேணுவதற்கு முடியுமாயிருந்ததை பின்வரும் சுருக்கமான வட்டி வீத இடர் சுட்டிக் காட்டுகின்றது. அதே நேரம் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் வீதங்கள் மாற்றமடையாமல் அவ்வாறே இருந்தன. வட்டி வீத உயர்வுகள் காணப்படும் நிலமையில் இவ் வகையான அழுத்தப் பரிசோதனைகள் மிகவும் உதவியாக இருக்கின்றன.







### வெளிநாட்டு நாணய பரிமாற்றங்களின் இடர்

இரு நாணயங்களுக்கிடையிலான பரிமாற்று வீதத்தில் எதிர்பாராத மாற்றங்களின் வெளிப்பாடுகள் தோன்றுவதன் காரணமாக உருவாகும் நிதியியல் இடர், வெளிநாட்டு நாணய பரிமாற்று இடர் (பரிமாற்று வீத இடர் அல்லது நாணய இடர் எனவும் அறியப்படும்) எனப்படும். வெளிநாட்டு நாணய (FC) செயற்பாடுகளின் விதிகளுக்கு அமைவாக, முக்கியமான நாணயங்களின் சேமிப்புக்கள் மற்றும் நிலையான வைப்புக்களை மட்டுமே ஏற்றுக் கொள்வதிலும் வங்கி ஈடுபடுகின்றது.

## எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்

இடர் முகாமைத்துவம்

வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கும் பணமனுப்புதல்களை ஏற்றுக் கொள்வதி லும் கொஞ்சம் குறைய அதே வகையானவற்றில் முதலிடுவதிலும் வங்கி ஈடுபடுகின்றது. மேலும் வங்கி முதலிடும் வங்கிகளைத் தெரிவு செய்யும்போது அவற்றின் தரப்படுத்தல்கள் மற்றும் தெரிவு செய்யப்படும் வங்கியின் தரப்படுத்தல்கள் தற்போது மிக உயர்வான மட்டத்திலும் இருப்பதையும் அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்படும். எனவே வங்கி சந்திக்க வேண்டியிக்கும் வெளிநாட்டு நாணய பரிமாற்று இடர் மிகக் குறைந்த மட்டத்திலேயே இருப்பதுடன் வெளிநாட்டு நாணய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சமமின்மை முகாமைத்துவம் செய்யக் கூடிய மட்டத்திலேயே காணப்படுகின்றன.

முதிர்ச்சியுறாத மீளெடுத்தலின் விளைவாக ஐந்தொகையிலும் வருமானக் கூற்றிலும் ஏற்படக்கூடிய தாக்கங்களை அளவிடுவதற்கு அழுத்தப் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது. முதலாம் நாளின் 0 இலிருந்து 91 நாட்கள் வரையான காலப் பகுதியில் வெளிநாட்டு நாணய வைப்பு முழுமையாக (100%) மீளெடுப்பு செய்யப்படுவதாக இருக்கும். (அதன் பின்னர் வரும் 25% முதிர்ச்சியடைந்த வைப்புக்களுக்கு 0-91நாட்கள் 90-120 நாட்கள் மற்றும் 121-364 நாட்கள் முதிர்ச்சிக் காலம்) முதலாவது முதிர்ச்சியின் போது மீளெடுத்தல் செய்யப்படும். முதலாவது முதிர்ச்சியின் போது மீளெடுத்தல் செய்யப்படும். மீளெடுத்தல்களை சந்திப்பதற்காக வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை கழிவு செய்ததன் விளைவாக வட்டி வீதத்தில் ஏற்படும் 1% வீழ்ச்சியினால் நட்டத்தின் தாக்கம் மதிப்பிடப்படுகின்றது. வெளிப்படுத்தல் மிகக் குறைவாக காணப்படுவதால் வங்கி பாதிக்கப்படுவதில்லை என்பதை இது சுட்டிக் காட்டுகின்றது.

| **வகை** | **உண்மை 2012** | **காட்சி 1 0.5%** | **காட்சி 2 1%** |
|---|---:|---:|---:|
| PBT (ரூ. மில்லியன்) | 6,719 | 3,762 | 2,292 |
| தனிநபர் கடன் விளைவு (%) | 100 | 56 | 34 |
| வட்டி செலவு/வட்டி வருமானம் (%) | 79 | 86 | 89 |
| எல்லை (%) | 3.1 | 2.4 | 2.1 |
| ஜியரிங் (%) | 5.1 | 4.7 | 4.5 |

**வங்கியின் வெளிநாட்டு நாணய முதலீடு**



## எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்

இடர் முகாமைத்துவம்

**வெளிநாட்டு நாணய பொறுப்புக்கள் சொத்துக்களின் முதிர்வுகள் (ரூபா மில்லியன்)**

| வகை | 1 மாதம் வரை | 1-3 மாதங்கள் | 3-6 மாதங்கள் | 6-9 மாதங்கள் | 9-12 வருடங்கள் |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| முதலீடு (நிகர ஒதுக்கு) | 412 | 1,212 | 1,475 | 1,456 | 1,375 |
| **பொறுப்புக்கள்** | | | | | |
| வைப்புக்கள் | 2,007 | 264 | 338 | 2,401 | 600 |
| இடைவெளி | (1,595) | 949 | 1,137 | (945) | 775 |
| உச்ச இடைவெளி | (1,595) | (646) | 491 | (454) | 320 |

| | உண்மை 2012 | துறையின் 25% வீழ்ச்சி சொத்துகள் 1% கழிவு |
|---|---|---|
| PBT (ரூ. மில்லியன்) | 6,719 | 6,450 |
| தனிநபர் கடன் விளைவு (%) | 100 | 97 |
| வட்டி செலவு்.வட்டி வருமானம் (C) | 79 | 79 |
| எல்லை (%) | 3.1 | 3.1 |
| ஜியரிங் (%) | 5.1 | 5.0 |

### பங்கு மூலதன விலை இடர்

பங்குச் சந்தை நிலவரங்களின் காரணமாக ஒருவர் பணத்தை இழக்கும்போது அவரின் முதலீடுகளில் ஏற்படும் பெறுமதி குறைவினால் ஏற்படும் இடர் பங்கு மூலதன் இடர் எனப்படும்.

ஒரு தொகையான காலப் பகுதிகள் மீது பிணைய விலையிடல்களின் தரப்படுத்தப்பட்ட மாறுதல்கள் பங்கு மூலதன சந்தையில் பயன்படுத்தப்படும் இடர் அளவீடாகும். எவ்வாறாயினும் பெரும்பாலான முதலீட்டாளர்கள் சராசரிக்கும் அதிகமான தளம்பல்களை “இடர்” எனக் கருதுவதற்கு விரும்புவதில்லை. சில பொருளியலாளர்கள் அதனை வேறு முறைகளில் அளவிட விரும்புகின்றனர்.

பங்கு மூலதன துறையின் முறைமையானதும் முறைமையற்றதுமான இடர்களை வங்கி உணர்ந்துள்ளது. எனவே, அதனுடன் இணைந்த இடர்களைக் குறைப்பதற்காக, அடிப்படை ஆதாரமுள்ள ஸ்திரமான பங்குகளை வங்கி தெரிவு செய்கின்றது.

மொத்த சொத்துக்களின் 1.6% ஐ பங்கு மூலதன பிரதிநிதித்துவம் செய்யும் அதே வேளையில் முன்னிலைபடுத்தப்பட்டதும் முன்னிலைபடுத்தப்படாததுமான பங்கு மூலதனங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் முறையே 1.36%மாகவும் 0.25%மாகவும் இருந்தன. எனவே பங்கு மூலதன இடருக்கு பாரிய வெளிப்படுத்தல் ஒன்று வங்கிக்கு இருக்கவில்லை. எவ்வாறாயினும் பங்கு மூலதன முதலீடுகளின் மீதான வருவாய்களை பங்குச் சந்தைகளில் ஏற்படக்கூடிய பாதகமான அசைவுகள் பாதிப்படையச் செய்தன. முன்னிலைப்படுத்தப்படாத கம்பனிகளில் செய்யப்பட்ட முதலீடுகள் சந்தைகள் மீதான கொள்வனவுத் தீர்மானங்கள் பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் மூலோபாய காரணங்கள் என்பனவற்றைப் பெற வேண்டி இருந்தன. இலங்கையிலும் உலகம் முழுவதிலும் நிலவிய பங்குச் சந்தைகள் கீழ் நோக்கிய திரும்பலினால் வங்கியின் பங்கு மூலதன முதலீடுகளிலிருந்தான வருவாய்கள் மிக மெல்லியதான குறைப்பைக் காண்பித்தன. இதன் விளைவாக ASPI மற்றும் MPI கம்பனிகளில் வங்கி வைத்திருந்த பங்குகளின் மொத்த சந்தை பெறுமதி குறைவடைந்தது.

### திரவ இடர்

நட்டம் ஒன்று அல்லது தேவைப்படும் இலாபம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக சந்தையில் பிணையம் அல்லது சொத்து ஒன்றை துரிதமாக வியாபாரம் செய்ய இயலாமல் போகும் போது ஏற்படும் இடர் திரவ இடராகும். போதுமானதாக இல்லாத பாதுகாப்பு முறை பேணப்படுவதால் வங்கி உடனடியாக தனது கடப்பாடுகளை நிறைவேற்ற முடியாமற் போகும் சூழ்நிலையின்போது திரவ இடர் ஏற்படும்.

பல்வேறு வகையான கடப்பாடுகளை தற்போதும் எதிர்காலத்திலும் தேவைப்படும் காசில் ஏற்படக்கூடிய பற்றாக்குறையைச் சந்திப்பதற்கு “சுய காப்புறுதி அல்லது கொள்வனவு செய்யப்படும் காப்புறுதி மூலோபாயங்களை செயற்படுத்துவதற்கு திரவ முகாமைத்துவம் வங்கியை ஈடுபடுத்தும். ஒவ்வொரு அணுகுமுறையையும் பயன்படுத்துவதற்கும் அவை ஒவ்வொன்றுடனும் இணைந்த இடர்களுடனும் ஏற்படும் தொடர்புடைய செலவுகளும் கலவையில் பிரதிபலிப்பாகும்.

### திரவ சொத்துக்களின் மீதான அவதானிப்பு

வங்கி அதன் வைப்புக்களில் 60%ஐ அரசாங்க பிணையங்களில் முதலிட வேண்டும் எனும் ஒழுங்கமைப்பு தேவைப்பாட்டினால் மிக உயர்வான நியம சொத்து விகிதத்தை பேண வேண்டிய தேவைக்கு வங்கி நிர்ப்பந்திக்கப்படுகின்றது. நடப்பு காலத்தில் 60% ஐ அரசாங்க பிணையங்களில் முதலிட வேண்டும் எனும் ஒழுங்கமைப்பு தேவைப்பாட்டினால் மிக உயர்வான நியம சொத்து விகிதத்தை பேண வேண்டிய தேவைக்கு வங்கி நிர்ப்பந்திக்கப்படுகின்றது.

**உரிமைப் பங்கு முதலீட்டு உள்ளடக்கம்**




**ASPI & MPI கம்பனிகளில் வங்கி வைத்துள்ள பங்குகளின் சந்தைப்பெறுமதியின் அசைவுகள்**




நடப்பு காலத்தில் 60% ஜ வங்கி பேணுகின்றது. இது நியம தேவைப்பாட்டு வீதமான 20% ஐ விட மிகவும் உயர்வானதாகும். வங்கியின் மொத்த திரவச் சொத்துக்களிலிருந்து 79%ஐ அரசாங்கப் பிணையங் களில் செய்யப்பட்ட முதலீடுகள் பிரதிநிதித்துவம் செய்கின்றன.

மேலும் வங்கியின் ஐந்தொகைக்கு வெளியிலுள்ள வெளிப்படுத்தல் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் மிகவும் குறைவான இடர்களினால் எதிர்பார்த்திராத திரவ விடயங்கள் மட்டுமே உருவாகும். திறைசேரி முறிகளிலும திறைசேரி உண்டியல்களிலும் பாரிய முதலீடுகளை வங்கி மேற்கொள்வதால் சந்தையில் அதற்குக் கிடைக்கும் நன்மதிப்பு அரசா சார்பு ஆகியன இன் காரணமாக திரவ பிரச்சனைகள் ஏற்படும் நிலமைகளில் வங்கிகளுக்கிடையிலான சந்தையை மதிப்பீடு செய்யும் திறமையும் வங்கிக்கு கடினமாக இருக்காது. மறு பக்கத்தில் வங்கியின் மொத்த நிலையான வைப்புக்களின் 76% ஐ தனிப்பட்டவர்களின் நிலையான வைப்புக்களே பிரதிபலிக்கின்றன. மிகுதி 24% ஐ மட்டுமே நிறுவன வைப்புக்கள் பிரிதிநிதித்துவப்படுத்துகின்றன. இது நிதியிடலின் ஸ்திரத் தன்மையையும் வங்கியின் திரவ நிலமையையும் மீண்டும் வலியுறுத்துகின்றது.

### திரவத் தன்மை இடர் மற்றும் திரவத் தன்மை இடர் குறிகாட்டிகளை அளவீடு செய்தல்

வங்கியின் திரவத் தன்மை இடர்களை மதிப்பிடவும், கண்காணிக்கவும், திரவத்தன்மை இடர் குறிகாட்டிகளை வாடிக்கையாளர் வைப்பு மீதான கடன், குறுங்கால பொறுப்புகள் திரவச் சொத்துகள், மொத்த சொத்துக்கள், கொள்வனவு நிதி ஆகியன கணக்கீடு செய்து தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டு வருவதுடன், அது தொடர்பாக ALCO விற்கும் சபைக்கும் அறிக்கைவிடப்படுகின்றது. 2012 இல் திரவ இடர் குறிகாட்டிகள் பஸல் II வழிகாட்டி மற்றும் இலங்கை மத்திய வங்கி தேவைகளுக்கு இம் மீளாய்வு செய்யப்பட்டன.







### திரவ இடரின் அளவீடும் இடரின் குறிகாட்டிகளும்

வங்கியின் திரவ இடரை அளப்பதற்கும் கண்காணிப்பதற்கும் வாடிக்கையாளர்களின் வைப்புகளுக்கான கடன்கள் குறுங் பொறுப்புகளுக்கான திரவச் சொத்துக்கள் மொத்த சொத்துகளுக்கு கொள்வனவு செய்யப்பட்ட நிதிகள் போன்ற திரவ இடர் குறிகாட்டிகள் கணக்கிடப்பட்டு அவை கிரமமான அடிப்படையில் கண்காணிக்கப்படுவதுடன் அல்கோவிற்கும் சபைக்கும் அறிவிக்கப்படும். இமவ யின் தேவைப்பாடுகளுக்கும் பசில் II வழிகாட்டல்களுக்கும் ஒத்திருப்பதற்காக 2012 இல் திரவ இடர் குறிகாட்டிகள் மீளாய்வு செய்யப்பட்டது.

## எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்



**திரவ இடர் குறிகாட்டிகள் சிலவற்றின் அசைவுகள்**

| **மாதம்/விகிதம்** (%) | 31/03/2012 | 30/06/2012 | 30/09/2012 | 31/12/2012 |
|---|---|---|---|---|
| வைப்புக்கள் மீதான கடன் | 30.1 | 31.8 | 32.1 | 33.1 |
| கால வைப்புகள் மீதான கடன் (12களை விட குறைவு) விகிதம் | 32.0 | 34.5 | 34.6 | 35.3 |
| மொத்த வைப்புக்களுக்கான திரவச் சொத்து | 70.6 | 68.8 | 68.3 | 67.5 |
| மொத்த சொத்துக்களுக்கான திரவச் சொத்து | 62.3 | 59.9 | 59.8 | 58.5 |
| மொத்த சொத்துகள் மீதான தேறிய கடன் | 26.4 | 27.5 | 27.9 | 28.5 |
| குறுங்கால பொறுப்புகள் மீதான திரவச் சொத்து | 69.0 | 67.1 | 67.4 | 66.4 |
| வருமானம் ஈட்டும் சொத்துக்கள் (-) தற்காலிக சொத்துகள் மீதான பாரிய பொறுப்புகள் (-) தற்காலிக முதலீடுகள் | (14.3) | (14.3) | (19.7) | (18.0) |
| மொத்த சொத்துக்கள் மீதான கொள்வனவு செய்த நிதியம் | 16.7 | 18.3 | 18.1 | 20.5 |
| மொத்த கடன்களுக்கான கடப்பாடு | 1.2 | 1.1 | 1.1 | 1.6 |
| மொத்த வைப்புக்களுக்கான அடிப்படை வைப்பு | 9.9 | 12.2 | 12.7 | 12.6 |
| மொத்த சொத்துக்களுக்கான கடன்கள்+ நிலையான சொத்துக்கள் | 27.7 | 28.8 | 29.2 | 29.7 |
| அடிப்படை வைப்புக்களுக்கான கடன்கள்+நிலையான சொத்து | 255.5 | 270.9 | 262.7 | 271.0 |
| மாறும் பொறுப்புகளுக்கான தற்காலிக முதலீடுகள் | 25.6 | 26.0 | 30.1 | 30.3 |
| மொத்த சொத்துக்களுக்கான மாறும் பொறுப்புகள் | 91.2 | 91.1 | 91.0 | 91.1 |

மேலேயுள்ள அட்டவணையில் காண்பிக்கப் பட்டவாறு வங்கியின் வைப்புக்கள் மீதிலான கடன்கள் அதிகரித்துச் செல்லும் போக்கைக் காண்பிக்கின்றது. இது வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களையும் ஒப்பீடு செய்யும் வைப்புக்களின் சதவீதமாகவுள்ளது. வங்கித் தொழிலின் சராசரிக்கும் கீழாகவே இது இருப்பதால் இந்த வீதத்தை மேலும் அதிகரிப்பதற்கான இடம் வங்கியிடம் உண்டு.

சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அழுத்த பரிசோதனைக்கு அமைவாக வங்கியின் திரவத் தன்மையின் ஸ்திரத் தன்மையை கண்காணிப்பதற்கு காலத்திற்குக் காலம் அழுத்தப் பரிசோதனைகளின் கீழ் திரவமட்டங்கள் மதிப்பிடப்படுகின்றன. வைப்புக்கள் கடன்கள் வீதம் மற்றும் மொத்தச் சொத்துக்கள் விகிதத்திற்கு தேறிய கடன்கள் 30% அளவில் இருக்கும். வங்கித் தொழில் சராசரியின் படி வைப்புக்களுக்கு கடன்கள் விகிதம் 90% அளவில் இருக்கும். இது வங்கித் தொழிலின் சராசரிகளை விட மிகவும் இணையற்றதாகவே வங்கி இருப்பது சுட்டிக் காட்டப்படுகின்றது.

எவ்வாறாயினும் வங்கியிடம் விகிதங்களை மேலும் சீரபடுத்துவதற்கான இடம் இன்னும் இருப்பினும் அதன் திரவ சொத்துக்கள் குறைந்த நிதியிடலில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதால் திரவத் தன்மை விகிதங்களுக்கு அமைவாக ஸ்திரமான நிலமையில் இருப்பதை வங்கி புலப்படுத்துகின்றது. எனவே மிகவும் தீவிரமான அழுத்த நிலைகளிலும் 20மூ ஒழுங்கமைப்புத் தேவைப்பாடுகளுக்கும் மேலாக திரவ மட்டங்களை பேணுவதற்கு வங்கியினால் இயலுமாயிருந்தது.

**எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்**

இடர் முகாமைத்துவம்

திரவ சொத்துக்களுடன் அத்தகைய பொறுப்புள்ள தீர்வு செய்யப்படும்போது முறையே 10% 20% 30% களில் குறைக்கப்படும் திரவப் பொருள்களினால் திரவ சொத்து விகிதங்கள் நிகழக்கூடிய தாக்கங்களை கீழேயுள்ள வரைபடம் சுட்டிக் காட்டுகின்றது.

திரவ விகிதங்கள் தவிர திரவ இடரை முகாமைத்துவம் செய்வதற்கு முதிர்ச்சி இடைவெளி பகுப்பாய்வை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் ஒப்பந்த முதிர்வுகளைச் சார்ந்து வங்கி பயன்படுத்துகின்றது.

வங்கித் தொழிலுடன் ஊடுருவியுள்ள மீள் விலையிடல் இடருக்கு வங்கி முகங்கொடுத்துள்ளதை முதிர்ச்சி இடைவெளி பகுப்பாய்வு காண்பிக்கின்றது. பெரும்பாலான பொறுப்புகள் 12 மாத முதிர்வுகளுக்கு குறைவானவையாகவும் குறுகிய கால இடைவெளியில் மீள் விலையிடப்படுபவையாகவும் உள்ளன. 12 மாத முதிர்வுகளுக்கு மேலாக சொத்துக்கள் இருக்கும்போது நீண்ட கால இடைவேளையில் மீள் விலையிடல் செய்யப்படுகின்றது. எனவே முதிர்வுகளின் சமமின்மைகளை முகாமைத்துவம் செய்வதனூடாக திரவ இடரை முகாமைத்துவம் செய்ய வங்கி முயற்சிக்கின்றது.

**திரவச் சொத்து வீதத்திற்கு அழுத்தப் பரிசோதனை மீதான தாக்கம்**



## எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்



**சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் முர்வுகள் (ரூபா மில்லியன்)**

| வகை | 1 மாதம் வரை | 1-3 மாதங்கள் | 3-6 மாதங்கள் | 6-12 மாதங்கள் | 1-3 வருடங்கள் | 3-5 வருடங்கள் | 5 வருடத்திற்கு மேல் |
|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | | |
| கையிலுள்ள பணம் | 446 | - | - | - | - | - | - |
| இ.ம.வ.இல் உள்ள வைப்புக்கள் | - | - | - | - | - | - | - |
| ஏனைய வங்கிகளிடமிருந்து வரவுள்ளவை | 2,833 | 1,274 | 1,560 | 2,768 | - | - | - |
| முதலீடுகள் (தேறிய ஒதுக்கு) | 16,135 | 21,012 | 33,841 | 80,943 | 122,324 | 40,626 | 23,887 |
| கடன்களும் முற்பணங்களும் | 5,847 | 13,883 | 20,649 | 36,699 | 32,123 | 16,550 | 15,529 |
| செயற்படாக் கடன் | - | - | - | - | - | - | 2,589 |
| ஏனைய சொத்துக்கள் | - | - | - | - | - | - | 5,250 |
| ஏனையவை | 2,993 | 5,323 | 2,513 | 1,351 | 307 | 34 | 636 |
| **மொத்தம் (ஏ)** | **28,253** | **41,492** | **58,563** | **121,761** | **154,753** | **57,211** | **47,890** |
| **பொறுப்புகள்** | | | | | | | |
| வைப்புக்கள் | 74,802 | 148,596 | 60,265 | 128,536 | 27,965 | 360 | 1,619 |
| கடன் எடுத்தல் | 11,423 | 7,528 | 952 | 2,590 | - | - | - |
| ஏனைய பொறுப்புக்கள் | 3,406 | 3,569 | 3,996 | 4,109 | 3,859 | 55 | 375 |
| மொத்த மூலதன நிதியம் | - | - | - | - | - | - | 25,919 |
| **மொத்தம் (பி)** | **89,631** | **159,693** | **65,212** | **135,235** | **31,824** | **415** | **27,913** |
| **இடைவெளி = (ஏ) - (பி)** | **(61,378)** | **(118,200)** | **(6,650)** | **(13,474)** | **122,930** | **56,796** | **19,977** |
| **உச்ச இடைவெளி** | **(61,378)** | **(179,579)** | **(186,228)** | **(199,702)** | **(76,773)** | **(19,977)** | **0** |

### செயற்பாட்டு இடர்

வங்கி மேற்பார்வைக்கான பசல் குழு போதுமையற்ற அல்லது தோல்வியடைந்த உள்ளக செயன்முறைகளின் விளைவாக உருவான நட்ட இடர் மக்களும் அமைப்பு முறைகளும் அல்லது வெளியக நிகழ்வுகள் என்பவற்றினால் செயற்பாட்டு இடர் ஏற்படுகின்றதென வரையறை செய்கின்றது. இந்த வரையறை சட்ட இடரை உள்ளடக்குகின்றதாயினும் மூலோபாயம் மற்றும் நன்மதிப்பு இடரைத் தவிர்க்கின்றது.

நிதியியல் நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் என்பவற்றின் ஒழுங்கமைப்பாளர்கள் பணிப்பாளர்களிடமிருந்து அவர்கள் முகாமைத்துவம் செய்யும் இடர்களில் பல மடங்கு உயர்ந்த மட்டத்தில் முழுமையான அறிவாற்றலும் விழிப்புணர்வும் இருப்பதையும் அவ் இடர்களைக் குறைப்பதற்கு அவர்களின் கட்டுப்பாடுகளில் திறமையையும் எதிர்பார்க்கின்றனர். மேலும் வலுவான செயற்பாட்டு இடர் முகாமைத்துவப் பிரயோகமொன்று இருப்பதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகின்றனர். முக்கியமாக உள்ளக மூலதன போதுமை மதிப்பீட்டு செயன்முறையில் (ICAAP) ஈடுபடும்போது இவ்வாறு வலியுறுத்தப்படுகின்றது.

### செயற்பாட்டு இடர்முகாமைத்துவ கட்டமைப்பு

செயற்பாட்டு இடர் முகாமைத்துவத்திற்கென ஒட்டு மொத்தமான இடர் கலாச்சாரம் மற்றும் நடத்தையை முன்னேற்றுவதற்கான பொறிமுறை ஒன்றை வங்கியின் செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு

## எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்



வழங்குகின்றதுடன் வங்கியின் நோக்கங்களை அடைவதற்கு வலுவான தீர்மானங்களை எடுக்கக் கூடிய செயற்பாட்டு இடர் முகாமைத்துவ செயன்முறை ஒன்றினூடாக வங்கியில் நிலவும் இடர்களைப் புரிந்து கொள்ளுகின்றது. மேலும் வங்கியின் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் கொள்கையினால் வங்கியின் செயற்பாட்டு இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் வழிநடத்தப்படு கின்றன.

செயற்பாட்டு இடர் முகாமைத்துவ செயன்முறை மற்றும் கண்காணிப்பு என்பவற்றை நிறுவுவது இடர் முகாமைத்துவப பிரிவின் பொறுப்பாகும். அதே நேரம் வங்கியின் செயற்பாட்டு இடரை மேற்பார்வையிடுவது இணங்குவிப்பு மற்றும் கணக்காய்வு பிரிவுகளின் பொறுப்பாகவுள்ளது.

உள்ளக கணக்காய்வு இடர் முகாமைத்துவம் மற்றும் இணங்குவிப்பு நடவடிக்கைகள் என்பவற்றிற்கு அவற்றிற்குப் பொருத்தமான முறைமையான அந்தஸ்தையும் இடத்தையும் அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் வங்கிக்குள் தரவேண்டும் என்பதை வங்கி ஏற்றுக் கொள்கின்றது.

அதே நேரம் செயற்பாட்டு இடர் முகாமைத்துவத்தை கூட்டாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதையும் அங்கீகரிக்கின்றது. உள்ளகக் கணக்காய்வு இடர் முகாமைத்துவமும் சம்பந்தப்பட்ட தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கான ஏற்பாடுகளுக்குரிய இணங்குவிப்பு நடவடிக்கைகளும் செயற்பாட்டு இடரை அடையாளம் காணுவதும் அறிக்கையிடுவதும் என்பவற்றிற்கிடையிலும் ஏற்கனவே நெருங்கிய கூட்டுறவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. சபை கணக்காய்வுக் குழு (BAC) கூட்டங்களில் இடர் மற்றும் இணங்குவிப்பு மீதான கணக்காய்வு விவகாரங்கள் எடுக்கப்படுகின்றன.



# எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்

இடர் முகாமைத்துவம்




LORC - இடர் மற்றும் இணங்குவிப்புக்கான ஒருங்கிணைப்பு அதிகாரி

## செயற்பாட்டு இடரை ஆட்சி செய்யும் கட்டமைப்பு

பிரதான செயற்பாட்டு பிரிவிற்குள் பெயர், குறிப்பிடுவதாயின் சொத்து முகாமைத்துவம், கடன் மற்றும் கிளை முகாமைத்துவம் என்னும் சுதந்திரமான கூறுகளை நிறுவுவதன் ஊடாக ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவத்தை சட்டத்திற்குள் செயற்பாட்டு இடரை முகாமைத்துவம் செய்வதற்கு பொருத்தமான நிறுவன கட்டமைப்பு ஒன்றைத் தாபிப்பதற்கு வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது. சொத்து முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு மத்திய அலுவலகம் ஒன்றைத் தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, இதன் சுதந்திரமான செயற்பாட்டை உறுதி செய்வதற்கு கடன் ஜீஎல் (பொது பேரேடு) ஐ மேற்பார்வை செய்வது கடன் செயன்முறை கட்டமைப்பு, சிறு வர்த்தகக் கடன்களுக்கு கூட்டு சோதனைகளை நடத்துவது என்பவை தலைமையகம் மற்றும் நிறுவனங்களின் கீழ் நிறுவப்பட்டுள்ள நடவடிக்கைகளாகும். ஆரம்பத்தில் கடன் இடர் முகாமைத்துவ கூறின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படினும் எதிர்காலத்தில் இது பரவலாக்கப்படும். இணங்குவிப்பு கொள்கையின் கீழ் நிறைவேற்று இணங்குவிப்பு குழு இணங்குவிப்பு விடயங்களை நேரடியாக முகாமைத்துவத்திற்கு எடுத்துச் செல்வதற்காக மீளாய்வு தாபிக்கப்பட்டது.

கிளை MIS, கிளை மதிப்பீடுகள், நட்ட நிகழ்வு, தரவுகள் பதிவு செய்தல் கிளை வலையமைப்பில் இடர் முகாமத்துவத்தையும் இணங்குவிப்பு விடயங்களையும் ஒருங்கிணைத்தல் என்பவற்றை சுதந்திரமாக அறிக்கையிடுவதற்காக கிளை முகாமைத்துவப் பிரிவிற்குள் சுதந்திரமான கூறு ஒன்றை தாபிப்பதற்கு 2012ஆம் ஆண்டின்போது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அத்துடன் கிளைகளில் இடரும் இணங்குவிற்பிற்குமான இணங்குவிப்பு அதிகாரிகளின் நியமனங் களை முறைமையாக்குவது மற்றும் தலைமையகத்தின் ஏனைய செயற்பாட்டு பிரிவுகளும் செய்யப்பட்டன.

## நட்டம்/இடர்நிகழ்வு அறிக்கையிடல்

நிகழ்வுகளை அறிக்கையிடும் பொறி முறைக்கென ஆதார கட்டமைப்பொன்று நட்ட அறிக்கையிடும் பொறிமுறை ஒழுங்குபடுத்தல் ஊடாக அமைக்கப்பட்டுள்ளது. இது பாசல் வழிகாட்டலுக்கு அமைவாக அனைத்து வகையான நட்டத் தரவுகளையும் காப்பீடு செய்யும் விதத்திலும் வர்த்தகத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய நிகழ்வுகளையும் முன்னேற்றுவதாக இருக்கும். கிளை செயற்பாட்டு பிரிவினால் கிளைகளின் நட்ட நிகழ்வுகள் சேகரிக்கப்பட்டு இடர் முகாமைத்துவப் பிரிவிற்கு அறிக்கை செய்யப்படும். உள்ளக மற்றும் வெளியக நட்ட நிகழ்வு தரவுகள் உள்ளக கணக்காய்வுப் பிரிவிடமிருந்து அவர்களின் அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகளின் ஊடாக பெறப்படும். செயற்பாட்டு பிரிவுகளிடமிருந்து கிடைக்கும் இந்த நட்ட நிகழ்வு அறிக்கையிடலின் பலனாக இடர்கள் அடையாளம் காணப்படவும் இயன்றவரை சிறப்பான முறையில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவும் கூடியதாக இருக்கும்.

# எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்

இடர் முகாமைத்துவம்

**2012 இன் பசல் - நட்டம் / இடர் நிகழ்வுகளின் கீழ் சந்திக்க வேண்டியிருந்த இடர் நிகழ்வுகளின் நிலைமை கீழே தரப்பட்டுள்ளது**

| இடர் வகை / நட்ட நிகழ்வு | பதிவு செய்த நட்ட நிகழ்வின் தன்மை | குறிப்பு |
|---|---|---|
| உள்ளக மோசடி | சட்டவிரோத மீளெடுத்தல், வேண்டும் என்றே செய்த கணக்கீட்டு முறை கேடுகள், பண மோசடி, கணக்குகளை மாற்றியமைத்தல், வேண்டுமென்றே கணக் குறைவுகளை ஏற்படுத்தல் | உள்ளகக் கட்டுப்பாட்டை விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| வெளியக மோசடி | 3ஆம் தரப்பு சட்டவிரோத பணம் மீளப்பெறல், அட்டை மோசடி | இவைகளின் தாக்கம் தன்மை பாரதூரமற்றது. |
| ஊழியர் செயற்பாடுகளும் வேலைத்தள பாதுகாப்பும் | ஒழுக்காற்று விசாரணை | ஒழுக்காற்று விசாரணைகளும் LT விடயமும் கண்காணிக் கப்பட்டுள்ளதுடன் நிதிசார் இடர்களோடு ஒழுக்கவியல் செயல்கள் எழவில்லை. |
| சேவை பெறுபவர் உற்பத்தி மற்றும் வியாபார செயற்பாடுகள் | இல்லை | நீதிமன்ற வழக்குகள் அவதானிக்கப்பட்டு வருவதுடன் புதிய சட்ட நட்டம் கோரல் இல்லை. |
| பௌதீக சொத்துக்களுக்கான சேதங்கள் | பௌதீக சொத்துக்களின் பாதிப்பு | காப்புறுதி மூலம் பாதுகாக்கப்பட்டு மீளப் பெற முடியாத தொகை அவ்வளவு கருதக் கூடியதாக இல்லை. |
| வியாபார இடைஞ்சல் மற்றும் அமைப்பு செயற்படாமை | ATM தடைப்படல், அமைப்பு மொடியுல் தடைப்படல், மின்சார தடை, தொலைத் தொடர்பு தடை, வன்பொருள் தடை. | இவைகள் உண்ணிப்பாக அவதானிக்கப்பட்டதுடன், அவைகள் தாக்கமும் தன்மையும் பெற்றதாக இல்லை. |
| அமுலாக்கல், வழங்கல் முறைமை முகாமைத்துவம் | கணக்காய்வு முறைகேடுகள், காசு கருமபீடத்தில் காசு குறைதல்/அதிகம், ATM பணக் குறைவு, யுவுஆ பிரச்சனைகள் காரணமாக ஏற்பட்ட நட்டம், அட்டை நட்டம், பதிவுகளில் தவறாக உட்சேர்த் தல், வர்த்தக கொடுக்கல் வாங்கல்களில் நடவடிக்கை இணக்குவிப்பு மேற்கொள்ளுதல் | கொள்கைகளும் விதிகளும் இருக்கும் போது த பினான்ஸ் கொடுக்கல் வாங்கலினால் குறிப்பிடத்தக்க நற்பெயர் இழப்பு ஒன்றை ஏற்படுத்தியது. ஏனைய சம்பவங்களின் தாக்கம், தன்மை பாரதூரமற்றது. |

## உள்ளக கட்டுப்பாட்டு மதிப்பீடுகள்

விற்பனை மைய உபகரணம், கடன் செயன்முறைகள், கடனட்டை நிலைய செயற்பாடுகள் மற்றும் சொத்து முகாமைத்துவ நடவடிக்கைகளின் உள்ளக கட்டுப்பாடுகள் என்பவை ஊடாக வைப்பு சேகரிப்பின் செயற்படுத்தல்களின் செயன் முறைகளும் கட்டுப்பாடுகளும் மீளாய்வு செய்யப்படுவதுடன் செயன்முறையில் செம்மையாக்கல்களும் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் ஆலோசனையுடன் மேலதிகக் கட்டுப்பாடுகள் அடையாளம் காணப்பட்டு அறிமுகப்படுத்தப்படுகின்றன. நிறைவேற்று இடர் முகாமைத்துவ குழு ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு மற்றும் சபை போன்ற இடர் குழுக்களின் ஊடாக சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு இடர் பதிவேடு மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு பரிசோதனைகளின் கண்டுபிடிப்புகளிலிருந்து உருவாகிய செயற்பாட்டு மட்ட தேவைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன. இவற்றில் தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கும் செயன்முறைகள் நடைமுறைகள் மற்றும் அல்லது புதிய ஒழுங்கமைப்புகள், நடைமுறைகள் செயன்முறைகளை அறிமுகம் செய்வதும் உள்ளடங்கும்.

## செயன்முறை/அமைப்பு முறை செம்மைப்படுத்தல்கள்

செயன்முறை அமைப்பு முறை செம்மைப்படுத்தல்களுக்கென இமவ பணிப்புரைகள் மற்றும் பசல் II தேவைப்பாடுகளுக்கு இணங்கி செயற்படும் வகையில் கடன் கையேடுகளும் கிளை கையேடுகளும் நாளதந்துக் கொண்டு வரப்படுகின்றன. உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் தரவுத் தளங்களை அறிவது மற்றும் உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்களை கண்காணிப்பது தொடர்பான தேவைப்பாடுகள் தகவல்

## எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்

இடர் முகாமைத்துவம்

தொழில் நுட்ப கையேடுகளில் தரப்பட்டுள்ளது. ஆண்டின்போது முழுமையான அடகுபிடித்தல் ஆஜளு போன்றவை அபிவிருத்தி செய்யப்பட்டன. அவ்வாறே கடன் கணக்கீட்டு கையேடு ஒன்றும் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

### தகவல் தொழில் நுட்ப உட்கட்டமைப்பை நோக்கிய செம்மைப்படுத்தல்

தரமுயர்ந்த தொழில்நுட்ப அணுகுமுறைகளுடன் இணைந்திருப்பதற்காக தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தியிலும் மீளாய்விலும் வங்கி கவனம் செலுத்துகின்றது. தர நிர்ணயிப்பை உறுதிப்படுத்துவது மற்றும் ஏனைய தொழில்சார் பிரயோகங்கள் என்பவற்றைப் பயன்படுத்தி தகவல் பாதுகாப்பு அமைப்பையும் ஏனைய உள்ளக அபிவிருத்தி சுற்றாடலையும் முன்னேற்றுவதன் மூலம் தகவல் தொழில்நுட்ப இடர்களுடன் தொடர்பான நடவடிக்கைகள் குறைக்கப்படுகின்றன. அத்தகைய அபிவிருத்திகள் அல்லது அமைப்புகளுக்கான மாற்றங்கள் என்பவற்றின் வெளிப்பாட்டிற்கு செயற்பாட்டு இடர் முகாமைத்துவ செயன்முறை செய்யப்பட்டுள்ளது.

### முக்கிய இடர் குறிகாட்டிகள்

முக்கிய வர்த்தகத் துறைகள் வர்த்தக வரிசைகள் தொடர்பான தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் அல்லாத இடர்களை பிரதிபலிக்கும் வங்கியின் செயற்பாட்டு இடர்களுக்கென ஆண்டின்போது இடர் முகாமைத்துவப் பிரிவு முக்கிய இடர் குறிகாட்டிகளை அபிவிருத்தி செய்தது. செயன்முறை செம்மைப்படுத்தல்களுக்கு உள்ளக நட்ட நிகழ்வு அறிக்கையிடல் ஒரு பயனளிக்கும் மூலகாரணமாக அமைந்திருப்பதால் செயற்பாட்டு இடருடன் தொடர்புடைய முக்கிய இடர் குறிகாட்டிகளில் உள்ளக மோசடிகள் அறிக்கையிடலின் எண்ணிக்கை அறிக்கையியடப்பட்ட வெளியக மோசடிகள் செயற்பாட்டு நட்ட நிகழ்வுகள் (இமவ இன் வழிகாட்டலிற்கும் அப்பால்) மோசடிகள் புலனாய்வு கூறு (FIU) இற்கு அறிவிக்கப்பட்ட ஐயத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல் போன்றவையும் காலாண்டு இடர் மீளாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த முக்கிய குறிகாட்டிகள் நாளதற்கு வரப்படுவதுடன் இடர் குறைப்பு அளவீடுகளை ஆரம்பிப்பதற்காக இடர் முகாமைத்துவக் குழுக்கள் ஊடாக வெளிப்பாட்டு பிரிவுகளுக்கு இவற்றின் போக்குகள் தெரிவிக்கப்படுகின்றன. நட்ட நிகழ்வு அறிக்கையிடல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டு இடர் முகாமைத்துவப் பிரிவினால் (RMD) கண்காணிக்கப்பட்டு நிறைவேற்று இடர் முகாமைத்துவக் குழுவிற்கும் (ERMC) ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவிற்கும் சபைக்கும் அறிவிக்கப்படுகின்றன. ஒழுங்கமைப்பாளர் சபைக்கு அமைவாக அன்றி நட்ட நிகழ்வு மேலதிகமாக இருப்பின் காலாண்டிற்கு ஒரு முறை அறிவிக்கப்படும்.

கடந்த ஆண்டுகளில் அனுபவித்ததைப் போல வங்கியின் நட்ட நிகழ்வுகள் நிறைவேற்றல்கள் பங்கீடுகள் மற்றும் செயன் முறை முகாமைத்துவம் என்பவற்றிலேயே உயர்வான அலை வரிசையில் காணப்பட்டன. முக்கியமாக மிக உயர்வான எண்ணிக்கையிலான நட்ட நிகழ்வுகளை கொண்டிருந்த காசு செயற்பாடுகளுடன் தொடர்புடைய நட்டங்களைக் குறிப்பிடலாம். எவ்வாறாயினும் வங்கிக்கு ஏற்படக்கூடிய நிதித் தாக்கம் குறைவாகவே இருந்தது. வாடிக்கையாளர்

**செயற்பாட்டு நட்ட சம்பவங்கள்**



# எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்

இடர் முகாமைத்துவம்

உற்பத்தி மற்றும் வர்த்தகப் பிரயோகங்கள் தொழில் வாய்ப்பு பிரயோகங்கள் தொழிலிடப் பாதுகாப்பு வெளியக மோசடிகள் என்பவை குறித்து எவ்வித நிகழ்வுகளும் ஏற்படவில்லை.

### மிகக் குறைவான மூலதன தேவைப்பாடுகள்

செயற்பாட்டு நட்டத்திற்கான மூலதன ஒதுக்கீட்டிற்கென அடிப்படை குறிகாட்டி அணுகுமுறையை வங்கி தற்போது பிரயோகிக்கின்றது. செயற்பாட்டு இடரின் முக்கியத்துவம் பின்வருமாறு உள்ளது.

### இடர்குறைப்பு

செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் கட்டமைப்பிற்குள் இடர் குறைப்பு அளவீடுகளாக கொள்கை வரைச் சட்டம் குழு கட்டமைப்புக்கள் ஸ்தாபன அமைப்புக்கள் இடர்பாட்டு அளவீடுகள் போன்றவற்றை வங்கி நிறுவியுள்ளது. அத்துடன் செயற்பாட்டு இடர் முகாமைத்துவ செயன்முறையை முறைப்படுத்துவதற்காக அமைப்பு முறை மற்றும் நடைமுறை செம்மைப்படுத்தல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

வங்கியின் இடர் குறைப்பு மூலோபாயங்களாக வர்த்தகத் தொடர்ச்சித் திட்டங்கள் காப்புறுதித் தரமுயர்த்தல்கள் மற்றும் வெளியிலிருந்து வேலைக்கு அமர்த்துதல் என்பவையும் மேற்கொள்ளப்படுகின்றன. வர்த்தக தொடர்ச்சி திட்டம் (BCP) மற்றும் மீளெழுதல் திட்டம் (DRP) என்பவற்றின் கீழ் வரும் முக்கிய விடயங்களை நடைமுறைப்படுத்துவதிலும் மீளாய்வு செய்வதிலும் வங்கி தற்போது ஈடுபட்டுள்ளது. கவனிக்கப்படாது விடப்பட்ட ஏதாகிலும் பகுதிகளை அடையாளம் காண்பதற்கென காப்புறுதி காப்பீடுகள் மீளாய்வு செய்யப்படுகின்றன. தொடர்புடைய வர்த்தகக் கூறுகளுக்கு செம்மைப்படுத்தலுக்கான பரிந்துரைகள் அளிக்கப்படுகின்றன. வெளியிலிருந்து வேலைக்கு கூலிக்கமர்த்தும் பகுதிகளை தெரிவு செய்வதற்கான அலகுகள் சேவை வழங்குனர்களுக்கான தெரிவு வெளியிலிருந்து கூலிக்கு வேலைக்கமர்த்தும் நடவடிக்கைகளின் கிரமமான மீளாய்வுகள் மற்றும் சேவை மட்ட ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதும் கண்காணிப்பதும் என்பவற்றை வெளியிலிருந்து கூலிக்கு வேலைக்கமர்த்தும் கொள்கை கவனிக்கின்றது.

| ஆண்டு | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|
| மொத்த இடர் நிறையேற்றப்பட்ட தொகை (ரூபா மில்லியன்) | 91,641 | 89,407 | 73,865 |
| செயற்பாட்டு இடருக்கான இடர் நிறையேற்றப்பட்ட தொகை (ரூபா மில்லியன்) | 24,038 | 23,770 | 20,138 |
| % அடிப்படையிலான செயற்பாட்டு இடரின் மட்டம் | 26% | 27% | 27% |

### பயிற்சியும்

வங்கியில் இடர் விழிப்புணர்வுக் கலாச்சாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடனும் இடர் முகாமைத்துவ செயன்முறையை செம்மைப்படுத்துவதற் காகவும் ஆண்டின்போது இடர் முகாமைத்துவ இணங்குவிப்பு செயற்பாட்டு இடர் பகுதிகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகள் என்பவை குறித்த அனேக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

### முடிவுரை

இடர் முகாமைத்துவத்தின் நோக்கம் அதன் நடவடிக்கைகளின் இடர் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதாகும். அத்துடன் இடர்களை அளவிடவும் ஒரு முறையான அமைப்பில் அவற்றைக் குறைப்பதற்கும் கூடியதாக முழுமையான அறிவுடனும் தெளிவான நோக்கத்துடனும் புரிந்துணர்வுடனும் தெரிந்தே இடர்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதி செய்வதுமாகும்.

அனைத்து வகையான இடர்களையும் முகாமைத்துவம் செய்வதற்காக, கொள்கைகளை வெளிப்படுத்தல் ஒழுங்கமைப்புகள் முறைமைகள் மற்றும் நடைமுறைகள் ஏனைய துணைபுரியும் சேவைகள் என்பவற்றில் வங்கி

## எமது இடர் காரணிகளை கணிப்பிடுவதும் முகாமைத்துவம் செய்வதும்

இடர் முகாமைத்துவம்

தொடர்ச்சியாக ஈடுபடுகின்றது. இதன் விளைவாக இடர்களை அடையாளம் காணுதல் அளவிடுதல் கண்காணித்தல் அறிக்கையிடல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் என்பவை சீரமைக்கப்பட்டுள்ளதுடன் படிப்படியாக செயற்பாட்டு மட்டங்களுக்கும் பரவி வருகின்றது. முகாமைத்துவ தகவல் அமைப்பு முறை தரவுகள் களஞ்சியப்படுத்தும் தீர்வுகள் தற்போதுள்ள தகவல் தொழில்நுட்ப பிரயோகங்கள் மற்றும் முகாமையாளர் பாதுகாப்பு என்பவற்றுடன் ஈடர் முகாமைத்துவத்திற்கான சிறந்த ஆற்றல் ஒன்றை உருவாக்குவதற்கு கட்டுப்பாடுகளை நிறுவுதல் ஆகியவை குறித்து பயனுள்ள நடவடிக்கைகளை வங்கி எடுத்து வருகின்றது. தொடர்ந்தும் எடுத்து வரும்.



# அத்தியாயம் 5

புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

### உபாயங்களும் பகுப்பாய்வும் தலைவரிடமிருந்து செய்தி

நீண்ட காலமாக தே.சே.வ. இலங்கை மக்களின் நம்பிக்கைக்குரிய பாதுகாவலராக இருந்து வருகிறது. பொது மக்களுக்கான எமது சேவையைத் தொடர்ந்து முன்னேற்றுவதனூடாகவும் நீண்ட காலத்தில் எமது வர்த்தக செயற்பாடுகள் நிலைத்து நிற்கக் கூடியன என்பதை உறுதி செய்வதனூடாகவும் இன்று முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நாம் அதிகளவில் இந்த நம்பிக்கையில் முதலிடுகின்றோம்.. முழு நாட்டினதும் நீண்டகாலத்தில் நிலைத்து நிற்கக் கூடிய பொருளாதார சமூக உறுதிப்பாட்டிற்கு எமது ஸ்தாபனங்களைப் போன்ற நிதி ஸ்தாபனங்கள் மிகவும் பிரதானமான ஒரு தேவையாகும்.

எனவே, எமது ஸ்தாபனம் சமூக, மற்றும் சூழல் ரீதியாக நிலையான உறுதிப்பாடுடையதாக தொடர்ந்தும் முன்னேற்றமான செயற்பாடுகளை மேற்கொண்டு நாட்டிற்கான எமது சேவைகளுக்கு பெறுமதிகளை அதிகரிக்கின்றோம்.

ஒட்டுமொத்த பொருளாதாரம் மற்றும் சமூகத்திற்கு மிக உச்சமான பயன்பாட்டைக் கொடுப்பதற்காக இடர்களைக் குறைத்து தரமான சேவைகளை அளிப்பது மட்டுமன்றி முதலீடுகளையும் கடன்களையும் மற்றும் கருத்திட்டங்களையும் வழங்குவதில் நாம் கவனம் செலுத்துகின்றோம். இதனூடாக இலங்கைச் சமூகத்திற்கான செயற்பாடுகளில் பெரிய தாக்கத்தை உண்டு பண்ணுகின்றோம். 90%இற்கும் அதிகமான எமது முதலீட்டுத் துறை அரசாங்கப் பிணையங்களில் இடப்படுகின்றது. தொடர்ந்து தேசிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு நாங்கள் தொடர்ந்தும் ஆதரவளித்தோம். நவீன உலகத்தை நோக்கி நகர்வதற்கு மிகவும் முக்கியமானதாக உட்கட்டமைப்பு அபிவிருத்தி காணப்படுகின்றது.உதவுகின்றோம்.

> “எமது தேசிய வளங்களை பாதுகாப்பதற்கான கடன் கடப்பாட்டைக் காட்டும் ஒரு வெளிப்பாடாக மழை நீர் சேகரிப்பு வசதிகளைக் கொண்டதாக எமது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சில கிளைகள் அமைக்கப்பட்டுள்ளதை தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.”

தேசிய அபிவிருத்தி உந்துதலுக்கான எமது பங்களிப்பின் ஒரு பகுதியாக கருத்திட்ட நிதியிடுதல்களி னூடாக குறைந்த வருமான குழுக்களுக்கும் கிராமப் புறச் சமூகத்திற்கும் போரின் தாக்கங்களிலிருந்து வடக்குக் கிழக்கு மக்கள் மீள்வதற்காகவும் வீடமைப்புக் கடன், தனிநபர் கடன்கள், விவசாயக் கடன்கள், அடகு வைத்தல் பேன்றவற்றிற்கு நாங்கள் தொடர்ந்து உதவிக் கொண்டிருக்கின்றோம்.

கிராமிய மக்களின் தேவகளைக் கவனிக்கின்ற அதேவேளை உலகத்தின் போக்கிற்கு ஒத்து போகக் கூடியதாக நாமும் எமது தொழில் நுட்பங்களை விருத்தி செய்து கொண்டிருக்கின்றோம்.

இணைய வலைப்பின்னல் மற்றும் குறுஞ் செய்தி அனுப்புதல் வங்கி வசதிகள் என்பவை எமது மக்களுக்கு கட்டணப்பட்டியல் கொடுப்பனவுகளுக்கும் நவீன வசதிகளை அறிமுகப்படுத்தியுள்ளன. இதனூடாக தொடர்பு வழங்குனர்களும் பெரிய காப்புறுதி கம்பனிகளும் வாடிக்கையாளர்களுக்கு ஒரே கடையில் அனைத்தையும் பெறும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

எமது செயற்பாடுகள் மற்றும் மூலோபாய இலக்குகளை எய்துவதற்கு மிக அத்தியாவசியமான தேவையாக எமது பணியாளர்கள் உள்ளனர் என நான் நம்புகின்றதுடன் ஊழியர்களின் திருப்தியின்மையின் விளைவாக அடித்தளத்திற்கு நேரடியான பங்களிப்பை தரும் உயர் உற்பத்தியாற்றல் அதிகரிக்கின்றது என்றும் மிகவும் உறுதியாக நம்புகின்றேன். எனவே ஆண்டின்போது எமது பணியாட்களின் திறமைகளை பயிற்றுவிப்பதிலும் அபிவிருத்தி செய்வதிலும் தொடர்ந்தும் ஈடுபட்டோம். எமது வாடிக்கையாளர்களுக்கு தரமுயர்ந்த சேவைகளை உறுதிப்படுத்துவதற்கும் வங்கியின் திறமையை அபிவிருத்தி செய்வதற்கான பங்களிப்பிற்கும் வழியமைத்துள்ளன.

பொது ஸ்தாபனம் என்ற வகையில் எதிர்கால சந்ததியினருக்காக சுற்றாடல்களைப் பாதுகாப்பதற்கான தேவையை நாம் நன்கு உணர்ந்துள்ளோம். ஆகவே இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்காக நாங்கள் தொடரந்து முதலிட்டு சுற்றாடல் பாதிப்புக்களை எமது செயற்பாடுகளூடாகக் குறைத்துள்ளோம்.

எமது தேசிய வளங்களை பாதுகாப்பதற்கான கடன் கடப்பாட்டைக் காட்டும் ஒரு

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

வெளிப்பாடாக மழை நீர் சேகரிப்பு வசதிகளைக் கொண்டதாக எமது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சில கிளைகள் அமைக்கப்பட்டுள்ளதை தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். வாடிக்கையாளர்கள் அவர்களின் தனிப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள் ஊடாக சுற்றாடல் தாக்கத்தைக் குறைப்பதற்கான முறைகளை அபிவிருத்தி செய்ய அவர்களுக்கு உதவவும் செய்கின்றோம்.

வாடிக்கையாளர்கள் அவர்களின் தனிப்பட்ட வர்ததக நடவடிக்கைகளூடாக சுற்றாடல் தாக்கத்தைக் குறைப்பதற்கான முறைகளை அபிவிருத்தி செய்ய அவர்களுக்கு உதவவும் செய்கின்றோம்.

இந்த நிலையான உறுதிப்பாட்டு அறிக்கையின் பக்கங்களில் சமநிலையானதும் நிலையான வர்த்தக காலாச்சாரத்தை அடைவதற்கான நடவடிக்கைகளையும் அணுகுமுறைகளையும் நீங்கள் இன்னும் அதிகமாக வாசிக்கலாம். 2013இன் போதும் அதற்கப்பாலும் நிலையான உறுதிப்பாட்டினதும் நீண்ட கால பங்குடமை மதிப்பீடுகள் நோக்கிலும் எமது பயணம் தொடரும் என நாங்கள் நம்புகின்றோம்.



**திரு. சுனில் எஸ் சிறிசேன**
தலைவர்

கொழும்பு, இலங்கை

28 மார்ச் 2013.

### முன்னுரை

நிலையான உறுதிப்பாடு மக்கள் கூட்டாக மட்டுமன்றி தனிப்பட்ட ரீதியாகவும் உள்நோக்கிப் பார்க்க வேண்டும் எனும் அவசியத்தை ஏற்படுத்துகின்றது. ஒரு தனிமனிதன் என்ற வகையில் எங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கு தீங்கிழைக்காது இன்னும் கூடுதலாக நன்மைகளைப் பெறுவதற்கு நாம் என்ன செய்யலாம் என்ற கேள்வியை எழுப்புகிறது.

எங்கள் சமூகத்தினர் தமக்கு சிறந்தவற்றை பெறுவதற்கு அவர்களுக்கு எவ்வாறு சக்தி அளிக்கலாம் என்றும் எங்களது ஒரே மாதிரியான போக்கைக் குறைத்து தொழிற் துணிவுகள் நோக்கி பணியாற்றுவது மற்றும் எங்களைச் சுற்றியிருப்பவர்களுக்கு எங்களது செயற்பாடுகள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் எனும் கேள்விகளையும் எழுப்புகிறது. இத்தகைய வினாக்களுக்கு விடையளிப்பது இலகுவான விடயம் அல்ல. எனினும் நீண்ட கால உறுதித் தன்மைக்கான சிந்தனை தொடர் செயற்பாடுகளை கட்டியெழுப்ப நிச்சயமாக உற்சாகமளிக்கும்.

தேசிய சேமிப்பு வங்கி வேரூன்றி இருக்கிறது எனும்போது நீண்ட காலமாக செயற்படுகின்றோம் என்பதாகும். நாம் இந்தக் கிரகத்தை நிலையாக வைத்திருப்பதற்கும் இங்கு வாழ்கின்ற எல்லோருக்கும் இந்தக் கோளை உறுதியாகப் பேணுவதற்குமான பொறுப்பும் எமக்கு உள்ளது.

இயற்கை வளங்களைப் பாதுகாப்பதனூடாக சுற்றுச் சூழல் பாதிக்கப்படாமலிருப்பதை உறுதி செய்து மக்களை பொருளாதார சக்தி மிக்கவர்களாக மாற்றுவதும் மிக முக்கியமானதாகும்.

நற்பிரயோகங்கள், மதிப்பீடுகள் மற்றும் விழுமியங்களையும் உட்புகுத்துவதனூடாக சிறந்த இணங்குவிப்பை வழங்கி உற்சாகப்படுத்தக் கூடியதாக இருக்கச் செய்வது எமது பொறுப்பாகும். அதனூடாக பொறுப்புள்ள நிறுவன வழிகாட்டியாக மதிக்கப்படுவோம்.

எமது பங்காளிகள் பங்குதாரர்கள் வாடிக்கையாளரகள் மதிப்பிற்குரிய வர்த்தகக் கூட்டாளிகள் சமூகங்கள் எமது மக்கள் மற்றும் சுற்றாடல் எனும் யாவும் உள்ளடங்கிய பேரண்டப் படத்தின் மீது எமது கவனத்தைச் செலுத்தச் செய்கின்றதுடன் அவர்களது நிலையான உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தும் பொறுப்பையும் எமக்கு ஏற்படுத்துகின்றது.

### அறிக்கை அளவு கோள்கள்

**அறிக்கையின் நோக்கம்:-**

31.12.2012இல் முடிவடைந்த ஆண்டில் தேசிய சேமிப்பு வங்கியின் செயற்பாடுகளின் உறுதித் தன்மையை மீள்பார்வை செய்யும் நான்காவது அறிக்கையாகும்.

இந்த அறிக்கை கோட்பாடுகளின் முக்கியத்துவத்தையும் பங்காளிகளின் உள்ளடக்கப்படுதலையும் உறுதித் தன்மை விடயத்தையும் பூரணத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டதாகும். இது புசுஜ சட்ட வரைவுக்குள் அறிக்கைபடுத்தலை அடிப்படையாகக் கொண்ட வுசனிடந டீழவவழஅ டுநைந அறிக்கைப்படுத்தலால் வழிகாட்டப்பட்டுள்ளது. முறையான தரவு சேகரிக்கும் செயற்பாடுக;டாகவும் சமநிலை.'.

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

மீதி உள்ளகத் தன்மை நேரத்துடன் செய்து முடித்தல், தூய்மை, அறிக்கைப்படுத்தலின் நம்பிக்கைத் தன்மை ஊடாக இந்த அறிக்கையில் காணப்பட்ட தகவல்களின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்த முயற்சித் திருக்கின்றோம்.

தயவு செய்து மேலதிக தகவல்களுக்காகவும் எமது செயற்பாடுகள் தொடர்பான ஏனைய விசாரணைகளுக்கும் பின்வரும் முகவரிகளுடன் தொடர்பு கொள்ளவும்.

நிதி திட்டமிடல் பிரிவு
தேசிய சேமிப்பு வங்கி,
சேமிப்பகம்,
255, காலி வீதி,
கொழும்பு – 03, இலங்கை.
மின்னஞ்சல் - nsbgen@nsb.lk

### அறிக்கையின் எல்லை

இலங்கைக்குள் தே.சே.வ. யின் செயற்பாடுகளில் இந்த அறிக்கை முழுக்கவனத்தையும் செலுத்துகின்றது. தே.சே.வ. யின் துணைக்கம்பனியில் இது கவனம் செலுத்தவில்லை. உதாரணமாக தேசேவ இன் நிதி முகாமைத்துவக் கம்பனி. ஏனெனில் உப நிறுவனத்தின் செயற்பாடுகள் இவ் அறிக்கைக்கு முக்கியமற்றது என நாங்கள் கருதுகின்றோம்.

### நோக்கெல்லையின் குறித்தொதுக்கப்பட்ட வரையறைகள்

இந்த அறிக்கை இலங்கைக்குள் மட்டும் தேசேவ இன் செயற்பாடுகளை தருகின்றது.

### தரவு அளவீடுகளும் கணிப்பீடுகளின் அடிப்படையில் / ஆதாரங்களும்

இந்த அறிக்கைகளின் தொகுப்பிற்கு பல மூலகங்களிலிருந்து தகவல்கள் பெறப்பட்டன. நிதி தொடர்பான தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகளிலிருந்தும் அதனுடன் இணைந்த குறிப்புக்களிலிருந்தும், பெறப்பட்டது. பணியாளர்கள் தொடர்பான தகவல்கள் மனிதவள அபிவிருத்தி பிரிவிலிருந்து பெறப்பட்டது. பணியாளர்களின் பயிற்சி விபரங்கள், பயிற்சிப் பிரிவிலிருந்து பெறப்பட்டது. சந்தைப்படுத்தல் பிரிவிலிருந்து உற்பத்திகள், சேவைகள், உற்பத்திப் பொறுப்பு விபரங்கள் கொடுக்கப்பட்டது. செயற்பாட்டு விபரங்கள், கிளை முகாமைத்துவப் பிரிவிலும், சொத்து முகாமைத்துவப் பிரிவிலும், சர்வதேச வங்கிப் பிரிவிலும், அஞ்சல் வங்கிப் பிரிவிலும், சிறு வர்த்தகக் கடன் கொடுத்தல் பிரிவிலும் கருத்திட்ட நிதிப் பிரிவிலுமிருந்து வழங்கப்பட்டன.

### அறிக்கைப்படுத்தலில் மாற்றங்கள்

முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றறிக்கை இலங்கை கணக்கீட்டு நியமனங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டது. ஞடுயுளு எனினும், இந்த வருடம் புதிய ஒழுங்குபடுத்தற் தேவைகளுக்கேற்பவும் நிதிக் கூற்றறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமத்திற்கேற்பவும் (LKAS)வும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்திற்கேற்பவும் (SLFRS) தயாரிக்கப்பட்டது. இவை தவிர, முன்னைய அறிக்கைக்காலம் தொடர்பான நோக்கெல்லை வரையறை அல்லது அளவீட்டுத் தொழில் நுட்பங்களில் மாற்றங்கள் எவையும் இல்லை.

இந்த அறிக்கையின் நியம வெளிப்படுத்தல்கள் தரப்பட்டுள்ள இடர்களை அடையாளம் காட்டும் அட்டவணை 172ஆம் பக்கத்திலுள்ள GRI குறிகாட்டியைப் பார்க்கவும். இலங்கைச் சந்தையில் எமது செயற்பாடுகள் பல மூலகங்களினால் பாதிப்படைந்துள்ளது. அவற்றுள் பிரதானமானது புதிய வங்கிகள் மற்றும் நிதி கம்பனிகள் ஆகியவற்றின் தோற்றமும் போட்டியாளர்களால் வழங்கப்பட்ட பல்வேறு வகையான உற்பத்திகளுமாகும். தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சியும் விரைவான மாற்றங்களும் எங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு தற்போதுள்ள வசதிகளையும் சேவைகளையும் பெற்றுத் தருகின்றதையும் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.

### அறிக்கையின் நியம வெளிப்படுத்தல்கள் தரப்பட்டுள்ள இடங்களைக் காட்டும் அட்டவணை

174 ஆம் பக்கததில் உள்ள GRI குறிகாட்டியை பார்கக்வும்.

### முக்கியமான தாக்கங்களும், இடர்களும் வாய்ப்புகளும்

இலங்கைச் சந்தையில் எமது செயற்பாடு பல காரணிகளினால் தாக்கமடைந்துள்ளன. அவற்றுல் பிரதானமானவை புதிய வங்கிகள், நிதி கம்பனிகள் ஆகியவற்றின் தோற்றமும் போட்டியாளர்களால் வழங்கப்பட்ட மாறுபட்ட உற்பத்திகளும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சியும், விரைவான மாற்றங்கள் என்பவையுமாகும். எங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு பிந்திய வசதிகளும், சேவைகளும் கிடைக்கப்

பெறுகின்றனவா என்பதில், இப்பொழுது இருக்கின்ற அமைப்புக்களில் உயர்வான மாற்றங்களைச் செய்வதனூடாக வழங்குவதில் எப்போதும் கவனமாக இருக்கின்றோம். எமது இயக்கத்தின், விரிவாக்கத்திற்கு சந்தர்ப்பங்கள் இல்லாமை / குறைவு ஒரு தடையாக உள்ளது. பிரதானமான மற்றுமொரு காரணியாகவும் மேலும் இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) விதிக்கப்பட்ட கடன் அமைப்பு போன்ற தர ஒழுங்குபடுத்தல் கட்டுப்பாடுகள் நேரடித் தாக்கத்தை எமது செயற்பாடுகளில் ஏற்படுத்தியுள்ளன.

ஒரு வர்த்தக ஸ்தாபனம் என்ற வகையில் எமது நாளாந்த செயற்பாடுகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் எமது அடி மட்டத்திலிருந்து பல்வேறு இடர்களுக்கு நாங்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. முக்கியமான ஒரு இடர் காரணியாக வட்டி வீதத்திலும் நாணய பரிமாற்று வீதத்திலும் ஏற்படும் தழம்பல் நிலைகளைக் குறிப்பிடக் கூடியதாக உள்ளது. இந்த நிச்சயமற்ற நிலைமைகள் வட்டி வருமானத்திலும் வெளிநாட்டு பணப் பரிமாற்று வருமானத்திலும் செலவுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நாம் எதிர்நோக்கியுள்ள அடுத்த இடர் காரணியாக தொழில்நுட்பம் காலம் கடந்தவையாக காணப்படுவதை குறிப்பிடலாம். இது இலங்கையில் காணப்படும் அதியுயர் போட்டித் தன்மையுள்ள நிதிச் சந்தையில் நாம் போட்டியிட முடியாத நிலையை ஏற்படுத்துகிறது. இந்நிலைமை வாடிக்கையாளர்கள் புதிய தொழில்நுட்ப பயன்பாட்டினூடாக தரமான வினைத் திறனுள்ள சேவைகளை வழங்கும். போட்டியாளர்களை நோக்கி செல்ல வழி வகுக்கும்.

> **“ஒரு இடர் காரணியாக வட்டி வீதத்திலும் நாணய பரிமாற்று வீதத்திலும் ஏற்படும் தழம்பல் நிலைகளைக் குறிப்பிடக் கூடியதாக உள்ளது. இந்த நிச்சயமற்ற நிலைமைகள் வட்டி வருமானத்திலும் வெளிநாட்டு பணப் பரிமாற்று வருமானத்திலும் செலவுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.”**

மேலும் சந்தையில் நிலவக்கூடிய நிச்சயமின்மை செயற்பாடுகளில் எதிர்பாராத நிலமைகளை உருவாக்கி ஏற்கனவே ஆண்டிற்கென வரையறுக்கப்பட்டுள்ள திட்டங்களையும் இலக்குகளையும் திசை திருப்புவதில் சிரமங்களை ஏற்படுத்தலாம். மேலும் ஒழுங்குபடுத்தல் தடைகளும் மாற்றங்களும் எமது வருமானங்கள் செலவுகள் மற்றும் இலாபத் தன்மைகளில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இடரை அறிமுகப்படுத்துகின்றது.

எனினும், இந்த இடர்களிலிருந்தும், தே.சே.வ. யின் எதிர்கால முன்னேற்றத்திற்கான அனேக வாய்ப்புக்களை அடையாளம் கண்டிருக்கின்றோம். உதாரணமாக நிதிச் சேவைத் துறை தொடர்பாக இலங்கையின் பொது மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பியுள்ளோம். நாடுமுழுவதும் உள்ள புதிய உத்தேச நுகர்வோர் குழுக்களுக்கிடையில் பாரிய அபிவிருத்தி வாய்ப்புக்களை உறுதிப்படுத்தியுள்ளோம்.

அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்வதனூடாக ஒட்டு மொத்த தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதற்கு மற்றொரு வாய்ப்பையும் பெற்றிருக்கின்றோம். அத்தகைய முதலீடுகள் நாட்டு மக்களுக்கும் சமூக பொருளாதார தாக்கத்தை உண்டு பண்ணும் அதேவேளை, இயன்றவரை வங்கிக்கும் இலாபத்தைப் பெருகச் செய்யும் வைப்புக்கள் மீதான அரசாங்க உத்தரவாதம் சந்தையில் எமது பங்கையும் செயற்பாடுகளையும் விரிவுபடுத்த சந்தர்ப்பத்தையும் வழங்கியுள்ளது.

## நிறுவன ரீதியான ஒரு விபரத் திரட்டு

### நிறுவன ரீதியான தகவல்கள் உற்பத்திகள் மற்றும் சேவைகள்

ஸ்தாபனத்தின் தகவற் பரிவில் தே.சே.வ. யினதும் அதன் துணை நிறுவனத்தினதும் அத்தியாவசிய தகவல்களை 274 பக்கத்தில்

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

"அரச வங்கி என்ற வகையில் வீடமைப்புக் கடன் ஏற்பாடுகள் இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பிரதான அம்சமாகும்."

பெற முடியும். எமது உற்பத்திகள், சேவைகள் தொடர்பான முழு விபரங்களையும் தயவு செய்து இந்த ஆண்டறிக்கையின் 259 பக்கத்தில் பார்க்கவும்.

### நிறுவனத்தின் செயற்பாட்டு கட்டமைப்பு

தே.சே.வ. செயற்பாட்டு கட்டமைப்பில் செயற்பாட்டு பிரிவுகளும், துணைச் சேவைகளும் துணை நிறுவனங்களும் அடங்குகின்றன. செயற்பாட்டு பிரிவில், கிளை முகாமைத்துவம், கடன், கருத்திட்ட நிதி சர்வதேச செயற்பாடுகள் ஆகியவை அடங்கியுள்ளன. சில்லறை கடன்கள் கொடுப்பனவு, கருத்திட்ட நிதி, சர்வதேச செயற்பாடுகள் ஆகியனவும் அடங்கியுள்ளன. மற்றும் அஞ்சல் வங்கி, திறைசேரி செயற்பாட்டுப் பிரிவும் அடங்கியுள்ளன. அதேவேளை, உதவிச் சேவைகள் பிரிவில் எமது வங்கியிய சட்டம், தகவல் தொழில்நுட்பம், நிதியும் திட்டமிடலும், மனித வள அபிவிருத்தி பயிற்சி, மற்றும் சந்தைப்படுத்தல் என்பவை அடங்கியுள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக வங்கி கட்டமைப்பு குறித்த விடயங்களில், இடர் முகாமைத்துவம், இணங்கிப் போதலும், உள்ளக கணக்காய்வு செயற்பாடுகள் என்பவையும் உள்ளடக்கப்பட்டுள்ளன. எமது துணை நிறுவனமான தே.சே.வ. இன் முகாமைத்துவக் கம்பனி (லிமிரெட்) வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் அமைந்துள்ளது.

### நிறுவனத்தில் தலைமைக் காரியாலயம்

நிறுவனத்தில் தகவற் பிரிவில் அமைவிடம் காட்டப்பட்டுள்ளது.

### உரித்துடமையும் சட்ட முறையின் தன்மையும்

உரித்துடமையும் சட்ட முறையின் தன்மையும் நிறுவனத்தின் தகவற் பிரிவில் கூறப்பட்டுள்ளது.

### தேசிய சேமிப்பு வங்கி செயற்படும் நாடுகள்

உள்ளக செயற்பாடுகளுக்கு மேலதிகமாக இலங்கை முழுதும் 648 அஞ்சல் நிலையங்களும், 3412 உப அஞ்சல் நிலையங்க;டாகவும், 219 தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக;டாகவும் வெளிநாட்டு பணப் பரிமாற்று செயற்பாடுகளை பெரும்பாலும் மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் எமது நாட்டு மக்களின் தேவைகளுக்காக நடத்துகிறது. இத்தாலி, ஜேர்மன், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சுவிஸ்சர்லாந்து, பிரான்ஸ், அயர்லாந்து, சுவீடன், நெதர்லாந்து, ர்'யா மற்றும் ஆசிய நாடுகளான ஹொங்கொங், மலேசியா, கொரிய குடியரசு, ஆகிய நாடுகளிலிருந்தும் தே.சே.வ. ஊடாக பணம் அனுப்பும் வசதிகளை இலங்கை மக்கள் பெற்றிருக்கின்றார்கள்.

### சேவையாற்றும் சந்தைகள்

வெவ்வேறு வகையான சந்தைப் பிரிவுகளின் தேவைகளைச் சந்திப்பதற்காக வடிவமைக்கப்பட்ட முழுமையான வீச்சுடன் உருவாக்கப்பட்ட நிதி உற்பத்திகளூடாக பல்வேறு வகையான சந்தைகளுக்கு தேசேவ சேவையாற்றுகின்றது. எமது முக்கிய உற்பத்திகள் வைப்புக்களும் சிறு வர்த்தகக் கடன் உற்பத்திகளுமாகும். இது நாடெங்கிலும் உள்ள பரந்த வாடிக்கையாளர் தளத்திற்குச் சேவையாற்றுகின்றது.

### வைப்புக்களை ஏற்றல்

நாம், சேமிப்புக்கள், கால வைப்புக்கள் என்ற வடிவில் பல உற்பத்திகளை வைத்திருக்கின்றோம். வட்டி வீதம், வயது, பால் மற்றும் முதிர்ச்சிக் காலம் என்ற அடிப்படையில் மேற்படி துறைகளுக்கு, உற்பத்திகளை வழங்குகின்றோம்.

இந்த வைப்புக்கள், ATM அட்டைகள், கடன் அட்டைகள், இலகு அட்டைகள் (Easy Card) சர்வதேச வலைப்பின்னலூடான வங்கி செயற்பாடுகள் மற்றும் குறுஞ் செய்திச் சேவை (SMS) ஆகியவற்றுடன் இணைந்து காணப்படுகின்றது.

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

### சிறுவர்த்தகக் கடன் செயற்பாடுகள்

சிறு வர்த்தகக் கடன் கொடுப்பனவின் கீழ் நான்கு வகையான பிரதான கடன்களை வழங்குகிறோம். அவை, வீடமைப்புக் கடன், அடகு வைத்தல், தனிநபர் கடன், மற்றும் வாகனக் கடன் (Auto Loan) களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. எமது சிறு வர்ததகக் கடன் கொடுப்பனவை செயற்படுத்துபவர்கள் பிரதானமாக வீடமைப்புக் கடன் வசதிகள் ஏற்பாடுகளுடன் தொடர்புடையவர்களாக உள்ளனர்.

அரச வங்கி என்ற வகையில் வீடமைப்புக் கடன் ஏற்பாடுகள் இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பிரதான அம்சமாகும். மக்களுக்கான வசிப்பிடத்தை பெறக் கூடிய, வீடமைப்புக் கடன்களை வழங்கும் ஏற்பாடுகளில் ஈடுபட்டிருப்பதில் பெருமைப்படுகின்றோம். அரசாங்க ஊழியர்களுக்கான, அரச உதவியுடன் கூடிய வீடமைப்புக் கடன்களுக்கான வசதிகளையும் செய்து கொடுக்கின்றோம். குறைந்த வட்டி வீதத்தில் அடகு முற்பணங்கள் வழங்குகின்றோம். எனினும் ஒப்பீட்டு ரீதியாக சவரன் ஒன்றிற்கான உயர்ந்த தொகையை வழங்குகின்றோம். தனிப்பட்ட உத்தரவாதம் அல்லது பிணைய அடிப்படையில் வாடிக்கையாளர்களின் தேவைகளின் படி தனிநபர் கடன்களை வழங்குகின்றோம்.

இந்த ஆண்டின்போது குடியேறிய பணியாளர்களுக்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் இணைந்து, அவர்களுக்கான உற்பத்திகளாகவும் சேவைகளாகவும் அட்டைகளையும் (NRFC / RFC) சேமிப்புக் கணக்குகளையும், நிலையான வைப்புக்களையும் வங்கி வழங்கியுள்ளது. வாகனங்களை சொந்தமாக வாங்கி அனுபவிப்பதனைக் கனவாகக் கொடவர்களுக்கு வசதியான மீள் செலுத்தலுக்கான விருப்பத்தேர்வுகள், வாகனக் கடன் வசதி கிடைக்கக் கூடியதாக உள்ளது. கருத்திட்ட கொடுப்பனவாக பெரியளவிலான கருத்திட்டங்களுக்காக ஒன்றுபட்ட கொடுப்பனவுகளையும் மேற்கொள்கின்றோம்.

### ஸ்தாபனத்தின் அளவு

31.12.2012அன்றுள்ளவாறு தே.சே.வ. 264 நிரந்தர ஊழியர்களையும் 481 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களையும் கொண்ட 3128 முழு நேர உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்தியுள்ளது. 2012 டிசம்பர் முடிவில் தே.சே.வ. நாடு முழுவதும் 219 கிளைகளை வைத்துள்ளது. இவைகளுள் பெரும்பாலானவை சேமிப்பு, முதலீட்டு வசதிகள் குறைவாக உள்ள கிராமப் புறத்திலேயே அமைந்துள்ளன. தே.சே.வ. அதன் கிளைகளுடாக கிராமிய சமூகத்தை, சட்டவிரோத நிதியமைப்புக்களிடமிருந்தும், இலகுவில் ஏமாற்றி கொள்ளையிடுபவர்களின் பிடியிலிருந்தும் காப்பாற்றியுள்ளது.

மேலும், 24 மணிநேரமும் இயங்கும் ATM இயந்திரங்கள் நாடு முழுதும் உள்ள பெரும்பாலான கிளைகளில் பொருத்தப்பட்டுள்ளன. தற்பொழுது 231 ATM இயந்திரங்கள் தே.சே.வ. விலையமைப்புக்குள் இருக்கின்றன.

சேமிப்புப் பழக்கத்தை பாடசாலைகளிலும் வாராந்த, வார முடிவு சந்தைகளிலும் தொழிற்சாலைகளிலும், வங்கிச் செயற்பாட்டு தீர்வுகளை கொடுத்து சேமிப்புக்கு உற்காசம் அளிப்பதில் POS வங்கித் தொழில்பாடு பாரிய வெற்றியைக் கண்டுள்ளது.

வங்கியின் நிதி அளவைக் காண்பதற்காக 2012இற்கான நிதி நிலைமைக் கூற்றிலிருந்து பின்வரும் தரவுகள் பெறப்பட்டுள்ளன.

| | 2012 |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| மொத்தச் சொத்து | **509,694** |
| மொத்த உரிமைப் பங்கு | **24,336** |
| வருமானம் | **53,045** |
| தேறிய வட்டி வருமானம் | **13,531** |
| வரிக்குப் பின்னரான இலாபம் | **4,331** |

### அறிக்கையிடும் காலத்தின் போது ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள்

அறிக்கை ஆண்டில் எற்பட்ட குறிப்பிடத்தக்க பிரதான மாற்றங்கள் முன்னைய சபையின் பதவி விலகலைத் தொடர்ந்து, புதிய தலைவரும் சபை அங்கத்தவர்களும் நியமிக்கப்பட்டனர். மீளாய்வின் ஆண்டில் எமது சேவைகளை விஸ்தரித்துள்ளோம். 09 புதிய கிளைகளையும் 793 புதிய பாடசாலை வங்கிச் கூறுகளையும் திறந்துள்ளோம். பஹ்ரேனிலும், தென்கொரியாவிலும் பாதுகாப்பான வெளிநாட்டு நாணய மாற்று பரிமாற்றுகளுடன் புதிய தொடர்புகளை ஸ்தாபித்துள்ளோம். இந்த நாடுகளில் உள்ள எமது நாட்டவர்களையும் உற்பத்தியாளர்களுக்கு அவர்கள் பணத்தை எமது நாட்டிற்கு

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

அனுப்பவதற்கான வசதிகளைச் செய்யும் நோக்கில் உதவுகின்றோம். பஹ்ரேனில் நிதியளிக்கும் கம்பனியுடன் தொடர்புகளை கொண்டுள்ளோம். தென் கொரியாவில் உள்ள வூரி (WOORI) வங்கியுடன் தொடர்புகளை ஏற்படுத்தினோம்.

நாம் விசா சர்வதேசத்துடன் புதிய வர்த்தகப் பங்காளிகளாக சேர்த்துள்ளோம். தே.சே.வ. யின் புதிய டெபிட் காட் அட்டை முறையை ஆரம்பித்துள்ளோம். இவை, தே.சே.வ. யுடன் வங்கி செயற்பாடுகளில் வைத்திருக்கும் வசதியை அதிகரிக்கும்.

இந்தக் காலப் பகுதியில் வங்கிக் கட்ட அமைப்பில் வங்கி நடைமுறையின் மாற்றங்களும் முன்னேற்றங்களும் தொடர்ந்தது. கட்டமைப்பு மீள்பார்வை, ஒழுங்குபடுத்தப்பட்டது. தகவல் அமைப்பில் வினைத் திறன் அதிகரித்தல், அதேவேளை கிளைகளில் தகவல் தளம் சுத்திகரிப்புத் தொடர் செயற்பாடுகள், பல்கலைக்கழக ஆர்வலர்களின் உதவியுடன் எமது கிளை வலையமைப்பிலிருந்து மிகச் சிறந்த கிளையைத் தெரிவு செய்யும் முறைமையை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

### பரிசுகளும் அங்கீகாரமும்

தொடர்ந்து பத்தாவது வருடமாக AAA தரப்படுத்தலை பரிசாக குவைஉா சுயவபை வழங்கியுள்ளமையை இட்டு அதனை அறிவிப்பதில் பெருமைப்படுகின்றோம். எமது வருடாந்த அறிக்கை இந்த வருடப் பகுதியில் பல பரிசுகளை தொடர்ந்து பெற்றது.

தே.சே.வ. 2012இல் வெவ்வேறு மூலங்களிலிருந்து 2011 வருடாந்த அறிக்கை அங்கீகாரங்களைப் பெற்றது. இது எமது அறிக்கைப்படுத்தலின் தராதரத்துக்கும் வெளிப்படைத் தன்மைக்கும் ஒரு குறிகாட்டியாகும். எமக்குக் கிடைத்த பரிசுகள் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. எமது வருடாந்த அறிக்கைக்காக கிடைத்த பரிசுகள
   - League American Communication Professional Vision பரிசளிப்பு விழா
     - ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளின் முன்னனி ஐம்பது நாடுகளின் வருடாந்த அறிக்கை யில் ஒன்றாக எமது 2011ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை இருந்தது.
     - வங்கியின் சிக்கனம், மற்றும் ஈட்டு நிதி வகைக்காக தங்கப் பரிசு வழங்கப்பட்டது.
   - சர்வதேச ARC பரிசுகள்
     - இலங்கையின் மிகச் சிறந்த ஆண்டறிக்கைக்கான கிரான்ட் அவார்ட்
       மரபு ரீதியற்ற ஆண்டறிக்கை க்கான தங்கப் பரிசு
     - தலைவரது மீள்பார்வை அறிக்கைக்கான சிறப்பு தங்கப் பரிசு (Honor)
   - இலங்கைப் பட்டயக் கணக்காளர் சங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டறிக்கைக்கான பரிசுகள்.
     - முகாமைத்துவத்துவ விபரங்களுக்கான 1வது ரன்னர் அப் பரிசு
     - நிதி நிறுவன வகைப்படுத் தலுக்கான வெள்ளிப் பதக்கம்
     - SAFA இன் மிகச் சிறப்பாக பிரசுரிக்கப்பட்ட ஆண்டறிக்கைக்கான பொதுத்துறை சார்ந்த வங்கி நடவடிக்கைகளின் கீழ் திறமைக்கான சான்றிதழ்

லங்கா கிளியர் (பிரைவெட்) லிமிட்டட் இன் 10வது வருடாந்த விழாக்களில் (SLIPS) இல் சிறந்த வூழு பங்களிப்பாளராக பரிசை வென்றெடுத்தது. வர்த்தக வங்கிகள் உட்பட பல போட்டியாளர்களில் தே.சே.வ. இப் பரிசைப் பெற்றதுடன் ஒரு மேன்மையான நிகழ்வாக மதிக்கப்படுகின்றது.

### ஆளுமை கடப்பாடு மற்றும் ஈடுபாடுகள்

நாம் 100% அரச உத்தரவாதம் பெற்ற, தலைசிறந்த விசேட தேர்ச்சி பெற்ற சேமிப்பு வங்கியாகும். பொது ஸ்தாபனம் என்ற வகையில் தே.சே.வ. இலங்கை மக்களுக்கு பொறுப்பாகவும், பொறுப்புக் கூற வேண்டிய

# புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தாித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

கடப்பாடுமுள்ளது. இதனால் எமது நிர்வாக முறை உள்ளக நடைமுறைகள், உச்சப் பொறுப்பு கூறல், இணங்கிப் போதல், வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை அடிப்படையாக கொண்டவையாக இருக்க வேண்டும். ஆகவே, வங்கியினது, எல்லாச் சட்டங்களும் ஒழுங்கு அமைப்பு அரசாங்கத்தினாலும் திறைசேரியினாலும் இலங்கை மத்திய வங்கியினாலும் விதிக்கப்படும் ஒழுங்கமைப்பு விதிகளுடன் கடுமையாக இணங்கி நடப்பதாக உள்ளது.

### ஆட்சி நிர்வாக அமைப்புமுறை

வங்கியின் உயர் ஆட்சி அங்கமாக இயக்குனர் சபை விளக்குகிறது. வெளயிலிருந்து வரும் பணிப்பாளர்கள் தவிர ஏனைய அங்கத்தினர்கள் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரால் நியமிக்கப்படுகிறார்கள். கொள்கை, மூலோபாயம், செயற்பாடுகளும், மீளாய்வும் ஊடாக வங்கியினது ஆணையை நிறைவேற்றும் பொறுப்பு பணிப்பாளர் சபையின் கையில் விடப்பட்டுள்ளது. பணிப்பாளர்கள் அவர்களது நேர்மைக்காகவும் வேறுபட்ட ஆனால் பொருத்தமான ஒழுக்கப் பின்னணியில் அவர்களது விரிந்த அனுபவ அடிப்படையில் தெரிவு செய்யப்படுகிறார்கள். பணிப்பாளர் சபை வெவ்வேறு தகுதிகளையும் திறமைகளையும் கொண்டவர்களை உள்ளடக்கியுள்ளது. பணிப்பாளர் சபை குழுக்களுடாக மேற்பார்வை செய்கிறது. நான்கு உப குழுக்களை சபை கொண்டுள்ளது. அவையாவன,

இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டலின் கீழ் இவை அமைக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளன. அவற்றின் அங்கத்தவர்கள் பணிப்பாளர் சபையினுள் நியமிக்கப்படுகின்றார்கள். ஒவ்வொரு குழுவும் அவற்றிற்கென அமைக்கப்பட்ட பட்டயத்தினால் நிர்வகிக்கப்படுகின்றன. சபையின் குழுக்கள் காலாண்டுக்கொரு முறை அல்லது குறித்த பட்டயத்தினால் குறித்துச் சொல்லப்படட கால இடைவெளியில் கூடுகிறார்கள்.

பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் (CEO/GM) அதியுயர் அதிகாரியாகச் செயற்படுவர். தலைவருக்கும், சபைக்கும் நேரடியாக அறிவிப்பார். அடுத்த கட்ட அதிகாரமுடையதாக இணைத்துக் கொள்ளப்பட்ட பதவிகளாக நிறுவன முகாமைத்துவமும், நிறைவேற்று முகாமைத்துவமும் காணப்படு கிறது.

வருடாந்த அறிக்கையின் நிறுவன ஆளுமை மற்றும் இடர் முகரமைத்துவத்தில் 56 - 77 பக்கத்தில் காணப்படும் மேலும் அதிகமான

### பிரதான சபையின் வேலை

| | | நி.அ.அற்ற அங்கத்தினர் | பணியாற்று பணிப்பாளர் | சுயாதீன பணிப்பாளர் | சுயாதீனமற்ற பணிப்பாளர் | பால் | | வயது | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஆண் | பெண் | 60இற்கு கீழ் | 60இற்கு மேல் |
| | **பிரதான சபை** | | | | | | | | |
| 1 | திரு. சுனில் எஸ் சிறிசேன | ✓ | | | ✓ | M | | | ✓ |
| 2 | திரு. எஸ்.ரீ. அபேகுணவர்த்தண | | ✓ | | ✓ | M | | ✓ | |
| 3 | திரு. பீ.ஏ. அபேசேகர(28.02.2013 வரை) | ✓ | | ✓ | | M | | ✓ | |
| 4 | திரு. ஆர்.எம்.பீ. ரட்னாயக்க | ✓ | | ✓ | | M | | ✓ | |
| 5 | திரு. டீ.எல்.பீ.ஆர் அபேரட்ன | ✓ | | | ✓ | M | | ✓ | |
| 6 | திரு. லயனல் பீ. பௌ்னான்டோ | ✓ | | | ✓ | M | | ✓ | |
| 7 | திரு. பிறியந்த ஜயவர்த்தன | ✓ | | ✓ | | M | | ✓ | |
| 8 | திரு. சுமித் விஜேசிங்க | ✓ | | ✓ | | M | | ✓ | |

# புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

தே.சே.வ. ஆளுமை தலைவர்களை அறிந்து கொள்ளலாம்.

### சபையுடன் தொடர்பாடல் பங்குடமையாளர்

பொது ஸ்தாபனம் என்ற வகையில் தேசேவ இன் பங்குதாரராக இலங்கை அரசாங்கம் இருக்கின்றது. அரசாங்கத்தின் சார்பில் திறைசேரி வங்கியுடன் தொடர்பாடல்களை வைத்திருக்கிறது. வங்கிக்கும் திறைசேரிக்கும் இடையில் உரையாடல் ஒன்றை உறுதிப்படுத்துவதற்காக பணிப்பாளர் சபையில் வெளியிலிருந்து வரும் ஒரு அங்கத்தினராக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் பிரதிநிதி ஒருவர் கடமையாற்றுகின்றார். வங்கி காலத்திற்குக் காலம் திறைசேரிக்கு அறிக்கைகளை அளிக்கும். அத்துடன் அவ்வப்போது அறிக்கைகளை அளிப்பதற்கும் நாளதற்கு கொண்டு வருவதற்குமான கோரிக்கைகளுக்கும் இணங்கி செயற்படும். மேலும் பணிப்பாளர் சபையும் உயர் முகாமைத்துவமும் திறைசேரி அதிகாரிகளுடன் தொடர்ச்சியான உரையாடல்களைப் பேணும்.

### ஊழியர்கள்

வங்கி ஒழுங்கான செயற்பாட்டை உறுதி செய்வதற்காக ஊழியர்களுடன் சிறந்த தொடர்பாடல் முறையை (Leve) ஏற்படுத்தியுள்ளது. மேலும், ஊழியர்களுக்கும் சபைக்கும் இடையில், விசேட தொடர்பாடல் பொறிமுறை ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது. ஒழுங்கான தொடர்பாடலை உறுதி செய்வதற்காக பொது முகாமையாளர், முழு ஊழியர்கள் சார்பிலும் பிரதிநிதியாக சபையில் தோன்றி சபைக் கூட்டங்களில் பங்கேற்கிறார்.

மேலும், மேலதிக பொது முகாமையாளர் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் ஏனைய பிரதிப் பொது முகாமையாளர்கள் அவர்களின் நோக்கெல்லைக்குட்பட்ட விடயங்களின்போது சபைக்கு வருகின்றனர். செயற்பாட்டு விடயங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான ஊழியர்களின் எண்ணங்களை வெளியிடும் நோக்கத்திற்காக முகாமையாளர் சந்திப்பிற்கான கூட்டங்கள், ஏற்கக் கூடிய கால இடைவெளிகளில் வைத்துக் கொள்ளுகின்றார்கள். இந்தக் கூட்டங்களில் முழு சபை அங்கத்தவர்களும் பங்கேற்கின்றார்கள்.

வங்கி, ஊழியர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு ஐந்து தொழிற் சங்கங்களை வைத்திருக்கின்றது. இவை, அக்கறையுடைய விடயங்கள் தொடர்பாக வேண்டுகோள் விடுத்து, தலைவரையும், சபை அங்கத்தவர்களையும் சந்திக்கலாம். வங்கியில் அநேகமாக பிரகற்றமாக இருக்கும் வேலைகள் தொடர்பாக பணிப்பாளர்கள் மூலமாக ஊழியர்கள் தொடர்புகளை வைத்துக் கொள்ளும் வழிமுறையும் உள்ளது.

### நட்டஈடு செய்தல் தொடர்பான இணைப்பு

வங்கியினது முகாமைத்துவக் குழுவும் கூட்டு முகாமைத்துவமும் தனிப்பட்ட இலக்குகள் தொடர்பாக உட்படுத்தப்படுவதில்லை. எனினும், வங்கியின் மூலோபாயத்துடன் வர்த்தகத் திட்டத்திலும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்திலும் வருடாந்த இலக்குகள் குறித்தொதுக்கப்பட்டுள்ளன. ஆகவே, வங்கியின் ஒட்டு மொத்தமான சாதனைகளையும் அதன் செயலாற்றல்களையும் பொறுத்து ஊக்குவிப்புத் தொகை தீர்மானிக்கப்படுகின்றது.

### ஈடுபாடுகளின் முரண்பாடுகள்

பணிப்பாளர் சபைக்கும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கும் இடையில் ஏற்படும் திகாரிகளுக்குமிடையில் ஏற்படும் முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கான நடைமுறை 2011இல் அபிவிருத்தி செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதுடன் 2012இல் அது திருத்தியமைக்கப்பட்டது. மேலும், சபை செயலமர்வுகளின்போது சபையின் செயலாளரினால் தொடர்புடையவர்களின் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் கண்காணிக்கப்பட்டு கொடுக்கல் வாங்கல்கள் வெளியிடப்படும். நியம தேவைப்பாடு களுடன் இணங்கிச் செயற்படுவதை மீளாய்வு செய்யவும் உறுதிப்படுத்தவும் இணங்குவிப்பு அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

### சபை அங்கத்தவர்களின் தகைமை

தே.சே.வ. சட்டத்தின் தேவைக்கேற்ப ஏழு பணிப்பாளர்களில் ஐவர் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரினால் மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டவர்கள். கணக்கியல், சட்டம், சந்தைப்படுத்தல் போன்ற பல்வேறு துறைகளில் சிறப்புப் பெற்றவர்களாக இவர்கள் இருக்க வேண்டும். ஆறாவது, ஏழாவது அங்கத்தவர் திறைசேரிச் செயலாளரினாலும், (அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்) அஞ்சல் அதிபர் நாயகத்தினாலும் (அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்) முறையே நியமிக்கப்பட்டனர்.

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

சபையின் ஒழுக்க நடைமுறை இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நிறுவன ஆளுமை பணிப்புரைகளுக்கேற்ப செயற்படுத்தப்படுகின்றது. அனைத்து ஊழியர்களும் உள்ளக ஒழுக்கக் கோவைக்கும் அரசாங்க சத்தியப் பிரமாணத்துக்கும் கட்டுப்பட்டவர்களாவர்.

### தொலை நோக்கு பணி மதிப்பீடுகள் மற்றும் நோக்கங்கள்

வங்கியின் தொலை நோக்கு பணி கூற்றுகள் இந்த ஆண்டு அறிக்கையின் 4 - 5 பக்கங்களில் தரப்பட்டுள்ளன. இவை எமது கடப்பாட்டின் முக்கிய மதிப்பீடுகளையும் செயற்பாட்டுக் கொள்கைகளையும் பிரதிபலிப்பதாக இருக்கும்.

- வாடிக்கையாளர், கட்சிக்காரர், பங்காளர்கள் ஆகியோருக்கு திருப்தியைக் கொடுக்கின்றோம். அரசாங்கத்தின் தேவைகளைத் திருப்திப்படுத்துவதற்கும் அவ் -வாறே தனிப்பட்ட மற்றும் நிறுவன வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்துவதற்கும் ஆர்வமுடன் இருக்கின்றோம். நிலையானதும் நீண்ட கால செயலாற்றல் உள்ளதுமான ஒழுக்காற்று நிறைவேற்றலில் நாங்கள் நம்பிக்கை வைத்திருக்கின்றோம்.
- எமது குழுவை நம்புகிறோம். எமது பங்காளிகள் அனைவரதும் தொடர்பாளர்களினதும் எதிர்பார்ப்புக் -களையும் எதிர்நோக்கி இலங்கையைச் சுற்றி இணைந்து செயற்படுகின்றோம்.
- எமது தொடர்புகளில் நிலையானதும் ஒத்துப் போக கூடிய தன்மையும் நேர்மையும் நோக்கி நடைபோடுகின்றோம்.
- எமது மக்கள் சக்தியை தழுவுகின்றோம். எமக்கிடையேயுள்ள வேறுபாடுகளை மதிப்பீடு செய்கின்றோம். வேற்றுமைகளையும் உள்ளடக்கப்பட வேண்டியவற்றையும் விளங்குகின்றோம். இவை வங்கித் தொழிலுக்கு நன்மையை அளித்து வங்கியை உறுதியாக வைக்க உதவுகிறது.
- பொறுப்புடன் செயற்படுகின்றோம். மக்கள் வாழ்வில், எமது தீர்மானங்களும் செயற்பாடுகளும் மிகப் பெரிய அளவில் தாக்கத்தை விளைவுகளை ஏற்படுத்துகின்றன என நாம் எண்ணுகின்றோம். ஒழுங்கான இடர் முகாமைத்துவத்துக்கும் எப்போதும் சரியானவற்றை செய்வதற்கும் எங்களை நாங்களே பொறுப்புடையவர்களாக்கிக் கொண்டுள்ளோம்.
- வாய்ப்புகளை ஏற்படுத்தல் நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்து எமது சக்தியை பெறுவதற்கு எமக்கும் நாம் சேவை புரியும் வாடிக்கையாளர்களுக்கும், கட்சிக்காரர்களுக்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும் சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப ஈடுபாடு கொண்டுள்ளோம்.

### பொருளாதாரச் சுற்றுச் சூழல், மற்றும் சமூக செயலாற்றல் முகாமைத்துவம்

தொடர்புடைய இடர்கள், சந்தர்ப்பங்கள் உள்ளடங்கலாக பொருளாதார, சுற்றுச் சூழல், சமூக செயற்பாடுகளை தெரிவதிலும் முகாமைத்துவத்துக்கான செயற்பாடுகளுக்குமான நடைமுறைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பாக இணங்கிப் போதல் உட்பட மேற்படி உள்ளக நடைமுறைகள் ஒழுக்கக் கோவை வங்கியோடு தொடர்புடையதாக உள்ளது. உள்ளக இணங்கிப் போவது தொடர்பான கொள்கை, உள்ளக இடர் முகாமைத்துவக் கொள்கை, உள்ளக கடன் கொடுக்கும் கொள்கை மற்றும் குழுக்களினது செயற்பாடுகளை ஆய்வு செய்வதற்கான பட்டயத்தையும் இந்த உள்ளக நடைமுறைகள் உள்ளடக்கியிருக்கும். சபை, மனித வள முகாமைத்துவத்தையும் ஊழியர்களுக்கான பயிற்சியையும் வலிமைப்படுத்துவதற்காக மனித வள கொள்கையும், பயிற்சியும் அபிவிருத்திக்குமான கொள்கையும் கிடைப்பதனை அங்கீகரித்துள்ளது.

வெளியக செயல்முறைகளில் இலங்கை மத்திய வங்கியின் வழிநடத்தலகளின் கீழ், ஒழுங்குபடுத்தலுக்கு இணங்குவிப்பாக நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதும் உள்ளடக்குகின்றது. மேலும் வங்கியானது கடன் பிரிவுக்காக USI 900-12008 நற் சாட்சிப்படுத்தல்.'. உறுதிப்படுத்தல்களையும் பெற்றுள்ளது.

சபையின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கான செயல்முறைகள், வங்கயின் செயற்பாட்டிற்காக அதாவது தொலைநோக்கு மற்றும் பணி குறிக்கோள்களையும்

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

நடைமுறைப்படுத்தலையும் ஒழுக்கக்கோவைகளையும் விதிகள் ஒழுங்குபடுத்தல் முறைகளையும் அதன் செயற்பாட்டிற்காக விளக்கமாக விபரித்துள்ளது.

மேலும் வங்கியின் பொருளாதார சமூக சுற்றுச் சூழல் தொடர்பான செயற்பாடுகள் சபைக் கணக்காகய்வுக் குழு ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு போன்ற, சபையின் உப குழுக்களாலும் அல்கோ முதலீட்டு குழு, சந்தைப்படுத்தல் குழு, தகவல் தொழில்நுட்ப வழிநடத்தல் குழு, முகாமைத்துவக் குழு போன்ற உயர்மட்ட செயலாற்றல் குழுவிலும் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இக் குழுக்களினது மதிப்பீட்டு முடிவுகள் சபைக்கு அறிவிக்கப்படுகின்றன.

மூலோபாய வர்த்தகத் திட்டம் வருடாந்த செயற்திட்டம், வருடாந்த வங்கிச் செயற்திட்டம் ஆகியன செயற்பாட்டுக் குறிகாட்டிகளாக உள்ளன. இவை காலத்துக்குக் காலம் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

### முன்னெச்சரிக்கை அணுகுமுறை

பிரதிப் பொது முகாமையாளர் ஒருவரின் தலைமையில் உள்ளகக் கணக்காய்வு பிரிவினரால் செயற்பாட்டு இடர்கள் மதிப்பீடு செய்யப்படுவதற்கு முன் உள்ளகக் கணக்காய்வு தீர்மானத் திட்டம் செய்யப்படுகின்றது. வங்கிக்குள் மேலதிகமான ஒரு இடர் முகாமைத்துவப் பிரிவும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இடர் முகாமைத்துவ அறிக்கையின் 107 பக்கத்தில், இடர்களை குறைப்பது தொடர்பாக விபரமாக விபரிக்கப்பட்டுள்ளது.

இணங்குவிப்புப் பிரிவு வங்கியின் இணங்குவிப்பு ஒழுக்க விதிகளை கண்காணித்து முறையான சரிப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடு முன் எச்சரிக்கை அணுகுமுறையாக இருக்கிறது. முன்னெச்சரிக்கை அணுகு முறையாக வர்த்தகத் தொடர்ச்சித்திட்டம் ஆபத்துக்களிலிருந்து மீட்சி பெறும் திட்டம் என்பன அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

### தே.சே.வ. இற்கு பிரயோகிக்கக் கூடிய வெளியக முன்னெடுப்புகள்

ஒழுங்குபடுத்தவும், தரம் நிர்ணயிக்கவும் உள்ள ஸ்தாபனங்களால் வகுக்கப்பட்ட வெளிப்புற விதிகள், தொகுப்புக்களுக்கு ஏற்ப தே.சே.வ நடந்துகொள்கிறது. இலங்கையின் நிதித்துறைகளை ஒழுங்குபடுத்தும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் வழிகாட்டல் உத்திகளும், வழிகாட்டல்களும் வெளியக விதிகளுள் தலைமையானவை. மேலும் வங்கியின் தனியான பங்குகளை உடையதானதும் அரசுசார்பான பிரதிநிதியாகவும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் வழிகாட்டல்களுக்கும் உட்பட்டதாக தே.சே.வ. காணப்படுகிறது. நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் LKAS மற்றும் SLFRS ஆகியவற்றின் வழிகாட்டல்கள், தரத்திற்கும் அமைவாக நடந்துகொள்கிறது. உள்ளக கணக்காய்வாளர் சங்கத்தினரால் முன் வைக்கப்படும் தரத்திற்கு அமைவாக எமது உள்ளக கணக்காய்வு நடத்தப்படுகிறது.

அத்துடன் அமைப்பு முறையான உள்ளக கணக்காய்வுகளை நாங்கள் மேற்கொள்ளும்போது நாங்கள் அமைப்பு முறையான கணக்காய்வு கட்டுப்பாட்டு நிறுவனம் மற்றும் உறுதிப்பாட்டு தரப்படுத்தல்கள் என்பவற்றின் தேவைகளைக் கடைப்பிடிக்கின்றோம். இடர் முகாமைத்துவத்தைப் பொறுத்த வரையிலும் பசல II வழிகாட்டல்களுக்கும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இடர் முகாமைத்துவக் கொள்கைகளுக்கும் நாங்கள் இணங்குவிப்பாக நடக்கின்றோம். மேலும் எமது கடன் பிரிவு ISO 9001-2008 சான்றிதழை பெற்றுள்ளதுடன் நாங்கள் ISO தரப்படுத்தல்களையும் கடைப்பிடிக்கின்றோம்.

### இலஞ்சம் மற்றும் ஊழல்

தே.சே.வ. எப்போதும் பூஜ்ய சகிப்புத் தன்மையையே இலஞ்ச மற்றும் ஊழல்களில் பராமரித்துள்ளது. எந்த ரீதியிலும் இலஞ்சம் மற்றும் ஊழல்களாகக் கருதும்படியான செயல்கள் மன்னிக்கவோ அல்லது தெரிந்து அவற்றில் பங்குபற்றுவதிலோ எவ்வகையிலும் ஈடுபடமாட்டோம்.

### இலஞ்ச இடர் பகுப்பாய்வு

ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட பழைய அனுபவங்களையும் அளவுகோள்களையும் ஆதாரமாகக் கொண்டு, கிளைகளின் துணை இடர்களை மதிப்பீடு செய்கின்றோம். இதன்படி கிளைகள் உயர்ந்தவை சாதாரணமானவை அல்லது குறைந்த தரத்தைக் கொண்டவை என்னும் இடர் வீதத்தில் வைத்துள்ளோம். வருடாந்த கணக்காய்வு திட்டம் விருத்தி செய்யப்பட்டுள்ளது. இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு கிளையும் கணக்காய்வு செய்யப்படுகின்றது. வங்கியின் கணக்காய்வு குழுவுக்கு கணக்காய்வு அறிக்கை அனுப்பி வைக்கப்படுகிறது. உள்ளகக் கணக்காய்வு பிரிவிலிருந்து பின்பற்ற வேண்டி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

# புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

### இலஞ்சம் ஊழல்களுக்கான பதில் நடவடிக்கைகள்

மோசடி, அல்லது ஊழல் என்பவை இடம் பெறும் சந்தர்ப்பங்களின் போது புலன் விசாரணைகள் செய்யப்பட்டு, காணப்பட்ட விடயங்கள், மனித வள பிரிவுக்கு ஒழுக்காற்று நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படும்.

### பொது மக்கள் பங்கேற்புக் கொள்கை

தேசிய வரவு செலவுத் திட்ட தயாரிப்பின் போது வங்கி தனது பிரேரணைகளில் யோசனைகளை சமர்ப்பிக்கும். இலங்கை மத்திய வங்கியின் IFRS அமுல்படுத்தல் வழிகாட்டி விதிமுறை அபிவிருத்திக்கு வங்கி பங்களித்துள்ளது.

### அரசியல் பங்களிப்பு

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் எந்தவித அரசியற் பங்களிப்பும் செய்யவில்லை.

### போட்டிக்கு எதிரான நடத்தை

போட்டிக்கு எதிரான நடத்தை தொடர்பான எந்த சட்ட நடவடிக்கைக்குரிய வழக்கு விடயங்களும் இல்லை.

### இணங்குவிப்பு

டிஎப்சி கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக விதிக்கப்பட்ட தடையைத் தவிர சட்டங்களுக்கும் சட்ட விதிகளுக்கும் முரன்பாடாக நடந்தமைக்கான தண்டங்களோ, பணமில்லாத தடைகளையோ வங்கி பெற்றிருக்கவில்லை.

### சங்கங்களின் பிரதிநிதித்துவம்

தே.சே.வ. பொதுக் கொள்கைகளை ஆதரிக்கும், உதவும், சீராக்கும் பல சங்கங்களில் செயற்திறன் உள்ள அங்கத்தவராக இருக்கிறது. 2012இல் வங்கியானது பின்வரும் அமைப்புகளில் அங்கத்தவராக தொடர்ந்தது.

- இலங்கையின் தேசிய வர்த்தக சம்மேளனம்
- உலகளாவிய வங்கிகளுக்கு இடையிலான நிதியியல் தொழிற்தொடர்பு சபை
- யூரோ கீரோ எனப்படும் உலகக் கொடுப்பனவுச் சமூகம்.
- லங்கா கிளியர் (பிரைவட்) லிமிட்டட்.
- லங்கா சுவிப்ட் யூசர் குரூப்
- உலக சேமிப்பு வங்கி நிறுவனம்

### தொடர்புடைய பங்காளிகளின் ஈடுபாடுகள்

பொது அமைப்பு என்ற வகையில் தே.சே.வ. ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு அக்கறையுடனான பங்காளிகள் குழுவில் செயல்படுகிறது. பின்வரும் அட்டவணை வங்கியினது உத்தியோக பூர்வ முறையான தொடர்புகளையும் ஒவ்வொரு குழுவுடன் ஈடுபடும் முறையையும் காண்பிக்கிறது.

# புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

| பங்காளிகள் | கலந்துரையாடிய தலைப்புகள் | பொறுப்புகளின் வகை |
|---|---|---|
| பங்குதாரர்கள்: நிதி அமைச்சினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் இலங்கை அரசாங்கம் | - திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு<br>- ஒழுங்கமைப்பு அறிக்கைகளில் இனங்குவிப்பை உறுதிப்படுத்தல்<br>- நியம விகிதங்கள் (மூலதன போதுமை, திரவ சொத்துகள் போன்றவை பேணப்படுவதை உறுதிப்படுத்தல்<br>- வலையமைப்பு விரிவாக்கத்தின் சாத்தியத்தை நிச்சயப்படுத்தல்<br>- புதிய உற்பத்திகளையும், தற்போதுள்ள உற்பத்திகளையும் ஆரம்பிப்பதற்கும் மீள ஆரம்பிப்பதற்குமான திட்டம்<br>- செயற்படாத கடன்களை குறைவாக பேணுவதற்கான உத்திகள்<br>- சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்குவிப்பை உறுதிப்படுத்துவது.<br>- மூலோபாய வர்த்தகத் திட்டத்தை ஆயத்தம் செய்வது | - ஆண்டறிக்கை<br>- ஆண்டு வரவு செலவுத்திட்டம்<br>- வருடாந்த நடவடிக்கை திட்டம்<br>- மக்கள் தொடர்பு கூற்றுகள்<br>- பிரசுரங்கள்<br>- இடைக்கால நிதிக்கூற்றுகள்<br>- அவ்வப்போது வெளிவரும் புதிய விடயங்கள் |
| வாடிக்கையாளர்கள் | - வழங்கும் சேவைகள் மீது திருப்தி<br>- பாவணையாளர் கொடுப்பனவுகள் செய்யும் வசதி<br>- சேவைகளை பெறுவதில் ஏற்ற நன்மதிப்பும் அங்கீகாரமும்<br>- தொடர்புடையதும், நம்பகத்தன்மையுடையதுமான வங்கி தகவல்களை பெற முடிவது. (வட்டி வீதங்கள், கடன் வழங்கும் வீதங்கள்)<br>- ஊக்குவிப்பு நடவடிக்கைகள் பற்றியவிழிப்புணர்வு<br>- கிளைகளற்ற வங்கிச் சேவை வசதிகள் | - கிளைகள்<br>- இதுறும் ஆயோஜன கவய<br>- பாடசாலை வங்கிக் கூறு<br>- ஏரிஎம் கள்<br>- இணைய வங்கிச் சேவை<br>- கொண்டு செல்லும் வங்கிச் சேவை<br>- பிஓஎஸ் (POS)<br>- அழைப்பு நிலையங்கள்<br>- வாடிக்கையாளர் திருப்தி குறித்த ஆய்வுகள்<br>- நிறுவன வலைதளம் |

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

| பங்காளிகள் | கலந்துரையாடிய தலைப்புகள் | பொறுப்புகளின் வகை |
|---|---|---|
| வழங்குநர்கள் | - வழங்குனர்களை பதிவு செய்வது<br>- தேடிப் பெறும் வாய்ப்புகள்<br>- ஒப்பந்த கடப்பாடுகளை வழங்குவது | - தேடிப்பெற்றுக்கொள்ளும் நடைமுறைகள்<br>- கூட்டங்கள்<br>- இட அமைவு பரிசீலனைகள்<br>- உற்பத்தி காட்சிப்படுத்தல் |
| பணியாட்தொகுதியினரின் சங்கங்களும், நிறைவேற்று அதிகாரிகளின் சங்கங்களும் தேசேவ யில் ஐந்து தொழிற்சங்கங்கள் உள்ளன. பணியாட்களின் முறைப்பாடுகளை கவனிப்பதற்கு விசேட குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. சபைக்கு அறிக்கைகளை அளிக்கும். | - கூட்டு ஒப்பந்தங்கள்<br>- ஊதியங்கள்<br>- செயலாற்றல் போனஸ்<br>- பணியாளர்களுக்கான நலன்புரி நடவடிக்கைகள்<br>- எதிர்காலத் திட்டங்களும், மூலோபாய திட்ட அமுலாக்கமும்<br>- அறுதியிட்ட நன்மை மற்றும் பங்களிப்பு திட்டங்கள்<br>- பயிற்சிகளும் ஏனைய வசதிகளும்.<br>- ஒழுக்காற்று நடவடிக்கைகள்<br>- விசேட தர மதிப்பீடு. | - கூட்டு ஒப்பந்தங்கள் மீதான பேச்சுவார்த்தைகள்<br>- செயலாற்றல் தரத்தின் மதிப்பீடு<br>- உள்ளக செய்தித்தாள்<br>- பொது ஒலிபரப்புகளூடாக அறிவிப்புகள்<br>- இணையத்தளத்தில் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள்<br>- பயிற்றுவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்<br>- அவ்வப்போது நடத்தப்படும் கூட்டங்கள்<br>- காலத்திற்கு காலம் தகவல் அளிப்பது<br>- மீளாய்வு கூட்டங்கள்<br>- விசேட நிகழ்வுகள் |

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தாரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

| பங்காளிகள் | கலந்துரையாடிய தலைப்புகள் | பொறுப்புகளின் வகை |
|---|---|---|
| ஒழுங்கமைப்பாளர்களும் அரசாங்க சபைகளும்<br>- இலங்கை மத்திய வங்கி<br>- உள்நாட்டு இறைவரித் திணைக்களம்<br>- ஏனைய அரசாங்க நிறுவனங்கள்<br>- வெளியக கணக்காய் வாளர்கள்<br>- தொழில்சார் நிறுவனங் களும் வர்த்தக சமூகமும் | - இமவ ஒழுங்குவிதிகளும் பணிப்புரைகளும்<br>- பசல் II அமுலாக்கம்<br>- உ.இ.தி. இன் வரி விதிமுறைகள்<br>- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின், இலங்கை கணக்கீட்டு நியமங்களும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களும்<br>- வங்கியியல் உரிமக் கட்டணம்<br>- தொழில் ஒழுங்கு விதிகள்<br>- சந்தைப்படுத்தலும் ஊக்குவிப்புப் பிரச்சாரமும்<br>- விருதுகளும் பாராட்டுதல்களும் | - ஆண்டறிக்கை<br>- பணிப்புரைகளும் சுற்றறிக்கைகளும்<br>- இடைக்கால நிதிக் கூற்றுக்கள்<br>- ஒழுங்கமைப்பு அங்கங்களுக்கான காலத்திற்குரிய தகவல்கள்<br>- நேர்காணல்களும் கூட்டங்களும்<br>- நிபுணர்களின் அபிப்பிராயங்கள்<br>- போட்டிகளில் பங்கேற்றல்<br>- நிறுவன இணயம் |
| ஏணை ஈடுபாடுள்ளவர்கள் | - வங்கியின் செயற்பாட்டு செயலாற்றல்கள்<br>- வங்கியின் நிதி செயலாற்றல்கள்<br>- சமூகங்களிலிருந்து ஆட்சேர்ப்புகள்<br>- உற்பத்திகளும் சேவைகளும் ஆரம்பித்தலும் மீளவாரம்பித்தலும்<br>- வங்கிகளினால் வழங்கப்படும் புலமைப்பரிசுகள்<br>- வங்கியினால் மேற்கொள்ளப்படும் சமூக பொறுப்புணர்வு நடவடிக்கைகள் | - ஆண்டறிக்கை<br>- ஊக்குவிப்பு விளம்பரங்கள்<br>- அனுசரணைகள்<br>- ஊடக கூற்றுகள்<br>- மக்கள் தொடர்பு நடவடிக் கைகள்<br>- பணிக்கு ஆட்சேர்ப்பு விளம்பரங்கள் |

### பொருளாதார செயலாற்றல் குறிகாட்டிகள்

நிலையான வர்த்தக செயற்பாட்டுக்கு சார்பாகவுள்ள ஒரு பொது நிதி நிறுவனம் என்ற வகையில், நாம் எமது பொருளாதார பொறுப்புக்களை மிகவும் கடுமையானதாக கொள்ளுகின்றோம். எமது நீண்டகால, குறுங்கால பொருளாதார நோக்கங்களில் எமது நிறுவன (Corporate) வர்த்தகத்திட்டத்திலும் உபாயத்துடனான வர்த்தக திட்டத்திலும் வரவு செலவுத் திட்டத்திலும், செயற்திட்டத்திலும் விபரிக்கப்பட்டுள்ளன. இந்த நோக்கங்கள், கூட்டங்கள் சந்திப்புக்கள் ஊடாக எமது உத்தியோகத்தர்களுக்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.

நாம் உள்நாட்டு சேமிப்புக்களின் மீது மட்டும் கவனம் செலுத்தவில்லை. இலங்கையர் எங்கு வேலைபார்த்தாலும் அவர்களது பணத்தை உள்நோக்கி அனுப்புவதற்கு NRFC/RFC வைப்புக்களைப் பேண உதவுகின்றோம். புலம்பெயர்ந்து அயல்நாடுகளில் வேலை செய்வோரது வருமானங்களுக்கான நம்பிக்கைக்குரிய பாதுகாவலனாக இருக்கிறாம், சர்வதேசம், யூரோ கீரோ, சகோதரத்துவம் Money Gram உட்பட உலகம் முழுவதும் 35 முன்னணி பரிமாற்று நிலையங்களுடன் உலக தொடர்புகளை வலைப்பின்னலூடாக ஏற்படுத்தியுள்ளோம்.

தே.சே.வ விணைத்திறனுடன், கடன் வழங்கும், முற்பணம் வழங்கும் கடமைகளில்

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

முகாமை செய்கின்றது. அதேவேளை, கிராமப் பகுதிகளின் தேவைகளையும், வடக்குக் கிழக்கு மாகாணங்களின் தேவைகளையும் கவனத்தில் எடுக்கின்றது.

வீடமைப்புக் கடன், தனிநபர் கடன், விவசாயக் கடன், அடகு முற்பணம், கருத்திட்ட நிதியளிப்பு முதலியன இக்கடமைகளுல் பிரதானமானவை. ஒரு அபிவிருத்தியடையும் நாட்டுக்கு சிக்கனத் தன்மையாக இருப்பினும் உட்கட்டுமான அபிவிருத்தி மிகவும் பிரதானமானதாகும். இதனுல் மக்களுக்காக அத்தியாவசிய சேவைகளுக்காக அணுகும் வசதிகளை வழங்குகின்றோம். நவீன உலகில் முன்னோக்கிச் செல்லவும், விரைவில் துரித அபிவிருத்தியை சாத்தியமாக்கவும் உதவுகின்றோம். தே.சே.வ. கூட்டான கொடுப்பனவு ஊடாக உட்கட்டுமான கருத்திட்டங்களுக்கு நிதி வழங்கியுள்ளது. எமது வங்கி கிராமங்கள், பின்தங்கிய பகுதிகளில் உள்ள வசதி குறைந்த மக்களுக்கு நிதி உற்பத்திகளை வழங்குகின்றது. அணுகக் கூடியதும், கொடுக்கக் கூடியதுமான சேவைகளை குறைந்த வருமானமுடைய மக்களுக்கு கொடுக்கிறது.

வங்கியானது மக்களின் இதயங்களுக்கு மிக நெருக்கமாக உள்ளது. பெரும்பாலும் முழு இலங்கையர்களும் தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து பெறக் கூடிய கடன்கள் தொடர்பாக, அறிந்துள்ளார்கள்.

கிராமிய மக்களின் தேவைகளைத் தீர்த்திருக்கின்ற அதேவேளை, உலகின் சுறுசுறுப்பான தொழில்நுட்ப முன்னேற்றங்களை

> “எமது 90% முதலீட்டுப் பங்குகள் அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்வதை பிரதி நிதித்துவப் படுத்துகின்றன. தேசிய அபிவிருத்தி முனைப்புகளுக்காக கிடைக்கக் கூடிய நிதியையும் உறுதிப் படுத்துகின்றோம்.”

உடனுக்குடன் பெற நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது. எமது சர்வதேச வங்கி வலையமைப்பு SMS குறுஞ் செய்தி சேவை வங்கி முறை வசதிகள் சமகால வங்கி வசதிகளை சமாகல வசதிகளுக்கு அதிகரிப்பு செய்துள்ளது. உள்நாட்டிலும் அல்லது மற்றும் வெளி நாடுகளிலும் அவர்களது வங்கி கொடுக்கல் வாங்கல்களை செய்யக் கூடியதாக உள்ளது. அல்லது விரும்ப உதவியுள்ளது. நாம் பணச் சீட்டைகளுக்கான கொடுப்பனவு முறையையும் எமது சர்வதேச வங்கி

வலையமைப்பினூடாக வசதிகளை கட்டியெழுப்பி இருக்கின்றோம். நாம் பாரிய பயன்பாட்டு வழங்குனர்கள் தொலைத் தொடர்பு வழங்குவோர்கள் பாரிய காப்புறுதிக் கம்பனிகளுடன் இணைக்கப்பட்டிருக்கின்றோம்.

வாடிக்கையாளரின் திருப்திகளை உச்சப்படுத்த எங்களால் வழங்கப்படும் உற்பத்திகளை மீள்வடிவமைக்கும் ஆராய்ச்சியை நடத்தியுள்ளோம். பொருளாதாரம் பொறுப்புக்களின் ஒரு பகுதியாக அரசாங்க வருமானத்துக்கு வருமான வரி பெறுமதி சேர்க்கப்பட்ட வரியூடாக பங்களிப்பு செய்கின்றோம். இலாபப் பங்கு மூலமாக திரட்டிய நிதிக்குப் பங்களிப்புகள் செய்கின்றோம்.

எமது 90% முதலீட்டுப் பங்குகள் அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்வதை பிரதி நிதித்துவப்படுத்துகின்றன. தேசிய அபிவிருத்தி முனைப்புக்களுக்காகக் கிடைக்கக் கூடிய நிதியையும் உறுதிப்படுத்துகின்றோம்.

தே.சே.வ. வங்கிகள், நிதி நிறுவனங்களுக்கு மின் சக்தி, தொலைத் தொடர்புகள், கட்டட நிர்மாணம் பொறியியல் போன்ற வெவ்வேறுபட்ட பொருளாதாரத் துறைகளில் உரிமைப் பங்கு முதலீடுகள் ஊடாக தேசிய பொருளாதாரத்துக்கு உதவுகின்றோம். மக்களுக்கு வங்கிச் சேவைகள் கிடைக்கச் செய்யும் அதேவேளை, நாம் விசேட கவனத்தை, கிராமப் பகுதிகளுக்கும், வடக்கு கிழக்குக்கும் செலுத்துகின்றோம்.

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தாரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

பொருளாதார பெறுமதி கூட்டல் அறிக்கை

| | 2012 | 2011 |
|---|---|---|
| | ரூ. '000 | ரூ. '000 |
| **மூலதன முதலீடு** | | |
| பங்குதாரர் நிதி | 24,335,791 | 23,052,483 |
| கூட்டுக : கடன் நட்ட ஏற்பாடு /பெறுமதி குறைப்பிற்கான ஏற்பாடு | 625,773 | 495,462 |
| | 24,961,564 | 23,547,945 |
| **பெறுகைகள்** | | |
| வரிக்குப் பின்னரான இலாபம் | 4,331,342 | 6,061,862 |
| கூட்டுக : கடன் நட்டங்களும் ஏற்பாடுகளும் | 130,935 | 142,632 |
| | 4,462,277 | 6,204,494 |
| 12 மாத சராசரி நிறையேற்றப்பட்ட பங்கு மூலதன செலவை அடிப்படையாகக் கொண்டது திறைசேரி உண்டியல் வீதத்துடன் 1.8% க்கான இடர் தவணை கட்டணம் சேர்ந்தது | 13.90% | 9.43% |
| சராசரி மூலதன கிரயம் | 3,469,657 | 3,983,923 |
| **பொருளாதார பெறுமதி கூட்டல்** | 992,620 | 2,220,571 |

# புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

வருமானத்தின் மூலங்களும், பாவனையும்

| | 2012 ரூ. '000 | 2011 ரூ. '000 |
|---|---|---|
| **வருமான மூலங்கள்** | | |
| வட்டி | 52,673,261 | 47,095,745 |
| கட்டணமும் தரகும் | 221,709 | 240,768 |
| ஏனையவை | 150,089 | (791,869) |
| | | |
| **மொத்தம்** | 53,045,059 | 46,544,644 |
| | | |
| **பாவிக்கப்பட்ட வருமானம்** | | |
| பணியாள் சம்பளமும் ஏனைய பணியாளரின் கொடுப்பனவும் | 4,077,501 | 4,139,657 |
| வைப்பாளர்களின் வட்டி | 39,166,973 | 29,322,652 |
| கடன்கள் ஏனைய இழப்பீடுகளுக்காக ஒதுக்கப்பட்டவை | 130,935 | 142,632 |
| ஏனைய செலவினங்கள் | 2,261,322 | 2,120,541 |
| | 45,636,731 | 35,725,482 |
| **அரச வரி, தீர்வைகள் முன்னரான தேறிய வருமானம்** | 7,408,328 | 10,819,162 |
| | | |
| **அரசாங்கத்திற்கு** | | |
| வருமான வரியும் வற் வரியும் | 3,076,986 | 4,757,300 |
| திரட்டு நிதிக்கான பங்களிப்பு | 2,823,245 | 3,212,671 |
| | 5,900,231 | 7,969,971 |
| | | |
| **ஒதுக்கங்களுக்கு** | 1,508,097 | 2,849,191 |
| **மொத்தம்** | 53,045,059 | 46,544,644 |

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

### பெறுமதி கூட்டலும் பங்கிடுதலும்

| | 2012<br>ரூ. '000 | 2011<br>ரூ. '000 |
|---|---|---|
| **பெறுமதி கூட்டல்** | | |
| வங்கிச் சேவைகளிலிருந்து வருமானம் | 52,673,261 | 47,095,745 |
| சேவைகளின் செலவு | (39,142,492) | (29,296,099) |
| வங்கிச் சேவைகளினால் கூட்டப்பட்ட பெறுமதி | 13,530,769 | 17,799,646 |
| வங்கிமுறையல்லாத வருமானம் | 347,317 | (577,654) |
| (ஏற்பாடுகள்)/மீள்திருப்பங்கள் | 130,935 | 142,632 |
| | 14,009,021 | 17,364,624 |
| **ஊழியர்களுக்கான பங்கீடு** | | |
| ஆளணி செலவுகள் | 4,077,501 | 4,139,657 |
| **அரசாங்கத்திற்கு** | | |
| வருமான வரி | 1,837,917 | 3,192,819 |
| பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | 1,239,069 | 1,564,481 |
| திரட்டு நிதிக்கான பங்களிப்பு | 2,823,245 | 3,212,671 |
| | 5,900,231 | 7,969,971 |
| **விரிவாக்கல்களுக்கும் வளர்ச்சிக்கும் ஒதுக்கப்பட்டவை** | | |
| வருவாய்கள் | 3,674,396 | 4,840,496 |
| பெறுமானத் தேய்வு | 356,893 | 414,500 |
| | 4,031,289 | 5,254,996 |
| | 14,009,021 | 17,364,624 |

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

**நேரடிப் பொருளாதாரப் பெறுமதிகளை பெருக்கி பகிர்ந்தளிக்கப்பட்டமை**

2012இன் செயற்பாடுகள் ஊடாக பொருளாதாரம் பெறுமதி கூட்டப்பட்டதனைப் மேலேயுள்ள அட்டவணை காட்டுகிறது.

**காலநிலை மாற்றங்களின் தாக்கம்**

காலநிலை மாற்றத்தினால் ஏற்படுகின்ற பொருளாதாரத் தாக்கத்தினை வங்கி நேரடியாக வெளிக்காட்ட வில்லை. எனினும், விவசாயக் கடன்கள் விவசாய நோக்கத்திற்கான அடகு வைத்தல் முற்பணங்களை கடன் வசதிளை விரிவாக்கியிருந்தது. இந்த விவசாய நோக்கங்கள் கால நிலை மாற்றத்தினால் பாதிப்படை ந்திருக்காலாம். இக் கடன்கள் மொத்தக் கடன் தொகையில் வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

**அரசாங்க உதவி**

வங்கி இந்தக் காலப்பகுதியில் எந்த நிதி உதவிகளையும் பெறவில்லை. எனினும் அரசாங்க ஊழியர்களுக்கான வீடுகளை வாங்குவதற்கும், வீடுகளை நிர்மானிப்பதற்கும் வங்கிக் கடன் திட்டம் ஒன்றை வைத்திருக்கின்றது. சலுகை அடிப்படையில் இக் கடன்களை வழங்குகின்றது. தற்போதிருக்கும் வீதத்திற்கும் சலுகை வட்டி வீதத்திற்கு மான வேறுபாடுகளில் அரசாங்கத்தினால் மீள் அளிக்கப்படுகின்றது.

**உள்நாட்டு வழங்குனர்களுக்கு ஆதரவளித்தல்**

வெளிநாட்டில் இருக்கின்ற வழங்குனர்களை நியமிப்பதில் அங்கு வாழும் உள்நாட்டினருக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

**மறைமுகமான பொருளாதாரத் தாக்கம்**

நேரடிப் பொருளாதாரத் தாக்கங்களுக்கு மேலதிகமாக, பல்வேறுபட்ட தொடர்புடைய பங்காளிகளுக்கான செயற்பாடுக;டாக மறைமுக தாக்கத்தை பெற்றிருக்கின்றது. பக்கத்தில் இத் தாக்கங்கள் சமூக முணைப்புப் பதிவில் விரிவாகத் தரப்பட்டுள்ளது.

**மறைமுக பொருளாதாரத் தாக்கத்தின் அளவு**

தே.சே.வ CSR செயற்பாடுகள் சமூகத்தின் மீது பாரிய தாக்கத்தை, குறிப்பாக இளம் சந்ததியினர் மீது ஏற்படுத்தியுள்ளது. எமது பிரதான நோக்கங்களில் ஏற்று அடுத்த சந்ததிக்கான கல்வியையும் அறிவையும் உயர்த்துவதாகும். இதனை மனதில் வைத்தே, CSR கருத்திட்டங்களில் பல நடத்தப்பட்டன. வங்கி மேலதிகமாக இலகுவில் தாக்கத்திற்கு உள்ளாகக் கூடியே, மூத்தோர், யுத்தத்தில் மடிந்த வீரர்கள் போன்றவர்களின் நலனுக்காகவும், சமய சம்பந்தமான நிகழ்ச்சிகளுக்கும் ஆதரவு கொடுக்கின்றது. இவை விரிந்த சமூகத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

**சூழல், சுற்றாடல் நிறைவேற்றல்களும் குறிகாட்டிகளும்**

**சுற்றுக் சூழல் தொடர்பான பொறுப்புக்கள்**

சுற்றுச் சூழலில் தே.சே.வ.யின் செயற்பாடுகள் நேரடி பிரதி கூலமான தாக்கங்களை பெற்றிருக்கவில்லை. எனினும், பொறுப்புள்ள பொது நிறுவனம் என்ற வகையில் எதிர்கால சந்ததிக்காக சுற்றுச் சூழலையும் இயற்கை வளங்களையும் பாதுகாக்கும் தேவையை உணர்ந்துள்ளவர்களாக உள்ளோம். ஆகவே, கடதாசியை வீணாக்குவதைக் குறைத்தும், கடதாசியில் அச்சிடுவதைக் குறைத்தும் மூலவளங்களைப் பாதுகாப்பதில் செயலூக்கத்துடன் ஈடுபட்டுள்ளோம். இதற்காக நாம் தொலைத்தொடர்பு ஆலோசனைக் கூட்டங்களையும், தொலைத் தொடர்பாடல்களையும், முடிந்தவரை கணனியூடாக நேரடியாக பயிற்சிகளை வழங்குதலும், வினைத் திறனுடைய காரியாலய இடங்களையும் விருத்தி செய்வதிலும் ஈடுபட்டுள்ளோம்.

கழிவுக் கடதாசிகளை சேர்த்து மீள் சுழற்சிக்காக கடதாசிக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குகின்றோம். புதிதாக அமைக்கப்பட்ட எமது கிளைகள் மழைநீர் அறுவடை வசதிகளைக் கொண்டிருக்கின்றன. பசுமையையும், கவர்ச்சியுள்ள சூழலையும் ஏற்படுத்த தே.சே.வ. கிளைகளில் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. தே.சே.வ. கிளைகளை நிர்மாணிக்கும் போது சூழல் ஒழுங்குபடுத்தல் இணங்குவிப்பை குறைந்த சுற்றாடல் தாக்கத்தையும் கொண்டிருப்பதையும் வற்புறுத்துகின்றோம். மரங்கள் வெட்டப்படுவதையும், வேறுவகையான சூழல் அழிவுகளையும் தவிர்ப்பதன் மூலம் இயற்கைச் சூழல் அழிவதைக் குறைக்க உச்ச முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், வீடமைப்புக் கடனை அங்கீகரிக்கும் போது, உள்;ராட்சி அதிகார சபையிடமிருந்து சட்டம் தொடர்பான தடை நீக்கல்களை பெறுகின்றோம்.

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

### சக்தியை சேமித்தல்

நாம் CFL சக்தியை சேமிக்கும் மின் விளக்குகளை சக்தியை சேமிப்பதற்காகப் பாவிக்கின்றோம். ஏசுஏ வகை குளிரூட்டிகளை எமது புதிய கிளைகளுக்கு அறிமுகப்படுத்தியுள்ளோம். எமது வாடிக்கையாளர் களும், ஊழியர்களுக்கும் சௌகரியத்தை உறுதிப்படுத்தி இவற்றைச் செய்கின்றோம். சாதாரண வேலை நேரத்தில் குளிர்சாதனங்களை பாவிப்பதை குறைத்துக் கொள்ள தீர்மானித்திருக்கின்றோம். விடுமுறை நாட்களில் மின் நுகர்வைக் குறைப்பதற்காக வேலை நேரத்தை கட்டுப்படுத்தியிருக்கின்றோம். நீர் பாவணை, எரிபொருட் பாவனை , மின் பாவனை என்பனவும் இதன் மூலம் குறைத்துள்ளன. மோசமான சூழல் பாதிப்பைத் தவிர்ப்பதற்காக ஊகுஊ குளிரூட்டிகளை மட்டும் எமது காரியாலயங்கள் அனைத்திலும் உபயோகிக்கின்றோம்.

### நீர் உபயோகம்

எமது தலைமையக்கத்தில் சராசரி நீர் நுகர்வு 1650 அலகுகளாகும். தேவையானவிடத்து முடிந்த வரை எவ்விடத்திலாவது நீர் வீண்விரயம் செய்யப்படுவதைத் தவிர்த்து நீரை சேமிப்பதில் எமது கவனத்தை செலுத்துகின்றோம். சூழலுக்கு தீங்கான எந்த ஒரு தாக்கத்தை தவிர்ப்பதற்காக பாவித்த நீரை முறையான வழியில் அகற்றுவதனை உறுதிப்படுத்தியிருக்கின்றோம். திடீரென ஏற்படும் நீர் பாதிப்பை அகற்றுவதற்காக, பொது நீர் பாதிப்பை அகற்றும் அமைப்புடன் இணைப்பை ஏற்படுத்த பாவித்த நீரை அகற்றுவதற்காக எமது வளவுக்குள் இருக்கும் நீரை தேக்கும் இடங்களுக்கு அனுப்புவதனூடான செயற்பாடுகளைச் செய்கின்றோம். பாவித்த நீரை அகற்றுவதற்கான சரியான நடவடிக்கைகளை இவை உறுதி செய்கின்றன.

> “எமது குழு தொடர்ந்து உயர்ந்த நோக்கங்களைக் கொண்டிருப்பதால் நாம் அடிவானத்தை வெற்றி கொண்டோம். எல்லைகளை உடைத்துள்ளோம்.”

### பொருட்கள் சேவைகளின் சூழல் பாதிப்பைக் குறைத்தல்

வங்கி என்ற வகையில் சூழல் மீது எமது பொருட்கள் சேவைகள் நேரடிப் பாதிப்பை கொண்டிருக்கவில்லை. காகிதாதிகள் நிலையான சொத்துக்கள் சந்தைப்படுத்தல் பிரச்சாரத்திற்கான தரம் உயர்த்தும் பொருட்களை தவிர எந்த கொண்டு செல்லும் உற்பத்திகளையும் செய்யவில்லை. இவற்றின் சூழல் தாக்கம் அலட்சியம் செய்யப்படக் கூடியவை. எமது வர்த்தக நிறுவனங்கள் எப்பொழுதும், சூழல் தாக்கத்தை குறைக்கக் கூடியதாக தெரிவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்படுகின்றது.

சிறு வர்த்தகக் கடன் கொடுப்பனவுகள் கூட மேலே கூறப்பட்டவற்றிற்கு சமமான சூழலை கவனத்திற் கொண்டுள்ளன. வங்கி வாகனக் கடன் திட்டம், மூன்று வருடத்திற்குட்பட்ட வாகனங்களை வாங்குவதற்குச் சார்பாக அவை தொடர்பான விடயங்களை ஒன்றிணைத்துள்ளன. ஏனெனில் அத்தகைய வாகனங்கள் குறைந்த புகை தள்ளுவதை கொண்டுள்ளதுடன், அதிக சக்தியும் வினைத்திறனையும் உடையன. வீடமைப்புக் கடனும், அதன் நிர்மாணிப்பும் சூழலில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆகையால் அது தொடர்பான மதிப்பீட்டை அங்கீகரித்த பின்பே அவை வழங்கப்படுகின்றன. இறுதியாக சமூக நலன் மீதும், வர்த்தக சமூக அடிப்படை செயற்பாடுகள் ஊடாகவும் வங்கி ஆதரவு வழங்குகின்றது.

### கொண்டு செல்லல் தொடர்பான தாக்கம்

எமது நிலையான சொத்துக்கள் மற்றும் பிரச்சார மேம்பாட்டு பொருட்கள் அதிகமாக வழங்குனர்கள் ஊடாக நேரடியாகக் கிளைகளுக்கு அனுப்பப்படுகின்றன. எமது பொருட்களும், ஊழியர்களும் உத்தியோக தேவைகளுக்காக தலைமைக் காரியாலயதிலிருந்து கிளைகளுக்கு அனுப்பப்படுகின்றார்கள்..இவை தவிர ஊழியர்கள் எமது சொந்த செல்லல் முறையை உபயோகிக்கிறார்கள்.

### தண்டனைகளும் தடைகளும்

வங்கி இது வரை சூழல் சட்டங்கள் ஒழுங்கு முறை விதிகளுக்கு இணங்கி செயற்படாமைக்காக எந்த தண்டணைகளையும் கட்டணம் அல்லாத தடைகளையும் எதிர் கொள்ளவில்லை.

# புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தாித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

### எமது குழு

எமது வெற்றிக்கு, எந்த வேலையும் மிகப் பெரியதுமில்லை, மிகச் சிறியதுமில்லை. ஆக செயற்படுத்த முடியாததுமில்லை என்பது எமது கொள்கையாகும். எமது குழு தொடர்ந்து உயர்ந்த நோக்கங்களைக் கொண்டிருப்பதால் நாம் அடிவானத்தை வெற்றி கொண்டோம். எல்லைகளை உடைத்துள்ளோம். சந்தைகளில், வளர்த்தெடுக்கப்பட்டதும் சக்தியூட்டப்பட்டதுமான உபகரணங்களுடன் கூடிய திறன்களையும் அறிவையும் உருவாக்கக் கூடிய இடர்களிலிருந்து வளர்ந்துவரும் சவால்களையும் ஏற்பதற்கு கடமைப்பட்டுள்ளது. எங்களது குழுவின் தத்துவம் பன்முகத் தோற்றம் கொண்டது. கவனம் செலுத்தப்பட்ட பயிற்சியும், அபிவிருத்தியும் வேலைக்குள்ளும், வேலைக்கு புறம்பாகவும் உள்ளேயும், வெளியேயும் சேவை செய்வதுடன், இவற்றிற்கு மேலாக தலைவர்களை இனம்காண்பதிலும் விசேடத்துவம் பெற்ற துறைகளில் (Expert), தகுதியுடையவர்களையும், இவர்களை மதித்து நடப்பதும் ஆகியவை ஊடாக எமது குழு உண்மையில் உந்து சக்தி குழுவாக காணப்படுகிறது.

## தொழிற் பிரயோகங்களும் நியாயமான வேலை செயலாற்றல் குறிகாட்டிகளும்

### பயனுள்ள தொழிற் சுற்றாடலை உருவாக்குவது

வங்கியினது மனித வளக் கொள்கை, வங்கி ஊழியர்களின் தொழில் ரீதியான ஒழுக்கம், பண்பாடு, ஏற்கக் கூடியதும் ஏற்க முடியாததுமான நடத்தைகள், வங்கியினது இயல்பான பண்பு, தரமுடைய நடைமுறைகள் தொடர்பான வழிகாட்டலை வழங்குகின்றது. இவை, வங்கி மனித வளச் செயற்பாட்டு போக்குகளை முன்னிறுத்தி உறுதிப்படுத்துகின்றதுடன் வங்கி தனது தந்திரோபாய நோக்கங்களை அடையவும் உதவுகின்றன.

நிலைத்து நிற்கக் கூடிய போட்டியான நன்மைகளையும் அமைப்பு ரீதியான சிறப்புக்களையும் பெறுவதற்கு, தனிப்பட்டதும், தொழில் சம்பந்தமானதுமான முழுக் கவனத்தையும் செலுத்தும். ஒரு தொழிலாளர் படையை கட்டியெழுப்புவது வங்கியின் மனிதவளக் கொள்கையாக உள்ளது.

வங்கி தனது தொழிற் தேவைகளுக்கு சரியான ஆட்களுக்கு சரியான இடத்தினை கொடுத்து அமைப்பு ரீதியான சிறப்பின் மீது விட்டுக் கொடுக்காத கடுமைத் தன்மையுடன் கவனத்தை செலுத்துகின்றது. தேசேவ இன் வர்த்தக மூலோபாயத்திற்கு முன்னராகவே ஆதரவு அளிப்பது வங்கியின் மனித வளப் பணியாகவுள்ளது.

வங்கியின் மனிதவள நோக்கங்கள

- தேசேவ இன் ஒழுங்கமைப்பு சங்கங்களின் விதிகள் ஒழுங்கமைப்புகள் வழிகாட்டிகள் ஆகியவற்றுடன் இணங்கி செயற்படுவது.
- வங்கியின் கைத்தொழிலின் போட்டி எல்லையை வெற்றி கொள்வதற்கு வங்கியின் மனித வளத்தை அபிவிருத்தி செய்வது
- வங்கியின் மூலோபாய நோக்கங்களுடன் பணியாட்களின் தனிப்பட்ட இலக்குகள் ஒத்திருக்கும் அதே சமயம் மனித மூல வளங்களின் பயனுறுதியுள்ள பயன்பாடும் உச்ச அபிவிருத்தியும் இருப்பதை உறுதி செய்தல்
- பணிப்பாளர்களின் அதியுயர் நேர்மைத் தன்மை அடையப்படுவதையும் பேணப்படுவதையும் அவர்களின் பணி நிலமைகளையும் தொழில் திருப்தியையும் அபிவிருத்தி செய்வதும்
- சமூகத்தின் தேவைகளுக்கு நேர்மையாகவும் சமூக பொறுப்புகளுடனும் செயற்படுதல்.

இந்த நோக்கங்களை அடைய தே.சே.வ. தனது பணியாட்களை ஏற்ற மனப்பான்மையுடனும் தொழில் திறனுடனும் வங்கியுடனான அவர்களது உறவை விருத்தி செய்ய உதவுகிறது. ஒவ்வொரு புதிய நியமனம் பெற்றவரும் தே.சே.வ. யுடன் இணைபவர் தே.சே.வ. யின் குழுவின் ஒரு அங்கத்தவராகவும், வங்கியின் ஒட்டு மொத்த நோக்கங்களையும் அடைவதில் பங்கேற்பராகவும் காணப்படுகிறார்கள்.

### மொத்த தொழிற்படை

எமது தொழிலாளர் படைதான் எமது பலம் என நாம் நம்புகின்றோம். எமது தொழிற்படையில், வெவ்வேறு வடிவங்களில் முதலீடு செய்கின்றோம். இது அவர்களது

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

வளர்ச்சியையும், விருத்தியையும் வளர்க்கின்றது. போட்டித் தன்மையையும் உறுதிப்படுத்தவும் இது உதவுகிறது. தற்போது 3129 முழு நேர ஊழியர்ப்படையையும், 945 கூலிக்கமர்த்தப்பட்ட ஊழியர்களையும் பெற்றிருக்கின்றோம். இவை எமது வங்கியின் அரணாகவிருக்கின்றது

| தொழில் வகை | பணியாளர்களனின் தொகை |
|---|---|
| முழு நேரம் | 3,128 |
| கூலிக்கமர்த்தப் பட்டோர் | 945 |

### தொழில் வகை

எமது பணியாட் தொகுதியினர், நிரந்தர ஊழியர் மற்றும் ஒப்பந்த அடிப்படை ஊழியர் என்ற அடிப்படையில் கருதப்படலாம். 2012 டிசம்பர் முடிவில் வங்கியானது நிரந்தர பணியாளர்களாக 2647 பேரையும், 481 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களையும் கொண்டிருந்தது.

| பணியாளரின் வகை | பணியாட்களின் தொகை |
|---|---|
| நிரந்தர பணியாட்கள் | 2,647 |
| ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் | 481 |

### வங்கி கிளையூடாக பணியாட்கள்

எமது கிளை வலையமைப்பு நிர்வாகத்தை இலகுவாக்குவதற்காக, ஏழு வலயங்களாக வகைப்படுத்தப்பட்டது. ஒவ்வொன்றினதும் நிர்வாகத்திற்காக எமது ஊழியர்கள் இந்தக் கிளை வலையமைப்பிற்குள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களின் உச்ச மட்ட வினைத்திறனும், உற்பத்தியும் பின்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளன.

| வலயம் | கிளைகளின் எண்ணிக்கை | பணியாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மத்திய வலயம் | 31 | 255 |
| கொழும்பு | 33 | 441 |
| வயம்ப | 37 | 380 |
| கிழக்கு | 27 | 192 |
| வடக்கு | 28 | 211 |
| தெற்கு | 33 | 306 |
| களுத்தறை | 30 | 295 |

எவ்வாறாயினும், 2013 ஜனவரியிலிருந்து வலய அமைப்பு முறை, பிரதேச அமைப்பு முறையாக மாற்றப்பட்டது.

### தொழில் வகையில் பணியாட்தொகுதியினர்

அர்ப்பணிப்புள்ள எமது பணியாட்தொகுதியினர் குழுவாக ஒன்று சேர்ந்து, அனைத்து நேரங்களிலும் வங்கியின் வெற்றியை உறுதி செய்கின்றனர். எமது மொத்த தொழில் படையின் 0.30% ஐ வங்கியின் நிறுவன முகாமைத்துவத்தின 9 பேர் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். அதேநேரம், எமது தொழில்படையின் 0.31%. ஐயும் 4.26%ஐயும் முறையே நிறைவேற்று மற்றும் மத்திய முகாமைத்துவம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. பெரும்பாலான எமது பணியாட்கள் (50.92%) வங்கி உதவியாளர்கள் வகைப்படுத்தலுக்குள் வருகின்றனர்.

| வகை | ஊழியர்களின் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| நிறுவன முகாமைத்துவம் | 9 | 0.30% |
| நிர்வாக முகாமைத்துவம் | 9 | 0.31% |
| மத்திய முகாமைத்துவம் | 114 | 4.26% |
| கனிஷ்ட முகாமைத்துவம் | 447 | 16.88% |
| மேற்பார்வை யாளர்கள் | 581 | 21.94% |
| வங்கி உதவியாளர்கள் | 1,825 | 50.92% |
| ஏனையவர்கள் | 145 | 5.36% |
| மொத்தம் | 3,128 | |

### பணியாட் தொகுதியினரின் வருவாய்

ஆண்டின் போதான உழைப்பிற்கான வருவாய் முக்கியமானதாக இருக்கவில்லை.

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

**"ஆரோக்கியமான பணியாட் தொகுதியை கொண்டிருப்பதற்காக, வலுவான மருத்துவ நலன்புரித் திட்டங்கள் மூலம் ஊழியர்கள் பயனடைகிறார்கள்."**

### பணியாளர்கள் விலகலும் வெற்றிடங்களை நிரப்பலும்

இவ்வருடத்தில் பணியாளர்கள் பதவி விலகலும், அவ் வெற்றிடங்களை நிரப்பலும்.

### பணியாட்தொகுதியினரின் நன்மைகள்

நிறுவனமொன்றின் உறுதிப்பாட்டில் பணியாட்களின் திருப்தியும் ஒன்றிணைந்த ஒரு பகுதியாக இருக்கின்றதென நாங்கள் நம்புகின்றோம். எனவே, எமது பணியாட் தொகுதியினருக்கு அநேக நலன்புரி திட்டங்களை உறுதி செய்துள்ள அதேநேரம், அவர்களிடமுள்ள சிறந்த திறமைகளையும் ஆற்றல்களையும் பெறுவதில் கவனம் செலுத்துகின்றோம்.

### பணியாட்தொகுதியினருக்கு வழங்கப்பட்ட நிதிசாரா நன்மைகள்

நிரந்தர ஊழியர்கள் வங்கியிடமிருந்து பல்வேறு வகையான நன்மைகளை அனுபவிக்கிறார்கள். பணியாட் தொகுதியினர் மருத்துவத் திட்டம், சலுகை வட்டி வீதத்தில் கடன் திட்டங்கள், உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சிகளுக்கான வாய்ப்புக்கள் மற்றும் சலுகை அடிப்படையிலான விடுமுறை சுற்றுலா விடுதிகளை பயன்படுத்துவது உள்ளடங்களான நன்மைகளைப் பெறுகின்றனர்.

வங்கி அதன் ஊழியர்களது பிள்ளைகள் கல்வி மற்றும் விளையாட்டுகளில் ஏற்படுத்தும் சாதனைகளையும் அங்கீகரிக்கிறது. வருடாந்த சாதனையாளர்கள் தினத்தில் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. (சாதாரணம்), க.பொ.த. (உயர் தரம்) பரீட்சைகளில் மிகச் சிறந்த சித்தி பெற்ற பிள்ளைகள் விளையாட்டு மற்றும் ஏனைய துறைகளில் சாதனை புரிந்தவர்களும் அங்கீகரிக்கப்பட்டு வெகுமதிகளைப் பெறுகின்றனர். பெமேலும், இந்த நிகழ்ச்சியின் போது நிண்ட காலம் சேவை செய்பவர்கள் மதிக்கப்பட்டு அங்கீகரிக் கப்படுகிறார்கள். ஊழியர்களது தொடர்புகளை பலப்படுத்த வருடாந்த விளையாட்டுப் போட்டிகளையும், வெசாக் பக்தி கீதம், நத்தார் கரோல்கள் போன்ற விசேட நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்கிறது.

### மருத்துவ வசதிகள்

ஆரோக்கியமான பணியாட் தொகுதியை கொண்டிருப்பதற்காக, வலுவான மருத்துவ நலன்புரித் திட்டங்கள் மூலம் ஊழியர்கள் பயனடைகிறார்கள்.

தே.சே.வ. யில் மருத்துவ உதவித் திட்டம் கிடைக்கிறது. இங்கு ஊழியர்களும், அவர்களது குடும்பத்தவர்களும் மருத்துவ உதவியை பெற முடியும். இந்தத் திட்டம் வழக்கமான மருத்துவச் செலவுகளையும் மருத்துவ நிபுனர்களுக்கான கொடுப்பனவு, பல், கண், போன்ற கவனிப்புகள், மருத்துவ மனைக் கட்டணங்கள் தொடர்ச்சியான வைத்திய வசதிகளுக்கும் கடுமையான பகுதிகளுக்கான விசேட வைத்திய சேவைகள் போன்ற அநேக மருத்துவ நிலைமைகளையும் இணைத்துக் கொண்டுள்ளது.

### சுயமான விபத்துக்கள், மரணங்களுக்கான நட்டஈட்டு பயன் திட்டம்

தே.சே.வ., உயர் மட்டத்திலான நன்மைகளைக் கொண்ட நட்டஈட்டுத் திட்டமொன்றை தனது ஊழியர்களுக்கும், அவர்களில் தங்கியிருப்போருக்கும் ஏற்படக் கூடிய விபத்தின் போதும், நோய்கள் அல்லது இயற்கை அனர்த்தங்களின் போதும் நிகழக்கூடிய உடன் காயங்கள் அல்லது மரணத்திற்கும் பயன்படக் கூடிய திட்டம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் நட்ட ஈட்டைப் பெற, பாதிக்கப்பட்ட ஊழியர் விபத்தின் போது வங்கியில் வேலையில் இருக்க வேண்டிய அவசியமில்லை.

### தொழிலாளர் தொடர்புகள்

தேசிய சேமிப்பு வங்கியில் நாங்கள் நிலைத்து நிற்கக் கூடியதும், இலகுவான நாளாந்த செயற்பாடுகளும், செயற்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக ஊழியர்களுக்கும் முகாமைத்துவத்துக்கும் இடையில் பரஸ்பர

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

நல்லுறவு நிலவுவதில் நாங்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றோம். ஆகவே, நாங்கள் எமது செயற்பாடுகளில் சர்வதேச தொழிலாளர் தரத்தைப் பேணுவதில் இணங்கி செயற்படுகிறோம். சர்வதேச தொழிலாளர் தரம், ஊழியர் சந்தைகளின் பல விதமான விடயங்களை உள்ளடக்கியுள்ளது. இவை குறைந்த ஊதிய மட்டம், மருத்துவத்திற்கான சமமான கொடுப்பனவு, பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்றவற்றை கொண்டதாகும். இந்த தரப்படுத்தல்கள் ஆறு முக்கிய பிரிவுகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அ. அடிப்படை மனித உரிமைகளை மதித்தல்

ஆ. ஊதியப் பாதுகாப்பு

இ. தொழிற் பாதுகாப்பு

ஈ. பணிபுரியும் சூழ்நிலை

உ. ஊதியம் சார்ந்த சமூகக் கொள்கைகள்

ஊ. கைத்தொழில் தொடர்புகள்

சர்வதேச தொழிலாளர் அமைப்பு ILO சர்வதேச தொழில் தரத்தினை ஏற்படுத்தவும் மதிப்பீடு செய்யவும் பொறுப்புள்ளதாகும். அலுவலக பிரதிநிதிகளையும், முதலாளிகளையும் தொழிலாளர்களையும் இணைத்து எல்லோருக்கும் மரியாதையுடன் கூடிய வேலையை விருத்தி செய்யும் கொள்கைகள் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கு கொள்ளச் செய்கிறது. இலங்கையினால் ஏற்று ஒப்பமிடப்பட்ட சர்வதேச (ILO) தொழிலாளர் அமைப்பின் மரபுகளை அரச வங்கி என்ற வகையில் தே.சே.வ. ஏற்று மதித்து நடக்கிறது.

> **“தே.சே.வ யின் பயிற்சி நிகழ்ச்சி நிரல் பலவிதமான வெவ்வேறு விடயங்களையும், உள்ளீர்ப்புக்களையும் விருத்தி செய்கிறது. வாழ்க்கை விருத்தியையும், சிறந்த வேலை வாழ்க்கைச் சமநிலையான வழிகளையும் சுட்டிக் காட்டுகிறது.”**

கட்டாயத் தொழில், கூட்டுச் சேர்தல், சுதந்திரம், கூட்டுப் பேரம் பேசுதலை ஏற்பாடு செய்தல், சமமான சம்பளம், வேலையில் பாகுபாடு காட்டுதல், வேலைகளை ஆகக் குறைந்த வயது, வேலை நேரம், பிள்ளைப்பேறு பாதுகாப்பு வேலையாட்களுக்கான நட்டஈடு போன்றவற்றை தே.சே.வ. அதனது கொள்கைகளும் நடைமுறைகளும் பகுதியில் உள்ளடக்கியதன் மூலம் சர்வதேச தொழிலாளர் தரத்தை கடைப்பிடிப்பதில் ஒத்துப் போகிறது.

### கூட்டுப் பேரம் பேசும் ஒப்பந்தங்களால் பணியாட்தொகுதியினர் பாதுகாக்கப்படுகின்றார்கள்

எமது பணியாட்களுள் 90% மான நிரந்தர ஊழியர்களும், கூட்டு ஒப்பந்தங்களினால் பாதுகாக்கப்படுகிறார்கள்.

### செயற்பாடுகளின் மாற்றங்கள் தொடர்பான மிகக் குறைந்த கால அறிவிப்பு

செயற்பாட்டு மாற்றங்கள் தொடர்பாக மிகக் குறைவான அறிவிப்பு காலம் கூட்டு ஒப்பந்தத்தில் இடம் பெறுவதில்லை. எவ்வாறாயினும் முகாமைத்துவத்துடன் மாற்றங்கள் குறித்து கலந்துரையாடுவதற்கான வாய்ப்பு தொழிற்சங்க அதிகாரிகளுக்குள்ளது.

### காயங்களும் மரணங்களும்

ஆண்டின்போது தேசேவ இல் நோய்கள், மரணங்கள், காயங்கள் எவையும் ஏற்படவில்லை. தேசேவ இல் நாங்கள் பூஜ்ய பணிநாள் இழப்பு சுற்றாடலைப் பேணி வருகின்றோம்.

### சுகாதாரமும் பாதுகாப்பும்

தே.சே.வ. யில் எந்தவித குறித்த பயமுறுத்தல்கள் ஊழியர்களது சுகாதாரத்துக்கும் பாதுகாப்புக்கும் இல்லை. தலைமையக வளவுக்குள் இல்லத்து வைத்திய நிலையம், முன்னனி தனியார் வைத்தியசாலையால் இயக்கப்படுகிறது. அங்கு ஊழியர்கள் இலவச வைத்திய சேவையை பெற முடியும். இந்த வைத்திய நிலையத்தில் இரண்டு வைத்திய நிபுனர்களின்

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

சேவை கிடைக்கக் கூடியதாக இருக்கிறது. காயங்கள், தொழில்சார் நோய்கள், பாரதூரமான கடும் நோய்கள், இந்தக் காலப் பகுதியில் தே.சே.வ. யில் இருக்கவில்லை. தே.சே.வ.யில் வேலைநாளில் இருந்தமைக்கான எந்தவித சம்பவமும் இல்லை.

### சுகாதாரம் பாதுகாப்பு கூட்டு ஒப்பந்தங்கள் மீதான பாதுகாப்பும்

கூட்டு ஒப்பந்தங்களில் குறிக்கப்பட்ட அடிப்படைகளுக்கு இணங்க முன்பு விளக்கப்பட்டது போல வைத்திய உதவித் திட்டங்களுல் வசதியளிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

### நியமனங்களும் வேதனங்களும்

நாம் வெளிப்படைத் தன்மையுடைய நியமன நடைமுறைகளை பின்பற்றுகின்றோம். புகழ் பெற்ற மனித வள அமைப்பிலிருந்து பெறப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைவாக செயற்படுகின்றோம். அதேவேளை, எல்லாப் பதவிகளும் விளம்பரம் செய்யப்பட்டு, ஒவ்வொரு விண்ணப்பதாரியும், பதவியை தே.சே.வ. யில் பெறுவதற்கான நீதியான சந்தர்ப்பங்களை கொடுக்கின்றோம். விசேட நிபுணத்துவ திறன்கள்கொண்ட குழுக்களின் பதவிக்கான தேடுதல்களையும் கம்பனிக்குள்ளும் வெளியிலும் தேட முயற்சிக்கின்றோம். வேதனங்கள் இடப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைவாகவும் ஏனைய ஒத்த சந்தைகளில் காணப்படும் சந்தைத் தடை குறிகாட்டல்களுக்கு அமைவாகவும் கொடுக்கப்படுகிறது. பக்கச் சார்பு, பாகுபாடுகளை நாங்கள் எந்த வடிவிலும் மன்னிப்பதில்லை. எமது வேதனம், பணியமர்த்தல் கொள்கைகளில் எமது வங்கியுடன் தொழிற்சங்கங்களுடன் ஒப்பமிட்ட கூட்டு ஒப்பந்தமூடாக தீர்மானிக்கப்டுவதை குறிப்பிட வேண்டும். அரசாங்கத்தின் பிரதான வங்கிகளின் சம்பள வரிசையில் வேதனங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு மூன்று வருடமும் கூட்டு ஒப்பந்தம் மீள் பரிசீலனை செய்யப்படுகிறது.

### வாழ்க்கை முழுவதும் கல்வி

சந்தையிலும் தொழிலாளர் படையிலும், ஏற்படும் மாறும் தேவைகளை எதிர்கொள்ள வங்கியினது பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் தேவைக்கேற்ப திருத்தம் செய்யப்படுகிறது. தே.சே.வ யின் பயிற்சி நிகழ்ச்சி நிரல் பலவிதமான வெவ்வேறு விடயங்களையும், உள்ளீடுக்களையும் விருத்தி செய்கிறது. வாழ்க்கை விருத்தியையும், சிறந்த வேலை வாழ்க்கைச் சமநிலையான வழிகளையும் சுட்டிக் காட்டுகிறது. இந்த வருடத்தின்போது முழுதும் கல்வி தத்துவத்தின் ஒரு பகுதியாக வங்கியினது மனித வள விருத்திக்கும் பயிற்சித் தேவைகளுக்கும் இணைவாக பல பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

பல பணியாளர்களுக்கு வங்கியின் உள்ளேயும், உள்நாட்டிலும் பிரதேசப் பயிற்சி கொடுக்கப்பட்டது. ஏனையவர்களுக்கு தேவையான இடத்து நிபுனத்துவ விசேட பயிற்சி தேவையானவர்களுக்கு வெளிநாட்டு பயிற்சி எனபவையும் வழங்கப்பட்டது. வங்கியில் வேலை செய்து கொண்டே பல ஊழியர்கள் நீண்டகால, கல்வி துறைகளான டிப்ளோமா MSC , MBA போன்ற பட்டப்படிப்புக்களையும் மேற்கொள்கின்றார்கள்.

வங்கி அத்தகைய கல்வி செயற்பாடுகளை ஏற்று ஊக்கமளிக்கிறது. ஏனெனில், வங்கியில் கல்வி வாழ்க்கை முழுதும் கற்றலின் ஒரு பகுதியாக இருப்பதும், ஒருவர் தமது அறிவையும் திறனையும் விருத்தி செய்வதற்க ஒரு போதும் தாமதிக்க வேண்டியது இல்லை என நம்புகிறது. மேலும் பல குறுங்காலப் பயிற்சிகளும் கலந்துரையாடல்களும் வேலைப்பட்டறை முறைப் பயிற்சிகளும் இந்தக் காலப்பகுதியில் நடத்தப்பட்டன.

### நிறைவேற்றல் செயற்பாடுகளை மதிப்பீடு செய்தல்

சகல ஊழியர்களும், கிரமமான செயற்பாடுகள், தொழில், வாழ்க்கை விருத்தி தொடர்பான மதிப்புரை பெறுகிறார்கள். இது அவர்களது தனிப்பட்ட தொழில் ஆர்வங்களையும், வங்கியினது, நோக்கங்கள், பணிகள் இலக்குகள் உடன் கூட்டு சேர்ந்திருப்பதையும் நடைமுறைப்படுத்த உதவுகின்ற உபாயமான கருவியாக அமைகிறது.

### வேதன வேறுபாடுகள்

ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே மட்டத்தில், வேதனத்தையும் பயன்களையும் பெறுவதனை ஆதரிக்கும் சம சந்தர்ப்ப வேலைக் கொள்பவராக இருப்பதில் தே.சே.வ. பெருமையடைகிறது.

### அறுதியிடப்பட்ட நன்மைத்திட்டம்

தே.சே.வ.ஊழியர்களினது அறுதியிடப்பட்ட நன்மைத் திட்டம், பணிக் கொடைத் திட்டத்தையும், ஓய்வூதியத் திட்டத்தையும்

## புதிய தொழில் முயற்சிகளுக்கு விஸ்தரித்தல்

நிலையான உறுதிப்பாட்டு மீளாய்வு

உள்ளடக்குகிறது. மூன்று வருடத்திற்கு ஒரு முறை இத் திட்டங்களின் உண்மையான மதிப்பீடு செய்யப்படுகிறது. அறுதியிட்ட பங்களிப்புத் திட்டம் தரமான இலக்கை வாணிப செயற்பாடுகளை மனதிற் கொண்டு தயாரிக்கப்படுகிறது. அது ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியை உள்ளடக்குகிறது. இந்தத் திட்டங்களின் மேலதிக விபரங்களை பக்கத்தில் வங்கியின் மேற்பார்வை கணக்கீட்டு கொள்கைத் திட்டம் தொடர்பான கூற்றுக்களில் பார்க்கலாம்.

- **ஊழியர்களது ஓய்வூதியத் திட்டம்**

1980இல் வங்கி பங்களிப்பற்ற ஓய்வூதியத் திட்டத்தை ஏற்படுத்தியது. 1995 ஒக்டோபர் 01ஆம் திகதிக்கு முன்னர் இணைந்த நிரந்தர பணியாட்தொகுதியினருக்கு ஓய்வூதியக் கொடுப்பனவுக்காக ஏற்படுத்தப்பட்டது. மொத்த சம்பளத்தில் 20% மாதாந்தம் ஓய்வூதிய நிதிக்காக வங்கியின் பங்களிப்பு இருக்கிறது. இத்திட்டத்திற்கு மொத்தம் 974 ஊழியர்கள் அருகதையுடையவர்களாக இருக்கின்றார்கள்.

1995 ஒக்டோர் 01ஆம் திகதிக்கு பின் இணைந்தோர் மாதாந்தம் தமது மொத்த சம்பளத்தில் பங்களிப்புச் செய்யும் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்த அங்கத்தவர்கள் 13.5%ஐ தமது பங்களிப்பாக செலுத்த வேண்டும். ஏழு ஊழியர்கள் இந்த திட்டத்திற்கு அருகதையுடையவர்களாவர்.

- **பணிக்கொடை**

வங்கியின் அலுவல்களை உண்மையாகவும் நேர்மையாகவும் பிரதிபலிக்கும் நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும் பொறுப்பு பணிப்பாளர்களுடையது. வருமானக் கூற்று முழுமையான வருமானக் கூற்று நிதியியல் நிலமை பங்கு மூலதன மாற்றங்களின் கூற்று காசுப் பாய்சச்ல் கூற்று முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அவற்றின் குறிப்புகள் என்பவை கணக்கீட்டு தரப்படுத்தல்கள் மற்றும் 1988இன் 30ஆம் இலக்க வங்கிச் சட்டமும் அதன் திருத்தங்களும் என்பவற்றின் தேவைப்பாடுகளை உறுதி செய்யும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன எனும் கருத்தை பணிப்பாளர்கள் கொண்டுள்ளனர். பணிப்பாளர்களின் ஆண்டறிக்கையை முழுமையாக்கும் பகுதியாக நிதிக் கூற்றுகளுடன் தொடர்புடைய பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய விபரங்கள் இவ் ஆண்டறிக்கையின் 197 பக்கத்தில் காணப்படும் பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் கூற்றில் விபரமாகத் தரப்பட்டுள்ளன.

### நிதி கூற்றுக்கள்

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விதந்துரைக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS/ SLFRS) இற்கு அமைவாக வங்கியினதும் தொகுதியினதும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2012 டிசெம்பர் 31ஆம் ஆண்டிறுதிக்கான நிதிக்கூற்றுக்கள் முதன் முறையாக (LKAS/ SLFRS)இன் கீழ் தயாரிக்கப்பட்டவையாகும். இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்களின் கணக்கிணக்கம் என்பவற்றின் கீழ் இந் நிதிக் கூற்றுக்களின் ஒப்பீட்டுத் தகவல்கள் முன்னர் அறிவிக்கப்பட்டுள்ளது. 2011 டிசெம்பர் 31 மற்றும் 2011 ஜனவரி 1 அன்றுள்ளவாறான ஐந்தொகை மற்றும 2011 டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தில் தயாரிக்கப்பட்ட வருமானக் கூற்று என்பவற்றுடன் இணைந்ததாக (LKAS/SLFRS) என்பவற்றிக் கீழ் தரப்பட்ட ஒப்பீட்டு அறிக்கையிடல் என்பவை நிதிக் கூற்றுக்களின் குறிப்புகள் பக்கம் 207 இல் தரப்பட்டுள்ளன.

டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கி மற்றும் தொகுதியின் நிதி கூற்றுக்கள், வங்கியின் பிரதி பொது முகாமையாளர் (நிதியும் திட்டமிடலும்) பிரதம நிறைவேற்று அதிகாரி, மற்றும் வங்கியின் இரண்டு பணிப்பாளர்களினால் கையொப்பமிடப்பட்டு வங்கியின் ஆண்டறிக்கையை முழுமையாக்கும் பகுதிகளாக 209 பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

### கணக்காய்வாளரின் அறிக்கை

கணக்காய்வாளர் தலைமையதிபதி வங்கியின் கணக்காய்வுகளை மேற்கொள்வார். 2011 ஆம் ஆண்டு முழுவதும் கணக்காய்வுகள்

மேற்கொள்ளப்பட்டன. இவ் அறிக்கைகளில் அடையாளம் காணப்பட்ட விடயங்கள் துரித நடவடிக்கைக்காக முகாமைத்துவத்திற்கு கிரமமாக அளிக்கப்பட்டன. நிதி அறிக்கைகளின் சரிநிலை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் அவசியமான தரவுகள், தகவல்கள் என்பவற்றுடன் சேர்த்து நிதிசார் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பரீட்சார்த்தலுக்காக அனுப்பப்பட்டன. இவ் ஆண்டறிக்கையின் 205 ஆம் பக்கத்தில் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயங்கள் தரப்பட்டுள்ளன.

ஒழுங்கமைப்பு மேற்பார்வை சபை என்ற வகையில் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் பணிப்புரைகளுக்கு இயைவாக வங்கியின் பதிவுகளும் விவகாரங்களும் உள்ளனவா என்பதை இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலம் பரீட்சிக்கும். வங்கியின் இணைப் பங்கேற்பாளரினதும் முக்கியமாக வைப்பாளர்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கு தேவைப்படும் நிதிசார் குறிகாட்டிகள் ஏற்ற வரையறைகளில் பேணப்படுகின்றதா என்பதையும் அது தீர்மானிக்கும்.

## நிதி பெறுபேறுகள்

### வட்டி வருமானம்

2012இற்கான வங்கியின் வருமானம் ரூபா 52,673 மில்லியனாகவும் (2011ரூபா- 47,096 மில்லியன்கள்) தொகுதியின் வருமானம் ரூபா 53,780 (2011 - ரூபா- 48,083 மில்லியன்களாகவும் இருந்தது.

### தேறிய இலாபம்

2012இல் வங்கி வரிக்கு முந்திய இலாபமாக 33% வீழ்ச்சியையும் வரிக்குப் பிந்திய இலாபமாக 28% வீழ்ச்சியையும் பதிவு செய்தது. தொகுதியின் வரிக்கு முந்திய இலாபமும் வரிக்குப் பிந்திய இலாபமும் முறையே 34% மாகவும் 29% மாகவும் இவ் ஆண்டில் பதிவு செய்யப்பட்டன.

பின்வரும் அட்டவணை வங்கியின் இலாபம் தொடர்பான விபரங்களைத் தருகின்றது.

| | 2012<br>ரூ.'000 | 2011<br>ரூ.'000 |
|---|---|---|
| அனைத்துக கொடுப்பனவுகளும் கொடுப்பனவு செய்யப்பட்டதன் பின்னர் ஆண்டிற்கான இலாபமும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் வரிக்கு முன்னர் பெறுமானத் தேய்வு பெறுமதி குறைப்பு நட்டங்கள் மற்றும் அவசர தேவைகளுக்காக வழங்கப்பட்டவையும். | **7,408,328** | 10,819,162 |
| நிதியியல் சேவைகள் மீதான ''வற்'' வரி | **1,239,069** | 1,564,481 |
| வருமானவரிக்கு முந்திய இலாபம் | **6,169,259** | 9,254,681 |
| கழிக்குக: வரியிடல்கள் | **1,837,917** | 3,192,819 |
| வரியிடலின் பின்னரான நிகர இலாபம் | **4,331,342** | 6,061,862 |
| தேறிய வருமான வரியின் ஏனைய முழுமையான வருமானம் | **(210,840)** | (1,239,521) |
| ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானம் | **4,120,502** | 4,822,341 |
| உரிமையாக்கப்பட்டது | | |
| கணக்கிணக்கம் | | |
| ஒதுக்கு நிதி | **86,627** | 287,957 |
| ஏனைய ஒதுக்கங்கள் | **1,407,521** | 759,607 |

# சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்

பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

### வரியிடலுக்கான ஏற்பாடுகள்

வங்கி அதன் செயற்பாடுகளுக்கென பிரயோகிக்க வேண்டிய வருமான வரிவீதம் 28% மாக இருந்ததுடன் வங்கியின் செயற்பாட்டில் நிதிச் சேவைகளுக்கான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி பொறுப்பாக 12% காணப்பட்டது. பொறுப்புகள் முறையின் கீழ் அறியக்கூடிய அனைத்து தற்காலிக வேறுபாடுகளுக்கும் வங்கி ஒத்தி வைக்கப்பட்ட வரியை வழங்கியது. வருமான வரிச் செலவினம் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரியிடல் குறித்த தகவல் பக்கம் 224 குறிப்பு 13இல் தரப்பட்டுள்ளது.

### அரசாங்கத்திற்கான பங்களிப்பு

2012இல் வங்கி ரூபா 5,961 மில்லியனை வரிகளாகவும் தீர்வைகளாகவும் அரசாங்கத்திற்குப் பங்களிப்புச் செய்தது. 2011 ரூபா 7970மில்லியன் இதில் வருமான வரி ரூபா 1,838 (2011 3193 மில்லியன் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ரூபா 1,242 மில்லியன் (2011-ரூபா 1564 மில்லியன்) திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு ரூபா 2,823 மில்லியன் (2011-3213மில்லியன்) என்பவை உள்ளடங்கும். வங்கியின் செயற்பாடுகள் மீதான வரி வீதம் 28% ஆகும். (2011- 28%) திரட்டு பொறுப்புக்கள் முறையின் கீழ் அறியப்படும். அனைத்து தற்காலிக வேறுபாடுகளுக்குமான ஒத்தி வைக்கப்பட்ட வரியை வழங்குவது வங்கியின் கொள்கையாகும். நிதிக்கான பெறுமதி கூட்டப்பட்ட வரியாக 12% (2011-12%) வழங்கும் பொறுப்பும் வங்கிக்கு உள்ளது.

### அஞ்சல் அதிபர் நாயகத்திற்கான சேவைக் கட்டணங்கள் (அ.அ.நா)

2011இன் அதே அடிப்படையில் ரூபா 111 மில்லியனுக்கான தொகை 2011இல் அ.அ.நா. இற்கு சேவைக் கட்டணமாக வழங்கப்பட்டது.

### குறிப்பீடு செய்யப்படட மூலதனம்

ஒவ்வொன்றும் ரூபா 10 பெறுமதியான ஒரு பில்லியன் சாதாரண பங்குகளாகப் பிரிக்கப்பட்ட ரூபா 10 பில்லியன் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமாகவுள்ளது. 2012 டிசெம்பர் 31 அன்றுள்ளவாறு வங்கியினால் வழங்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபா 3.2 பில்லியனாகும். வழங்கப்பட்டுள்ள பங்கு மூலதனங்கள் முழுமைக்கும் திறைசேரிச் செயலாளர் அவரின் உத்தியோகபூர்வ தலைமையின் கீழ் பொறுப்பேற்பார்.

### பங்குடமை

தேசிய சேமிப்பு வங்கியின் ஒரே பங்குடமையாளர் இலங்கை அரசாங்கமாகும்.

# சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்

**பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை**

### ஒதுக்கங்கள்

| | 2012 | 2011 |
|---|---|---|
| | ரூ.'000 | ரூ.'000 |
| ஒதுக்கு நிதி | **1,713,127** | 1,626,500 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | **1,583,340** | 1,583,340 |
| ஏனைய ஒதுக்கம் | **17,704,205** | 16,296,684 |
| விற்பனை ஒதுக்கத்திற்கு கிடைக்கக்கூடியவை | **135,119** | 345,959 |

பங்கு மூலதனங்களின் மாற்றங்களின் கூற்று 208 மற்றும் 209ஆம் பக்கங்களில் ஒதுக்கங்கள் மாற்றங்களின் தகவல் தரப்பட்டுள்ளது.

### ஓய்வூதிய நிதியம்

பங்களிக்கப்படாத ஓய்வூதியத் திட்டத்திற்கு (ஓய்வு பெற்ற பணியாட்கள் உள்ளடங்கலாக) தகைமை பெறும் 2,437 பணியாட்களுக்காக கணக்குகளில் ரூபா 705 மில்லியனுக்கான தொகை வழங்கப்பட்டது. (2011 ரூபா 865மில்லியன்)

### ஆதனங்களும் இயந்திரங்களும் உபகரணங்களும்

### கட்புலனாக சொத்துக்கள்

ஆண்டின்போது ஆதனங்களை சுவீகரித்தல் இயந்திரங்களும் உபகரணங்களும், குத்தகை ஆதனங்கள் மற்றும் இனங்காண முடியாத சொத்துக்கள் மீது வங்கிக்கு ஏற்பட்ட மொத்த மூலதன செலவினம் ரூபா 826 பில்லியனாகும். தொகுதிக்கான தொகை ரூபா 826பில்லியன் (2011 ரூபா 826 பில்லியன். இந்த ஆண்டறிக்கையின் 237 - 239 பக்கங்களில் உள்ள நிதிக் கூற்றுக்களின் குறிப்புகள் 27,28 என்பவற்றில் இதன் விபரங்கள் தரப்பாட்டுள்ளன.

### சுயாதீனமான ஆதனங்களின் சந்தைப் பெறுமதி

மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை சுயாதீனமாக வைத்துள்ள காணிகள் மற்றும் கட்டிடங்களை மீள் மதிப்பீடு செய்ய வேண்டும் எனும் வங்கியின் கொள்கைக்கு அமைவாக, தொழில்சார் தகைமை பெற்ற சுயாதீனமான மதிப்பீட்டாளர்களினால் டிசெம்பர் 2010இல் சுயாதீனமாக வைத்துள்ள காணிகள் மற்றும் கட்டிடங்களை வங்கி மீள்மதிப்பீடு செய்தது. அத்துடன் நிதிக்கூற்றுக்களுக்குள்ளும் கொண்டு வந்தது.

### ஐந்தொகைக்குப் பிந்திய நிகழ்வுகள்

கணக்குகளில் ஐந்தொகை திகதிக்குப் பின்னர் நிதிக் கூற்றுக்களில் சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படவில்லை.

### நிலுவையிலுள்ள வழக்குகள்

பணிப்பாளர்களினதும் வங்கியின் சட்டத்தரணிகளினதும் அபிப்பிராயத்தின்படி நிதிக்கூற்றில் குறிப்பு 44இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள வங்கிக்கு எதிரான தீர்வுகளுக்கு காத்திருக்கும் வழக்குகள், வங்கியின் நிதி நிலைமையிலும் அதன் எதிர்கால செயற்பாடுகளிலும் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

### பணிப்பாளர் சபை

தலைவர் உள்ளடங்கலாக 07 பணிப்பாளர்களை சபை கொண்டிருக்கும். இவர்களில் இருவர் வெளியிலிருந்து வருகை தரும் உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிதியமைச்சிலிருந்து வரும் உறுப்பினராகவும் அஞ்சல் அதிபர் நாயகமாகவும் இருப்பர். ஏனைய நான்கு பணிப்பாளர்களையும் நிதியமைச்சர் நியமிப்பார். ஆண்டின்போது பின்வருபவர்கள் பணிப்பாளர்களாகவிருந்தனர். இவ் ஆண்டறிக்கையின் 86.பக்கத்தில் இவர்களின் சுருக்கமான விபரத் திரட்டுக்கள் காணப்படுகின்றன.

## சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்

**பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை**

| **பணிப்பாளரின் பெயர்** | **அந்தஸ்து** |
|---|---|
| சுனில் எஸ். சிரிசேன | சு.அ/நி.அ.அ பணிப்பாளர் |
| எஸ்.ரீ.அபேகுணவர்தன | சு.அ/நி.அ.அ பணிப்பாளர் |
| பீ.ஏ.அபேசேகர (28/02/2013 வரை) | சு/நி.அ.அ பணிப்பாளர் |
| ஆர்.எம்.பீ.ரத்நாயக்க | சு/நி.அ.அ பணிப்பாளர் |
| டீ.எல்.பீ.ஆர்.அபேரத்ன | சு.அ/நி.அ.அ பணிப்பாளர் |
| லயனல் பீ பெர்னாந்து | சு.அ/நி.அ.அ பணிப்பாளர் |
| பிரியந்த ஜயவர்தன | சு/நி.அ.அ பணிப்பாளர் |
| சுமித் விஜேசிங்க | சு/நி.அ.அ பணிப்பாளர் |

சு - சுயாதீனமுள்ள
சு.அ - சுயாதீனம் அற்ற
நி.அ.அ - நிறைவேற்று அதிகாரம் அற்ற
ப.ப - பணிப்பாளர் சபை

**புதிய நியமனங்களும் பதவி விலகல்களும் ஓய்வு பெறுதலும்**

ஆண்டின் போது செய்யப்பட்ட புதிய நியமனங்கள்:
சுனில் எஸ் சிறிசேன - தலைவராக நியமனம் 06.08.2012 இலிருந்து
எஸ்.ரி.அபேகுணவர்தன - மீள் நியமனம் 06.08.2012 இலிருந்து
பீ.ஏஅபேசேகர - மீள் நியமனம் 22.08.2012 இலிருந்து
டீ.எல்.பீ.ஆர்.அபேரத்ன - நியமனம் 09.02.2012 இலிருந்து
பதில் தலைவராக 23.05.2012 இலிருந்து 05.08.2012 வரை
லயனல் பீ பெர்னாந்து - நியமனம் 06.08.2012 இலிருந்து
பிரியந்த ஜயவர்தன - நியமனம் 06.08.2012 இலிருந்து
சுமித் விஜேசிங்க - நியமனம் 06.08.2012 இலிருந்து
ஆர்.எம்.பி.ரத்நாயக்க - நியமனம் 04.03.2013 இலிருந்து

# சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்

**பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை**

பின்வரும் பணிப்பாளர்கள் குறித்த ஆண்டில் பதவி விலகினர்

| | |
|---|---|
| பி.ஜி.எஸ். காரியவசம் | - இராஜினாமா 21.05.2012 |
| ஹேமா மெதிவல | - இராஜினாமா 18.05.2012 |
| ஆர்.ஏ.பி ரணவக்க | - இராஜினாமா 10.06.2012 |
| எஸ்.ஷான் சண்முகநாதன் | - இராஜினாமா 10.08.2012 |
| எம்.கே.பி. திசாநாயக்க | - இராஜினாமா 08.2.2012 |
| பி.ஏ. அபயசேகர | - ஓய்வு 287.02.2013 |

## பணிப்பாளர்களின் ஊதியங்களும் ஏனைய நன்மைகளும்

2012 ஆம் நிதி ஆண்டிற்கான வங்கி மற்றும் தொகுதி தொடர்பான பணிப்பாளர்களின் ஊதியங்களை ஏனைய நன்மைகளினதும் விபரங்கள் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 39இல் தரப்பட்டுள்ளன.

## பணிப்பாளர்களின் கூட்டங்கள்

சபைக் கூட்டங்கள், கணக்காய்வுக் குழு கூட்டங்கள் நியமனக்குழுக் கூட்டங்கள், மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் உள்ளடங்கலான பணிப்பாளர் கூட்டங்களின் எண்ணிக்கையும் இக் கூட்டங்களில் பங்கேற்ற பணிப்பாளர்கள் குறித்தும் ஆண்டறிக்கையின் பக்கம் 56 இல் நிறுவன ஆளுமை அறிக்கையில் தரப்பட்டுள்ளன.

## ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் ஈடுபாடு

வங்கியுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் நேரடியானதும் மறைமுகமானதுமான ஈடுபாடுகள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 3.9இல் தரப்பட்டுள்ளன. வங்கியுடனான ஏனைய ஒப்பந்தங்களில் அல்லது உத்தேச ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபடுவதில்லை.

## பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO)

பொது முகாமையாளர், வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்படுவார். சபைக் கூட்டங்களுக்கு வருகை தரவும் பங்கேற்கவும் பொது முகாமையாளருக்கு அதிகாரமுண்டு.

## சபை குழுக்கள்

சபை ஒட்டுமொத்த பொறுப்பையும் உத்தரவாதத்தையும் கொண்டிருக்கும் அதேசமயம், மத்திய வங்கியுடனும் ஏனைய நியம இணங்குவிப்புகளுடனும் கம்பனி ஆளுமை தரப்படுத்தல்கள் ஒத்திருப்பதை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் சபை உப குழுக்களையும் நியமித்துள்ளது.

## சபையின் கணக்காய்வுக் குழு

திரு.லயனல் பி பர்னான்டோ (தலைவர்)

பி.ஏ. அபயசேகர - அங்கத்தினர் 28.02.2012 வரை

ஆர்.எம்.பி. ரத்நாயக்க அங்கத்தினர் 04.03.2013 வரை

சுமித் விஜேசிங்க - அங்கத்தவர்

சபை கணக்காய்வு குழுவின் அறிக்கை 99 பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

# சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்

**பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை**

### சபையின் மனித வளங்களும் ஊதியங்களும் குழு

சுனில் எஸ் சிறிசேன - தலைவர்

பி.ஏ. அபயசேகர - அங்கத்தினர் 28.02.2013 வரை

ஆர்.எம்.பி. ரத்நாயக்க அங்கத்தினர் 04.03.2013 வரை

பிரியந்த ஜயவர்த்தன - அங்கத்தினர்

சபையின் மனித வளங்களும் ஊதியங்களும் குழுவின் அறிக்கை 102 பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

### சபையின் நியமனங்கள் குழு

பி.ஏஅபயசேகர - தலைவர் 28.02.2013 வரை

ஆர்.எம்.பி. ரத்நாயக்க அங்கத்தினர் 04.03.2013 வரை

எஸ்.ரி.அபயகுணவர்த்தன அங்கத்தினர்

சுமித் விஜயசிங்க அங்கத்தினர்

சபை நியமனங்கள் குழுவின் அறிக்கை 102 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது

### சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழு

டி எல் பி ஆர் அபயரட்ண - தலைவர்

லயனல் பி. பர்னான்டோ - அங்கத்தினர்

பிரியந்த ஜயவர்த்தன - அங்கத்தினர்

சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை 104 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது

### செயற்பாட்டு மீளாய்வு

### கிளை விரிவாக்கலும் அபிவிருத்திகளும்.

மீளாய்வின் கீழ்வரும் காலத்தின் போது 09 புதிய கிளைகளுடாக தனது சேவைகளை வங்கி விஸ்தரித்தது. வருட இறுதியில் 219 கிளைகளை தனது வலையமைப்பிற்குள் சேர்த்துக் கொண்டது. வாடிக்கையாளர்களின் வசதிகளை முன்னேற்றுவதற்காக ஏரிஎம் வலையமைப்பை மேலும் விஸ்தரித்தது. தேசேவ இன் வாடிக்கையாளர்கள் ஏரிஎம் கள் ஊடாக கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடக்கூடியதாக முன்னணி வங்கிகள் நீங்கலாக 10 ஏரிஎம் களை வங்கி நிறுவியதன் மூலம் மொத்தமாக 231 ஏரிஎம் களை குறித்த ஆண்டிற்குள் வங்கி நாடெங்கிலும் நிறுவியது.

### மனிதவளம்

தரமுயர்ந்த சேவைகளினூடாக நிலையான பெறுமதியை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்பும், சிறந்த பயிற்சியளிக்கப்பட்டவர்களுமான பணியாட்தொகுதியினரை அபிவிருத்தி செய்வதிலும் பேணுவதிலும் வங்கி தொடர்ந்து ஈடுபட்டது. வங்கியின் மனிதவள மூலதனத்திற்கு அபிவிருத்திக்கு குறிப்பிடத்தக்க அளவு முதலீடுகள் செய்யப்பட்டன 104 பக்கத்தில் உள்ள நிலையான உறுதிப்பாட்டு அறிக்கையில், மனிதவள மூலவளத்தை தரமுயர்த்துவதற்கு வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகளும் நடைமுறைகளும் தரப்பட்டுள்ளன.

### சுற்றாடல் பாதுகாப்பு

வங்கியின் நிலையான அபிவிருத்தியையும் வளர்ச்சியையும் ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றும் சுற்றாடலை பாதுகாப்பதிலும் முன்னேற்றுவதிலும் வங்கி ஈடுபடவாரம்பித்துள்ளது. சுற்றாடலுக்கு கெடுதலான அல்லது ஆபத்தை ஏற்படுத்தும் எவ்வித நடவடிக்கையிலும் வங்கி ஈடுபடவில்லை.

# சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்

**பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை**

## நியமக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் தமது சிறந்த அறிவிற்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய அனைத்து நியமக் கொடுப்பனவுகளையும் பணியாட் தொகுதியினருக்கான கொடுப்பனவுகளையும ஏற்ற நேரத்தில் செய்துள்ளனர் என திருப்தியடைகின்றனர்.

## இடர் முகாமைத்துவமும், உள்ளக கட்டுப்பாடும் முகாமைத்துவ தகவல் ஒழுங்கமைப்பும்

இடரை முகாமைத்துவம் செய்வதற்கான ஒட்டு மொத்த பொறுப்பையும் பணிப்பாளர் சபை ஏற்கின்றது. இந் நோக்கத்திற்காக சபையின் பணிப்பாளர்கள் வங்கியில் பயனுறுதியும் செறிவானதுமான உள்ளக கட்டுப்பாடுகளுக்கென ஒழுங்கமைப்புகளையும் முகாமைத்துவ தகவல்கள் அமைப்பு முறைகளையும் நிறுவி செயற்படுத்தியுள்ளனர்.விடயங்களின் புரள் கூற்றுகள் அல்லது நட்டங்களுக்கு எதிராக நியாயமான உறுதிப்படுத்தலை அதிகரிப்பதற்காக வங்கிக்கு நேரிடக்கூடிய இடர்களை குறைப்பதற்கு உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பு முறைகள் மீள வடிவமைக்கப்பட்டுள்ளன. வங்கி சந்திக்க வேண்டியுள்ள இடர்களை அடையாளம் காணுவது மதிப்பீடு செய்வது முகாமைத்துவம் செய்வது என தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கும் நடைமுறை ஒன்று செயற்படுகின்றது. இவ் ஆண்டறிக்கையின் 106 ஆம் பக்கத்தில் இடரைக் குறைப்பதற்கு வங்கியினால் எடுக்கப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க நடவடிக்ககைகளின் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

## நிறுவன ஆளுமை

வங்கியின் முகாமைத்துவத்தில் மிகச் சிறந்த நிறுவன ஆளுமை பிரயோகங்களும் நடைமுறைகளும் உறுதிப்படுத்துவதை பணிப்பாளர்கள் வலியுறுத்துகின்றனர். அதற்கமைய இடர் முகாமைத்துவ அலகுகளின் விருத்தியைக் காலத்திற்குக் காலம் அறிமுகப்படுத்தவும் முன்னேற்றவும் தேவையான அமைப்பு முறைகளும் கட்டமைப்புகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பொறுப்பேற்றல் மற்றும் வெளிப்படுத்தல் என்பவையும் முன்னேற்றப்பட்டுள்ளன.

## தொடர்புடையவர்களின் கொடுக்கல் வாங்கல்கள்

LKAS இல 24 பிரகாரம் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது அனுசரிக்கப்படும் முறை குறித்த தரப்புகள் சார்ந்தவராக வெளியிடல் என்ற பிரிவின்கீழ் பணிப்பாளர்களை குறித்த கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஏதும் இருப்பின் அவைகளை வெளியிட்டுள்ளன. அவ்வாறான வெளியீடுகளை சபையின் ஆண்டறிக்கையில் ஒரு பகுதியாக நிதிக்கூற்றில் 39வது குறிப்பில் தரப்பட்டுள்ளது.

## உபாய ரீதியான வியாபார திட்டம்

2011 முதல் 2013 வரையான உபாயரீதியான வியாபாரத் திட்டம் ஒன்றை வங்கி ஆக்கியுள்ளதை வங்கியின் எதிர்காலப் போக்கை நிர்ணயிக்கின்றது. இந்தத் திட்டத்தை செயல்படுத்த குறிதத எல்லைக்குள் நின்று முயன்றுள்ளது.

## சட்டங்கள் ஒழுங்கு விதிகள் மற்றும் விவேகமான தேவைப்பாடுகளுடன் இணங்குவிப்பு

தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் பிரயோகிக்கக் கூடிய அனைத்து சட்டங்களும் ஒழுங்கு விதிகளும் விவேகமான தேவைப்பாடுகள் என்பவற்றுடன் வங்கி சகல சந்தர்ப்பங்களிலும் இணங்கி செயற்பட்டுள்ளதென உறுதிப்படுத்துகின்றது.

## கூட்டாண்மை உறுதிப்பாடும் பொறுப்பும்

கூட்டாண்மை சமூக பொறுப்புகள் தொடர்பாக நடவடிக்கை விபர உறுதிப்பாட்டறிக்கையின் 142 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

# சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்

**பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை**

### எதிர்கால செயற்பாடுகள்

வங்கியின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக 15ஆம் பக்க தலைவரின் செய்தி 19ஆம் பக்க பொ.மு.்.பிநிஅ மீளாய்வுகளும் 26ஆம் பக்க முகாமைத்துவ கலந்துரையாடல் பகுப்பாய்விலும் தரப்பட்டுள்ளது.

### அரசாங்க உத்தரவாதம்

வங்கியில் வைப்புச் செய்துள்ள பணமும் அதற்கான வட்டியும் மீளளிப்புச் செய்யப்படுமென இலங்கை அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கின்றது.

### கணக்காய்வாளர்கள்

2012 டிசெம்பர் 31இல் முடிவடைந்த நிதி ஆண்டிற்கான வங்கியின் நிதிக் கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமையதிபதி கணக்காய்வு செய்துள்ளார்.

பணிப்பாளர் சபைக்காகவும், சார்பாகவும்.

**சுனில் எஸ் சிறிசேன**
தலைவர்

**வை. எப். டீன்**
சபை செயலாளர்

கொழும்பு
28 மார்ச் 2013

# சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்

## நிதிசார் அறிக்கைகளுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

இக் கூற்றில் தேசிய சேமிப்பு வங்கியின் நிதிக் கூற்றுக்களுக்கும் தொகுதியின் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களுக்கும் பணிப்பாளர்களின் பொறுப்பு தரப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக வெளியக கணக்காளர்களின் பொறுப்புக்கள் கணக்காய்வாளர்களின் அறிக்கையில் தரப்பட்டுள்ளன.

வங்கியினதும் தொகுதியினதும் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தினதும் கணக்குப் புத்தகங்கள் சரியாக இருப்பதையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் என்பவற்றிற்கு அமைவாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் நியம தேவைப்பாட்டுடன் இணங்குவிப்பாக ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் வங்கியினதும் தொகுதியினதும் அலுவல்கள் உண்மையாகவும் நேர்மையாகவும் தரப்பட்டுள்ளது என்றும் பணிப்பாளர் சபை உறுதி செய்கின்றது. வருமானக் கூற்று முழுமையான வருமானக் கூற்று நிதியியல் நிலமைக் கூற்று பங்கு மூலதன மாற்றங்கள் கூற்று காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் என்பவற்றை உள்ளடக்கியதாக நிதிக் கூற்றுக்கள் இருக்கும்.

நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பில் பணிப்பாளர்கள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தியுள்ளனர்:

1. நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பில் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் ஏற்புடையவையாகவும், தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப் படுவதாயும், போதுமான அளவு வெளிப்படுத்தப்படுவதாகவும் உறுதி செய்தனர்.
2. நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பின்போது அவசியமான இடங்களில் ஏற்றுக் கொள்ளக் கூடியதும் விவேகமானதுமான தீர்வுகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தினர்.
3. அவசியமானதென கருதப்படும் பிரயோகிக்கக் கூடிய அனைத்து கணக்கீட்டு தரப்படுத்தல்களும் பின்பற்றப்படுவதை உறுதிசெய்தனர்.

1971 இன் 38 ஆம் இலக்க நிதிசார் சட்டம், மற்றும் 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம், 1971 இன் 30 ஆம் இலக்க தேசேவ சட்டத்தின் 7(l) பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வங்கியின் அலுவல்களையும் வர்த்தகத்தையும் கட்டுப்படுத்தவும் நிர்வகிக்கவும் வேண்டிய தேவைப்பாடு பணிப்பாளர் சபைக்கு உண்டு.

வங்கியின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க உதவக் கூடியதாக வங்கியினால் தீர்மானிக்கப்படும் எந்தவொரு நேரத்திலும் வங்கியின் நிதி நிலமையை நியாயமான அளவு சரியாக பதிவு செய்யவும் விளக்கவும் சரியான கணக்கீட்டுப் பதிவுகள் பேணப்படுவதை உறுதி செய்வதும் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகவுள்ளது.

இந்த ஆண்டறிக்கையில் தரப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் நேர்மைத் தன்மைகளையும் நோக்கங்களையும் ஏற்றுக் கொள்வதற்கான பொறுப்பும் பணிப்பாளர் சபைக்குள்ளது. தொடர்ச்சியான அடிப்படையில் ஏற்புடைய கணக்கீட்டு கொள்கைகள் தெரிவு செய்யப்பட்டு பிரயோகிக்கப்பட்டுள்ளது என்பதனை நிதிக் கூற்றுக்களின் பக்கம் 202 வரையான பகுதிகளில் காண்பிக்கப்பட்டுள்ளதை பணிப்பாளர்கள் உறுதி செய்கின்றனர். அதே நேரம் கொடுக்கல் வாங்கல்களின் அமைப்பும் கருத்தும் நியாயமானதும் விவேகமானதுமான தீர்வுகளின் பிரதிபலிப்பாகவும் உள்ளன.

இந்த ஆண்டறிக்கையில் தயாரிக்கப்பட்டு அளிக்கப்பட்டுள்ள 2012இன் ஆண்டிற்கான நிதி கூற்றுக்கள் கணக்குப் புத்தகங்களுடன் ஒத்ததாகவுள்ளதுடன் இலங்கை கணக்கீட்டு நியமம் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தரப்படுத்தல் சட்டம் வங்கிச் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளின் தேவைப்பாடுகள் என்பவற்றுடன் உறுதி செய்யப்பட்டதாகவும் இருக்கின்றது.

வங்கியினதும் தொகுதியினதும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு ஏற்ற அளவிலான அவதானிப்பையும் பணிப்பாளர் சபை கொண்டிருப்பதுடன் பயனுறுதியும் தெளிவானதுமான உள்ளகக் கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்தியுள்ளது. சரிபார்த்தவர்கள் உள்ளகக் கணக்காய்வு என்பவற்றுடன் வங்கியின் வர்த்தகத்தை ஒழுங்கு முறையில் நடத்தவும் அதன் சொத்துக்களை பாதுகாக்கவும் மோசடிகள் மற்றும் ஒழுங்கின்மைகளைத் தவிர்க்கவம் கண்டு பிடிக்கவும் அதனூடாக ஏற்றவாறு வங்கி நடவடிக்கைகளை கொண்டு நடத்துவதற்குத் தேவையான ஏனைய கட்டுப்பாடுகள் முழுமையான நிதியியல் ஒழுங்கமைப்புகள் என்பவையும் உள்ளடங்கும்.

## சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்

### நிதிசார் அறிக்கைகளுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

பணிப்பாளர்கள் அவர்களின் கிரமமான கூட்டங்களின் போதும் சபையின் கணக்காய்வுக் குழுக்கள் ஊடாகவும் நிதியியல் நிலமைகளை தாம் நேரடியாக உறுதிப்புடுத்துகின்றதுடன் 2012 டிசெம்பர் 31இல் முடிவடைந்த இந்த ஆண்டின்போது மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகளின் விளைவுகள் ஆண்டறிக்கையில் தரப்பட்டுள்ளன. ஆண்டறிக்கை உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிக்கைகள் என்பவையும் தரப்பட்டுள்ளன. சபை கணக்காய்வுக் குழுவின் மீளாய்வையும் பரிந்துரைகளையும் தொடர்ந்து வெளியிடப்படுவதற்கு முன்னர் இடைக்கால நிதியியல் நிலமைகளை பணிப்பாளர் சபை அங்கீகரிக்கும்.

வங்கியின் மூவர் அடங்கிய பணிப்பாளர்களை கணக்காய்வுக்குழுவிற்கு சபைநியமித்துள்ளது. வங்கியின் நிதிசார் அறிக்கையிடல் முறைமைக்கு சுயாதீனமான மதிப்பீடொன்றை குழு மேற்கொண்டுள்ளதுடன் வங்கியின் இந்த நிதிசார் அறிக்கையிடல் முறைமை நிதிக்கூற்றுக்களின் நம்பகத் தன்மைக்கு ஏற்றளவு உறுதிப்படுத்தலை வழங்கக் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளதென்றும் அதன் அறிவுக்குட்பட்ட வரை நம்புகின்றது.

நிதியியல் நிலமை அன்றுள்ளவாறு வங்கியினாலும் அதன் உப நிறுவனத்தினாலும் கொடுக்கப்பட வேண்டிய, பணியாளர்கள் அரசாங்கம் மற்றும் ஏனைய தொடர்புடைய ஒழுங்கமைப்பு மற்றும் நியம அதிகாரிகளுக்கான நியம கொடுப்பனவுகள் அனைத்தும் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது அல்லது அல்லது வழங்கப்பட்டுள்ளது. செலுத்தப்பட்டுள்ளதென்று பணிப்பாள்கள் தமது சிறந்த அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப உறுதிப்படுத்துகின்றனர்.

மேலும் பணக்காரர்கள் இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து கம்பனி ஆளுமை நியதியில் உள்ளடக்க வேண்டிய தேவைப்பாட்டுள்ள நிதி நிலமை செயற்பாட்டு நிலமை மற்றும் ஒழுங்கமைப்புக் காரணிகள் என்பவற்றை பணிப்பாளர்கள் கருத்திற் கொண்ட பின்பு இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பில் தொடர்ந்தும் இயங்கும் நிறுவனம் என்ற அடிப்படையில் அதன் செயற்பாடுகளைத் தொடர்வதற்கு நியாயப்படுத்த போதுமான மூலவளங்களை வங்கியும் அதன் துணை நிறுவனமும் கொண்டிருப்பதாக பணிப்பாளர்கள் மேலும் உறுதிபடுத்தியுள்ளனர். அத்துடன் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள பணிப்புரைகளுக்கு இணங்கிச் செயற்படுவதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் சபை மேற்கொண்டுள்ளது.

கணக்காய்வாளர் தலைமையதிபதி வங்கியின் கணக்காய்வுகளை மேற்கொள்வார். 2012 ஆம் ஆண்டு முழுவதும் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்களது அறிக்கையில் அடையாளம் காணப்பட்ட விடயங்கள், துரித நடவடிக்கைக்காக முகாமைத்துவத்திற்கு கிரமமாக அளிக்கப்பட்டது. நிதி அறிக்கைகளின் சரிநிலை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் அவசியமான தரவுகள் தகவல்கள் என்பவற்றுடன் சேர்ந்து நிதிசார் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பரீட்சார்த்தலுக்காக அனுப்பப்பட்டன. ஆண்டறிக்கையில் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயங்கள் தரப்பட்டுள்ளன.

சபையின் கட்டளைக்கிணங்க

**வை.எப் டீன்**

சபை செயலாளர்

கொழும்பு

28 மார்ச் 2013

# சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்

## உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான பணிப்பாளரின் அறிக்கை

2007இன் 11ஆம் இலக்க 3(8) (11) (பி) பிரிவு வங்கிச் சட்டத்தின் பணிப்புரைக்கு ஒத்ததாகவும் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் (ICASL) வழங்கப்பட்ட வழிகாட்டல்களின் அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டு இவ் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியில், போதுமானதும், பயனாற்றல் மிக்கதுமான உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பு முறை ஒன்று நிறுவப்பட்டு, பேணப்படுவதை உறுதிப்படுத்துவது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகவுள்ளது. எவ்வாறாயினும், வங்கியின் வர்த்தக நோக்கங்களை எய்துவதில் ஏற்படக்கூடிய இடர் தோல்விகளை இல்லாதொழிப்பதிலும் பார்க்க ஏற்றுக் கொள்ளக்கூடிய இடர் அலகுகளுக்குள் வங்கியின் முக்கிய இடர்துறைகளை முகாமைத்துவம் செய்யக் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, முகாமைத்துவம் குறித்த புறள்கூற்றுக்கள், நிதித்தகவல்கள், பதிவுகள் அல்லது நிதி நட்டங்கள் அல்லது மோசடிகளுக்கு எதிரான உறுதிகள் தீர்க்கமானவையாக இல்லாது ஏற்றுக் கொள்ளக்கூடியதொன்றான உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பு முறை ஒன்றை மட்டுமே வழங்கப்படுகின்றது.

வங்கி முகம்கொடுக்க வேண்டியுள்ள முக்கிய இடர்களை அடையாளம் காணல், மதிப்பீடு செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் என்பவற்றிற்கு தொடர்ந்து நிகழும் செயன்முறை ஒன்றை பணிப்பாளர் சபை நிர்மானித்துள்ளது. வர்த்தகச் சூழலில் அல்லது ஒழுங்கமைப்பு விதிகள் ஏற்படுத்தும் தேவைப்பாடுகள், ஏனைய வழிகாட்டல்களின் போது உள்ளகக் கட்டுப்பாடுகளின் அமைப்பு முறையை விருத்தி செய்வதை இச்செயன்முறை உள்ளடக்கும்.

இச் செயன்முறை சபையினால் கிரமமாக மீளாய்வு செய்யப்படுவதுடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட வங்கியின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டலுடன் இணங்கி இருப்பதையும் உறுதி செய்தது. அவ் வழிகாட்டலில் தரப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பு முறையின் மதிப்பீடுகளுக்கான கொள்கைகளைக் கருத்திற் கொண்டு உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பு முறை ஒன்றையும் சபை மதிப்பீடு செய்தது.

நிதிசார் அறிக்கையிடலின் நம்பகத் தன்மை, வெளிவாரி நோக்கங்களுக்காகத் தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுகள் மற்றும் தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கைகள், ஒழுங்கமைப்புத் தேவைகளுக்கு அமைவாகவும், நியாயமான உறுதியை வழங்குவதற்குப் போதுமானதாகவும் சரியான இடத்தில், உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பு அமைக்கப்பட்டுள்ளதாக சபை கருதுகின்றது.

வங்கி முகங்கொடுக்கும் இடர்களை அடையாளம் காணுவதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் இடர் மற்றும் கட்டுப்பாடுகள் குறித்த சபையின் கொள்கைகளையும், நடைமுறைகளையும் செயற்படுத்துவதற்கும் மற்றும் வடிவமைப்பதற்கும், இத்தகைய இடர்களைக் குறைப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும்பொருத்தமானஉள்ளகக் கட்டுப்பாடுகளைச் செயற்படுத்துவதிலும், கண்காணித்தலிலும் முகாமைத்துவம் சபைக்கு உதவியாகவிருக்கும்.

அமைப்பு முறையின் வடிவமைப்பையும், திறனாற்றலையும் மீளாய்வு செய்வதற்கான உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பு முறை ஒன்றை சபை காலத்திற்குக் காலம் ஏற்படுத்தியுள்ளது. ஏனைய விடயங்களுக்கிடையில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய நடைமுறைகள் பின்வருமாறு:

- வங்கியின் செயற்பாடுகளின் திறனாற்றலை உறுதிசெய்ய சபைக்கு உதவும் வகையில் வரையறுக்கப்பட்ட நோக்கு எல்லைகளையும், நடவடிக்கைகளையும் கொண்டதாக சபை உபகுழுக்களை சபை நிறுவியுள்ளதுடன், நிறுவனத்தின் நோக்கங்கள், மூலோபாயங்கள் மற்றும் கொள்கைகள், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வழிகாட்டல்கள் என்பவற்றிற்கு அமைவாக வங்கியின் செயற்பாடுகள் இருப்பதையும் உறுதிசெய்கின்றது.

- வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் அடையாளம் காணப்பட்ட வெளியகக் கணக்காய்வாளர்கள், ஒழுங்கமைப்பு அதிகாரிகள் மற்றும் அவதானிக்கப்பட்ட பற்றாக்குறைகளை சீர்ப்படுத்த எடுக்கப்பட்ட சரிப்படுத்தல் நடவடிக்கைகள் குறித்து உள்ளகக் கட்டுப்பாட்டு விடயங்களை காலத்திற்குக் காலம் சபையின் கணக்காய்வுக்குழு (BAC) மீளாய்வு செய்யும். கணக்காய்வாளர் தலைமை அதிபதி வங்கியின் வெளியகக் கணக்காய்வுகளை மேற்கொள்வர். சபையின் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கு அரசாங்கத்தின்

## சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்

### உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான பணிப்பாளரின் அறிக்கை

கணக்காய்வு அத்தியட்சகர் பொதுவாக அழைக்கப்படுவார்.

- உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளின் கணக்காய்வு நோக்கெல்லை அவற்றின் தரம் என்பவற்றை முக்கியமாக வலியுறுத்தி உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை சபையின் கணக்காய்வுக்குழு (BAC) மீளாய்வு செய்யும். இந்த ஆண்டு அறிக்கையில் காணப்படும் சபை கணக்காய்வுக் குழு அறிக்கையில் 2012ஆம் ஆண்டின் போது சபையின் கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தரப்பட்டுள்ளன. வருடாந்த கணக்காய்வுத் திட்டத்திற்கு அமைவாக கிளைகள், பிரிவுகள் மற்றும் ஏனைய கூறுகளின் கணக்காய்வுகளை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மேற்கொண்டது. மதிப்பீடு செய்யப்பட்ட இடர்மட்டங்களுக்கு அமைய கணக்காய்வுகள் அடிக்கடி நிகழுவது தீர்மானிக்கப்பட்டது. சபையின் கணக்காய்வுக்குழு கணக்காய்வுத் திட்டத்தை செயற்படுதலுக்கென அங்கீகரித்தது. உள்ளகக் கட்டுப்பாட்டின் அமைப்பு முறையின் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் திறமைகள் ஆகியவை இணக்குவிப்புடன் ஏற்புடையதாகவிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வு சரிபார்த்தல்களை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மேற்கொண்டதுடன் எந்தவொரு இணக்குவிப்புமற்ற அதன் கண்டுபிடிப்புகளையும் அறிவித்தது. செயற்பாட்டு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள் மீதான சுதந்திரமானதும் நோக்கம் சார்ந்த அறிக்கைகளை வழங்குவதற்கும் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சபையின் கணக்காய்வுக் குழுவின் மீளாய்விற்காக அவற்றின் காலத்திற்குக் காலம் நடைபெறும் கூட்டங்களில் கணக்காய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டவை சமர்ப்பிக்கப்பட்டன. குழுக் கூட்டங்களின் அறிக்கையுடன் சபையின் கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகளும் கால அடிப்படையில் சபையின் தகவல்களுக்காக அளிக்கப்பட்டது.

- வங்கியின் முக்கிய இடர்துறைகளின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்வதற்கு சபைக்கு உதவுவதற்காக சபையினால், சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக்குழு (BIRMC) நிறுவப்பட்டது. வங்கியின் அனைத்து முக்கிய வர்த்தகங்கள் மற்றும் செயற்பாட்டு கூறுகளின் பிரதிநிதித்துவங்கள் உள்ளடங்கலாக நிர்வாக இடர்முகாமைத்துவக்குழு சபையின் ஒன்றிணைந்த இடர்முகாமைத்துவக் குழுவினால் பரிந்துரைக்கப்படும் கொள்கைகளைச் செயன்முறைப்படுத்த அதற்கு உதவும். சுயாதீனமான இணக்குவிப்பு கூறு ஒன்றையும் சபை நிறுவியுள்ளது. இது வங்கியின் நடவடிக்கைகள், சட்டங்கள், ஒழுங்கமைப்பு விதிகள், ஒழுங்கமைப்பு பணிப்புரைகள் என்பவற்றிற்கு அமைவாக இருப்பதை உறுதிசெய்வதுடன் இணங்குவிப்பு அற்ற விடயங் களை காலத்திற்குக் காலம் சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவிற்கு அறிவிக்கும். சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழு, இடர் மதிப்பீட்டு அறிக்கையை காலத்திற்குக் காலம் சபைக்கு அளிக்கும்.

- நாளாந்த வர்த்தகச் செயற்பாடுகளில் வங்கியின் முக்கிய துறைகள் திறமையாக முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான அதிகாரமுள்ள முகாமைத்துவ மட்டத்திலான குழுக்களும் நிறுவப்பட்டுள்ளன.வங்கியினால் பிரயோகிக்கப்பட்ட நடைமுறைகள் மட்டுமே மதிப்பீட்டில் இடம்பெற்றுள்ளன. இதன் உப நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயன்முறைகள் உள்ளடக்கப்பட்டவில்லை.

அரசாங்கத்தின் கணக்காய்வுகளின் கண்டுபிடிப்புக்கள் காலத்திற்குக் காலம் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்படும். அவை உடனடியாகச் சரிப்படுத்தப்பட்டு பதிலளிக்கப்படுவதை முகாமைத்துவம் உறுதிப்படுத்தும். உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பு முறையின் மீது 2012 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூறுகளின் கணக்காய்வுடன் தொடர்புடைய அரசாங்கக்

## சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்

உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான பணிப்பாளரின் அறிக்கை

கணக்காய்வாளர்களினால் செய்யப்பட்ட கருத்துக்கள் தரப்பட்டுள்ளன.

**உறுதிப்படுத்தல்**

மேலேயுள்ள செயன்முறையின் அடிப்படையில், வங்கியின் நிதி அறிக்கையிடல் அமைப்புமுறை, நிதிசார் அறிக்கையிடலின் நம்பகத் தன்மை குறித்து நியாயமான உறுதிப்பாட்டை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதென சபை உறுதிப்படுத்துகின்றதுடன், வெளியக நோக்கத்திற்கான நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கும், இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளுக்கும் அமைவாகவும் தயாரிக்கப்பட்டுள்ளனவென்று உறுதிப்படுத்தியது.

**வெளியகக் கணக்காய்வு கூற்றுக்களின் மீளாய்வு**

2012 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான மேலேயுள்ள பணிப்பாளர்களின் உள்ளகக் கட்டுப்பாடு கூற்றுக்களை வெளியிலிருந்து வரும் கணக்காய்வாளர்கள் மீளாய்வு செய்ததுடன், வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பு முறையின் வடிவமைப்பும் திறமையும் மீளாய்வு செய்யப்பட்ட போது சபையினரால் கைக்கொள்ளப்பட்ட செயன்முறைகள், இவர்களின் கருத்திற்கேற்ப ஸ்திரமற்ற கூற்றாக இருக்கவில்லை என நம்புவதற்கான நிலைமைகள் அவர்களது கவனத்திற்கு வரவில்லை என சபைக்கு அறிவித்தனர்.

சபைக் கட்டளைக்கு இணங்க,

**சுனில் எஸ்.சிறிசேன**
தலைவா

**எஸ். டீ. அபேயகுணவர்தன**
பணியாற்றுப் பணிப்பாளார

**லயனல் பி பெர்னான்டோ**
பணிப்பாளார்
தலைவர் -சபை கணக்காய்வுக் குழு

கொழும்பு
28. மார்ச் 2013

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No: FB/L/NSB/FA/2012

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date: 28 March 2013

**தேசிய சேமிப்பு வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான பணிப்பாளர் சபைக் கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உறுதிப்பாட்டு அறிக்கை**

**அறிமுகம்**

2012 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான பணிப்பாளர் சபைக் "கூற்றுக்கள்" மீதான உறுதிப்பாட்டை இவ் அறிக்கை வழங்குவதாக உள்ளது.

**முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் 2007இன் 11ஆம் இலக்க வங்கி அதிகாரச் சட்ட நெறிப்படுத்தலின் 3(8)(ை)(ஆ) பிரிவிற்கு இணங்க விநியோகிக்கப்பட்ட "உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கு உரித்தான பணிப்பாளர்களின் கருத்து தொடர்பாக வங்கிப் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டல்" இன் பிரகாரம் கூற்றுக்களின் தயாரிப்பும் சமர்ப்பணமும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

**எனது பொறுப்புக்களும் எஸ்எல்எஸ்ஏஈ 3050 உடனான இணக்கமும்**

நிறைவேற்றப்பட்ட எனது வேலையின் அடிப்படையில் கூற்றுப் பற்றிய அறிக்கை ஒன்றை வழங்க வேண்டியது எனது பொறுப்பாகும். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் வழங்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகள் குறித்த பணிப்பாளர்களின் கூற்று தொடர்பான வங்கிகளுக்கான உத்தரவாத அறிக்கை – எஸ்எல்எஸ்ஏஈ 3050இற்கு ஏற்றவகையில் எனது ஈடுபாட்டுப் பணியை நடத்துகின்றேன்.

**மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பொழிப்பு**

உரிய கூற்று, பணிப்பாளர்களினாலோ அல்லது பணிப்பாளர்களுக்காகவோ தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் பிரிவினால் உறுதிப்படுத்தப்படுகின்றமை பற்றியும் வங்கிக்கான உள்ளகக் கட்டுப்பாட்டு முறை மீளாய்வு செய்யப்படுகையில் பணிப்பாளர்களினால் பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் போதியளவில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளனவா என்ற மதிப்பீட்டிற்காக இச் செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள், தெரிவுக் கணக்காய்வின் அடிப்பபடையில் பெறப்பட்ட வங்கிப் பதவியணியினர் விசாரணை மற்றும் பணிப்பாளர்களினால் பின்பற்றப்பட்ட செயற்பாடுகளுக்காக பயன்படும் ஆவணங்களின் நிலைப்பாட்டில் முக்கியமாக மட்டுப்படுத்தப்படுகின்றது.

இக் கூற்றின் மூலம் சகல இடர்களும் கட்டுப்பாடுகளும் உட்படுகின்றனவா என கருத்திற் கொள்ளப்படவோ அல்லது வங்கியின் இடர் மற்றும் கட்டுப்பாட்டு செயற்பாடுகளின் இயலுமை தொடர்பான அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவோ எஸ்எல்எஸ்ஏஈ 3050இன் பிரகாரம் வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட போதிய உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் தொடர்பாக நிலவும் பிரச்சனைகளுக்காக செயற்படுவதற்கு விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் மூலம் அப் பிரச்சனைகளுக்காக உரிய தீர்வுகள் கிடைக்கப்பெற்றுள்ளமை தொடர்பாக என்னால் கருத்திற் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

**முடிவு**

மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டின் அடிப்படையில், வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கூற்று, வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு திட்டமிடல் மற்றும் இயலுமை தொடர்பான மீளாய்வின் போது பணிப்பாளர் சபையினால் பின்பற்றப்பட்ட செயற்பாடு தொடர்பான எனது அறிவும் முரண்படுவதை ஏற்றுக் கொள்வதற்கான காரணங்கள் எதுவும் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

ஒப்பமிடப்பட்டுள்ளது
**எச்.ஏ.எஸ். ஸமரவீர**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail.: oaggov@sltnet.lk

# சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்

## பொது முகாமையாளர்/பிநிஅ மற்றும் பிரதி பொது முகாமையாளர் (நிதியும் திட்டமிடலும்) ஆகியோரின் பொறுப்பேற்றல் பற்றிய கூற்று

2012 டிசெம்பர் 31 அன்றுள்ளவாறான தேசிய சேமிப்பு வங்கியின் நிதிக்கூற்றுக்களும் வங்கியினதும் அதன் உப நிறுவனத்தினதும் (தொகுதி) ஒன்று திரண்ட நிதி கூற்றுக்களும் பின்வரும் தேவைப்பாடுகளுடன் உறுதிப்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டும் வெளியிடப்பட்டும் உள்ளன:

- 1971 இன் 30ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டமும் அதன் திருத்தங்களும்
- 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டம்
- இலங்கையின் பட்டயக்கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள்,மற்றும் இலங்கை நிதியறிக்கையிடல் நியமங்கள்
- 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தரப்படுத்தல் சட்டம்.
- 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டமும் அதன் திருத்தங்களும் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட பணிப்புரைகளும் வழிகாட்டல்களும

நிதிகூற்றுக்கள் மற்றும் செய்யப்பட்டுள்ள வெளிப்படுத்தல்களின் தயாரிப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள மாதிரிகள் இலங்கை மத்திய வங்கியினால் பிரசுரிக்கப்பட்ட மாதிரிகளுடன் இணங்கி ஒழுகப்படுகின்றது. அத்துடன் நிதியியல் கூற்றுக்களின் வழங்குதல்கள் (LKAS - 1) இலங்கை கணக்கீட்டு நியமத்தின் வெளிப்படுத்தல் தேவைப்படுத்தல்களுடனும் இணங்குவிப்பாக இருக்கின்றது.

காலாண்டு அடிப்படையில் தொகுதி அதன் நிதி பெறுபேறுகளை அதனை பயன்படுத்துவோருக்கு அளிக்கின்றது.

புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 2012 ஜனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வருமாறு இலங்கை நிதியியல் அறிக்கையிடல் தரப்படுத்தல் என்பவற்றுடன் இணைந்து திரட்டப்பட்ட தேவைப்பாட்டை சந்திப்பதற்காக வடிவமைப்புக்களையும் நடைமுறைகளையும் மேற்கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை வங்கியும் தொகுதியும் எடுத்துள்ளன. இவ்வாறான கைக்கொள்கைகளுக்கேற்ப முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒப்பீட்டுத் தேவைக்களுக்காக கடந்த ஆண்டின் (2011) நிதியியல் விளைவுகளும் நிதியியல் நிலைமையும் நிதிக் கூற்றில் மீளத் தரப்பட்டுள்ளது.

வங்கியின் வெளியக கணக்காய்வாளருடனும் சபையின் கணக்காய்வுக் குழுவுடனும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளும் உயர்மட்டத்தில் நிலவிய தீர்வுகள் மற்றும் சிக்கல்களுடன் சம்பந்தப்பட்ட உத்தேச மதிப்பீடுகளும் கலந்துரையாடப்பட்டன. இணங்குவிப்பின் தேவை அவசியமானபோது நடப்பு நிகழ்வுகளின் அறிமுகம் மற்றும் சாதனங்களின் வெளியேற்றம் ஏதாகிலும் இருப்பின் அவற்றிற்கு ஒப்பீட்டுத் தகவல்கள் மீள்வகைப்படுத்தப்பட்டதுடன் வெளிப்படுத்தப்பட்டு விளக்கமளிக்கவும் பட்டன. எமது சிறந்த அறிவிற்கு உட்பட்ட வரையில் நிதிக்கூற்றுக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதித் தகவல்கள் ஆகியவை இந்த ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், மீளாய்வின் கீழ் வரும் காலத்தின்போது தொகுதியின் நிதிநிலமை செயற்பாடுகளின் பெறுபேறுகள் மற்றும் நிதிப்பாய்ச்சல் குறித்த அனைத்து தகவல்களும் நேர்மையாக அளிக்கப்பட்டுமுள்ளன. அத்துடன் செயற்பாடுகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு போதுமான மூலவளங்களை தொகுதி கொண்டுள்ளதென்றும் இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்ந்து இயங்கும் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதென்றும் நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம்.

வங்கியினதும் அதன் உப நிறுவனத்தினதும் நிறுவுதல், செயற்படுத்தல் உள்ளக கட்டுப்பாடுகளை பேணுதல் மற்றும் நடைமுறைகள் என்பவற்றிக்கு நாங்கள் பொறுப்பாக இருக்கின்றோம். தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு நாளதற்கு கொண்டுவரப்படும். சொத்துக்களைப் பாதுகாத்தல், மோசடிகளை அல்லது தவறுதல்களை தடுப்பதும், கண்டுபிடிப்பதும், மற்றும் ஏனைய ஒழுங்கின்மைகள் குறித்தும் எமக்கு அறிவிக்கப்பட்ட தொகுதியுடன் தொடர்புடைய முக்கியமான தகவல்கள் ஏற்றவாறு உள்ளதை உறுதிப்படுத்துவதுடன் உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகளின் திறனாற்றல்கள் இருப்பதையும் நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம். நாம் அறிந்தவரையிலும் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகளின் வடிவமைப்பில் அல்லது செயற்பாட்டில் முக்கியமான பற்றாக்குறைகள் அல்லது பலஹீனங்கள் இருக்கவில்லை என்பது

## சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்

### பொது முகாமையாளர்/பிநிஅ மற்றும் பிரதி பொது முகாமையாளர் (நிதியும் திட்டமிடலும்) ஆகியோரின் பொறுப்பேற்றல் பற்றிய கூற்று

குறித்து நாங்கள் திருப்தியடைகின்றோம். முகாமைத்துவத்தை அல்லது வேறு பணியாளர்களை சம்பந்தப்படுத்தும் விதத்தில் உள்ளக கட்டுப்பாடுகளின் வடிவமைப்பிலும் அல்லது செயற்பாடுகளிலும் மற்றும் மோசடிகளிலும் முக்கியமாகக் குறிப்பிடக்கூடிய பற்றாக் குறைகளும் முக்கிய பலஹீனங்களும் இருக்கவில்லை என எமது மதிப்பீடுகளின் அடிப்படையில் நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம்.

உள்ளகக் கட்டுப்பாடுகளும் நடைமுறைகளும் தொடர்ச்சியாகப் பின்பற்றப்படுவதை உறுதி செய்யும் வகையில் வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு காலத்திற்குக் காலம் மீளாய்வுகளை நடத்துகின்றது.

வங்கியினதும் அதன் உப நிறுவனத்தினதும் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதியினாலும் கே.எம்.ஜி.போர்ட் ரோட்ஸ் மற்றும் துரண்டன் சாட்டட் அக்கவுண்டன்ஸ் இனாலும் (ஆபு குழசன சுாழனநள ரூ வுாசழவெழ உாயவநசநன யுஉஉழரவெயவெ) கணக்காய்வு செய்யப்பட்டது. இந்த ஆண்டறிக்கையின் 205 ஆம் பக்கத்தில் வங்கியின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் குறித்த கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை தரப்பட்டுள்ளது.

உள்ளக கணக்காய்வுகள் அனைத்தையும் புலனாய்வு நிகழ்ச்சித் திட்டங்களையும்; உள்ளக கட்டுப்பாட்டு அமைப்புகள் மற்றும் நடைமுறைகளின் திறனாற்றல்களையும், ஏனையவற்றிற்கிடையில் வங்கியின் சபை கணக்காய்வுக்குழு மீளாய்வு செய்தது. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள், நியமங்கள் மற்றும் ஒழுங்கமைப்புத் தேவைப்பாடுகளையும் அவை ஏற்றவாறு பின்பற்றப்படுவதையும் இந்த ஆண்டறிக்கையின் 99 ஆம் 101 ஆம் பக்கங்களில் உள்ள் சபை கணக்காய்வுக் குழு அறிக்கையின் விபரங்களில் தரப்பட்டுள்ளன. பூரணமான சுதந்திரத்தை உறுதி செய்வதற்காக, கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் உள்ளக கணக்காய்வாளர்களுக்கும் எந்தவொரு விடயங்கள் குறித்தும் சபையின் கணக்காய்வுக் குழுவின் அங்கத்தினர்களுடன் கலந்துரையாடுவதற்கு முழுமையானதும் சுதந்திரமானதுமான உரிமையுண்டு. எவ்வாறாயினும் உள்ளக கட்டுப்பாடுகளும் கணக்கீடுகளும் இன் எந்த ஒரு அமைப்பு முறையினாலும் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல்களில் இனங்காணப்பட வேண்டிய மறைவான மட்டுப்படுத்தல்கள் இருக்கின்றன.

- வங்கியும் அதன் உப நிறுவனமும் அனைத்து ஏற்புடைய சட்டங்களுடனும் ஒழுங்கமைப்பு விதிகளுடனும் மற்றும் வழிகாட்டல்களுடனும் இணங்கி செயற்பட்டுள்ளது. நிதிக் கூற்றின் 246 பக்கத்தில் 44 குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவை தவிர்ந்த தொகுதிக்கு எதிரான முக்கியமான சட்ட நடவடிக்கைகள் எவையும் இருக்கவில்லை.
- வங்கியினதும் தொகுதியினதும் அனைத்து வரிகள், தீர்வைகள், வசூல்கள் மற்றும் அனைத்து நியம கொடுப்பனவுகளும் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளன. வங்கியினதும் தொகுதியினதும் பணியாளர்கள் சார்பாகவும் தொடர்பாகவும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய அனைத்து பங்களிப்புகள் வசூல்கள் மற்றும் வரிகள் என்பவையும் ஐந்தொகை திகதி அன்றுள்ளவாறு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது அல்லது தொடர்புடையவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளது.

என்பதை எமது சிறந்த அறிவிற்கு உட்பட்டு நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம்.

**கே.பி.விஜயரட்ண எச்.எம்.**
பிரதி பொது முகாமையாளர்
(நிதியும் திட்டமிடலும்)

**ஹென்னாயக்க பண்டார**
பொது முகாமையாளர்/பிநிஅ

கொழும்பு
மார்ச் 28 2013

**විගණකාධිපති දෙපාර්තමේන්තුව**
**கணக்காய்வாளர் தலைமைஅதிபதிதிணைக்களம்**
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය
எனது இல. எப்பீ/எல்/என்எஸ்பீ
MyNo /எப்ஏ/2012

ඔබේ අංකය
உமது இல
Your No.

දිනය
திகதி
Date 2013 மார்ச் 27

தலைவர்
தேசிய சேமிப்பு வங்கி

**தேசிய சேமிப்பு வங்கி மற்றும் அதன் துணைக்கம்பனியின் 2012 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

தேசிய சேமிப்பு வங்கியின் (வங்கி) மற்றும் அதன் துணைக் கம்பனியின் 2012 டிசம்பர் 31இல் உள்ளவாறான ஒருங்கிணைந்த ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றக் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு நிதிக்கூற்றுக்களுக்கான ஏனைய விளக்கக் குறிப்புக்கள் என்பவைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய 2012 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. துணைக் கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் பொதுத் தொழில்ந்துறையில் ஈடுபட்டுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்றினால் கணக்காய்வு செய்யப்பட்டன.

**நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்டு ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் அந்த ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் இலங்கை கணக்காய்வு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத் திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

## சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**அபிப்பிராயம் - வங்கி**

நிதிக்கூற்றுக்களானவை தேசிய சேமிப்பு வங்கியினதும் 2012 டிசம்பர் 31இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**அபிப்பிராயம் - தொகுதி / துணைக்கம்பனிகள்**

நிதிக்கூற்றுக்களானவை தேசிய சேமிப்பு வங்கியினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2012 டிசம்பர் 31இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**ஏனைய சட்ட மற்றும் ஒழுங்கமைப்பு வேண்டுதல்கள் மீதான அறிக்கை**

1988இன் 30ஆம் இலக்க வங்கி அதிகாரச் சட்டத்தினால் வேண்டப்பட்ட உரிய தகவல்களை இந் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கின்றன.

**பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடல்**

அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டிய எனது அறிக்கை காலக்கிரமத்தில் அவைக்குச் சமர்ப்பிக்கப்படும்.



ஒப்பமிடப்பட்டுள்ளது
**எச்.ஏ.எஸ். ஸமரவீர**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**


අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

# சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்
## முழுமையான வருமானக் கூற்று

| 31 12 2012 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது | குறிப்பு | வங்கி 2012 ரூ. '000 | வங்கி 2011 ரூ.. '000 | வங்கி மாற்றம் % | தொகுதி 2012 ரூ. '000 | தொகுதி 2011 ரூ. '000 | தொகுதி மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த வருமானம் | 3 | 53,045,059 | 46,544,644 | 13.97 | 54,152,229 | 47,532,290 | 13.93 |
| வட்டி வருமானம் | | 52,673,261 | 47,095,745 | 11.84 | 53,780,431 | 48,083,391 | 11.85 |
| கழிக்குக :வட்டி செலவு | | 39,142,492 | 29,296,099 | 33.61 | 40,065,973 | 29,979,305 | 33.65 |
| தேறிய வட்டி வருமானம் | 4 | 13,530,769 | 17,799,646 | (23.98) | 13,714,458 | 18,104,086 | (24.25) |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | | 221,709 | 240,768 | (7.92) | 221,709 | 240,768 | (7.92) |
| கழிக்குக :கட்டணம் மற்றும் தரகு செலவினங்கள் | | 24,481 | 26,553 | (7.80) | 27,705 | 33,239 | (16.65) |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | 5 | 197,228 | 214,215 | (7.93) | 194,004 | 207,529 | (6.52) |
| வியாபார நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | 6 | 69,939 | (859,727) | 108.13 | 69,939 | (859,727) | 108.13 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் நியமிக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் மூலமான தேறிய இலாபம் /நட்டம் | 7 | - | - | - | (138,710) | (135,889) | 2.08 |
| நிதியியல் மூலமான தேறிய இலாபம் /(நட்டம்) | 8 | 5,481 | 4,111 | 33.33 | 5,481 | 4,111 | 33.33 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறிய) | 9 | 74,669 | 63,747 | 17.13 | 74,669 | 63,747 | 17.13 |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | | 13,878,086 | 17,221,992 | (19.42) | 13,919,841 | 17,383,857 | (19.93) |
| கடன்களும் ஏனைய நட்டங்களுக்குமான பெறுமதி குறைப்பு | 10 | 130,935 | 142,632 | (8.20) | 130,935 | 142,632 | (8.20) |
| **தேறிய செயற்பாட்டு வருமானம்** | | 13,747,151 | 17,079,360 | (19.51) | 13,788,906 | 17,241,225 | (20.02) |
| கழிக்குக : செலவினங்கள் | | | | | | | |
| ஆளணி செலவினங்கள் | 11 | 4,077,501 | 4,139,657 | (1.50) | 4,091,835 | 4,153,912 | (1.49) |
| ஏனைய செலவினங்கள் | 12 | 2,261,322 | 2,120,541 | 6.64 | 2,227,664 | 2,092,482 | 6.46 |
| **பெறுமதி கூட்டப்பட்ட வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | | 7,408,328 | 10,819,162 | (31.53) | 7,469,407 | 10,994,831 | (32.06) |
| வருமானவரி செலவினம் | | 1,239,069 | 1,564,481 | (20.80) | 1,248,121 | 1,583,762 | (21.19) |
| **பெறுமதி கூட்டப்பட்ட வரிக்கு பின்னரான தொழிற்பாட்டு இலாபம்** | | 6,169,259 | 9,254,681 | (33.34) | 6,221,286 | 9,411,069 | (33.89) |
| **வருமானவரிக்கு முன்னரான இலாபம்** | | 6,169,259 | 9,254,681 | (33.34) | 6,221,286 | 9,411,069 | (33.89) |
| கழிக்குக வருமானவரி செலவினம் | 13 | 1,837,917 | 3,192,819 | (42.44) | 1,880,607 | 3,306,669 | (43.13) |
| **ஆண்டிற்கான இலாபம்** | | 4,331,342 | 6,061,862 | (28.55) | 4,340,679 | 6,104,400 | (28.89) |
| | | | | | | | |
| **பகிர்ந்தளிக்கத் தக்க இலாபம்** | | | | | | | |
| வங்கியின் உரிமைப்பங்காளர்களுக்கு | | 4,331,342 | 6,061,862 | (28.55) | 4,340,679 | 6,104,400 | (28.89) |
| ஆண்டிற்கான் இலாபம் | | 4,331,342 | 6,061,862 | (28.55) | 4,340,679 | 6,104,400 | (28.89) |
| | | | | | | | |
| **இலாபம் மீதான பங்கொன்றின் வருவாய்** | | | | | | | |
| சாதாரண பங்கொன்றின் அடிப்படை வருவாய் | 14 | 13.54 | 18.94 | (28.55) | 12.96 | 18.22 | (28.89) |
| சாதாரண பங்கொன்றிற்கான குன்றிய வருவாய் | | 13.54 | 18.94 | (28.55) | 12.96 | 18.22 | (28.89) |
| ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்) | | 4,331,342 | 6,061,862 | (28.55) | 4,340,679 | 6,104,400 | (28.89) |
| | | | | | | | |
| **வரி நீங்கலான அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | | | | | | |
| **நிதியியல் சொத்துக்கள்** | | (210,840) | (1,239,521) | (82.99) | (210,840) | (1,239,521) | (82.99) |
| **ஆண்டிற்கான வரி நீங்கலான ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | (210,840) | (1,239,521) | (82.99) | (210,840) | (1,239,521) | (82.99) |
| ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானம் | | 4,120,502 | 4,822,341 | (14.55) | 4,129,839 | 4,864,879 | (15.11) |
| **பகிர்ந்தளிக்கப்படுவதற்கு :** | | | | | | | |
| வங்கியின் பங்குரிமையாளர்கள் | | 4,120,502 | 4,822,341 | (14.55) | 4,129,839 | 4,864,879 | (15.11) |
| ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானம் | | 4,120,502 | 4,822,341 | (14.55) | 4,129,839 | 4,864,879 | (15.11) |

# சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்
## நிதி நிலமைக் கூற்று

| 31 12 2012 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது | | வங்கி | | | தொகுதி | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2012 | 2011 | மாற்றம் | 2012 | 2011 | மாற்றம் |
| | குறிப்பு | ரூ. '000 | ரூ. '000 | % | ரூ. '000 | ரூ. '000 | % |
| **சொத்துகள்** | | | | | | | |
| காசும் காசுக்கு நிகரானவையும் | 16 | 1,465,542 | 1,398,413 | 4.80 | 1,467,042 | 1,399,897 | 4.80 |
| மத்திய வங்கியுடன் மீதிகள் | 17 | - | - | - | 242 | 117 | 106.84 |
| வங்கிகளிலுள்ள இருப்புகள் | 18 | 5,973,585 | 5,280,528 | 13.12 | 5,973,585 | 5,280,528 | 13.12 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 19 | 9,401 | 34,458 | (72.72) | 9,401 | 34,458 | (72.72) |
| வர்த்தகப்படுத்தலுக்காக வைக்கப்பட்டுள்ள ஏனைய நிதியியல் சொத்துக்கள் | 20 | 10,823,874 | 11,589,525 | (6.61) | 10,823,874 | 11,589,525 | (6.61) |
| இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாய மதிப்பீட்டில் நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துக்கள் | 21 | - | - | - | 5,488,970 | 8,599,007 | (36.17) |
| வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள் | 22 | 13,374,007 | 21,222,723 | (36.98) | 14,091,299 | 23,829,757 | (40.87) |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் வருமதிகளும் | 23 | 155,245,236 | 116,217,344 | 33.58 | 155,249,483 | 116,228,559 | 33.57 |
| நிதியியல் முதலீடுகள்- விற்பனைக்கு கிடைக்கத் தக்கதாக உள்ளவை | 24 | 2,978,800 | 3,284,099 | (9.30) | 2,979,800 | 3,285,099 | (9.29) |
| நிதியியல் முதலீடுகள் - முதிர்ச்சி அடையும் வரை வைக்கப்பட்டுள்ளவை | 25 | 309,595,845 | 298,134,819 | 3.84 | 313,063,745 | 300,916,743 | 4.04 |
| இணை கம்பனிகளிலும் கூட்டு முயற்சிகளிலும் முதலீடுகள் | 26 | 150,000 | 150,000 | - | - | - | - |
| ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 27 | 5,151,512 | 5,124,327 | 0.53 | 5,152,416 | 5,125,312 | 0.53 |
| அருவச் சொத்துக்கள் | 28 | 112,101 | 122,782 | (8.70) | 112,264 | 123,024 | (8.75) |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 29 | - | - | - | 313 | 221 | 41.63 |
| ஏனைய சொத்துகள் | 30 | 4,814,290 | 3,415,416 | 40.96 | 4,857,794 | 3,468,834 | 40.04 |
| **மொத்த சொத்துக்கள்** | | 509,694,193 | 465,974,434 | 9.38 | 519,270,228 | 479,881,081 | 8.21 |
| **பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை | 31 | 337,014 | 128,948 | 161.36 | 5,603,182 | 8,962,642 | (37.48) |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை | 32 | 457,650,387 | 421,849,063 | 8.49 | 457,650,387 | 421,849,063 | 8.49 |
| ஏனைய கடன்பாடுகள் | 33 | 22,620,945 | 16,141,529 | 40.14 | 25,628,549 | 19,923,444 | 28.64 |
| நடப்பு வரிப் பொறுப்புகள் | | - | - | - | 38,859 | 47,967 | (18.99) |
| பிற்போடப்பட்ட வரிச் பொறுப்புகள் | 29 | 123,338 | 95,615 | 28.99 | 123,338 | 95,615 | 28.99 |
| ஏனைய பொறுப்புகள் | 34 | 4,626,718 | 4,706,796 | (1.70) | 4,640,398 | 4,709,479 | (1.47) |
| **மொத்த பொறுப்புகள்** | | 485,358,402 | 442,921,951 | 9.58 | 493,684,713 | 455,588,210 | 8.36 |
| **பங்கு மூலதனம்** | | | | | | | |
| ஒதுக்கப்பட்ட மூலதனம் | 35 | 3,200,000 | 3,200,000 | - | 3,200,000 | 3,200,000 | - |
| நியதிச் சட்ட ஒதுக்க நிதியம் | 36 | 1,713,127 | 1,626,500 | 5.33 | 1,713,127 | 1,626,500 | 5.33 |
| ஏனைய ஒதுக்கங்கள் | 37 | 19,422,664 | 18,225,983 | 6.57 | 20,672,388 | 19,466,371 | 6.20 |
| தலைமைக் கம்பனியின் உரிமையாளர்களது மொத்த பங்குகள் | | 24,335,791 | 23,052,483 | 5.57 | 25,585,515 | 24,292,871 | 5.32 |
| **மொத்த பங்கு மூலதனம்** | | 24,335,791 | 23,052,483 | 5.57 | 25,585,515 | 24,292,871 | 5.32 |
| **மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | 509,694,193 | 465,974,434 | 9.38 | 519,270,228 | 479,881,081 | 8.21 |
| **எதிர்பாரா பொறுப்புகள் மற்றும் கடன்பாடுகள்** | 38 | 6,845,410 | 1,730,018 | 295.68 | 6,845,410 | 1,730,018 | 295.68 |

**நிதி நிலமைக் கூற்று**

211 முதல் 250 வரையான பக்கங்களில் காட்டப்பட்டுள்ள முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளும் கணக்குகள் தொடர்பான குறிப்புகளும், இந்த நிதி கூற்றுகளை முழுமையாக்கும் பகுதிகளாகும்

**உறுதிப்படுத்தல்**

31 டிசம்பர் 2012 அன்றுள்ளவாறு மேலே உள்ள நிதிக் கூற்றுக்களும், 31 டிசம்பர் 2012 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபமும் குறித்த அலுவல்கள் உண்மையும், நேர்மையுமாகத் தரப்பட்டுள்ளன என நான் சான்றுறுதிப்படுத்துகின்றேன்.



**கே.பீ. விஜயரட்ண**
பிரதி பொது முகாமையாளர் (நிதியும் திட்டமிடலும்)

நிதிக் கூற்றுகளை தயாரிப்பதற்கும் வெளியிடுவதற்கும் சபையின் பணிப்பாளர்கள் பொறுப்பாகவுள்ளனர். சபையின் சார்பில் அங்கீகரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டது.

சபையின் சார்பில் அங்கீகரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டது.



**சுனில் எஸ். சிறிசேன**
தலைவர்



**எஸ். ரீ. அபயகுணவர்த்தன**
பணியாற்றுப் பணிப்பாளர்



**எச்.எம்.ஹெறன்னாயக்க பண்டார**
பொது முகாமையாளர் /பிரதமநிறைவேற்று அதிகாரி

2013 மார்ச் 27

கொழும்பு இலங்கை

# சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்

## பங்கு மூலதன மாற்றங்களின் கூற்று - வங்கி

| | ஒதுக்கப்பட்ட மூலதனம் | ஒதுக்கு நிதியம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | கிடைக்கக் கூடிய விற்பனை ஒதுக்கம் | ஏனைய ஒதுக்கங்கள் | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | மொத்த பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| 01.01.2011 இல் உள்ளவாறான மீதி | 3,200,000 | 1,338,543 | 1,583,340 | - | 15,545,927 | - | 21,667,810 |
| SLFR ஐ கடைப்பிடித்ததினால் ஏற்பட்ட விளைவு | - | - | - | 1,585,480 | - | (1,801,627) | (216,147) |
| 01.01.2011 SLFRS மீதி | 3,200,000 | 1,338,543 | 1,583,340 | 1,585,480 | 15,545,927 | (1,801,627) | 21,451,663 |
| 2011ஆம் ஆண்டிற்கான தேறிய இலாபம் | - | - | - | - | - | 6,061,862 | 6,061,862 |
| ஏனைய முழுமையான வருமானம் | - | - | - | (1,239,521) | - | - | (1,239,521) |
| கோரப்படாத வைப்பு ஒதுக்குகள் | - | - | - | - | (8,850) | - | (8,850) |
| திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு | - | - | - | - | - | (3,212,671) | (3,212,671) |
| 2011ஆம் ஆண்டிற்கான மாற்றல்கள் | - | 287,957 | - | - | 759,607 | (1,047,564) | - |
| **31.12.2011 அன்றுள்ளவாறான மீதி** | 3,200,000 | 1,626,500 | 1,583,340 | 345,959 | 16,296,684 | - | 23,052,483 |
| 2012ஆம் ஆண்டிற்கான இலாபம் | - | - | - | - | - | 4,331,342 | 4,331,342 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் (வரி நீங்கலாக) | - | - | - | (210,840) | - | - | (210,840) |
| ஆண்டிற்கான ஏனைய மொத்த முழுமையான வருமானம் | - | - | - | (210,840) | - | 4,331,342 | 4,120,502 |
| **பங்கு மூலதன உரிமையாளர்களுடனான பங்கு மூலதனத்துடன் நேரடியாக இனங்காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்** | | | | | | | |
| காலப்பகுதியில் ஒதுக்கங்களுக்கு மாற்றப்பட்டவை | - | 86,627 | - | - | 1,421,469 | (1,508,096) | - |
| திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு | - | - | - | - | - | (2,823,245) | (2,823,245) |
| கோரப்படாத வைப்பு ஒதுக்குகள் | - | - | - | - | (13,948) | - | (13,948) |
| பங்கு மூலதன உரிமையாளர்களுடனான மொத்த கொடுக்கல் வாங்கல்கள் | - | 86,627 | - | - | 1,407,521 | (4,331,342) | (2,837,194) |
| **31.12.2012 அன்றுள்ளவாறான மீதி** | 3,200,000 | 1,713,127 | 1,583,340 | 135,119 | 17,704,205 | - | 24,335,791 |

# சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்

**பங்கு மூலதன மாற்றங்களின் கூற்று - தொகுதி**

| | ஒதுக்கப்பட்ட மூலதனம் | ஒதுக்கு நிதியம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | கிடைக்கக் கூடிய விற்பனை ஒதுக்கம் | ஏனைய ஒதுக்கங்கள் | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | மொத்த பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| 01.01.2011 இல் உள்ளவாறான மீதி | 3,200,000 | 1,338,543 | 1,583,340 | - | 16,751,679 | - | 22,873,562 |
| SLFR ஐ கடைப்பிடித்ததினால் ஏற்பட்ட விளைவு | - | - | - | 1,585,480 | - | (1,809,528) | (224,048) |
| 01.01.2011 SLFRS மீதி | 3,200,000 | 1,338,543 | 1,583,340 | 1,585,480 | 16,751,679 | (1,809,528) | 22,649,514 |
| 2011ஆம் ஆண்டிற்கான தேறிய இலாபம் | - | - | - | - | - | 6,104,400 | 6,104,400 |
| ஏனைய முழுமையான வருமானம் | - | - | - | (1,239,521) | - | - | (1,239,521) |
| கோரப்படாத வைப்பு ஒதுக்குகள் | - | - | - | - | (8,850) | - | (8,850) |
| திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு | - | - | - | - | - | (3,212,671) | (3,212,671) |
| 2011ஆம் ஆண்டிற்கான மாற்றல்கள் | - | 287,957 | - | - | 794,243 | (1,082,200) | - |
| **31.12.2011 அன்றுள்ளவாறான மீதி** | 3,200,000 | 1,626,500 | 1,583,340 | 345,959 | 17,537,072 | - | 24,292,871 |
| 2012ஆம் ஆண்டிற்கான இலாபம் | - | - | - | - | - | 4,340,679 | 4,340,679 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் (வரி நீங்கலாக) | - | - | - | (210,840) | - | - | (210,840) |
| ஆண்டிற்கான ஏனைய மொத்த முழுமையான வருமானம் | - | - | - | (210,840) | - | 4,340,679 | 4,129,839 |
| **பங்கு மூலதன உரிமையாளர்களுடனான பங்கு மூலதனத்துடன் நேரடியாக இனங்காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்** | | | | | | | |
| காலப்பகுதியில் ஒதுக்கங்களுக்கு மாற்றப்பட்டவை | - | 86,627 | - | - | 1,430,805 | (1,517,432) | - |
| திரட்டு நிதியங்களுக்கான பங்களிப்பு | - | - | - | - | - | (2,823,245) | (2,823,245) |
| கோரப்படாத வைப்பு ஒதுக்குகள் | - | - | - | - | (13,948) | - | (13,948) |
| **பங்கு மூலதன உரிமையாளர்களுடனான மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள்** | - | 86,627 | - | - | 1,416,857 | (4,340,679) | (2,837,195) |
| **31.12.2012 அன்றுள்ளவாறான மீதி** | 3,200,000 | 1,713,127 | 1,583,340 | 135,119 | 18,953,929 | - | 25,585,515 |

# சவால்மிக்க ஆண்டின் பெறுபேறுகள்
## காசுப் பாய்ச்சல் கூற்று

| 31 12 2012 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது | குறிப்பு | வங்கி 2012 ரூ. '000 | வங்கி 2011 ரூ. '000 | தொகுதி 2012 ரூ. '000 | தொகுதி 2011 ரூ. '000 |
|---|---|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 6,169,259 | 9,254,681 | 6,221,286 | 9,411,069 |
| **சீராக்கல்கள் :** | | | | | |
| வரிக்கு முன்னரான இலாபத்தில் அடங்கியுள்ள காசு அல்லா விடயங்கள் | 41 | 487,828 | 557,132 | 488,233 | 557,583 |
| தொழிற்பாட்டு சொத்துக்களில் மாற்றங்கள் | 42 | (44,144,956) | (64,579,569) | (42,934,983) | (67,793,455) |
| தொழிற்பாட்டு பொறுப்புகளில் மாற்றங்கள் | 43 | 36,594,698 | 57,636,218 | 33,037,640 | 61,970,487 |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம் | | - | - | - | - |
| வங்கிகளுடனான ஏனைய மீதிகள் | | (693,057) | (1,344,536) | (693,057) | (1,344,536) |
| வரையறுக்கப்பட்ட காப்புத் திட்டங்களுக்குச் செலுத்திய பங்களிப்பு | | (873,449) | (854,257) | (873,449) | (854,257) |
| செலுத்திய வரி | | (1,810,194) | (3,777,513) | (1,850,879) | (4,036,538) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | | (4,269,871) | (3,107,844) | (6,605,209) | (2,089,647) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | | | |
| ஆதனம் பொறிகள் உபகரணங்களின் கொள்வனவு | | (353,729) | (665,666) | (353,975) | (742,133) |
| ஆதனம் பொறிகள் உபகரணங்களின் விற்பனை மூலம் பெறுகைகள் | | - | - | - | - |
| நிதியியல் முதலீடுகளின் கொள்வனவு | | 305,299 | (3,717) | 305,299 | (3,717) |
| நிதியியல் முதலீடுகளின் விற்பனை மற்றும் முதிர்வுகளின் மூலமான பெறுகைகள் | | 765,650 | 4,524,104 | 3,956,193 | 4,524,104 |
| அருவச் சொத்துக்களின் தேறிய கொள்வனவு | | (19,667) | (24,701) | (19,666) | (24,701) |
| திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு | | (3,048,035) | (5,512,013) | (3,060,968) | (5,512,013) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு (பாவிக்கப்பட்ட)** | | (2,350,482) | (1,681,993) | 826,883 | (1,758,460) |
| நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | | | | |
| ஏனைய பெறுகைகள் | | 6,479,416 | 4,827,426 | 5,705,106 | 4,827,426 |
| நிதி நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு | | 6,479,416 | 4,827,426 | 5,705,106 | 4,827,426 |
| தேறிய அதிகரிப்புஅல்லது வீழ்ச்சி - காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் | | (140,937) | 37,589 | (73,220) | 979,319 |
| காலப் பகுதியின் ஆரம்பத்திலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் | | 1,269,465 | 1,231,876 | 2,213,227 | 1,233,908 |
| காலப் பகுதியின் முடிவிலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் | | 1,128,528 | 1,269,465 | 2,140,007 | 2,213,227 |

## 1. தாபனத்தகவல்

**அறிக்கையிடும் நிறுவனம்**

தேசிய சேமிப்பு வங்கி (NSB) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு சேமிப்பு வங்கி ஆகும். வங்கியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இலங்கை கொழும்பு 03, காலி வீதி, இல. 255, சேமிப்பகத்தில் அமைந்துள்ளது. 2012 டிசெம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டுக்கு வங்கியினதும் (தாய் நிறுவனம்) அதன் முழு உரிமை துணை நிறுவனத்தினதும் துணை நிறுவனத்தினதும் வரையறுக்கப்பட்ட NSB நிதி முகாமைத்துவக் கம்பனியினதும் தொகுதி நிதியியல் கூற்றுகள் உள்ளடங்குகின்றன. ஒவ்வொரு வருடத்திலும் டிசெம்பர் 31ல் முடிவடைந்த பன்னிரெண்டு மாதங்களுக்கான வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் கூற்றுகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்படுகின்றது.

2012 டிசெம்பர் 31ல் வங்கியின் ஊழியர் தொகை 3128 ஆகும் (2011ல் - 3,275) 2012 டிசெம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டுக்காக நிதியியல் கூற்றுகள் 2013 மார்ச் 28ல் வெளியிடுவதற்கு வங்கிப்பணிப்பாளர் சபை மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வங்கி 219 கிளைகளையும் 1,185 பாடசாலை வங்கி அலகுகளையும் 231 ATM சேவை முனைகளையும் அதன் முகவர் வலையமைப்பாக 641 தபால் அலுவலகங்களையும் 3,412 உபதபால் அலுவலகங்களையும் கொண்டுள்ளது.

## 2. பிரதான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2.1 2.1. தயாரித்தல் அடிப்படை

விற்பனைக்காகக் காணப்படும் முதலீடுகள் பிற நிறுவனங்களின் நிதியியல் பத்திரங்கள், வாணிபத்துக்கென கொண்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நியாயமான பெறுமதியில் அளவிட்டுள்ள இலாபம் அல்லது நட்டம் ஊடாக சரியாக மதிக்கப்பட்டுள்ள நிதியியல் சொத்துக்களும் பொறுப்புகளும் தவிர்ந்ததாக, வரலாற்று மதிப்பு அடிப்படையிலே ஒருங்கிணைந்த நிதியியல் அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. விசேடமாக குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த மதிப்புகள் ரூபா ஆயிரத்துக்கு முழுமையாக்கப்பட்டு, இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.1.1 கூற்றுக்களின் இணக்கம்

வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் கூற்றுக்கள் இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள கணக்கியல் தராதரத்திற்கமைவாக (LKAS மற்றும் SLFRS) தயாரிக்கப்படுகின்றன.

### 2.1.2 நிதியியல் கூற்று வெளியிடும் ஒழுங்கு

வங்கியும் தொகுதியும் தமது நிதியியல் கூற்றுக்களை பொதுவாக திரவத்தன்மை ஒழுங்கில் வெளியிடுகின்றன.

### 2.1.3நிதியியல் பத்திரங்களை ஈடுசெய்தல்

சட்டப்படி நடைமுறைப்படுத்தக்கூடிய உரிமையும் நோக்கமும் உள்ள போதே நிதியியல் சொத்துக்களும் நிதியியல் பொறுப்புகளும் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யபபட்டு நிகரதொகை நிதியியல் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ளது. அல்லது சொத்துக்களும் பொறுப்புகளும் ஒரே நேரத்தில் கையளிக்கப்பட்டு ஈடுசெய்யப்படும். ஏதாவது கணக்கியல் தராதரத்தாலோ விளக்கவுரையாலோ கேட்கப்பட்டாலோ அல்லது அனுமதியளிக்கப்பட்டாலோ, அன்றி வங்கியால் குறிப்பிடப்பட்ட வெளியீட்டினால் அனுமதிக்கப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கேற்பவோ ஈடுசெய்யப்படும்.

### 2.1.4 ஒருங்கிணைத்தல் அடிப்படை

வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் கூற்று 2012 டிசெம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியினதும் துணை நிறுவனங்களதும் நிதியியல் கூற்றைக் கொண்டிருக்கும். வங்கியின் துணை நிறுவனத்தின் நிதியியல் கூற்று ஒருங்கிணைப்புக்காக தேசிய சேமிப்பு வங்கியைப் போன்றே கூற்று உள்ளடக்கும் காலத்திற்கும் ஒரே விதமான கணக்கியல் தராதரப்படியும் தயாரிக்கப்படும்

தொகுதிகளுக்கிடையிலான எல்லா நிலுவைகளும், நடவடிக்கைகளும், வரவுகளும் செலவுகளும் முற்றாக ஒதுக்கப்படும்.

துணை நிறுவனங்கள் அவற்றின் கட்டுப்பாடு வங்கிக்கு மாற்றம் செய்யப்பட்ட தினத்தில் இருந்து முழுமையாக ஒருங்கிணைக்கப்படும். ஒரு நிறுவனத்தின் நிதியியல் மற்றும் செயற்பாட்டு கொள்கைகளை அவற்றில் இருந்து நன்மை பெறுவதற்காக நிர்வகிக்கும் சக்தி கிடைக்கும் பொழுது கட்டுப்பாடு ஏற்படுகிறது.

### 2.2 குறிப்பிடக்கூடிய நிதியியல் தீர்மானங்களும், அளவீடுகளும் எண்ணங்களும்.

நிதியியல் கூற்றில் காட்டப்பட்டுள்ள தொகைகளை நிர்ணயிப்பதற்கு வங்கியின் நிதிக்கொள்கைகளைக் கையாள்வதில் முகாமைத்துவம் தீர்மானங்களையும் அளவீடுகளையும் மேற்கொண்டது. பின்வருவன முக்கியமாக குறிப்பிடக்கூடிய தீர்மானங்களும் அளவீடுகளும் ஆகும்.

### 2.2.1 இயங்கும் நிறுவனம்

வங்கியின் முகாமைத்துவம் வங்கியின் தொடர்ந்து இயங்கும் தன்மையை அளவீடு செய்து, வங்கி எதிர்பார்க்கக்கூடிய காலத்துக்கு இயங்கும் தன்மை உள்ளது என்று திருப்திப்படுகின்றது. மேலும் தொடர்ந்து இயங்கும் தன்மையைச் சந்தேகிக்கக்கூடிய கணக்கெடுக்கக்கூடிய ஐயங்கள் எதுவும் முகாமைத்துவத்திற்கு அறியக்கிடைக்கவில்லை. எனவே நிதியியல் கூற்றுக்கள் தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற முறையிலேயே தயார்செய்யப்படுகின்றன.

**2.2.2 நிதியியல் பத்திரங்களின் நல்லெண்ண மதிப்பு.**

நடைமுறைச்சந்தையில் மதிப்பு பெற்றுக்கொள்ள முடியாதவிடத்து நல்லெண்ண மதிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவை கணித முறைகள் உள்ளிட்ட தொழில்நுட்ப முறையில் மதிக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கான உள்ளீடுகள் கண்டு கொள்ளக்கூடிய சந்தைத் தரவுகளாலும் கண்டு கொள்ளக்கூடிய தரவுகள் இல்லாதவிடத்து மதிப்புகள் தீர்மானிக்கப்பட்டவையாகும்.

**2.2.3 கடன்களுக்கும் முற்கொடுப்பனவுகளுக்கும் ஊறுகளால் ஏற்படும் நட்டம்.**

ஒவ்வொரு நிதியியல் கூற்றுத்தினத்திலும் குறிப்பிடக்கூடிய தனித்தனி கடன்களுக்கும் முற்கொடுப்பனவுகளுக்கும் ஊறுகளாக ஏற்படக்கூடிய நட்டங்கள் வருமெனக்கூற்றில் பதியப்பட வேண்டுமா என வங்கி மீளாய்வு செய்யும். குறிப்பாக எதிர்கால காசொழுக்கின் தொகையும் காலமும் முகாமைத்துவத்தால் நிர்ணயிப்பதற்கு ஊறுகளால் ஏற்படக்கூடிய நட்டங்கள் முக்கியமானவை இவ்அளவீடுகள் பல காரணிகளை அடிப்படையாகக்கொண்டவை. உண்மை நிலை வேறுபட்டு எதிர்கால மாற்றங்கள் நிகழலாம்.
தனித்தனியாக மதிப்பிடப்பட்ட கடன்களும் முற்கொடுப்பனவுகளும் ஊறு அடையாதவை எனக்காணப்பட்டன. தனித்தனியாக குறிப்பிட முடியா கடன்களும் முற்கொடுப்பனவுகளும் ஆபத்து அடிப்படையில் ஒன்று சேர்த்து மதிக்கப்படுகின்றன. இதுவரை கண்டு கொள்ளப்படாத ஆனால் ஊறு ஏற்படக்கூடியவற்றிற்கு ஒதுக்கம் செய்யப்பட வேண்டுமா என மதிப்பிடப்படுகிறது. இப்படிக்கூட்டு மதிப்பீடு செய்தல் கடன் அளவுகளிலும் (நிலுவைத்தரம், கடன் உபயோகம், பொறுப்பு வீதம் முதலியன) ஆபத்து ஒருங்குகூடல் தீர்மானங்களிலும் பொருளாதார தரவுகளிலும் (வேலையற்றோர் அளவீடு, காணிகள் நிலங்களின் விலை மதிப்பு சமூக ஆபத்து, தனித்தனி குழுக்களின் நடவடிக்கை) காரணிகளாகக் கொண்டுள்ளது.

**2.3. நிதியியல் பத்திரங்கள்**

**2.3.1 நிதியியல் பத்திரங்கள் - ஆரம்ப ஏற்புடமையும் பின்னய அளவீடுகளும்.**

**i. ஏற்புடைய திகதி.**

எல்லா நிதியியல் பத்திரங்களும் ஆரம்பத்தில் வணிக திகதியில்
ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அதாவது பத்திரத்தின் ஒப்பந்த முறைமையில் வங்கி ஒரு கட்சியாளராக இணைந்த திகதி.
குறிப்பு:- பொதுப்பேரேட்டில் அரசாங்க பொறுப்புகள் தீர்வைத்திகதியில் ஏற்புடையதாகும். இது வணிக திகதியில் இருந்து மூன்று நாட்கள் கழிந்ததாகும். இந்நிலை நிதியியல் கூற்று தயாரிக்கும் பொழுது சரி செய்யப்படுகிறது.

**ii. /நிதியியல் பத்திரங்களுக்கான ஆரம்ப அளவீடு**

நிதியியல் பத்திரங்களின் ஆரம்ப அளவீடுகள் நிதியியல் பத்திரங்கள் ஆரம்ப ஏற்புடமையில் வகைப்படுத்தல், ஏற்றுக்கொள்ளும் காரணத்திலும், முகாமைத்துவத்தின் கையேற்கும் நோக்கத்திலும் பத்திரத்தின் தன்மையிலும் தங்கி உள்ளது. எல்லா நிதியியல் பத்திரங்களும் ஆரம்பத்தில் அவற்றின் நல்லெண்ண மதிப்பிலும் கொடுக்கல் வாங்கல் செலவிலும் அளவிடப்படுகின்றன. இலாப நட்ட கணக்கூடாக நல்லெண்ண மதிப்பில் பதிவு செய்யப்படும் நிதியியல் பொறுப்புகளும் நிதியியல் சொத்துக்களும் இதில் விலக்களிக்கப்படும்.

**iii. இலாப நட்டக்கணக்கினூடாக நல்லெண்ண மதிப்பில் செய்யப்பட்ட நிர்ணயங்கள்.**

வட்டி ஈடுசெய்தல் போன்ற நிர்ணயங்கள் வங்கியால் செய்யப்படுகின்றது. நல்லெண்ண மதிப்பில் செய்யப்படும் இந்நிர்ணயங்கள் “நேர்” ஆயின் சொத்து எனவும் “மறை” ஆயின் பொறுப்பு எனவும் பதியப்படுகின்றன. நிர்ணயங்களில் ஏற்படும் நல்லெண்ண மதிப்பு மாற்றங்கள் “நிகர வணிக வருவாயில் உள்ளடக்கப்படும்.

**iv. வணிக நடைமுறைக்காக உள்ள நிதியியல் சொத்துக்களும் நிதியியல் பொறுப்புகளும்.**

வணிக நடைமுறைக்காக உள்ள நிதியியல் சொத்துக்களும் நிதியியல் பொறுப்புகளும் நிதியியல் கூற்றில் நல்லெண்ண மதிப்பில் பதிவு செய்யப்படுகின்றன. நல்லெண்ண மதிப்பில் ஏற்படும் மாற்றங்கள் “நிகர வணிக வருவாயில் ஏற்றுக்கொள்ளப்படும். பங்கு இலாப வருவாய் “நிகர வணிக வருவாயில்” ஒப்பந்த காரணிகளுக்கேற்ப பதிவு செய்யப்படும். அல்லது கொடுப்பனவு உரிமை ஏற்படும் பொழுது பதிவு செய்யப்படும்.
வணிக கொடுக்கல் வாங்கலுக்கென உள்ள அரச பொறுப்புகள் இந்தப்பகுப்பில உள்ளடக்கப்படும்.

**v. இலாப நட்டக்கணக்கினூடாக நல்லெண்ண மதிப்பிடப்பட்ட நிதியியல் சொத்துக்களும், நிதியியல் பொறுப்புகளும்.**

முகாமைத்துவத்தால் ஆரம்ப ஏற்றக்கொள்ளலில் உள்ளடக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களும், நிதியியல் பொறுப்புகளும் இப்பகுப்பில் உள்ளன. ஒவ்வொரு பத்திரத்திற்கும் தனித்தனி தீர்மானம் மேற்கொள்ளப்படும்.
இலாப நட்டக்கணக்கினூடாக நல்லெண்ண மதிப்பில் கொள்ளப்பட்ட நிதியியல் சொத்துக்களும் நிதியியல் பொறுப்புகளும் நிதியியல் கூற்றில் நல்லெண்ண மதிப்பிலேயே பதிவு செய்யப்படும். நல்லெண்ண மதிப்பில் ஏற்படும் மாற்றங்கள் இலாப நட்டக்கணக்கில் நல்லெண்ண மதிப்பு நிதியியல் சொத்துக்களும், பொறுப்புகளும் இலாபம் அல்லது நட்டம் என பதிவு செய்யப்படும். வட்டி வருவாய் அல்லது வட்டி செலவினம் “வட்டி வரவு” அல்லது “வட்டி செலவு” என நடைமுறையில் உள்ள வட்டி வீதத்தில் (EIR) பதியப்படும். இதே நேரம் பங்கு இலாப வருவாய், வருவாய் உரிமை ஏற்படும் பொழுது “பிற வருவாய் எனக்கொள்ளப்படும்.

vi. **விற்பனைக்குள்ள நிதியியல் முதலீடுகள்.**

விற்பனைக்குள்ள முதலீடுகள் பங்குகளையும் கடன் பொறுப்புகளையும் உள்ளடக்கும். விற்பனைக்குள்ள பங்குகள் எனப்பகுக்கப்பட்டவை, வணிக நோக்கத்துக்காக கொண்டுள்ளவை என்றோ, இலாப நட்டக்கணக்கினூடாக நல்லெண்ண மதிப்பிடப்பட்டவையோ அல்ல. இப்பகுப்பில் உள்ள கடன் பொறுப்புகள் குறிப்பிடப்படாத காலத்திற்கு வைத்திருப்பவை, திரவ தேவைகளுக்காகவோ சந்தை நிலை மாற்றங்களுக்கேற்பவோ விற்பனை செய்ய வைத்திருப்பவை.

குறிப்பு எந்தக் கடனையோ, வரவேண்டிய வையையோ வங்கி விற்பனைக்கு உள்ளவை என வங்கி வகுக்கவில்லை. ஆரம்ப மதிப்பீட்டின் பின் விற்பனைக்குள்ள நிதியியல் பத்திரங்கள் நல்லெண்ண மதிப்பில் கணக்கிடப்பட்டன. சந்தை விலை நிர்ணயிக்கப்படாத விலை சரியான முறையில் நிர்ணயிக்கப்பட முடியாத பங்குகள் செலவின அடிப்படையில் மதிப்பிடப்படும்.

பெற்றுக் கொள்ளாத இலாபங்களும் நட்டங்களும் விற்பனைக்குள்ள பங்குகள் பகுப்பில் விற்பனைக்குள்ளவையாக பகுக்கப்பட்டுள்ளன. (பிற ஒருங்கிணைந்த வரவு) முதலீடு விற்பனை செய்யப்பட்டதும் ஒன்று சேர்ந்த இலாபமோ நட்டமோ முன்பு பங்குகளின் பதியப்பட்டது, வரவு கூற்றில் பிற செயற்பாட்டு வருமானம் எனப் பதியப்படும். வங்கி ஒரே பொறுப்பு வகையில் ஒன்றுக்கு மேற்பட்ட முதலீடுகளைக் கொண்டிருந்தால் "முதல் உள்ளிட்டது முதல் வெளியேறுதல்" முறைப்படி விற்பனை செய்யப்படும். விற்பனைக்குள்ள முதலீடுகள் கையிருப்பில் உள்ள போது உழைத்த வட்டி வருமானம் EIR முறைப்படி பதிவு செய்யப்படும். விற்பனைக்குள்ளதாக இருக்கும் பொழுது கிடைக்கும் பங்கு இலாபம் வருமானக்கூற்றில் பிற வருமானங்கள் என கொடுப்பனவு உரிமை கிடைக்கும் பொழுது பதியப்படும். அத்தகைய முதலீடுகளில் ஏற்படும் ஊறுகளால் ஏற்படும் நட்டங்கள் வருவாய்க்கூற்றில் நிதி முதலீடுகளில் "ஊறு நட்டங்கள்" எனப் பதியப்பட்டு விற்பனைக்குள்ளது என பதில் இருந்து அகற்றப்படுகிறது.

vii**. முதிர்ச்சிக்கெனக் கொண்டுள்ள நிதியியல் முதலீடுகள்**

முதிர்ச்சிக்கெனக் கொண்டுள்ள நிதியியல் முதலீடுகள் நிர்ணயிக்க வேண்டியவை அல்லாதவையான நிதியியல் சொத்துக்கள். அவை தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளையும் தீர்மானிக்கக்கூடிய முதிர்ச்சியையும் உடையவை. வங்கி இவற்றை முதிர்ச்சி வரை கொண்டிருக்கும் எண்ணமும் தகைமையும் உடையது. ஆரம்ப கணக்கீட்டின் பின் முதிர்ச்சிக்கென கொண்டுள்ள நிதியியல் முதலீடுகள் பின்னர் கொடுக்கப்பட்ட செலவின அடிப்படையில் EIR ஐ உபயோகித்து ஊறு நீங்கலாக கணக்கிடப்படும். கையேற்கும் போது கிடைக்கும் விலைக்கழிவு, விலை உயர்வு என்பவற்றை ஒரு உள்ளடக்கமாகக் கொண்டு EIR கணக்கிடப்படுகிறது. திருப்பிக்கொடுப்பனவுகள் வருவாய்க்கூற்றில் "வட்டியும் அது போன்ற வருமானங்களும்" எனப்பதியப்படும். ஊறுகளால் ஏற்படும் நட்டங்கள் வருவாய்க்கூற்றில் கடன் நட்ட செலவினமாகக் காட்டப்படும்.

குறிப்பிடக்கூடியது அல்லாத அளவிற்கு மேம்பட்ட முதிர்ச்சி வரை கொண்டுள்ள முதலீடுகளை வங்கி விற்க வேண்டுமாயின் (சில விசேட நடைமுறைகள் தவிர்ந்த) முழுப்பகுதியுமே விற்பனைக்கு உள்ள முதலீடுகளாக பகுப்பு மாற்றம் செய்யப்பட வேண்டும். மேலும் அடுத்த இரு வருடங்களுக்கு வங்கி முதிர்ச்சி வரை கொண்டுள்ள பகுப்பில் எந்த நிதியியல் சொத்தையும் வைத்திருக்க தடை செய்யப்படும்.

viii. **வங்கிகளில் இருந்து வரவுள்ளவையும் வாடிக்கையாளருக்கான கடன்களும் முற்கொடுப்பனவுகளும்**

நிர்ணயம்செய்யப்படாத நிதியியல் சொத்துக்களும், நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடியவையுமாக நடைமுறைச்சந்தையில் ஈடுபடுத்தப்படாத சொத்துக்கள். வங்கிகளில் இருந்து வரவுள்ளவையும் வாடிக்கையாளர் கடன்களும் முற்கொடுப்பனவுகளும் என்பதில் அடங்கும்.

ஆரம்ப அளவீட்டின் பின் வங்கிகளில் இருந்து வரவுள்ளவையும் வாடிக்கையாளருக்கான கடன்களும் முற்கொடுப்பனவுகளும் நுஜசு முறையில் தவணைக்கொடுப்பனவு செலவின முறையில் ஊறுகள், விடுப்புகள் நீங்கலாகக் கணக்கிடப்படும். நுஜசு முறையில், கையேற்கும் போது, கழிவுகள், மேலதிக கொடுப்பனவு, கட்டணங்கள் செலவினங்கள் என்பன உள்ளடங்கும் காரணிகள் என்பதைக் கணித்து தவணை முறை தள்ளுபடி மதிப்பீடு செய்யப்படும். வருமானக்கூற்றில் வட்டியும் அதை ஒத்த வருமானங்களில் தவணைத்தள்ளுபடி உள்ளடக்கப்படும். ஊறுகளால் ஏற்படும் நட்டம் வருமானக்கூற்றில் கடன் நட்ட செலவினத்தில் காட்டப்படும்.

ix. **திரும்ப வாங்குதல் எதிர் திரும்ப வாங்குதல்.**

குறிப்பிடக்கூடிய வகையில் எல்லா ஆபத்துக்களையும் வெகுமதிகளையும் வங்கி கொண்டிருப்பதால், திரும்ப வாங்குதல் ஒப்பந்தத்தின் கீழ் விற்கப்பட்ட பொறுப்புகள் நிதியியல் நிலைமைக்கூற்றில் இருந்து அகற்றப்படுவதில்லை. இது தொடர்பாகப் பெறப்பட்ட காசுத்தொகை, கடன் கொடுத்த பணப்பொறுப்புகளும் திரும்பப்பெறும் ஒப்பந்தங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒருங்கு சேர் வட்டி ஒரு பொறுப்பாகவும் ஒருங்கிணைந்த நிதியியல் நிலைக்கூற்றில் திருப்ப வேண்டிய சொத்தாகக்காட்டப்படும். இது வங்கிக்கு கிடைத்த கடன் போன்று காட்டப்படும்.விற்பனை விலைக்கும் திரும்பப் பெற்ற விலைக்கும் இடையேயான வித்தியாசம் வட்டி செலவினமாக ஒப்பந்த காலம் வரை நுஜசு முறையின் கீழ் ஒருங்கு சேர் வட்டிச் செலவினமாகும்.

மாறாக குறிப்பிட்ட கால முடிவில் விற்பனை செய்வதற்காக வாங்கப்பட்ட பொறுப்புகள் நிதியியல் நிலைமைக்கூற்றில் உள்ளடக்கப்படுவதில்லை. ஒருங்கு சேர் வட்டி உட்பட கொடுக்கப்பட்ட விலை மதிப்பு நிதியியல் நிலைமைக்கூற்றில் திரும்ப வாங்கும் ஒப்பந்தத்தின் கீழ் கடனாகப்பெற்ற பெறுப்புகளின் பணத்தொகையாக இக்கொடுக்கல் வாங்கல் இது வங்கி கொடுத்த கடனாகக் காட்டப்படும். வாங்கிய விற்ற விலைகளிற்கிடையேயான தொகை EIR முறைப்படி "நிகர வட்டி

வருமானமாக" ஒப்பந்தக்காலம் வரை ஒருங்கு சேரும்.

**2.3.2 நிதியியல் பத்திரங்களுக்கு ஏற்படும் ஊறுகள்.**

**i. நிதியியல் சொத்துக்களுக்கான ஊறு**

ஒவ்வொரு நிதியியல் நிலைமைக்கூற்றுத் தினத்திலும் எந்தவொரு நிதியியற் சொத்தோ அல்லது ஒரு பகுதி நிதியியற் சொத்துக்களோ கணக்கெடுக்கக்கூடிய ஊறு விளைந்துள்ளதா என வங்கி மதிப்பீடு செய்யும். ஆரம்ப மதிப்பீட்டின் பின் ஒரு நிதியியற் சொத்துக்கோ, அல்லது ஒரு பகுதி சொத்துக்களுக்கோ கணக்கெடுக்கக்கூடிய வகையில் ஊறு ஏற்பட்டு (ஒரு செலவின ஊறு) அதனால் எதிர்கால சொத்தின் காசு ஒழுக்குக்கோ, பகுதி சொத்துக்களின் காசு ஒழுக்குக்கோ மதிப்பிடக்கூடிய தாக்கம் ஏற்பட்டால் மட்டும் (அந்த ஊறு நடைமுறை/முறைகள்) அது நிதியியல் ஊறு என கொள்ளப்படும்.

ஒரு கடனாளி அல்லது ஒரு பகுதி கடனாளிகள் குறிப்பிடக்கூடிய நிதி நெருக்கடியில் உள்ளார்கள் என்றோ, அதனால் அவர்கள் கடன் மீள முடியாதவர்கள் ஆகவோ, பிற நிதியியல் மீள் ஒழுக்கு அமைத்தோ, வட்டி, முதல் என்பவற்றை திருப்பிச்செலுத்த முடியாதவராய், எதிர்கால காசு ஒழுக்கில் குறிப்பிடக்கூடிய குறைவுக்கான தரவுகள் தெரிந்தாலோ, கொடுக்க வேண்டிய தொகை காலங்கடந்து செலுத்த முடியாத நிலை தோன்றினால் அது ஊறு ஏற்படும் சாட்சியாகும்.

**ii. தவணைக்கழிவுகளின் பின் மதிப்பில் உள்ள நிதியியல் சொத்துக்கள்.**

தவணைக்கழிவுகளின் பின் மதிப்பில் உள்ள நிதியியல் சொத்துக்கள் சம்பந்தமாக (பிற வங்கிகளில் இருந்து வர வேண்டியவை, வாடிக்கையாளரின் கடன்களும் முற்கொடுப்பனவுகளும், மற்றும் முதிர்ச்சி வரை கொண்டுள்ள முதலீடுகள்) வங்கி முதலில் தனித்தனி குறிப்பிடக்கூடிய நிதியியல் சொத்துக்களையும், குறிப்பிட முடியாத சொத்துக்களின் பகுதிகளையும் காணக்கூடிய ஊறுகள் உள்ளனவா என்று ஆராயும். காணக்கூடிய ஊறுகள் இல்லாதவிடத்து அது போன்ற ஆபத்துத்தன்மையுடைய சொத்துக்களை ஒன்று சேர்த்து ஊறுகளுக்காக மதிப்பிடப்படும். தனித்தனி மதிப்பீடு செய்யப்பட்டு ஊறு உள்ளதாகக் காணப்பட்ட சொத்துக்கள் இந்த பகுப்பில் சேர்க்கப்படமாட்டாது.

காணக்கூடிய ஊறு உண்டாயின் அந்த சொத்து கொண்டுள்ள தொகைக்கும் அந்த சொத்தால் ஏற்படும் எதிர்கால காசு ஒழுக்குக்கும் (ஏற்படும் என எதிர்பார்க்கும் இதுவரை கணக்கிடாத நட்டம் நீங்கலாக) இடையேயான வித்தியாசம் நட்டம் எனக கொள்ளப்படும். சொத்து கொண்டுள்ள தொகை ஒரு விருப்பு கணக்கு மூலம் குறைக்கப்பட்டு நட்டத்தொகை வரவுக்கூற்றில் காட்டப்படும்.

வட்டி வருவாய் குறைக்கப்பட்ட கொண்டுள்ள தொகையில் தொடர்ந்தும் கணக்கிட்டு ஒருங்கு சேர்க்கப்படும். இதற்கு எதிர்கால காசு ஒழுங்குக்கு ஊறு சம்பந்தமான நட்டத்திற்கு உபயோகித்த வட்டி வீதம் உபயோகிக்கப்படும். வட்டி வருமானம் வட்டியும் அது போன்ற வருமானங்களும் எனபதிவு செய்யப்படும். கடன்கள், எல்லா பொறுப்புகளும் உபயோகப்படுத்தப்பட்டு அல்லது வங்கிக்கு மாற்றப்பட்டு மீளளிப்புக்கான மேலும் நிலை இல்லை என்ற நிலையில் கடன் சம்பந்தமான விடுப்புகள் உபயோகிக்கப்பட்டு அழித்தொழிக்கப்படும்.பின் ஒரு வருடத்தில் ஊறு கணக்கெடுக்கப்பட்ட பின் ஏற்படும் நிகழ்ச்சியால் தீர்மானிக்கப்பட்ட ஊறு குறைந்தாலோ கூடினாலோ முன்பு கணக்கெடுத்த ஊறு, விடுப்புக்கணக்கில் மாற்றம் செய்வதன் மூலம் கூட்டியோ, குறைக்கவோ செய்யப்படும். அழித்தொழிக்கப்பட்டது பின்னர் அறவிடப்பட்டால், அறவிடப்பட்ட தொகை "கடன் நட்டக்கணக்கில்" வரவிலிடப்படும். நிதியியல் சொத்தின் இப்போதய மதிப்பின் எதிர்கால காசு ஒழுக்கு நிதியியல் சொத்தின் ஆரம்ப நுஜசு முறையில் கழிவு செய்யப்படும். ஒரு கடனுக்கு மாற்றம் அடையும் வட்டி வீதம் இருந்தால் ஊறு நட்டத்தை அளவிட தற்போதய EIR உபயோகிக்கப்படும். வங்கி ஒரு கடன் அல்லது முற்கொடுப்பனவின் வணிக சொத்தை மீள் பகுப்புச் செய்திருந்தால் ஊறு நட்டத்தை அளவிடுவதற்கான கழிவு வீதம் மீள் பகுப்பின் போது தீர்மானிக்கப்பட்ட புதிய EIR ஆகும். சொத்துக்களைப் பொறுப்பாகக் கொண்டுள்ள நிதியியல் சொத்து தற்போதய மதிப்பிற்காக எதிர்கால காசு ஒழுக்கு கணக்கிடும் பொழுது, கையகப்படுத்தல் சம்பந்தமான செலவுகள், கையகப்படுத்தல் எதிர்பார்க்கப்பட்டாலும் அல்லாவிடினும், கணக்கில் எடுக்கப்படும். கூட்டு முறையில் ஊறுகள் கணக்கிடப்படுவதற்கு நிதியியல் சொத்துக்கள் (கடன் ஆபத்து தன்மைகள், சொத்தின் தன்மை, "கோள அமைப்பு, கொடுபட வேண்டிய தன்மை, ஒத்த சொத்துகளின் நிலை என்பவற்றைக் கணக்கெடுக்கும்) வங்கியின் உள்ளக கடன் பகுப்பு முறையின் படி பகுக்கப்படும். ஊறுகள் கணக்கிடுவதற்காக ஒருங்கே பகுக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களின் எதிர்கால காசு ஒழுக்கு, அதே போன்ற சொத்துக்களின் வரலாற்று நட்டங்கள் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். வரலாற்று நட்டங்கள், தற்போதய கண்டு கொள்ளக்கூடிய திகதியில் கண்டு கொள்ளக்கூடிய, வரலாற்று அடிப்படையில் உள்ள இப்பொழுது இல்லாத காரணிகள் சம்பந்தமான மாற்றங்களுக்கு இடம் கொடுத்து நடைமுறைப்படுத்தப்படும். வருடா வருடம் தரவுகளில் காணக்கூடிய மாற்றங்களை (வேலை இல்லாமை வீதம், சொத்துக்கள் விலை பொருள்கள் விலை, கொடுப்பனவு நிலை, பகுதியில் நட்டங்களைக் காட்டும் மற்றய காரணிகளும் அவற்றின் அளவும்) நேரடியாக கணக்கெடுக்கும் தீர்மானங்களைக் கொண்டு எதிர்கால காசு ஒழுக்கு நிர்ணயிக்கப்படும். நட்டங்களின் நிர்ணயத்திற்கும் உண்மை நட்டத்திற்கும் இடையேயான வித்தியாசத்தைக் குறைப்பதற்காக எதிர்கால காசு ஒழுக்கு கணக்கிடும் முறையும் நிர்ணயங்களும் காலத்துக்குக்காலம் மீளாய்வு செய்யப்படும்.

**iii. விற்பனைக்குள்ள நிதியியல் பத்திரங்கள்**

வங்கி ஒவ்வொரு நிதியியல் நிலைக்கூற்றையும் ஏதாவது காணக்கூடிய ஊறு ஏற்படும் சாட்சியம் இருப்பதை மதிப்பிடுகிறது. இது விற்பனைக்குள்ள நிதியியல் பத்திரங்களுக்கும் ஆகும்.

விற்பனைக்குள்ள கடன் பத்திரங்கள் விடயத்தில், தவணை முறையில் கழிவு பெறும் நிதியியல் சொத்துக்களைப் போன்றே ஏதாவது காணக்கூடிய

ஊறுகள் உள்ளனவா என்று வங்கி மதிப்பீடு செய்யும். எவ்வாறாயினும் தவணைக்கழிவு செய்த செலவின மதிப்பிற்கும் தற்போதய நல்லெண்ண மதிப்பிற்கும் உள்ள வித்தியாசம் மற்றும் ஏதாவது ஊறு சம்பந்தமாக அந்த முதலீட்டில் முன்னய வரவுக்கூற்றில் ஏற்படுத்திய தொகை கழிக்கபட்ட தொகையாகும்.

எதிர்கால வட்டி வருமானம் குறைக்கப்பட்ட தொகையில் ஊறு காரணமாக நட்டம் கணக்கிடும் வீதத்தில் எதிர்கால காசு ஒழுக்கு கழிவு கணக்கிடப்படுகிறது. வட்டி வருமானம் "வட்டியும் அதே போன்ற வருமானங்களும்" கணிப்பின் பகுதி ஆகிறது. எதிர்காலத்தில் நல்லெண்ண மதிப்பு அதிகரித்து அந்த அதிகரிப்பு ஊறு காரணமாக, நட்டம் வருமானக்கூற்றில் கணக்கெடுக்கப்பட்ட பின்னராயின் அந்த ஊறு காரணமான, நட்டம் வருமானக்கூற்றில் திருப்பிக் கணக்கிடப்படுகிறது. விற்பனைக்குள்ளவை எனப்பகுக்கப்பட்ட பங்கு முதலீடுகளில் குறிப்பிடக்கூடிய அல்லது நீண்டகால நல்லெண்ண மதிப்புக் குறைவு முதலீட்டிலும் குறைவாயின் அதுவும் காணக்கூடிய மதிப்பாக இருக்கும். குறிப்பிடக்கூடியது என்பது 20% மாகவும் நீண்டகாலம் என்பது ஆறு மாதத்திலும் கூடியதாகவும் வங்கி பொதுவாகக் கொள்ளும். ஊறு ஒன்று இருக்கும் சாத்தியமிருக்குமிடத்து ஒருங்கு சேர் நட்டம் வாங்கிய விலைக்கும் தற்போதய நல்லெண்ண மதிப்புக்கும் உள்ள வித்தியாசத்தில் முன்பு ஊறு காரணமாக அந்த முதலீட்டில் கண்டு கொள்ளப்பட்டு வருமானக்கூற்றில் கணிக்கப்பட்டு பங்கு மதிப்பீட்டில் அகற்றப்படும். ஊறு காரணமான பங்கு முதலீட்டில் நட்டம் வருமானக்கூற்றில் திருப்பிக் கழிக்கப்படாதவிடத்து மற்றய வருமானங்கள் கண்டு கொள்ளப்பட்ட பின் நல்லெண்ண மதிப்பை அதிகரிக்கும்.

iv. **மீளமைக்கப்பட்ட கடன்கள்.**

வங்கி இயன்றவரை கடன்களைப் பொறுப்புக்களைக் கையேற்பதிலும் பார்க்க மீளமைக்க முயற்சிக்கின்றது. இது மீளளிப்புக் காலத்தை அதிகரித்து புதிய கடன் ஒழுங்குகளை ஏற்படுத்தும். ஒழுங்கு முறைகள் திரும்ப செய்து கொள்ளப்பட்டதும் ஊறுகள் ஏற்கனவே உள்ள EIR முறையில் மீளமைக்கு முன் கணக்கிடப்பட்டு அந்த கடன் இதன் பின்னும் காலங்கடந்தது எனக்கொள்ளப்படுவதில்லை. மீளமைக்கப்பட்ட கடன்கள் எல்லா ஒழுங்கு முறைகளும் பின்பற்றப்படுவதையும் எதிர்கால கொடுப்பனவுகள் நடப்பதையும் உறுதி செய்யும் பொருட்டு முகாமைத்துவம் தொடர்ந்து மீளாய்வு செய்யும். கடன் தொடர்ந்தும் தனியாகவோ கூட்டாகவோ ஊறுகளுக்காக மதிப்பீடு செய்யப்படும். இதில் பழைய EIR உபயோகிகப்படும்.

**2.3.3 நிதியியல் பத்திரங்களில் வரவு செலவு கணக்கெடுப்பு.**

வருமதி நம்பகமாக அளவிடக்கூடியதாகவும் ஏற்படக்கூடிய பொருளாதார நன்மை

வங்கிக்குக் கிடைக்குமாயின் வருவாய் கணக்கில் எடுக்கப்படும். பின்வரும் குறிப்பிடப்பட்ட கணக்கெடுத்தல் முறை வருவாய் கணக்கில் எடுப்பதற்கு முன் நிறைவு செய்யப்பட வேண்டும்.

i. **வட்டியும் அது போன்ற வரவும் செலவும்.**

தவணைக்கழிவு செய்யப்பட்டு மதிப்பிடப்பட்ட நிதியியல் முதலீடுகளுக்கும், விற்பனைக்கு உள்ளவையாகப் பகுக்கப்பட்ட வட்டி கிடைக்கும் நிதியியல் முதலீடுகளுக்கும், .இலாப நட்டக் கணக்கூடாக நல்லெண்ண மதிப்பில் கொள்ளப்பட்ட நிதியியல் முதலீடுகளுக்கும், வட்டி வருவாய் அல்லது செலவு EIR உபயோகித்து கணக்கிடப்படும். இந்த EIR எதிர்பார்க்கும் காலத்திற்கு ஏற்படும் காசு கொடுப்பனவுகளையும், வருமதிகளையும் கணக்கிட உண்மையில் உபயோகிக்கப்படுகிறது. இது நிதியியல் சொத்துக்களுக்கும் பொறுப்புகளுக்கும் நிகர மதிப்பீட்டை அளப்பதற்கும் உபயோகப்படும்.

கணக்கிடுதல் நிதியியல் பத்திரத்தின் ஒப்பந்தக் காரணிகள் எல்லாவற்றையும் கணக்கில் எடுக்கும் (உதாரணமாக :- கொடுப்பனவு முறைகள்) பத்திரத்தில் நேரடி தொடர்புள்ள கட்டணங்கள், மதிப்பேற்ற செலவினங்கள் போன்ற EIR ன் பகுதியாக உள்ளவை. ஆனால் எதிர்கால வரவு நட்டங்கள் அல்ல. நிதியியல் சொத்தின் அல்லது நிதியியல் பொறுப்பின் கொண்டுள்ள மதிப்பு வங்கி தனது கொடுப்பனவு வரவு நிர்ணயங்களை மீளமைக்கும் பொழுது மாற்றப்படும்.,

ஒரு நிதியியல் சொத்தோ நிதியியல் பொறுப்போ கணக்கில் எடுத்துச்செல்லும் தொகை, வங்கி தனது கொடுப்பனவு, வரவு நிர்ணயங்களை மீளாய்வு செய்யுமாயின் மாற்றிச் சரி செய்யப்படும். மாற்றிய எடுத்துச்செல்லும் தொகை ஆரம்ப EIR அடிப்படையில் கணக்கிடப்பட்டு எடுத்துச்செல்லும் தொகையில் ஏற்படும் மாற்றம் "பிற செயற்பாட்டு வருமானம்" எனப்பதியப்படும். எவ்வாறாயினும் ஒரு மீள்பகுப்புச் செய்த நிதியியல் சொத்து சம்பந்தமாக, அதிகரிக்கப்பட்ட மீளளிப்பு காரணமாக வங்கி எதிர்கால காசு ஒழுக்கு நிர்ணயத்தை அதிகரிக்குமாயின் அப்படிப்பட்ட அதிகரிப்பு EIR ன் மாற்றமாக நிர்ணயம் மாற்றமடைந்த காலம் முதல் கண்டு கொள்ளப்படும்.

ஒரு நிதியியல் சொத்தோ நிதியியல் பொறுப்போ கணக்கில் எடுத்துச்செல்லும் தொகை, வங்கி தனது கொடுப்பனவு, வரவு நிர்ணயங்களை மீளாய்வு செய்யுமாயின் மாற்றிச் சரி செய்யப்படும். மாற்றிய எடுத்துச்செல்லும் தொகை ஆரம்ப EIR அடிப்படையில் கணக்கிடப்பட்டு எடுத்துச்செல்லும் தொகையில் ஏற்படும் மாற்றம் "பிற செயற்பாட்டு வருமானம்" எனப்பதியப்படும். எவ்வாறாயினும் ஒரு மீள்பகுப்புச் செய்த நிதியியல் சொத்து சம்பந்தமாக, அதிகரிக்கப்பட்ட மீளளிப்பு காரணமாக வங்கி எதிர்கால காசு ஒழுக்கு நிர்ணயத்தை அதிகரிக்குமாயின் அப்படிப்பட்ட அதிகரிப்பு EIR ன் மாற்றமாக நிர்ணயம் மாற்றமடைந்த காலம் முதல் கண்டு கொள்ளப்படும்.

ஊறு நட்டம் காரணமாக ஒரு நிதியியல் சொத்தினதோ, ஒரே வகையான நிதியியல் சொத்துக்களின் தொகுதியினதோ பதியப்பட்ட மதிப்பு குறைக்கப்படுமாயின், ஊறு நட்டத்தைக் கண்டு கொள்வதற்காக எதிர்காலக் காசு ஒழுக்குக்கு உபயோகிக்கப்பட்ட கழிவு சம்பந்தமாக உபயோகித்த வட்டி வீதத்தை உபயோகித்தோ, எட்டி வருவாய் தொடர்ந்தும் கணக்கிடப்படும்.

பணக்கையிருப்பு, மத்திய வங்கியில் மட்டுப்படுத்தப்படாத நடைமுறைக்கணக்கு, பிற வங்கிகளில் இருந்து கட்டளைக்கமைய வரவேண்டியவை, அல்லது ஆலம்ப

முதிர்ச்சிக்காலம் மூன்று அல்லது மூன்று மாதங்களுக்குக் குறைந்தவை, காசு அல்லது காசுக்குச் சமமானவை எனக்கொள்ளப்படும்.

**2.4. கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம்.**

சொத்துக்கள், பொருத்துகள் மற்றும் உபகரணங்கள். சேவைகளுக்கான கட்டணங்களும் கடன் சம்பந்தமான கட்டணங்களும் அக்கட்டணங்கள் பெறப்பட்ட ஆண்டிலேயே கணக்கிடப்படுகின்றன. மதிப்பில் ஒருங்கு சேர் ஊறு, ஒருங்கு சேர் மதிப்பிழப்பு, நாளாந்த சேவைச் செலவினம் என்பன தவிர்ந்த, செலவின, அல்லது மதிப்பிலேயே பெருட்கள், உபகரணங்கள், சொத்துக்கள் கணக்கிடப்பட்டு கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

எதிர்பார்க்கப்பட்ட உபயோக ஆயுட்காலத்தில் ஏற்படும் மாற்றங்கள், தகுந்தபடி மதிப்பு இழப்பு காலத்தில் அல்லது முறையில் மாற்றம் செய்யப்பட்டு சொத்துக்களும் உபகரணங்களும் அவற்றின் நிர்ணயிக்கப்பட்ட உபயோக காலம் முடியும் பொழுது மிஞ்சும் மதிப்பைக் கொண்டு நேர்க்கழிவு முறையில் அவற்றின் மதிப்புக்குக் கணக்கிடப்படுகின்றன. காணிச்சொத்துக்கு மதிப்பிழப்பு மேற்கொள்ளப்படுவதில்லை.
நிர்ணயிக்கப்பட்ட உபயோக காலம் பின்வருமாறு:-

| | |
|---|---|
| சொத்தின் தன்மை மதிப்பிழப்புக்காலம் | |
| குத்தகைச்சொத்து குத்தகைக்காலம் | |
| சொந்தக்கட்டிடங்கள் வருடத்துக்கு | 2.5% |
| அலுவலக, நானாவித உபகரணங்கள் வருடத்துக்கு | 10.0% |
| மோட்டார் வாகனங்கள் வருடத்துக்கு | 20.0% |
| கணனி வன்பொருளும் மென்பொருளும் வருடத்துக்கு | 25.0% |
| தளபாடங்களும் பொருத்துதல்களும் வருடத்துக்கு | 10.0% |

தொகுதி, சொத்துக்களை அவை உபயோகத்திற்கு கிடைத்த காலம் முதல் விற்றொழிக்கும் காலம் வரை மதிப்பிழப்பு ஒதுக்கம் செய்கிறது.
ஆதனம், ஆலை மற்றும் உபகரணங்கள் அவை விற்றொழிக்கும் போது அல்லது அவற்றால் எதிர்கால உபயோகம் இல்லை என்னும் போது கணிப்பில் இருந்து அகற்றப்படுகின்றன. கணிப்பில் இருந்து அகற்றும் போது இலாபம் அல்லது நட்டம் (நிகர விற்றொழிப்பு மதிப்புக்கும் கணக்கை எடுத்துச்சென்ற மதிப்புக்கும் உள்ள வித்தியாசம்) "பிற செயற்பாட்டு வருவாய்" ஆக வருவாய்க்கூற்றில், கணிப்பில் இருந்து அகற்றப்பட்ட ஆண்டில் பதிவாகும்.

**2.5 கட்புலனாகாச் சொத்துக்கள்.**

கணனி மென்பொருள்கள் உட்பட வங்கியின ஏனைய கட்புலனாகாச் சொத்துகளின் மதிப்பு நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாகவும் அதில் இருந்து எதிர்காலத்தில் அது சம்பந்தமான பொருளாதார நன்மை வங்கிக்கு வந்து சேருமாயினும் கட்புலனாகாச் சொத்துகள் என கொள்ளப்படும். கட்புலனாகாச் சொத்துகள் தனியாக கையேற்கப்பட்டு அவற்றின் ஆரம்ப மதிப்புக்கணிப்பில் அளவிடப்படும்.

ஒரு வியாபாரக்கூட்டு மூலமாகக் கைக்கொள்ளப்படும் கட்புலனாகாச் சொத்துக்கள் அவை கையேற்கப்படும் தினத்தில் உள்ள நல்லெண்ண மதிப்பில் ஏற்கப்படும். ஆரம்ப கணிப்பின் பின், ஒருங்கு சேர் தவணைக்கழிவுகள், ஒருங்கு சேர் ஊறுகள் என்பன ஆரம்ப மதிப்பீட்டில் இருந்து கழிக்கப்பட்டு எடுத்துச்செல்லப்படும்.
கட்புலனாகாச் சொத்துக்களின் உபயோக காலம், முடிவற்றதாகவோ முடிவுள்ளதாகவோ இருக்கும். முடிவற்ற உபயோகக்காலம் உள்ள கட்புலனாகாச் சொத்துக்களின் மதிப்பு அவற்றின் பொருளாதார உபயோக காலம் வரை தவணை முறையில் கழிக்கப்படும்.
முடிவுள்ள உபயோக காலம் உள்ள கட்புலனாகாச் சொத்துக்களின் தவணைக் கழிவுக்காலமும் தவணைக்கழிவு முறையும் குறைந்தது ஒவ்வொரு நிதியியல் ஆண்டு முடிவிலும் மீளாய்வு செய்யப்படும். சொத்தில் அடங்கியுள்ள எதிர்பார்க்கப்படும் உபயோக காலத்தில் மாற்றமோ அல்லது எதிர்பார்க்கப்படும். பொருளாதார நன்மைகள் பெற்றுக்கொள்ளும் முறையில் மாற்றமோ அந்த சொத்தின் தகுந்த முறையில் தவணைக்கழிவு காலத்திலோ அல்லது முறையிலோ மாற்றம் செய்து கணக்கிடப்பட்டு அவை கணக்கியல் நிர்ணய மாற்றங்களாகக் கொள்ளப்படும். கட்புலனாகாச் சொத்து உபயோககாலம் உள்ள சொத்தின் தவணைக்கழிவு வருவாய்க்கூற்றில் செலவு பகுதியில் கட்புலனாகாச் சொத்தின் பாவனைக்கேற்பக் கணக்கிடப்படும்.

**2.6 ஓய்வூதிய நன்மைகள்**

**2.6.1 நன்மைகள் விபரிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்**

1995 ஒக்டோபர் மாதம் 01ம் திகதிக்கு முன் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியருக்கென நன்மைகள் விபரிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை வங்கி நடைமுறைப்படுத்துகிறது. இதற்கென தனியாக நிர்வகிக்கப்படும் ஒரு நிதிக்கு சந்தா செலுத்த வேண்டியதாகும். நன்மைகள் விபரிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் நன்மை குழுக்கான செலவினம் முன் நிறுத்தப்பட்ட உண்மை நிலை மதிப்பீட்டு முறையில் தீர்மானிக்கப்படுகிறது. உண்மை நிலை இலாபங்களும் நட்டங்களும் தொடர்புடைய நிதியியல் ஆண்டில் வருவாய் அல்லது செலவினமாகக் கணிக்கப்படுகிறது.
விபரிக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகளில் இருந்து இதுவரை கணிக்கப்படாத கடந்த கால சேவைக்கட்டணம், நேரடியாகக் கடப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய விபரிக்கபட்ட சொத்துக்களின் நல்லெண்ண மதிப்பு, இதுவரை கணிக்கப்படாத உண்மை நிலை நட்டங்கள் என்பன கழிக்கப்பட்ட பெறுமதி, விபரிக்கப்பட்ட நன்மைகள் சொத்து அல்லது பொறுப்பு ஆகும். இதுவரை கணிக்கப்படாத, உண்மை நிலை நட்டங்கள், கடந்த கால சேவைக்கட்டணங்கள், திட்டத்தில் இருந்து மீளளிப்பு முறையில் கொடுக்க வேண்டிய நன்மைகளின் தற்போதய மதிப்பு, திட்டத்திற்கான பங்களிப்பில் எதிர்காலத்தில் ஏற்படும் குறைவு, என்பவற்றின் கூட்டுத்தொகைக்கு எந்த ஒரு சொத்தினதும் மதிப்பு மட்டுப்படுத்தப்படும்.
மிக அண்மிய ஆயுள்கால மதிப்பு 2012 டிசெம்பர் 31ம் திகதி, அமெரிக்க ஆயுள் நிலை நிறுவகம் மற்றும் ஆயுள் நிலை உளத்துணை நிறுவன அங்கத்தவராகிய, வியல் S குணதிலக கு.ளு.யு (WA) அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. 2012 டிசெம்பர் 31ம் திகதி மேற்கொண்ட மதிப்பீட்டில்

கைக்கொள்ளப்பட்ட முக்கிய நிதியியல் துணிவுகள் பின்வருமாறு:-

1. வட்டி கழிவு வீதம் 12.5 %
2. வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு அதிகரிப்பு 5 LKAS 7 ல் குறிப்பிட்டுள்ள ”நேரடியற்ற முறை” யைப் பயன்படுத்தி காசு ஓட்டக்கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.
3. சராசரி அடிப்படைச் சம்பள அதிகரிப்பு 5%

ஓய்வூதிய நிதிய கணக்குகள் தனியாக பேணப்பட்டு ஆண்டுதோறும், வெளிவாரி சுதந்திர உணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படுகிறது. கணக்கியல் கூற்றுகளும், கணக்காய்வாளர் கூற்றுகளும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்படுகிறது. வங்கி இந்த நிதியம் மிகப்பொருத்தமான நிலையில் இருப்பதை உறுதி செய்யும் கடப்பட்டுடையதால் இக்கணக்கியல் கூற்றுகளும் கணக்காய்வாளர் கூற்றுகளும் வங்கிக்கு அறிந்து கொள்ள சமர்ப்பிக்கபட்டு வங்கியால் மீளாய்வு செய்யப்படுகிறது. பங்களிப்பு செய்தவர் உயிருடன் உள்ளவரை ஓய்வூதியம் வழங்கப்படும்.
நிதியிடப்படாத ஓய்வூதியப் பொறுப்பு.
இக்கணக்கில், உண்மை நிலை மதிப்பீடுகள் செய்யப்பட்ட (2010.12.31 அன்று) பெறுபேறுகளின் படி ரூபா 2,025 மில்லியன் குறைவடைதல் காணப்பட்டது. இது கைக்கொண்டுள்ள இலாபங்களில் 2011.12.31ல் மாற்றம் செய்யப்பட்டு முழுமையாக நிரப்பப்பட்டது. நிதியிடப்படாத ஓய்வூதிய பொறுப்பகளின் விபரங்கள் குறிப்பு இல. 34 (அ)ல் தரப்பட்டுள்ளது.

**2.6.2 பணிக்கொடை.**

1983 ம் ஆண்டு பணிக்கொடை சட்டம் இல. 12 ன் கீழ் 1996 ஜனவரி 01ம் திகதிக்கு பின் சேவையில் சேர்ந்த ஊழியர்கள் மேற்குறிப்பிட்ட ஓய்வூதியத்திட்டத்தில் சேர்ந்து கொள்ள முடியாமையால் பணிக்கொடை கொடுப்பனவுக்கு உரித்தானதாகும்.

ஓய்வடைதல் அல்லாத முறையில் சேவை நிறுத்தம் செய்யப்படும் ஏனைய ஊழியரும் 1983ம் ஆண்டு இல. 12 பணிக்கொடை சட்டத்தின் கீழ் பணிக்கொடை கொடுப்பனவுக்கு உரித்துடையர். இது சேவை நிறுத்தம் செய்யப்பட்ட நிதியாண்டின் இறுதி மாதத்தின் சம்பளத்தின் சரிபாதி தொடர்ச்சியாக சேவையில் இருந்த ஒவ்வொரு ஆண்டுக்குமாக கணக்கிடப்படும். இது 5 வருடத்திற்கும் அதிகமான சேவைக்காலத்தைக் கொண்டுள்ளவருக்கு உரித்தாதும்.
வங்கியால் மாதாந்தம் பணிக்கொடை கொடுப்பனவு பொறுப்புக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டு இது வங்கியின் நிதியியல் நிலைமைக்கூற்றில் காட்டப்படும். ஒதுக்கீடு உண்மை நிலை மதிப்பீட்டின் அடிப்படையில் இடம்பெறும். இறுதி உண்மை நிலை மதிப்பீடு 2011 டிசெம்பர் 31ல் செய்யப்பட்டது.

**2.6.3 சேவையின் பின் வைத்திய நன்மைகள்.**

சேவையின் பின் வைத்திய நன்மைகளாக வங்கி வருடாந்த கொடுப்பனவைச் செய்கிறது. இது வருடாந்த உண்மைச் செலவினத்தில் தங்கியுள்ளது நிதியின் மிகுதி வருட முடிவில் வங்கியின் பங்களிப்பாகச் செய்யப்படுகிறது. நடப்பு வருடத்திற்கான செலவினமாக ரூபா 25 மில்லியன் காணப்படுகிறது. (2011ம் ஆண்டில் ரூபா 25 மில்லியன்)

**2.6.4 விபரிக்கப்பட்ட பங்களிப்பு திட்டம்.**

வங்கி விபரிக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்களையும் நடைமுறைப்படுத்துகிறது. விபரிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கு வங்கியால் செய்யப்படும் பங்களிப்பு ஊழியர் வங்கிக்கு செய்யும் சேவைக்கு நேரடித்தொடர்புடையதாக இருக்கும். இது ஆளணிச் செலவினம் எனப்பதிவு செய்யப்படும். கொடுப்பனவு செய்யப்படாத பங்களிப்புகள் பொறுப்புகளாகப் பதியப்படும். கீழ்க்காணும் விபரிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கு வங்கி பங்களிக்கிறத..

i. **ஊழியர் சேமலாப நிதி.**

வங்கியும் ஊழியர்களும் முறையே 12% மும் 8% ஆக ஊழியரின் மாதாந்த மொத்தச் சன்பளத்தில் (மேலதிக நேர வேலைக்கொடுப்பனவு தவிர்ந்த) திகதிக்கு பங்களிப்பு செய்வர். வங்கியின் ஓய்வூதியத் திட்டம், ஊழியர் ஓய்வூதிய நிதிச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டது.

ii. **ஊழியர் நம்பிக்கை நிதியம்.**

ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையால் நிதிபகிரப்படும், ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு வங்கி ஊழியரின் மாதாந்த மொத்த சம்பளத்தின் (மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு தவிர்ந்த) 3% பங்களிப்பு செய்கிறது.

**2.7 வரியிடுதல்**

**நடைமுறை வரி**

நடப்பு வருடத்துக்கும் கடந்த வருடங்களுக்குமாக, மீளப்பெற வேண்டிய அல்லது உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு செலுத்த வேண்டிய தொகையை தற்போதய வரி சொத்துகளும் பொறுப்புகளும் காட்டுகின்றன. உபயோகிக்கப்பட்ட வரி வீதங்களும் வரிச்சட்டங்களும் நிதியியல் நிலை காட்டும் திகதிக்கு முன்னரோ அந்த திகதியிலோ செய்யப்பட்ட சட்டங்களாகும். இதன் படி, 2006ம் ஆண்டு உள்நாட்டு இறைவரிச்சட்டம் இல. 10 ற்கும் மாற்றங்களுக்கும் அமைவாக, வருடத்திற்கான வரி ஒதுக்கீடு அவ்வருட இலாபத்தில் மாற்றம் செய்யப்பட்டு நிதியியல் கூற்றில் குறிப்பு 13ல் காட்டிய படி அந்த வீதத்தில் இடம் பெறுகிறது.

**பிற்போடப்பட்ட வரி ஒதுக்கீடு.**

நிதியியல் அறிக்கை இடுவதற்காக, சொத்துக்கள், பொறுப்புகள் என்பனவற்றின் வரி அடிப்படையில் அறிக்கையிடும் தினத்தில் ஏற்படுத்தும் தற்காலிக வித்தியாசங்களைக் கணக்கில் கொள்வதற்காக பொறுப்பு முறையில் பிற்போடப்பட்ட வரி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

எல்லாக் கழிக்கக்கூடிய வித்தியாசங்களுக்கும் பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் கணக்கெடுக்கப்படுகின்றன. உபயோகிக்கப்படாத வரி வரவுகளும் உபயோகிக்கப்படாத வரி பற்றுகளும் மற்றும் கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்களும், வரி செலுத்தக்கூடிய இலாபங்களுக்கு எதிராக உபயோகிக்கக்கூடியதாக முன்கொணரப்பட்ட, வரி வரவுகளும் வரி பற்றுகளும் பேணப்படும்.

பிற்போடப்பட்ட வரி சொத்து ஒவ்வொரு அறிக்கையிடும் தினத்திலும் மீளாய்வு செய்யப்பட்டு அதன் முழுத்தொகை ரூபா அல்லது பகுதியையோ உபயோகிக்கக்கூடிய வரி செலுத்த வேண்டிய இலாபம் கிடைக்கமா என ஆராய்ந்து அதற்கேற்ப குறைக்கப்படும்.

கணக்கில் எடுக்காத பிற்போடப்பட்ட வரி சொத்துகள் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீள் மதிப்பு செய்யப்பட்டு எதிர்கால வரி செலுத்த வேண்டிய இலாபம் பிற்போடப்பட்ட வரி சொத்துக்களை மீளளிப்பதற்கு போதுமானதாகக் கணக்கெடுக்கப்படும்.

பிற்போடப்பட்ட வரி சொத்துகளும் பொறுப்புகளும், அந்த சொத்துகள் தீர்க்கப்படும் அல்லது பொறுப்புகள் சரி செய்யப்படும் வருடத்திற்கான வரி வீதத்தில் அளவிடப்படும். இது குறிப்பிட்ட நிதியியல் நிலைமைத் திகதிக்கு நிறைவேற்றப்பட்ட அல்லது பின் திகதியில் நிறைவேற்றப்பட்ட வரி வீதத்தையும் வரி கட்டணங்களையும் அடிப்படையாகக் கொண்டது.

**நிதியியல் சேவையில் பெறுமதி சேர் வரி (VAT)**

2002ம் ஆண்டு இல. 14 பெறுமதி சேர் வரி சட்டத்தின் மற்றும் அதற்கான திருத்தங்களினதும் பகுதி 25 A க்கிணங்க வங்கியின் பெறுமதி சேர் வரி 12% ஆகும்.

**2.8 முன்னேற்பாடுகள்**

கடந்த கால நிகழ்வு ஒன்றினால் இப்பொழுது வங்கிக்கு ஒரு கடப்பாடு உள்ளதாலும் (சட்டப்படி அல்லது நிரூபிக்கக்கூடியபடி) அதனால் பொருளாதார நன்மைகள் இதை சரி செய்யும் போது வெளியேற இடமுண்டு என்பதாலும் இந்தக் கடப்பாட்டுக்கு நம்பகமான மதிப்பீடு செய்ய முடியும் என்பதாலும் முன்னேற்பாடுகள் கணக்கில் கொள்ளப்படுகின்றன. முன்னேற்பாடுகள் செலவினம் மீளளித்தல் நீங்கலாக வருவாய்க் கூற்றில் தரப்படுகின்றன்.

**2.9 நிகழத்தக்க பொறுப்புகள்**

நிகழும்/நிகழாது என்ற நிலையில் உள்ள முன்னய நிகழ்வுகளால் ஏற்பட்ட எதிர்கால பொருளாதார பயன்கள் வெளியேறக்கூடிய இப்போதய கடப்பாட்டைச் சரி செய்யும் அல்லது ஏற்படக்கூடியவற்றை படப்பாட்டைச் சரி செய்யும் இப்பொழுது செய்யும் ஒதுக்கத்தால் வளங்கள் வெளியேறுமாயின் ஒதுக்கம் செய்யப்படும்.

**2.10 அறிக்கையிடும் திகதிக்கு பின் நிகழ்வுகள்.**

